# முக்கோண

## முக்குளிப்பு



**கௌசி**

ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்க வெளியீடு

# மூக்கோண க்குளிப்பு

சந்திரகௌரி சிவபாலன்
B.A.Dip. in Ed.

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | முக்கோண முக்குளிப்பு |
| பதிப்புரிமை | : | திருமதி. சந்திரகௌரி சிவபாலன் |
| வெளியீட்டாளர் | : | ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் |
| ஆசிரியர் | : | திருமதி. சந்திரகௌரி சிவபாலன் |
| அளவு | : | A5 |
| தாள்வகை | : | Ivory Paper 80gsm |
| வெளியிடும் ஆண்டு | : | 2016 |
| அச்சுப்பதிப்பு | : | அன்றா பிறிண்டேர்ஸ்<br>356A, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.<br>தொ.பே: 0094 222 8929 |
| பிரதிகள் | : | 300 |
| ISBN NO | : | 978 - 955 - 43074 - 0 -7 |
| பக்கம் | : | 208 |



பார்வையால் பக்குவப்படுத்தி பாசத்தால் அறிவூட்டி
நேர்மையெனும் சொத்தை நெஞ்சமெல்லாம் நிறைத்து
பார்போற்றும் பண்புகளைப் பக்குவமாய் எடுத்துரைத்து
சீர்பெற்று வாழநற் சிந்தனைகள் தந்தவர்களே!

பார்விட்டுப் போனாலும் மனப்பதி விட்டுப்போகாது
பாசக்கடலாய் பக்குவமாய்ப் பூட்டிவைத்த இதயத்துள்
பணிதொடர்ந்து பகலிரவாய் ஊக்குவித்து உறங்கவிடாது
படைப்பாளியாய் வாழவைக்கும் என் தெய்வங்களே!

என்னுள் வாசம்செய்து எனக்குள் ஓர் எழுத்தாளனை, எனக்குள் ஒரு வைத்தியனை, எனக்குள் ஒரு உழைப்பாளியை, எனக்குள் ஓர் தாய்மையை, எனக்குள் ஓர் பகுத்தறிவாளியை, எனக்குள் ஓர் சிந்தனைவாதியை எனக்குள் நான் எல்லாமாய் வாழ அச்சாணியானவர்களே! நான் வாழும்வரை உங்கள் நினைவென்னும் ஊக்கசக்தியால், உலகவலம் வர உறுதுணையான உங்களுக்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

# விதைத்ததை விளக்குகின்றேன்

என் சொற்கள் என்னும் சொத்துக்களை சொந்தமாக்க வந்திருப்போரே!

என் வித்துக்கள் உங்கள் மனதில் விதை போட்டு விருட்சமாய் விரிந்து இன்னும் பல வினாக்களாகிய வித்துக்களை விதைக்க வேண்டும் என்னும் விருப்பத்துடன் கரம் கூப்புகின்றேன்.

எத்தனை ஆண்டுகள் நாம் வாழ்ந்தோம் என்பதை விட எத்தனை விடயங் களை எம்முடைய மூளை கற்றுக்கொண்டது என்பதே சாலச்சிறந்தது. காலங்கள் இறக்கை கட்டிப் பறந்தாலும் காற்றுப்போல் தேடினால். வாழும்போதே வசந்தத் தைக் கண்டுவிடலாம். நச்சுக்கனிகளைத் தவிர்த்து நற்கனிகளைச் சுவைக்கலாம்.

நான் பார்க்கும் விடயங்கள் என்னைத் தொல்லை கொடுக்கும். போனால் போகிறது என விட்டுவிட முடியாது என் மனதுள் சிக்கித் தவிக்கும் சிந்தனைகள் சிறகு விரிக்க, ஆலாவாய்ப் பறந்து தேடி, சிந்தனைக் கருவியுள் போட்டு பழுது பார்த்து உங்கள் உள்ளத்து வெளிச்சத்திற்கு இந்நூல் மூலம் நெய் ஊற்றுகின் றேன். இது எனக்கான தெளிவு மட்டுமல்ல உலகத்துக்கான தெளிவு. எனக்குள் கேட்டேன். தெளிந்தேன். உங்களுக்காய் சொற்களை உதிர்த்தேன்.

காரணமில்லாது எதுவும் எம்மை வந்தடைவதில்லை. நடப்பதும் இல்லை. அது புரியாமலே அதனுடன் நாம் பயணம் செய்கின்றோம். பல பக்கமாய் அவற்றைச் சிந்தித்தேன். ஏன் என்று கேட்டுப் பார்த்தேன். அதன்மூலம் பெற்ற விளக்கங்களும். அதனை என் மூளை உள்வாங்கி ஆராய்ந்து வெளிப்படுத்திய பதிவுகளுமே அறிந்ததும் புரிந்ததும் எனும் முதல் பதிவு.

தமிழோடு நான் வாழ்ந்தேன். அதன் மீது மெல்ல மெல்லப் பயணம் செய்தேன். உச்சி முதல் உள்ளங்கால் வரை இனம்புரியாத ஒரு குதூகலம். தமிழ் என் மொழி என்னும் கர்வம் எனக்குள் தோன்றியது. அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபிகளைக் கொண்டிருக்கும் இலக்கியங்கள் எனக்குள்ளே பல கேள்விகளை எழுப்பின. தமிழோடு பயணம் செய்தேன். அதுவே என் மனம் வெளிப்படுத்திய இலக்கிய இன்பம்.

வாழுகின்ற சூழல், வாழ்ந்து கொண்டிருக்கும் காலம், கண்முன்னே தோன்றும் நிகழ்வுகள் என்னைத் தூங்கவிடாது தொந்தரவு செய்து கொண்டே இருக்கும். சமுதாய ஓடையிலே சாக்கடை அழுக்குகள் என்னில் ஒட்டி விடாது

தட்டிவிட்டுச் செல்ல என் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. செல்லும் வாழ்க்கை ஓட்டத்தின் மத்தியிலே செல்லும் பாதையை முடிந்தவரை துப்பரவு செய்து கொண்டே செல்லவேண்டும் என்று கருதினேன். என்னால் முடிந்ததை எடுத்துரைத்தேன். இதனால் உருவானவையே சிந்தனையின் தேனூற்று.

இது சிலருக்கு மனக் கிலேசங்களைத் தரலாம். என் எழுத்துக்களை மன்னிக் காதும் விடலாம். ஆனால், எழுதிக் கொண்டேயிருக்கும் என் கைகள், ஓயாது தேடும் என் உணர்வுகள், தூங்கவிடாது தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கும் இரவுகள் எனக்குள் ஒரு பார்வையைக் கொண்டு வருகின்றது. இதை வெளிக் கொண்டுவரும் பண்புகளைப்பிடிக்காதவர்கள் மன்னிப்பார்கள் என்று வலிமை யாக நம்புகின்றேன்.

இந்நூலுக்குள் புகுந்து வெளிவரும் நீங்கள் பொக்கிசங்களைப் பொறுக்கி, சிந்தனைக்கு விருந்தாக்கினால், மனம் மிக மகிழ்வேனென்று கூறி, அறிவுக்கு நெய் ஊற்றும் எழுத்தாளர்களுக்கும்,

எழுதும் கையை ஓயவிடாது பக்கபலமாய் பாதுகாத்து உதவிகள் செய்து கொண்டிருக்கும் என் கணவருக்கும், நூலுக்குரிய முன்னட்டையை வடிவமைக்க ஆலோசனை தந்த எனது மகள் மெனூஷாவுக்கும்,

இந்நூலுக்கு அணிந்துரை தந்துதவிய மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திருமதி சார்ள்ஸ் அவர்களுக்கும்,

இந்நூலுக்கு வாழ்த்துரை தந்துதவிய ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் பொன். புத்திசிகாமணி அவர்களுக்கும், நூலுக்கான பெயரைத் தெரிவு செய்த ஜேர்மனி எழுத்தாளர் சங்கப் பொருளாளர் கவிஞர் அம்பலவன் புவனேந்திரன் அவர்களுக்கும்,

எனக்குள் ஊற்றெடுக்கும் ஏன் என்ற சில கேள்விகளுக்கு விளக்கம் தந்து அறிந்ததும் புரிந்ததும் எழுதத் தூண்டிய மகேந்தி அவர்களுக்கும்,

ஆலமரத்தடிப் பிள்ளையாரை அடையாளம் காட்டிய எம்.பி. பரமேஸ் அவர்களுக்கும்,

என்னை உலகின் முன் அடையாளப்படுத்த தூண்டுதலாய் இருந்து, அவ்வப் போது ஊக்கத்தைத் தந்து என் தொடரும் எழுத்துப்பணிக்கு உந்துதலாய் இருக்கும் உடன்பிறவாச் சகோதரன் பவானந்தராஜா அவர்களுக்கும்,

இந்நூலுக்கு வாழ்த்துக்கூறிய முன்னணி வலைப்பதிவாளர் யாதோ ரமணி அவர்களுக்கும், கவிதாயினி வேதா இலங்காத்திலகம் அவர்களுக்கும்,

அவ்வப்போது என் பதிவுகளுக்கு காத்திரமான பின்னூட்டமிட்டு என் எழுத்துக்களை மெருகூட்டிக் கொண்டிருக்கும் இணைய நண்பர்களுக்கும், இணையங்களுக்கும், சஞ்சிகைகளுக்கும், என் வாசகர்களுக்கும் என்னோடு ஒத்துழைத்து இந்நூல் வெளிவரக் காரணமான Andra Printers நிறுவனத்திற்கும் இவ்விடத்தில் நன்றி கூறி,

என் முதல் ஆசான்களாகிய பெற்றோர் நினைவுகளுடன் வாழும் வரை தேடிக்கொண்டேயிருக்கும்.

உங்கள்

கௌசி

Chandragowry Sivapalan
Felder str .56
42651 Solingen
Germany.
www.gowsy.com

**சமுதாயத்தின் விழிப்பே சொர்க்கம்**
**சஞ்சலம் நீங்கிய தெளிவே ஞானம்**
**படைப்புக்களின் விரிவே மறுபிறப்பு**

Mrs. P.S.M.Charles
Govt. Agent/ District Secretary
Batticaloa District

**B.A.(Hons), PGDM (Rajarata), M.Sc. (Peredeniya Cum Italy)
Dip.in Disaster Management**

Office: 065 222 2235
Res. 065 222 2205

Moblie: 077 310 1148
Email. psmcharles @yahoo.com.com
gabatti@sltnet.lk

# முக்குளிப்பில் தமிழ் முத்தெடுத்தேன்

ஒரு நிர்வாகத்தை ஒரு இலக்கியத்தினுள் புகுத்திய இந்த முக்கோண முக்குளிப்பு உண்மையில் என் எண்ணத்தில் முத்துக்களை முழுவதுமாய்ப் புகுத்தியுள்ளது என்பதுவே உண்மை. என் வாழ்வாதாரம் நிர்வாகம் ஆனாலும், என் ஆத்மாவின் உயிரூட்டம் இலக்கியம் என்பதனாலேயே இந்நூலுக்கு அணிந்துரை தர என்னால் முடிந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் சந்திரகெளரியுடன் நீர்கொழும்பு விஜயரெத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஒன்றாகப் பணியாற்றியுள்ளேன். இருவரும் ஒரு துறை, ஒன்றாக ஆசிரியப்பணியில் பயணித்தோம். காலம் என்னை நிர்வாகத்தினுள் புகுத்தியது. கெளரியை ஜேர்மனிய மண்ணுக்கு அனுப்பி வைத்தது. வேற்றுமொழி ஆட்சியிலும் அவர் தமிழ் இலக்கியத்தைத் தொடர்ந்தார். தமிழின் பெருமையைத் தரணி எங்கும் விளங்கச்செய்ய தன் வாழ்க்கைப் பணியுடன் தமிழ்பணியையும் மேற்கொண்டார். நானோ நாட்டின் பெருமைக்கு நாளாந்தம் உழைக்கும் நிர்வாகப்பணிக்குள் புகுந்து இலக்கியத்தைப் படைக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

சந்திரகெளரி அவர்களால் வெளியிடப்படும் இரண்டாவது படைப்பாகிய இந்நூலுக்கு அணிந்துரை எழுத எத்தனித்த போது ஏன் என்ற கேள்வி எனக்குள்ளேயே புகுந்துகொண்டது. படைப்புக்கள் அனைத்துமே அனைத்தையும் அறியும் ஆவலுக்கு என்னை உட்படுத்திவிடுகின்றது. மூன்றுவிதமான பார்வையில் படைப்புக்கள் கண்களுக்கு விருந்தாகின்றன. மூளைக்கு உணவாகின்றன. விடியலைத் தேடுகின்ற மக்களுக்கு விளக்காகின்றன.

ஒவ்வொரு இனத்தினருக்கும் மதத்தினருக்கும் வாழ்க்கையில் கலாச்சாரம் ஒரு கட்டுக்கோப்பை வைக்கின்றது. அதனுள் இருந்துகொண்டே மனிதன்

வாழ்க்கைப் பிரயாணத்தை மேற்கொள்கின்றான். ஒவ்வொரு விழாக்களும், வாழ்க்கை நடைமுறைகளும் வாழும்போதே, வளரும் போதே மனித இனத்திற்கு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மேலும் மேலும் பல பண்பாட்டுக் கூறுகள் கலாச்சாரத்தினுள் இணைந்து கொள்கின்றன. இது ஏன் என்ற கேள்வி கேட்கப்படாமலே தொடர்கின்றது. எதனையுமே சிந்தித்துப் பார்க்காது மூடநம்பிக்கையில் மூழ்கடிக்கப்படும் மக்களும் அம் மூடநம்பிக்கைகளை முறியடிக்க அஞ்சி ஏன் என்ற வினாவை எழுப்பாமலே தொடர்கின்றனர். இதனைக் கருத்தில்கொண்ட ஆசிரியர் சந்திரகௌரி அவர்கள் காரணம் இல்லாமல் எதுவுமில்லை. அதன் உண்மையான காரணத்தைப் புரிந்து கொண்டு தேவையற்ற மூடநம்பிக்கைகளைத் துடைத்தெறியும் வண்ணம் பல அரிய கருத்துக்களை அறிந்ததும் புரிந்ததும் என்னும் பகுதியில் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார்.

அற்புதமான அண்டவெளி இரகசியத்தை திருநீலகண்டர் வடிவம் மூலம் எடுத்துக்காட்டியுள்ளமை இந்துமதத்தின் ஆழமான அறிவினை அடையாளப்படுத்துகின்றது. இந்துமதத்தில் கைக்கொள்ளப்படும் சில நாட்களும் நடவடிக்கைகளும் சமயக்குருக்களால் மக்கள் பகுத்தறிவுக்கு திரைபோட்டு விடுகின்றன. ஆண்டவன் என்றபெயரிலே அடயாளப்படுத்தப்படாது சில உண்மைகள் மறைந்து போகின்றன. இவை ஆசிரியர் தேடலுக்குத் தீனி போடுகின்றன. இவ்வாறான படைப்புக்களுக்குக் கருவாகின்றன.

கல்வி கற்கின்ற காலத்திலே பரீட்சையை நோக்கமாகக் கொண்டு கற்பதனால், கற்கின்ற விடயங்களை ஆழமாக யாரும் நோக்குவதில்லை. அவற்றிலுள்ள சில விடயங்கள் வாழ்க்கைப் போக்கில் வாழ்ந்து பார்க்கும்போது நடைமுறையில் காணுகின்ற விடயங்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றன. இலக்கியங்கள் அனைத்தும் சோடனைகள் தானோ என்று சில சமயங்களில் எண்ணத் தோன்றுகின்றது. கற்பனைகளுக்கு இலக்கியவாதிகள் எழுத்து வடிவங்கள் கொடுக்கின்றார்களோ என்று சந்தேகத்தை எழுப்புகின்றது. கவிஞர் சொல்வதும் பொய்யே பொய்யே என்று ஓர் கவிஞன் பாடியது மனதைத் தட்டுகின்றது. அதே சமயம் சில இலக்கியங்கள் எங்களை அறியாமலே எங்கள் உள்ளத்திற்குள் இனம்புரியாத மகிழ்ச்சியை ஏற்படுத்தி இன்ப வெள்ளத்திற்குள் மூழ்கடித்து விடுகின்றது. அவற்றை பல பக்கப் பார்வையில் சிந்திக்கின்ற போது ஆழக்கடலுள் முத்தெடுக்கும் அற்புத உணர்வு ஏற்படுகின்றது. இவற்றையெல்லாம் சந்திரகௌரியின் இலக்கிய இன்பத்தில் காண்கின்றேன். திருக்குறளுக்குள்

தேடித்தேடிக் கேள்வி கேட்டிருக்கின்றார். தெளிந்து எமக்கு தெளிவை ஏற்படுத்தியிருக்கின்றார். இதனாலேயே முக்குளிப்பு என்றபெயரில் இந்நூல் சிறப்பாக அமைந்திருக்கின்றது.

இடையிடையே இவர் படைத்திருக்கின்ற கவிப்படைப்புக்கள், சிந்தனை வரிகள் இவரின் ஆழமான சிந்தனைப் போக்கினை எடுத்துக்காட்டுகின்றது.

புலம்பெயர் வாழ்க்கைச் சூழலிலே பெற்றோர் கடமைகள், இளந்தலை முறையினரின் பங்கு, வாழுகின்ற நாட்டிற்கு வந்தனை செய்யும் மனப்பாங்கு, தமிழ்மொழி பிறந்த மண்ணிலேயே தடுமாறும் சகிக்கமுடியாத சூழ்நிலை, ஜேர்மனியக் கல்வி முறை இவ்வாறு பல பக்கப் பார்வையிலே சிந்தனையின் தேனூற்று சிறப்பாக அமைந்திருக்கின்றது.

புலம்பெயர் சூழலிலே பல நாட்டு மொழிகளிடையே பல்வேறுபட்ட மக்கள் இடையே வாழ்ந்துகொண்டு ஒரு தரமான தமிழ்மொழி இலக்கியம் படைப்பது என்பதும், தாய்மொழியிலே பற்றுக் கொண்டு தாய்மொழியாம் தமிழ்மொழியில் படைப்புக்களைப் படைப்பது என்பதும் இலகுவான காரியமல்ல. ஒரு பெண்ணாக குடும்பச் சுமைகளைச் சுமப்பதுடன், தன் தாய்மொழியையும் தளர்ந்துவிடாது சுமப்பது சந்திரகௌரிக்கு இலகுவான காரியமாகப்பட்டிருக்கின்றது. இதற்கு அவர் கணவரும் அவருக்கு ஒத்தாசை புரிவது போற்றப்படவேண்டியது.

தன் எண்ணமென்னும் பொக்கிசத்தை பிறர் எண்ணத்திற்குள் புகுத்தும் அற்புதக்கலை கைவரப்பெற்றவர் சந்திரகௌரி. சிந்தித்தார் பிறரைச் சிந்திக்கச் செய்கின்றார். அழகான மொழிநடையில் அறிவுச் சுரங்கம் நிரம்பவே பெற்ற இந்நூல் படிப்பவர்க்கு நிச்சயம் பலனளிக்கும். ஏற்கனவே இலக்கியச்சுவை நிரம்பிய என்னையே நானறியேன் என்னும் நாவல் நூல் ஒன்றை படைத்ததுடன், www.gowsy.com என்னும் தனது சொந்த இணையத்தளம் மற்றும் வேறு இணையத்தளங்களிலும் தன் எண்ணங்களைத் தடம்பதிக்கின்றார். இது போன்ற பல படைப்புக்கள் இவர் மூலம் தமிழுலகத்திற்கு வெளிவரவேண்டும். மடமைகள் எடுத்தெறியப்படவேண்டும். மனிதன் சிந்திக்கும் மனிதனாய் வாழ்க்கையைத் திசைதிருப்ப வேண்டும் என்று உள்ளத்தைத் தொட்டு, தொடரும் இவர் எழுத்தாற்றலுக்கும் எழுத்துப்பணிக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

திருமதி P.S.M. சார்ள்ஸ்

**தமிழ் எழுத்தாளர் சங்கம் - யேர்மனி**
Tamilischer Schriftsteller Verein – Deutschland
Tamil Writers Association – Germany

## உள்ளத்து உணர்வுகளால் ஒளி ஏற்றுகின்றோம்

எங்களின் மீண்டும் ஒரு வெளியீடாக வந்திருக்கும் "முக்கோண முக்குளிப்பு" நூலுக்கு எல்லாவிதமான சிறப்புரைகளும் எழுதக்கூடிய கடப்பாடு எங்களுக்கே உண்டு. இத்தொகுப்பின் ஆசிரியர் திருமதி சந்திரகௌரி சிவபாலன் அவர்கள், கௌசி என்ற புனைபெயரில் எழுத்துலகை வலம்வரும் சிறந்த எழுத்தாளர் என்பதையும் எமது ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சிறந்த செயற்குழு உறுப்பினர் என்பதையும் பெருமையோடு கூறலாம். சங்கத்தின் உறுப்பினராகத் தன்னை இணைத்த காலத்திலிருந்து இன்றுவரை தன்னை சங்க நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வருபவர் இவர். சிறந்த எழுத்தாற்றலில் மட்டுமன்றி கலை இலக்கியத்திலும், பேச்சாற்றலிலும் சிறந்து விளங்குகின்றார். தனக்கென ஒரு இணையப் பக்கத்தை உருவாக்கி தன்னுள் எழும் எண்ணக்கருக்களை தேனீபோல் சேகரித்து, அதனை வாசகர் பக்கங்களில் பரவவிட்டு ஆரோக்கியமான விமர்சனங்களினால் பூரித்து நிற்கும் இவர். அவற்றில் வெளிவந்த சிறந்த ஆக்கங்களுடன் புதியவற்றையும் சேர்த்து "முக்கோண முக்குளிப்பு" எனப் பெயரிட்டு ஒரு சிறந்த பொக்கிசமாக்கி இருக்கின்றார். இவருடைய இலக்கியப்பார்வை சற்று வித்தியாசமானது. சமுதாய நடவடிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்றும் கலை,கலாசாரம், மாற்றங்கள், அவற்றின் தேவைகள், தமிழ்மொழி அதன் வளர்ச்சி, தேய்வு, பெண்ணடிமைத்தனம், சீதனக் கொடுமை போன்றவற்றை இவரது ஆக்கங்களில் காணலாம். என்னுள் எழும் எண்ணங்களாக இவற்றைப்பதிவு செய்திருக்கிறேன் என ஆசிரியர் தனது உரையில் கூறியிருக்கின்றார்.

நாம் வாழுகின்ற காலத்தில் எம்மால் மேற்கொள்ளும் இப்பதிவுகளே நாம் விட்டுச்செல்லும் செல்வங்களாகும். நாம் இல்லாது போனாலும் எம்மால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் எம்மையும், எமது சந்ததியையும் வாழவைக்கும்.

இவைகளே சரித்திரத்தின் முக்கிய சான்றுகளாக மிளிரப்போகின்றவை. இந்தக் காலத்தில் இதற்குரிய பெருமையைத் தக்கவைத்துக் கொள்வதில் புதிய இளம் எழுத்தாளர்களின் பங்கு அளப்பரியது. பாராட்டுதற்குரியது. அந்தவகையில் திருமதி கௌசி சிவபாலனுக்கும் இந்தப் பாராட்டுப் போய்ச் சேருகிறது. இது இவருக்கு இரண்டாவது நூலாகும். முதல் நூல் வெளியீட்டிலும் எங்களின் பங்கு முக்கியமானதாகும்.

சிந்தனையின் தேனூற்று, இலக்கிய இன்பம், அறிந்ததும்,புரிந்ததும்

என்கின்ற முப்பரிமாணங்களை இந்நூல் கொண்டுள்ளதால் இதற்கு "முக்கோண முக்குளிப்பு" என்று தலைப்பு வைத்திருக்கிறார் என்பதை எண்ணலாம். இவர் இப்பரிமாணங்களில் மூழ்கி எடுத்த முத்துக்களே இந்த நூலாகும். இதுவும் ஒரு புதிய முயற்சியே. வித்தகர்கள் பெருமளவு வாழ்ந்த ஊராம், இப்போதும் வாழுகின்ற ஊராம் 'மீன்பாடும் தேனாடு" என்று எல்லோரும் பாராட்டும் மட்டக்களப்பு மாநகரின் ஒரு பகுதி ஏறாவூர். இவ்வூரில் திரு. திருமதி வேலுப்பிள்ளை பரமேஸ்வரி தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தவர் திருமதி சந்திரகௌரி சிவபாலன். ஆரம்பக்கல்வியை மட்டக்களப்பிலும் பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், பின்னர் நுகேகொட திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியல் டிப்ளோமாவையும் படித்து முடித்து, ஆசிரியராகிப் பல மாணவர்களுக்கு கல்வி ஒளியை ஏற்றிவைத்தவர். இவரது அபாரத்திறமையினால் கல்வித் திணைக்களத்தில் பதவி உயர்வு பெற்றிருந்து ஆசிரியர் ஆலோசகரானார். கொடுக்கின்ற பொறுப்பை சிறந்தமுறையில் செய்து முடிக்கின்ற திறமைவாய்ந்தவர். இவரில் பல திறமைகள் உண்டு என்று வியந்து சொல்லுகின்றார், இலங்கை ஆசிரியர் சங்க ஓய்வுபெற்ற செயலாளர் திரு.திருமதி சிவப்பிரகாசம் சரவணபவானந்தன் தம்பதிகள். எங்களால் அண்மையில் வெளியிட்டு வைத்த "செவ்வரத்தை" நூல் வெளியீட்டு விழாவில் வாழ்த்துரை வழங்க வந்திருந்தபோது இதனைத் தெரிவித்தார்கள். தனது இல்லற வாழ்க்கையால் வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைத்தவர் திருமதி சந்திரகௌரி சிவபாலன். இவருடைய கணவர் திரு. சிவபாலன் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கி ஊக்கிவிப்பவர். அவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்கலாம்.

இந் நூலாசிரியர் திருமதி சிவபாலன் அவர்கள் எமது எழுத்தாளர் சங்கத் தின் முகநூலை வடிவமைத்துத் தந்ததுடன். ஆக்கங்களைத் தரவிறக்கம் செய்பவரும் அவரே. செவ்வரத்தை நூல் வெளியீட்டு விழாவில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ததுடன். திரு. அம்பலவன் புவனேந்திரனுடன் சேர்ந்து நிகழ்ச்சியை அற்புதமாகத் தொகுத்து வழங்கியவர். பல திறமைகளைத் தன்னகத்தே வைத்திருக்கும். இந்நூலாசிரியரின் இந்நூலை வெளியிட்டு வைப்பதில் எமது எழுத்தாளர் சங்கம் பெருமையடைகிறது. இவரின் இவ்வாக்கத்திற்கு வாசகர்களாகிய நீங்கள் பெருமளவில் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். இவரின் முயற்சி மென்மேலும் வளர எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வைரமுத்து சிவராசா, பொன்.புத்திசிகாமணி.**

தலைவர், செயலாளர்.

# பொருளடக்கத் தலைப்புக்கள்

**இலக்கிய இன்பம்**

1. நிலாவும் யாழ்நூலும் ........ 3
2. பகுத்தறிவு ........ 6
3. சூழ்ச்சியில் புகழ்ச்சி ........ 12
4. மறுபக்கப் பார்வையில் இலக்கியம் ........ 14
5. தமிழ்மொழியின் சிறப்பு ........ 17
6. இலக்கிய இன்பம் ........ 23
7. வள்ளுவர் பெருமையும் திருக்குறளும் ........ 31
8. உச்சிமோந்த தமிழ் அன்னை ........ 36
9. திருக்குறள் ........ 39

**அறிந்ததும் புரிந்ததும்**

10. ஆடி அமாவாசை ........ 45
11. திருநீறு ........ 49
12. திருநீலகண்டர் வடிவம் ........ 53
13. ஆலமரத்தடிப் பிள்ளையார் ........ 56
14. சித்திராபௌர்ணமி அன்று ஓர்நாள் ........ 58
15. தமிழர் கலாசாரத்தில் தாலி ........ 63
16. தலைப்பாகை ........ 66
17. தீட்டு என்றும் துடக்கு என்றும் கருதப்படும் விலக்கு நாட்கள் ........ 68
18. நமக்கு நாமே எதிரி ........ 73

19. பாதணியை மதிப்பதா? மிதிப்பதா? ........................................ 77

20. புரட்டாதிச்சனி விரதம் ........................................ 80

21. வணக்கம் செலுத்துதல் ........................................ 83

22. விளக்கின் ஆன்மீகத் தத்துவம் ........................................ 85

## சிந்தனையின் தேனூற்று

23. 16 வயதுக்கு மேற்பட்டோர் கல்வியும் பெற்றோர் தலையீடும். ........... 89

24. அடிப்படைப்பாடசாலை கிளெளபேர்க் சோலிங்கன்
(Grundschule Klauberg in Solingen) ........................................ 92

25. சீ..... தனம் புலம் பெயர்விலுமா! ........................................ 95

26. பூக்களின் படைப்பு (அனுபவம்) ........................................ 99

27. அன்னையர் தினம் ........................................ 101

28. ஆழ்ந்த அன்பு ........................................ 103

29. உண்மை நட்பு ........................................ 105

30. எழுத்தாளனை ஏளனம் செய்யும் சமுதாயம் ........................................ 107

31. என் 18, 20 வயதுகளின் இன்றைய ஏக்கங்கள் ........................................ 109

32. என் கேள்விக்கு என்ன பதில் ........................................ 111

33. ஒரு நாட்டின் உயர்வுக்கு ஆசிரியரின் பங்கு ........................................ 113

34. குழந்தை வளர்கிறதா? வளர்க்கப்படுகின்றதா? ........................................ 117

35. சுதர்மம் ........................................ 119

36. தமிழர் கலாசாரமும் புலம்பெயர்வில் பெற்றோர் பங்கும் .................. 122

37. தாய்மொழியாம் தமிழ்மொழியைப் பேசத் தயங்குவதும் ஏன்? ......... 128

38. புலம்பெயர்வில் பெற்றோர் தமது பிள்ளைகளின் திருமணத்தின் பின் அவர்களுடன் இணைந்து வாழ்தல் சிறப்பைத் தருமா? ........... 132

39. திருமணத்தை எதிர்நோக்கியிருக்கும் பெண்களே!........................ 136

40. திருமணம்........................................................................ 140

41. நன்றிகூறல்...................................................................... 144

42. புகுந்த நாட்டைப் போற்றித் தொழுவோம்.......................................... 147

43. புரியாத புதிர்.................................................................... 150

44. பெண்ணின் பெருந்தக்க யாவுள .................................................. 152

45. சூரியவழிபாடும் பொங்கல் விழாவும் .............................................. 155

46. மகளிருக்காய் ஓர் தினம்......................................................... 158

47. மழலைகள் உலகம் மகத்தானது................................................... 161

48. முதியோர் தினம்.................................................................. 164

49. வன்முறை......................................................................... 167

50. வாசிப்பதனால் ஏற்படும் நன்மைகள்.............................................. 169

51. வாழவந்த நாட்டுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம் ................. 172

52. கார்னிவல் கொண்டாட்டம்......................................................... 175

53. ஜேர்மனியக் கல்விமுறை ......................................................... 178

54. கூட்டைவிட்டு வெளியே வாருங்கள்.............................................. 184

55. கோபம்............................................................................. 186

56. நம்பிக்கை ......................................................................... 188

57. வாழ்க்கையில் வெற்றி பெறும் வழிவகைகள்.................................... 190

# இலக்கிய இன்பம்

# நிலாவும் யாழ்நூலும்

*நெடிதுயர்ந்த மாடங்கள்*
*கடிதென விரையும் சாலை*
*கொட்டும் பனி வாட்டியெடுக்கும் குளிர்*
*வாழ்கிறோம் வந்த நாட்டில்*

உணவு தொட்டு அத்தனையும் இரசாயனம் கலந்த வாழ்வு. இயற்கை அழகை எங்கே நாம் இரசிக்க முடியும். இயற்கையை இரசிக்க இடம் தருகின்றதா இவ்வாழ்க்கை. வாகனத்தின் போக்கில் நிலாவின் புதுப்பொலிவைக் காண்கிறேன். காண்போர் கண்களுக்கு விருந்தாகும் நிலா, எட்ட நின்று என் கருத்தைக் கவர்கின்றது. நான் பிறந்த போதும் இப்படியே நின்றது. நான் வளர்ந்த போதும் இப்படியே நிற்கின்றது. கால மாற்றங்கள் உடலிலும் உள்ளத்திலும் வாழ்விலும் பல மாற்றங்களைக் காட்டி நிற்கின்றன. இந்த வட்ட நிலா மட்டும் நான் கண்ட அதே கோலத்தில் காட்சியளிக்கின்றது.

சின்ன வயதில் மட்டக்களப்பு வாவியிலே, பூரணநிலா பொங்கிப் பூரிக்கும் அழகை நினைத்துப் பார்க்கின்றேன். அவ்வேளை அவ்வாவியிலிருந்து தோன்றும் ஒரு இனிய ஓசை இன்றும் என் காதுகளுக்குள் கானமிசைக்கின்றது. உலகில் எங்கும் கேட்க முடியாத அந்தப் பாடும் மீன்களின் பரவச கானம் பலர் இதயங்களைக் கொள்ளை கொண்டது. இவ் இனிய ஓசை பற்றி விபுலானந்த அடிகளார் நீரர மகளிரின் காந்தர்வ இசை எனக் களிப்பின்புற்றுக் கூறியுள்ளார்.

01

*"நீல வானிலே நிலவு வீசவே மாலைவேளையே மலைவி தீருவோம்*
*சாலை நாடியே சலவி நீருளே ஆலைபாடியே பலரொடு ஆடுவோம்*
*நிலவு வீசவே மலவு தீருவோம் சலவி நீருளே பலரோடாடுவோம்*
*நீசரி காகம மாபத நீசா கரிகம மாபவ பதனி சாசரி"*

விபுலானந்த அடிகளாரின் ஆராய்ச்சித் திறமைக்கு இது ஒரு எடுத்துக் காட்டாகப்படுகின்றது. பூரணநிலவிலே பொங்கியெழும் ஓசையும் ஆண்டுதோறும் ஆனித்திங்களில் மட்டக்களப்பு மாநிலம் எங்கும் காணப்படும் கண்ணகி அம்மன் ஆலயங்களில் பாடப்படும் பாடல்களும். சிலப்பதிகாரக் கவிதைகளின் சிலம்பொலிகளும் விபுலானந்த அடிகளாரை இசை ஆராய்ச்சிக்கு உட்படுத்தியிருக்க வேண்டும் என்று கருதுகின்றேன்.

*'அஞ்சிறையும் புள்ளொளியும் ஆன்கன்றும் கழுத்தில்*
*அணிமணியின் இன்னொலியும் அடங்கியபின் நகரார்*
*பஞ்சியைந்த அணிசேரும் இடையாமப் பொழுதில்*
*பாணனொடும் தோணியிசை படர்ந்திரனோர் புலவன்*
*தேனிலவு மலர்பொழில் சிறைவந்து துயில*
*செழுந்தராங்கத் தீம்புனலில் நண்டினங்கள் துயில*
*மீனலவன் சிலவந்து விண்ணிலவன் துயில*
*விளங்கு மட்டு நீர்நிலையில் எழுந்ததொரு நாதம்"*

எனப் பாடும்மீன் நாதம் கேட்டுப் பரவசமுற்றுப் பாடினார் விபுலானந்த அடிகளார்.

எனவே மீனினம் இசை பொழிய இடந்தந்த வெண்ணிலாவே யாழிசை நரம்புகள் எல்லாம் தெளிவாக ஆராய்ந்து யாழ் நூலை ஆக்கி அந்நூலுக்கு ஏற்ப யாழினையும் உருவாக்கித்தந்த விபுலானந்த அடிகளார் உள்ளத் தூண்டலுக்கு நீயும் காரணமோ!

**யாழ் பற்றிச் சில வார்த்தைகள்**



Lever harp

சங்க காலத்திலே மன்னர்களைப் புகழ்ந்து பாடி பரிசில்கள் பெறுவது புலவர்கள் வழக்கமாய் இருந்தது. அதேபோல் பாணர்கள் யாழ் மீட்டிப் பரிசில்கள் பெறுவர். பாணர்கள் யாழ் மீட்டிப் பாடும்போது அவர்கள் மனைவியர் பாடினிகள் நடனம் ஆடுவர். இக்காலத்தில் இருவகை யாழ்கள் வழக்கத்தில் இருந்தன. அவை 7 தந்திகளுடைய

செங்கோட்டி யாழும், 21 தந்திகளுடைய பேரியாழும் ஆகும். இவை பற்றிப் பத்துப்பாட்டு அழகாக எடுத்துக்காட்டுகின்றது. அதன்பின் சிலப்பதிகார காலத்தில் 14 தந்திகளுடைய சகடயாழும், 17 தந்திகளுடைய மகரயாழும் வழக்கத்திற்கு வந்தன. அதன்பின் 1 தந்தியுடைய மருத்துவயாழும், 1000 தந்திகளுடைய நாரத பேரியாழும்,100 தந்திகளுடைய கீசகயாழும், 9 தந்திகளுடைய தும்புருயாழும் வழக்கத்திற்கு வந்தன.

அழகான வேலைப்பாடுகளுடனும் இரத்தினக்கற்கள் பதித்தும் இவ் யாழ்வகைகள் காணப்பட்டன எனவும். மேலும் அவை பற்றிய விளக்கங்களும் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், சிலப்பதிகாரம், கல்லாடம் ஆகிய நூல்களில் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

**உசாத்துணை நூல்**


- (1936)விபுலானந்த அடிகளார் சொற்பொழிவு.


**வலி தாங்கி வாழ்வளித்த வாழ்விளக்கு**

*கரு தாங்க நிறை வலி உடலெங்கும் பாய*
*உடலுள்ளுள்ளே புரியாத உயிரொன்று புரண்டிடவே*
*ஒவ்வாத குணம் கொண்ட குடலது வயிற்றை குமட்டி வர*
*வாந்திவாந்தி என்று குடலே வெளிவருமாப் போல்*
*குணமொன்று தொண்டையிலே தொடர்ந்து வர*
*கருவென்ற காரணம் கருத்தே புரிந்து கொண்டு*
*உணவெதுவும் உடலுக்கு உதவாது வெளிவரினும்*
*உணர்வெல்லாம் கருவிலே பதிந்திருக்க*
*சிறிதளவு தானேதும் கருவுக்குச் சேர்ந்திடவே*
*வலியோடுணவு உண்ட மகத்தான மாதாவே! - நான்*
*உறங்க உன் மடி என்றும் தேவை.*

# பகுத்தறிவு

ஏன் என்று கேட்காதுவிட்டால், மடையர் நாம் என்று காட்டிவிடும் அறிவு. நாம் ஆறறிவு மனிதர்களா? இல்லை எனில் 5 அறிவு மிருகங்களா? என்று புரியாது போய்விடும். மிருகங்கள், பறவைகள் பலவற்றின் குணநலங்களை எடுத்தாராயும் போது அவையே தம் வாழ்வுக்குத் தேவையான அறிவு கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தலையாட்டித் தொடரும் ஆட்டு மந்தைகள் போல் வழி வழியாகத் தொடரும் பழக்கவழக்கம் என்றோ, ஊரோடு ஒத்தோடாவிட்டால், சமூகம் எம்மை ஒதுக்கிவிடுமென்றோ, ஆச்சரியமானதாக இருக்கின்றது என்றோ, எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்களே! அதில் ஏதோ உண்மை இருக்கும் என்றோ எதையும் நம்பிவிடக்கூடாது.

அன்றே உலகப்பொதுமறை தந்து முக்காலத்தையும் ஒன்றே முக்கால் வரிகளால் அளந்த வள்ளுவர் பகுத்தறிவு காட்டிவிட்டார்.

*"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு"*

எவர் சொன்னாலும் அதன் உண்மைப்பொருளைக் காணவேண்டும் அதுவே அறிவு.

*"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு"*

எந்தப்பொருள் எந்த இயல்பினதாகத் தோன்றினாலும் அந்தப்பொருளின் உண்மையான இயல்பை அறிவது அறிவு.

02

*"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே*
*மெய்யுணர்வு இல்லாத வர்க்கு"*

உண்மையைக் கண்டறிந்து ஆராய்ந்து தெளிவடையாதவர்கள், தம் ஐம்புலன்களையும் அடக்கி எத்தகைய துறவு வாழ்க்கையில் வெற்றி கண்டிருந்தாலும் அதனால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. எனப் பகுத்தறிவைப் போதித்துப் போனார்.

'யார் சொன்னார், எவர் சொன்னார் என்பதை விட்டுவிட்டு எவர் சொன்ன சொல்லையும் உனது சொந்த அறிவால் எண்ணிப்பார்" என்று சாக்ரடீஸ் சொல்லியிருக்கின்றார்.

இவ்வாறு உண்மைத் தன்மையை அறிவது மட்டுமல்ல எமது கடமை. அதை அறியாதவர்களுக்கு அறியச்செய்வது ஒவ்வொருவரதும் கடமையாகின்றது.

*"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை*
*சொல்லா நலத்தது சால்பு"*

தவம் என்று சொல்லப்படுவது கொல்லாத நலத்தை அடிப்படையாகக் கொண்டது. சால்பு எனப்படுவது பிறரது குற்றங்களை எடுத்துச் சொல்லாத நலத்தை அடிப்படையாகக் கொண்டது சால்பு என்று வள்ளுவர் கூறிவிட்டார் என்பதற்காக அவர் கூறிய "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்" என்னும் குறளை நாம் மறந்துவிடக்கூடாது. தீமை கண்டு குற்றங்களை எடுத்துச் சொல்லித்திருத்தாது போனால் போகட்டும் என்று நாம் வாழ்ந்தோமேயானால், வாழிடச் சாக்கடையுள் நாமும் புரண்டே எழவேண்டியவர்கள் ஆகிவிடுவோம்.

வால்மீகியின் இராமாயணத்திலும் உலகாயுதக் கொள்கைபற்றிக் கூறப்பட்டுள்ளது. அக்காலத்திலேயே கடவுள் மறுப்புக் கொள்கை இருந்திருக் கின்றது. பார்ப்பனருக்குரிய எவ்வித சடங்குகளும் கடைப்பிடிக்காத ஜாபாலி என்னும் அந்தணர் தசரதர் அவையில் இருந்திருக்கின்றார். வசிட்டர் நல்லநாள் குறித்துக் கொடுத்தும் அந்நாளில் முடிசூட்டு விழா நடைபெறாது ராமன் காடு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதை ராமனுக்கு எடுத்து ரைத்து, நல்லநாள், கெட்ட நாள் என்பதெல்லாம் இல்லை என்று பகுத்தறிவு போதித்துள்ளார்.

பகுத்தறிவு என்பது பொருட்கள், நிகழ்வுகளின், கருத்துக்களின் கூறுகளை அவதானித்து ஆய்ந்து அவற்றின் இயல்புகளில் இருந்து ஆதாரபூர்வமாக புறவய நோக்கில் நிரூபிக்கக்கூடிய முடிவுகளை முன்வைக்கும் வழிமுறையையும், அதை ஏதுவாக்கும் மனித அறிவு ஆற்றலையும் குறிக்கின்றது. மெய்ப்பொருளை அல்லது உண்மையைக் கண்டறிவது என பகுத்தறிவு பற்றி விக்கிப்பீடியா எடுத்துரைக்கின்றது. பெரியார் அறிவு எனப்படுவதே பகுத்தறிவுதான் என்கிறார்.

சைவசமயத்தில் சந்தேகம் தோன்றியபோதே சைவசித்தாந்தம் தோன்றியது. இவ்வாறு சந்தேகங்கள் தோன்றும்போதே அவற்றுக்கான தெளிவும் ஏற்படுகின்றது.

2500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய புத்தர் "கடவுளாவது ஆத்மாவாவது இவையெல்லாம் சுத்தப்புரட்டு. எதையும் அறிவுகொண்டு சிந்தித்துப் பார்த்து புத்திக்கு எது சரியென்றுபடுகின்றதோ அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமே யொழிய கடவுள் சொன்னார் முன்னோர்கள் சொன்னார்கள் என்பதற்காக ஏற்றுக் கொள்ளாதே. வெகுகாலத்திற்கு முன் சொல்லப்பட்ட கருத்தாயிற்றே. வெகுகாலமாகப் பின்பற்றிவந்த கருத்தாயிற்றே என்பதற்காக ஏற்றுக்கொள்ளாதே. அறிவுகொண்டு அலசிப்பார் எது உன் புத்திக்குச் சரியென்றுபடுகிறதோ அதனை ஏற்றுக்கொள்" என்று அறிவைப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தைக் கூறியுள்ளார்.

பகுத்தறிவுக் கொள்கை அக்காலப் புலவர்களின் பாடல்களில் காணப்படுவதைப் பார்க்கின்றபோது

18ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த சீர்காழி அருணாசலக்கவிராயர் நாடகத் தமிழுக்கு உயிரளித்தவர். இவர் சிந்திக்கப்பல பாடல்களை யாத்துள்ளார்.

*"மிகப்பட்ட வெம்பசியால் வெம்பருந்தின் வாயில்*
*அகப்பட்ட கோழிப்பார்ப் பானேன் - நகப்பட்ட*
*கல்லையோ கைதொழுதேன் காகமணு காமலையில்*
*இல்லையோ ரத்னகிரியே"*

அளவுகடந்த பசியால் மிகக் கொடிய பருந்தின் வாயில் கிடைத்த கோழிக்குஞ்சு போலானேன். யான் கல்லையா கடவுள் என்று கும்பிட்டேன். இல்லையே காகமும் அணுகாத இரத்னகிரி மலையை அல்லவா நானும் வணங்கினேன். அந்த இரத்னகிரி போன்ற சிவன் இப்போது இல்லையோ என்று கேட்கின்றார். இலங்கை முள்ளிவாய்க்காலிலே மொத்தமாய் உயிர்கள் பறிக்கப்பட்ட போதும் இதேபோன்ற கேள்வியே பலர் மனதுள் கேட்கப்பட்ட கேள்வியானது. இல்லையோ என்னும் அச்சம் தோன்றும்போதே இருக்கிறதா என்ற கேள்வியும் எம்மத்தியில் எழுகின்றது.

*'வெண்ணெயுற்று நெய்தேட வேண்டுமா தீபமுற்று*
*நண்ணு கனறேட னன்றாமோ - என்மனத்தை*

*நாடிச் சிவனிருக்க நாடாமனூர்தோறும்*
*தேடித் திரிவதென்ன செப்பு?*

ஏ, உள்ளமே உனக்கென்ன பேதமை? வெண்ணெய் கையிலிருக்கும் போது நெய்யைத் தேட வேண்டிய அவசியமென்ன? விளக்கு இருக்கும்போது அனலைத் தேடிப்பிடிக்க முனைவது சரியா? என்மனதை நாடிச் சிவன் இருக்கும்போது அவனை அகத்துள் பார்க்காமல் ஊரூராய்ச் சென்று கோயிலுக்குள் சென்று பார்ப்பதும் ஏன்? அதற்குக் காரணம் கூறு எனத் தன் பாடலில் சிந்திப்பதாய் வரிகள் தந்திருக்கின்றார். "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" எனத் திருமூலர் கூறிய வரிகள் இங்கு தென்படுகின்றன.

சிலேடைப்பாடல்களும், நகைச்சுவைப்பாடல்களும் பாடுவதில் சிறப்புப் பெற்ற காளமேகப்புலவர்

*"இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்*
*அம்மென்றா லாயிரம்பாட் டாகாதோ - சும்மா*
*இருந்தா லிருந்தே னெழுந்தேனே யாயின்*
*பெருங்காள மேகம் பிள்ளாய்"*

என்று தன் பெருமையை அதிமதுரக்கவிராயரிடம் கூறியுள்ளார். அவரது பாடல்களிலே பகுத்தறிவுப் பாடல்கள் பல காணப்படுகின்றன.

பாடல்களில் ஒன்று

*"தாதிதா தோதீதா தத்தைதா தோதாதா*
*தாதிதா தொத்தித்த தூததே - தாதொத்த*
*துத்தித்த தாதே துதித்துத்தேத் தொத்தீது*
*தித்தித்த தோதித் திதி"*

தோழியின் தூதோ தீதானது. கிளி தூதுபோய்க் கூறாது. பாங்கியின் தூதானது நாட்களைக் கடத்தி வைக்கப்படும் தூதாகும். இறைவனைத் தொழுது தொடர்ந்தால், நல்ல பயனளிக்காமல் வீணாகப் போகும். பூந்தாதையொத்த தேமல் என் மீது விரைவாகப் பாய்ந்து மேலும் அதிகமாகாமல் சுவையான காதலனுடைய பெயரைக் கூறி என்னைக் காப்பாற்றி வைப்பாயாக என ஓசைச் சுவைமிக்க பாடலிலே சொல்லை ஆட்சி செய்திருக்கும் பாங்கு மெச்சத்தக்கது. அதிலே இக்கால பகுத்தறிவுக் கொள்கையினையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

தேதுதித்து தொத்து தீதி என இறைவனைத் தொழுது தொடர்ந்தால், நல்ல பயனளிக்காமல் வீணாகப் போகும் எனப் பாடியிருப்பதை மனம் பதிக்கக் கூடியதாக இருக்கின்றது.

எலி வாகனத்திலே வருகின்ற பிள்ளையாரைப் பார்வையுற்ற காளமேகப் புலவர்,

*"முப்பான் மழுவும், முராரிதிருச் சக்கரமும்*
*பார்ப்பான் கதையும், பறிபோச்சோ - மாப்பார்*
*வளமிகுந்த மும்மதத்து வாரணத்தை ஐயோ!*
*எலியிழுத்துப் போகிறதென்ன?*

என பருத்த உடலும், மிகுந்த வலிமையும், மும்மதமும் பொழிகின்ற களிற்றினைப் போன்ற முகப்பையுமுடைய விநாயகனை எலி கொண்டு போகிறதே ஏன்? இந்தப் பிள்ளையைப் பெற்றதாகச் சொல்லப்படுகின்ற சிவபெருமானின் மழுவாயுதமும், திருமாலின் சக்கரமும், பிரமனுடைய தண்டாயுதமும் எங்கேனும் பறிபோயிற்றோ? என்று நகைச்சுவையாகப் பாடியிருக்கின்றார்.

*"அப்பன் இரந்துண்ணி யாத்தாள் மலைநீலி*
*ஒப்பரிய மாம னுறிதிருடி - சப்பைக்கால்*
*அண்ணன் பெருவயிற னாறுமுகத் தானுக்கிங்*
*கெண்ணும் பெருமை இவை"*

ஆறுமுகனைப் பார்க்கும்போது காளமேகம் அறிவு ஆறாய் ஒழுகுகிறது. தந்தையோ பிச்சை எடுத்து பிழைப்பவர், தாயோ மலையரசன் மகள், மாமனோ வெண்ணெய் திருடித் தின்பவன், அண்ணனோ சப்பைக்கால் உடையவன், இவையெல்லாமே உனக்குப் பெருமையாக உள்ளன என புராணங்களின் கதையை ஏளனம் செய்வதாய் இப்பாடலிலே காட்டியுள்ளார்.

இவ்வாறு பெரியார் அவர்களும் கடவுள் பற்றி எண்ணற்ற வினாக்கணைகள் தொடுத்துச் சென்றுள்ளார். விஞ்ஞானிகளும் விண்முட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கின்றனர். இயற்கையின் பலபக்கப் பரிமாணங்களை ஆராய்ச்சிகளில் தெளிவுபடுத்திக் கொண்டுதான் இருக்கின்றனர்.

ஆனால், பகுத்தறிவாளர்கள் எனக் கருதப்படுவோர் பலர் தனியே கடவுள் இல்லை என்று வாதிடுவது மட்டுமே பகுத்தறிவு என்று கருதிக் கொண்டிருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயமாகின்றது. நம் அறிவுக்குப் புலப்படாத விடயம் எதுவாக

இருந்தாலும் அதை அறிந்துகொள்ளத்தேட முற்படுவதும், நடந்து கொண்டிருக்கும் சில விடயங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாது அதற்குரிய உண்மைக் காரணத்தைத் தேடிக்கொள்ள முனைவதும் அவசியமல்லவா? எதிரியாக எம் கண்ணுக்குப் புலப்படுபவன் வேறு பலர் கண்களுக்கு நல்லவனாகத் தெரிவதும், நல்லவன் என்று நாம் ஏற்றுக் கொள்பவன் பலர் கண்களுக்குத் துரோகியாகப் புலப்படுவதும் நோக்கி அதுபற்றி ஏன் என்ற கேள்வியை முன்வைத்து ஆராய்ந்து பார்ப்பதும் ஒரு பகுத்தறிவின் பாற்படுகின்றது.

ஒருவன் பார்க்கும் பார்வையில் உண்மைத் தன்மையைத் தேடும்போது சமூகத்திடையே அவன் பற்றிய நோக்கு பலர் பார்வைக்குக் கேள்விக்குறியாகத் தென்படும். ஆனால், மனதுக்கு ஒவ்வாமல், இருக்குமோ இல்லையோ, சரியோ தவறோ என்னும் ஆராய்ச்சியில் ஈடுபடாது, எதுவாகவாவது இருக்கட்டும் எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்களே! அப்படி ஏற்றுக் கொண்டாலேயே பலர் பார்வைக்கு நாம் நல்லவர்களாகத் தெரிவோம். பேரும் புகழும் எமக்குக் கிட்டும் என தப்பான ஒரு விடயத்திற்குத் துணைபோவது மனிதனாக ஆறறிவு படைத்தமைக்குத் துரோகம் செய்வதாக முடியும். எதிர்காலச் சந்ததியினரையும் தப்பான வழிக்கு இட்டுச் செல்வதாக அமையும். மூடநம்பிக்கைகள் மலிவடைந்து மனிதநேயப் பண்புகளும் மழுங்கடிக்கப்படும்.

எனவே பகுத்தறிவு என்பது தனியே கடவுட் கோட்பாட்டை முறியடிப்பதல்ல. மனிதன் வாழும் பண்புகளின் நடத்தைகளின் தன்மை பற்றியும் ஆராய்வது என்பதில் மனம்பதிக்க வேண்டும்.

*காலத்தைக் காண இலக்கியங்களைப் புரட்டாதீர் – அங்கு*

*அங்கீகரிக்கப்படாத தலைவர்களும்*

*தெய்வங்களாக்கப்பட்ட போலி மனிதர்களும்*

*கோடீஸ்வரர்களால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட கோயில்களும்*

*காலத்தை அலங்கோலமாய்க் காட்டிக் கொண்டிருக்கும்.*

# சூழ்ச்சியில் புகழ்ச்சி

ஒரு காரியத்தைச் செய்யும்போது அக்காரியம் பிறர்க்கு அரிய பெருமையைச் சேர்க்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். செய்கின்றது சூழ்ச்சியேயானாலும் அது புகழ்ச்சியை அள்ளித் தரக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

நாரதர் கலகம் ஏற்படுத்தினால், அது நன்மையில் முடியும் என்பது புராண வரலாறு. பெண்ணின் கூந்தலில் இருந்து வருவது இயற்கை மணமா? செயற்கை மணமா? எனப் பாண்டிய மன்னன் எழுப்பிய வினாவிற்கு இயற்கை மணமே என்னும் தொனியில், தருமி மூலம் பாடல் அனுப்பி நக்கீரரைச் சோதிக்க முழுமுதற் கடவுள் செய்த சூழ்ச்சியானது நக்கீரருக்குப் புகழை ஏற்படுத்தியது. ஆதிமூலம் இயற்றிய பாட்டில் பொருள் குற்றம் சுட்டிக்காட்டிய நக்கீரர் "நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என வாதிட்டு, வந்திருப்பது பரம்பொருள் என்று அறிந்தபோதும் தமிழின் தூய்மை கெட்டுவிடல் கூடாதென்று தமிழ் மேல் தான் கொண்ட அளவற்ற பற்றினை நிரூபித்துக் காட்டினார். இங்கு நக்கீரர் தமிழ் அறிவையும் அதன்மேல் அவர் கொண்ட தீராத பற்றையும் உலகுக்கு அறியச்செய்ய, இறைவன் செய்த சூழ்ச்சி நக்கீரருக்குப் புகழ்ச்சியைத் தந்தது.

இதேபோல், கண்ணன் செய்த சூழ்ச்சியால் கர்ணனுக்கு கிடைத்தது புகழ்ச்சியே. பாரத யுத்தத்தில் கர்ணன் அம்புகள் துளைக்கப்பட்ட நிலையில் குற்றுயிராய்க் கிடக்கின்றான். ஆயினும் அவன் கை வில் அம்புகள் செலுத்திய வண்ணமே இருக்கின்றது. உயிர் உடலை விட்டுப் பிரிய மறுக்கின்றது. எண்ணமோ துரியோதனனை எண்ணித் துயருறுகின்றது. அர்ச்சுனன் கலங்கினான். கண்ணா! நான் என் செய்வேன்?

03

இந்தக் கர்ணனை எப்போது நான் வெல்வேன்? இந்தப் போரில் எப்படி நான் வெல்வேன்? அஞ்சினான் அர்ச்சுனன். "இந்தப் போரில் எத்தனை முறை முயன்றாலும் கர்ணனை வெற்றி கொள்ள உன்னால் முடியாது. அவன் செய்த தருமம் அவனை இறக்கவிடாது கட்டிக் காக்கும்" என்று கூறிய கண்ணன், கிழப் பிராமணன் உருவெடுத்தார். கர்ணன் முன் வந்தார். 'வறுமைப் பிணியால் வந்துள்ளேன். ஏதும் தந்துதவுவாயா கர்ணா? என இறைஞ்சிக் கேட்டார்.

*'ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை*
*அகத்ததோ புறத்ததோ அறியேன்*
*பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்*
*பக்குவத்தில் வந்திலையால்*
*ஒவிலாது யான் செய் புண்ணியம் அனைத்தும்*
*உதவினேன் கொள்க நீ உனக்கு ..." என்றார்.*

தான் செய்த புண்ணியம் அனைத்தையும் தாரை வார்த்துக் கொடுத்தான். கர்ணன் உயிர் இறையடி இணைந்தது. கர்ணன் மறைவுக்குக் கண்ணன் காரணமாயினான். இங்கு கண்ணன் சூழ்ச்சியில் கர்ணனுக்குக் கிடைத்தது புகழ்ச்சி. பிராமணனாகிய பரசுராமன் அளித்த சாபத்தினால் உரியநேரத்தில் வித்தைகள் மறந்த நிலையில் கிடக்கும் கர்ணனிடம் பிராமண உருவெடுத்துக் கிருஸ்ண பரமாத்மா செல்கின்றாரென்றால் அங்கு கர்ணனுக்குக் கிடைக்க விருப்பது புகழ்ச்சியே. கொடையென்று வந்துவிட்டால், தன்னை நாடி வந்தவர் தன்னை வஞ்சித்தவராயினும் தயங்காது வாரி வழங்கக்கூடிய வள்ளல் கர்ணன் என்பதை உணர்த்துவதற்காகவே இவ் வடிவம் தாங்கினார். அடுத்து இறைவனே கையேந்திப் பிச்சை கேட்ட மாமனிதர் என்ற பெருமையும் கர்ணனுக்கு ஏற்பட்டது.

எனவே சூதும் வாதும் பிறர்க்குச் சுகத்தை ஏற்படுத்தல் வேண்டும். சூழ்ச்சியின் பலன் மற்றவர்க்குப் புகழ்ச்சியைக் கொடுப்பதாக இருந்தால், அந்தச் சூழ்ச்சி கூடப் புகழப்படுவதாக அமையும்.

# மறுபக்கப் பார்வையில் கடந்தகால இலக்கியங்கள்

சென்ற காலங்களில் இளமைப்பருவங்களில், கற்ற வற்றை மீட்டிப்பார்க்கும் வேளையில், உள்ளத்தில் புதைந்து மீண்ட சில கற்றவை சிந்தனையைத் தட்டிவிட்டது. உள்ளத்தில் தாக்கத்தைத் தந்ததோ! மனதின் உள்ளத்தைத் தெளிவாக்கியதோ! பிறருக்கும் புரியவைக்க வேண்டும் என்று எண்ணியதோ! நீண்ட நாட்களாய் நீங்காது எண்ணத்தில் சிக்கி வெளிவரத் தயங்கிய வார்த்தைக் கோர்வைகளை தவிக்கவிடாது இன்று தந்து விடுகின்றேன்.

கல் தோன்றி மண்தோன்றா காலத்திலே முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி. அவர் மொழி தமிழ்மொழி. அதில் ஆழ்ந்த நாட்டம் கொண்டதனால், தமிழைப் பட்டப் படிப்பில் மேற்கொண்டேன். மனம் ஒன்றிக் கற்றேன். தமிழன் என்று பெருமை கொண்டேன். கட்டடக்கலையில், கவிப்புலமையில், தமிழன் மேல்நோக்கி நின்ற மகத்துவத்தை எண்ணி எண்ணி வியந்தேன். தமிழ்ப் பெருமை பேச தமிழ் இலக்கியங்களைக் கற்கவேண்டும். ஏனெனில் அடுத்தது காட்டும் பளிங்குபோல் அக்காலத்தை இலக்கியங்கள் பிரதிபலித்துக் காட்டும் என்பது திண்ணமே. அதாவது தமிழ்மொழி, தமிழ் இனம் அவற்றின் உட்கிடக்கைகள் பற்றியும் வரலாற்றுப்பார்வைகள் பற்றியும் அறிய வேண்டுமானால், இலக்கியப் பக்கங்களை ஊடுருவிச் செல்ல வேண்டும். தற்கால இலக்கியங்களை எடுத்துநோக்கினால், அக்காலத்திலும் இலக்கியங்கள் இப்படித்தான் எழுதப்பட்டனவோ என்னும் எண்ணம் உச்சந்தலையில் உதைக்கின்றது.

04

தமக்கென்று தலைவர்களைத் தாமே உருவாக்கி அவர்களுக்கு முடிசூட்டி மஞ்சத்தில் அமர்த்தி விடுகின்றனர்.

விரும்பியோ விரும்பாமலோ கட்டாயத்தின் பெயரில் தலைவர்களைத் தலைமேல் கொண்டாடவேண்டிய சூழலை மக்கள் கொள்கின்றனர். ஈவுஇரக்கமற்ற மனிதனைத் தெய்வமாய்ப் போற்றுகின்றனர். மனிதர்களைத் தெய்வமாக்கி பாலாபிஷேகம் செய்கின்றனர். கவிதைகளில் தாலாட்டுப் பாடுகின்றனர். அடுத்த தலைமுறை இவையெல்லாம் உண்மையென நாம் கற்றுவந்த இலக்கியக்கல்வி போல் எதிர்காலமும் கற்கவேண்டிய சூழ்நிலை மேற்கொள்கின்றனர்.

இலக்கியத்திற்கு வர்ணனைகள் இயல்பு, அணிகள் அவசியம், அலங்காரங்கள் விதந்திருக்கும். ஆனால், காலத்தின் தவறான கருத்துக்கள் பொய்யான தரவுகள் மெய்யாக்கப்படலாமா? இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறலாமா? சாதாரண மனிதர்களை அவதாரங்களாக்கலாமா? இவ்வாறான முற்றிய பக்தியில் ஆன்மீகக் கடவுளர்கள் எல்லாம் இவ்வாறான அவதாரங்கள் தானோ! என்று எண்ணத் தோன்றுகின்றது.

சங்ககாலம் அறியும் நோக்கில் சங்ககால இலக்கியங்களை உற்றுப் பார்க்கும்போது எல்லைமீறிய காதலர்கள், கொடூரமான போர்க்கோலங்கள், சித்திரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அகோர போர்வெறி பிடித்த மன்னர்களா அக்காலத்துத் தமிழ் மன்னர்கள்! இவ்வாறாக மன்னர்கள் வீரத்தைப் பாடுவதாய் உண்மையைத்தான் பாடினார்களா! இல்லை பொன்னுக்கும் பொருளுக்கும் புகழ்ந்து பாடினார்களா! புகழ்ந்தே பாடியதனால், இவ்வாறான புகழை விரும்பிய மன்னர்களா அக்காலத் தமிழ் மன்னர்கள். சோழர்காலத்துப் பாடப்பட்ட கலிங்கத்துப் பரணியிலே சயங்கொண்டார் ஊழிப்போரிலே பேய்கள் இறந்த எலும்புகள் விறகாகவும், தசைகள், இரத்தங்கள் உணவாகவும் உண்டு ஊழிக்கூத்து ஆடியதாகப் பாடியிருக்கின்றார்.

ஔவையார் மன்னனைப் புகழ்ந்து பாடும்போது எதிரிகளை வெட்டி வெட்டி இரத்தக்கறை படிந்துபடிந்து கூர்மை இழந்த வாளையுடைய மன்னனே! என்று புகழ்ந்து பாடியிருக்கின்றார். இறந்து பிறந்த குழந்தையை மார்பில் வாளால் வெட்டிப் புதைத்ததாக இலக்கியம் காட்டுகிறது.

பல்லவர் காலத்தின் வரவில் என் பார்வை திரும்புகிறது. சமணம், சைவம், வைணவம் என்று மதச்சண்டை கொண்டு ஒருவரை ஒருவர் தீர்த்துக்கட்டப் பொல்லாத உத்திகளைக் கையாண்டிருக்கின்றார்கள். சமணர்களை அழிக்க கழுவேற்றல் என்னும் மிருகத்தனமான தண்டனை

வழங்கப்பட்டிருப்பதைப் படித்தபோது நெஞ்சமே புண்ணாகியது. நினைவுகள் நிலைத்து அழுதுபுலம்பியது. உயிரின் மகத்துவம் புரிந்தும் மனிதர்கள் உயிர்களைக் குடித்த வேதனை புலம்பியது. இதுபோன்ற ஒருகாட்சி தசாவதாரம் என்னும் திரைப்படத்தில் காட்டப் பட்டிருந்தது. இதனைப் பார்க்கும்போது ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பது எப்படி என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழர்கள் என்று தலை நிமிர முடிகின்றதா?

மனிதர்கள் நாகரிக வளர்ச்சியில் புதுமைகள் காண்பதா? பழைமையைக் கூறிக்கூறிக் காலத்தைக் கழிப்பதா? இன்றைய இலக்கியங்கள் அன்றைய இலக்கியங்களில் சந்தேகத்தைக் கொண்டு வரலாமா? எல்லாம் புனை கதைகள் என்று விரக்தி நாம் கொள்ளலாமா? காலத்தைக் காட்டலாமா? இல்லை காலத்தின் பொய்புனைவுகளைக் காட்டலாமா? மண்டை குழம்பி எல்லோரையும் நான் குழப்பவில்லை. வழிவிடுவோம். இன்றைய தலைமுறை புதுயுகம் காண நாம் பின்னே நின்று சிந்திக்கத் தெரியாதவர்களாக அவர்களைத் திசை திருப்பாது இருப்போம். இதுவே புலம்பெயர்ந்ததன் புண்ணியமாக இருக்கட்டும்.

கடந்து வந்த பாதையில் கறைபடிந்த நிகழ்வுகளை மீட்டிப் பார்த்தபோது எமக்குள்ளும் இவ்வாறான அழுக்குகள் இருக்கின்றன என எண்ணத் தோன்றியது. அடுத்தவரைச் சுட்டிக் காட்டும்போது எம்மை நோக்கி மூன்று விரல்கள் திருப்பப்படுகின்றதை நினைத்துப் பார்த்தேன். அதற்காக நான் இனத்தை நேசிக்காதவளாகிவிட முடியாது. இனப்பற்று இல்லாதவளாகிவிட முடியாது. மொழியை மதிக்காதவளாகிவிட முடியாது. மறுபக்கப் பார்வையே பகுத்தறிவின் மூலம்.

*என் முதல் மொழி தமிழ் மொழியானால்*
*என் உதட்டின் முதல் சொல் அம்மா*
*பூவிற்கு மணம் உண்மையானால்*
*என் வாழ்வுக்கு வளம் அம்மா*
*படைப்பின் கடவுள் பிரம்மாவானால்*
*என்னைப் படைத்த பிரம்மா அம்மா*
*எனைக் காக்கும் கடவுளும் அம்மா*



# தமிழ்மொழியின் சிறப்பும் புலம்பெயர் எதிர்காலத் தலைமுறையினரும்

மனித இனமானது தனது தோற்றத்தில் இருந்து இன்றுவரை பல இயற்கை அழிவுகள், இயற்கை மாற்றங்கள், படையெடுப்புக்கள், மொழிக்கலப்புக்கள், விபத்துக்கள், புதிய கண்டுபிடிப்புக்கள் போன்ற பல மாற்றங்களைக் கண்டிருக்கின்றது. உடல் வளர்ச்சியடைவதற்காக பசிக்கும் போது உண்ணல், களைப்பின் போது உறங்குதல் தவிர விலங்கு போன்று வேறு எதுவுமே ஆதி மனிதனுக்குத் தேவைப்படவில்லை. உண்பதற்கு மட்டுமே உணவு தேடிய மனிதன், மிருக வேட்டைக்கு ஆயுதங்களை உருவாக்கும் கலையை முதலில் கற்றான்.

கல்லைப் பயன்படுத்தி நெருப்பை உருவாக்க முடியும் என்னும் முதல் கண்டுபிடிப்பைச் செய்தான். தனியாய் வாழ்ந்து, குழுக்களாகி அங்க அசைவுகளின் மூலமும் ஒலி அலைகளை எழுப்புவதன் மூலமும் எண்ணக் கருத்துக்களை வெளிப்படுத்தி வெற்றி கண்டான். முகக்குறி, கைக்குறி, படக்குறி எனப்புலப்படுத்தி காலப்போக்கில் மொழிப்பயன்பாட்டின் முக்கியத்துவத்தினை உணர்ந்து மொழியை உருவாக்கினான்.

சொற்கள் கோர்வைகள் ஆக்கப்பட்டு வாக்கியங்களாகி மொழிகள் உருவாயின. மொழிக்கு வரிகள் கொடுப்பதே எழுத்துக்களாகின்றன. இன்று நாட்டுக்கு நாடு மொழிகள் வேறு பட்டு ஏறக்குறைய (6800) ஆறாயிரத்து எண்ணூறுக்கு மேற்பட்ட மொழிகள் வழக்கில் இருக்கின்றன.

05

இவற்றில் (2300) இரண்டாயிரத்து முன்னூறு மொழிகள் மட்டுமே எழுத்துருவில் இருக்கின்றன. அதிகமான மக்களால் தாய்மொழியாகக் கருதப்பட்டு பேசப்பட்டும் எழுதப்பட்டும்

கொண்டிருக்கும் மொழிகள் ஆங்கிலம். இந்தி. சீனம். தமிழ். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அன்றும் இன்றும் செழுமையுடன் இருக்கக்கூடிய மொழி தமிழ்மொழி.

எமது தாய்மொழியாகிய இத்தமிழ் மொழி பற்றிய வரலாறு அறிவு ஆசிரியர் களிடம் இல்லையானால் அம் மொழியின் முக்கியத்துவம் ஐரோப்பிய வாழ் எதிர்காலத் தலைமுறையினருக்கு அறிவிக்க இயலாது போய்விடும். அது போல் தமிழ்மொழி கற்கும் ஆர்வமும் அவர்களிடம் இல்லாது போய்விடும்.

தமிழனின் பிறப்பிடமும் தமிழ்மொழியின் பிறப்பிடமும் குமரிக்கண்டம்தான். இதுவே முதல் மனிதன் தோன்றிய இடமாகிய இலெமூரியாக் கண்டம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இலெமூர் என்னும் குரங்கு இனம் வாழ்ந்ததனால் இலெமூரியா என வழங்கப்பட்டது என்பதனைவிட குமரி என்பது ஒரு மூலிகைச் செடி. இதுவே எம்மவரால் சோற்றுக் கற்றாழை (Aloever) என அழைக்கப்படுகின்றது. இந்த குமரிச் செடி அதிகமாக வளர்ந்திருந்த காரணத்தினால் குமரிக்கண்டம் என இலெமூரியாக்கண்டம் வழங்கப்பட்டது. இலை+மூலிகை= இலை மூலிகை. இதன் கடை எழுத்து நீங்கி இலைமூலியாகி இலைமூலி இலைமூரியாவாகி அது பின் இலெமூரியா என வழங்கப்பட்டது என்னும் கருத்தை தேவநேயப்பாவாணர் அவர்கள் கூறுகின்றார்.

இது ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது. முதல் மனிதன் தோன்றிய இடமே முதல் மொழி தோன்றிய இடமாகவும் இருக்கவேண்டும். அவன் பேசிய மொழியே முதன்மொழியாக இருக்கவேண்டும். அதுவே நாம் பேசும் தமிழ் மொழியாகும். ஹரப்பா நாகரிகத்தை ஆராய்வு செய்த ஹெரஸ் பாதிரியார் சரித்திரம் ஆரம்பிப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்பே இலெமூரியா நாடு தமிழ்நாடாய் இருந்தது என்று கூறியிருக்கின்றார்.

இயல்பாகத் தோன்றிய மொழிக்கு பதினாறு பண்புகள் இருக்கவேண்டும்

*"தொன்மை இயன்மை தூய்மை தாய்மை*
*முன்மை வியன்மை வளமை மறைமை*
*எண்மை இளமை இனிமை தனிமை*
*ஒண்மை இறைமை அம்மை செம்மை*
*எனும்பதி னாறும் இன்றமிழ் இயல்பெனப்*
*பன்னுவர் மொழிவலர் பாவாணர் தாமே"*

எனவே தமிழ்மொழி இயல்பாகத் தோன்றிய மொழியாகின்றது. உலகின் தொன்மை மொழிகளாக ஆறு மொழிகள் உள்ளன. அவை தமிழ், சமஸ்கிருதம், சீனம், இலத்தீன், கிரேக்கம், இப்ரூ ஆகியனவாகும். இவற்றில் சமஸ்கிருதம் பேச்சுமொழி அல்ல. இலத்தீன், இப்ரூ மொழிகள் வழக்கொழிந்து விட்டன. ஆனால் தேவநேயப்பாவாணர் கூறியதுபோல் இன்றும் இலக்கியச் செம்மை, இலக்கண வரம்பு, பழைமை, நிறைந்த சொல்வளம் மிக்கு என்றும் கன்னியாக விளங்குவது தமிழ்மொழியே.

எம் முன்னோர் முதல், இடை, கடை என்று மூன்று சங்கங்கள் தொடர்ச்சியாக வைத்து தமிழ் வளர்த்தனர். அவர்களால் இயற்றப்பட்ட பல நற்றமிழ் இலக்கியங்களை கடல்கோள் போன்ற இயற்கை அழிவுகளினால் அழிந்துபோயின. எம்மால் அறியப்படுகின்ற பழந்தமிழ் முதல் இலக்கண நூல் தொல்காப்பியமாகின்றது. இது தோன்றிய காலம் கி.மு.3 ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு.5 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமாகின்றது. இதனை இயற்றியவர் தொல்காப்பியர். இவர் அகத்தியரின் 12 மாணாக்கரில் ஒருவர். "முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணி" என்னும் பாயிரத்தொடர் மூலம் இவர் இந்நூல் யாப்பதற்கு முன்பே சிறந்த பல இலக்கண இலக்கிய நூல்கள் இருந்தி ருக்கின்றன என்பது அறியக்கிடக்கின்றது.

பயன்பாட்டில் உள்ளவை நிலைக்கும் பயன்பாட்டை இழப்பவை அழியும் அந்தவகையில் மொழியும் நிலைக்க வேண்டுமானால் பயன்பாடு அதிகரிக்க வேண்டும். பயன்பாடு அதிகரிக்க வேண்டுமானால் தமிழன் வாழுகின்ற இடங்களில் எல்லாம் தமிழ்மொழி பேசப்பட வேண்டும். இன்று இலத்தீன் மொழி எழுதப்படும் மொழியாக மாத்திரமே உள்ளது. இந்நிலை போல் அன்றி எழுதப்படும் மொழியாக மாத்திரமன்றி பேசப்படும் மொழியாக தமிழ்மொழி என்றும் தொடர வேண்டுமானால் அந்நிய நாடுகளிலும் அதன் பயன்பாடு அதிகரிக்க வேண்டும். இதன்மூலம் தமிழ்மொழியின் மகத்துவம் அதிகரிக்க வேண்டும்.

ஒரு இத்தாலி நாட்டவராகிய பெஸ்கி பாதிரியார் மதம் பரப்பும் நோக்கிலே தமிழகம் வந்தார். இவர் தமிழ்மொழியைக் கற்று தமிழுக்குச் சேவை ஆற்றியது மட்டுமன்றி, தன் பெயரையும் வீரமாமுனிவர் என்று மாற்றினார். அவர் "என் கல்லறையிலே நான் ஒரு தமிழன் என்று எழுதுங்கள்" என்று கூறியதன் மூலம் தமிழ் மீது அவர் கொண்டுள்ள பற்றை எடுத்துக் காட்டியுள்ளார். முதல் தமிழ் அகராதி, கோடு போட்டு எழுதும் மெய் எழுத்துக்களை குற்று வைத்து எழுத

வைத்ததுடன், ர சேர்த்து எழுதும் நெட்டெழுத்துக்களை நீட்டி எழுதும் ஆ, ஈ, ஊ ஏ, ஓ, ஔ போன்ற நெட்டெழுத்துக்களாக மாற்றியமைத்தமை போன்று தமிழுக்கு பல அளப்பரிய சேவைகள் ஆற்றியுள்ளார். இவ்வாறு வேற்று நாட்டவர் தமிழ் மீது காதல் கொண்டு தமிழுக்கு சேவை ஆற்றியிருக்கும் போது தமிழ்ச் சிறார்கள் தமிழ் கல்வியைப் புலம்பெயர்வில் கற்று அதன் சிறப்பைப் போற்றுவதில் சிறுமை இருக்கப் போவதில்லை. திருக்குறளின் பெருமை உணரப்பட்டு, அது இன்று பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் போது அந்நூலை புலம்பெயர் தமிழ் சிறார்கள் கற்பதில் நேர விரயம் ஆக்கப்படப்போவதில்லை.

இலத்தீன் சட்டத்தின் மொழியாகவும், பிரெஞ்சு காதல் மொழியாகவும் ஆங்கிலம் வணிக மொழியாகவும், சமஸ்கிருதம் தெய்வீக மொழியாகவும் காணப்பட தமிழ்மொழி பண்பாட்டு மொழியாகக் காணப்படுகின்றது. நாம் தமிழ் பண்பாட்டைப் போற்றும் ஒரு பரம்பரையை உருவாக்க வேண்டுமானால் மொழிக்கல்வியை வளரும் சமுதாயத்தினரிடம் கொண்டு சேர்க்க வேண்டியது அவசியமாகின்றது.

மொழி மனிதனை மனிதன் புரிந்துகொள்ள ஒரு சிறந்த ஊடகமாகத் தொழிற்படுகின்றது. தமிழ்மொழி பேசும் பெற்றோர் வாழுகின்ற புலம்பெயர்வில், பெற்றோரை அவர் தம் பிள்ளைகள் சரியான முறையில் புரிந்துகொள்வதற்கு தமது தாய்மொழியைப் பேசக் கற்றல் அவசியமாகின்றது. எதிர்காலத் தலை முறையினர் தமிழ் மொழியைப் புறக்கணிக்கின்ற போது எமது பரம்பரைப் பாரம் பரியங்கள் அழிந்துபோகின்றன. பண்பாடு மறைந்து போகின்றது. ஒவ்வொரு இனத்தவரும் தமது பண்பாட்டு அம்சங்களை இன்றும் தாம் வாழுகின்ற பகுதியில் நிலை நிறுத்திக்கொண்டே வருகின்றார்கள் என்பதை பல மொழி பேசுகின்ற மக்களிடையே வாழுகின்ற எமது புலம்பெயர் தமிழ் இளந்தலைமுறையினர் நன்கு அறிவார்கள்.

இன்று ஏறக்குறைய 77 மில்லியன் தமிழர்கள் உலக நாடுகள் எல்லாவற்றிலும் புலம்பெயர்ந்து வாழுகின்றார்கள். தமிழர்கள் வாழுகின்ற பகுதிகளில் எல்லாம் தமிழின் பெருமை போற்றிப் பாதுகாக்கப்படுகின்ற போதுதான், தொன்மை பெற்ற எம் செம்மொழியின் சிறப்பானது, தமிழர் புலம் பெயர்ந்து வாழுகின்ற நாட்டவர்களுக்கு அறியக்கூடியதாக இருக்கும். அதற்கு இளந்தலை முறையினர் தமிழ்மொழியைக் கற்க வேண்டியிருப்பதுடன் அவ் இலக்கண இலக்கியங்களை அவர்கள் வாழுகின்ற நாட்டு மொழி மூலம், மொழிபெயர்க்க முடியும். அத்துடன் அதன் பெருமையை அந்நாட்டவர்களுக்கு

தெரியப்படுத்த முடியும். புலம்பெயர் இளந்தலைமுறையினர் தமிழ் மொழியில் நாட்டம் கொள்ளவும், கற்கவும் அவர்தம் பெற்றோரும், ஆசிரியர்களுமே முதலில் அக்கறை கொள்ளுதல் அவசியமாகின்றது. பெற்றோர் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளும்போது தான் பிள்ளைகளுக்கு மொழிக்கல்வியைக் கொடுப்பதற்கு முன்வரமுடியும்.

பிரெஞ்சு, இத்தாலி, இலத்தீன், ஜேர்மன், ஸ்பெயின், ஆங்கிலம் போன்ற மொழிகளை இரண்டாவது மொழியாகக் கற்கின்ற தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்பது கடினம் அல்ல. பெற்றோர் கலைக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் மொழிக்குக் கொடுப்பதில்லை என்பது ஆசிரியர்களின் முக்கிய குற்றச் சாட்டாக அமைகின்றது. வீட்டிலிருந்து பிள்ளை தமிழ் பாடசாலைக்கு அனுப்பப்படும் போதுதான் ஆசிரியர்கள் அக்கல்வியைப் பிள்ளைகளுக்கு வழங்க முடியும். எனவே எதிர்காலத் தலைமுறையினர் தமிழ்க்கல்விக்கு முதல் பெற்றோர் பங்கு அவசியமாகின்றது.

இன்று புலம்பெயர்விலே தன்னலமற்ற பல தமிழ்ப்பாடசாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றிலே பணிபுரிகின்ற ஆசிரியர்கள் சேவை மனப்பாங்கிலே தமது பணியை ஆற்றிக்கொண்டிருக்கின்றார்கள். தமிழ்க்கல்வி எதிர்காலத் தலைமுறையினருக்குச் சென்றடைய வேண்டும் என்னும் நோக்கில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் புலம்பெயர்ந்து வளர்கின்ற எதிர்காலத் தலைமுறையினர் தாய்மொழியைக் கற்பதில் நாட்டம் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். தமது கல்வி மொழிக்கு எந்தவகையிலும் தமிழ்மொழி பயனளிக்காது என்றே கருதுகின்றனர். தமக்கு வருமானத்தை ஈட்டித்தராது என்னும் கருத்தையும் கொண்டிருக்கின்றனர்.

அதைவிட எமது தமிழ் பாடசாலைகள் மாணவர்களுக்கு மொழியில் சரியான ஈர்ப்பைக்கொண்டுவராதது குறைபாடாகவே காணப்படுகின்றது. ஒரு பிள்ளை தாய்மொழியில் சிறப்புப் பெற்றிருக்கும்போது கல்வி மொழியிலும் மிக்க சிறப்பை அடையமுடியும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். எனவே தாய்மொழியில் இலகுத்தன்மையை ஏற்படுத்தும்போது அது மாணவர்கள் கற்றலுக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தும். எனவே பாடத்திட்டம் இலகுவான முறையில் அமையுமாறு தயாரித்தல் கல்வியாளர் கடமையாகின்றது.

கற்றலும் கற்பித்தலும் இலகுவாக அமையும் பட்சத்தில் மாணவர்களுக்கு கற்கும் ஆர்வம் தூண்டப்படும். வேற்றுமொழியைக் கல்வி மொழியாகக் கொண்டிருக்கும் மாணவர்கள் கடினமான வழக்கொழிந்த சொற்களைக்

கற்கும்போதும், கடினமான முறையில் இலக்கணத்தைக் கற்பிக்கும் போதும் மொழி கற்பதில் சலிப்படைகின்றனர். தமிழ் கற்பிக்கும் பாடசாலைகளில் சில விரும்பத்தகாத அரசியல் விடயங்கள், அத்துடன் கற்பிக்கும் ஆசிரியர்களின் கவர்ச்சியற்ற கற்பித்தல் நடைமுறைகளும் வகுப்பறைக்கு கற்பிக்கும் ஆயத்தமில்லாது வருதலும், கற்பிக்கும் விடயத்தில் சந்தேகம் தீராமலே கற்பிக்க முன்வருதலும், யதார்த்தத்திற்கும் சூழலுக்கும் ஏற்புடையதாகக் கல்விப் பாடத்திட்டம் அமையாமையும், கல்வி மொழிப் பாடசாலைகளில் ஒரு பாடமாக தமிழ்மொழி இல்லாமையும், அதன்மூலம் தமக்கு எவ்வித பெறு பேறுகளும் கிடைக்காது என்று தமிழ் மாணவர்கள் கருதுவதும், புலம்பெயர் மாணவர்களிடையே தமிழ்மொழியில் நாட்டம் குறைவதற்குக் காரணமா கின்றன.

எனவே குறைகள் எங்கே, எப்படி உள்ளதோ அதைப் புரிந்துகொண்டு சீரமைப்பதன் மூலம் புலம்பெயர்வில் எமது தாய்மொழியின் சிறப்பை எதிர்காலத் தலைமுறையினருக்கும் கொண்டுசேர்க்க முடியும்.

*காரிருள் சூழ்ந்திருக்கக் கருமேகம் வானில்*
*விடியலைத் தேடி விரைகிறது*
*காலஓட்டத்தில் கலந்திருக்கும் மானிடரும்*
*ஞால விடிவுதேடி விரைகின்றார்*
*அஞ்ஞானத்தை அழித்து மெய்ஞானத்தில் வெல்ல*
*மெய்ஞானிகள் தேடுகிறார் விடியலை*
*மெய்ஞானத்தை வென்று விஞ்ஞானத்தை விளக்க*
*விஞ்ஞானியும் தேடுகிறான் விடியலை.*

# இலக்கிய இன்பம்

கண்டவற்றுள் உள்ளம் கலந்து, களிப்படைந்து, தாம் பெற்ற இன்பம் பிறர் அறிய இரசனை கலந்து, சிருஷ்டிக்கும் படைப்பாளிகளின் படைப்புக்களின் இலக்கியநயம் சுவைத்து இன்புறத்தக்கது. எம் வசம் கிடைக்கும் சிருஷ்டிகளின் உயிரோட்டம் சங்கம் தொட்டு இன்றுவரை அவ்வக்கால மொழிநடை, இலக்கிய மாற்றங்களுக்கேற்ப வெவ்வேறு பாணியில் பரிமளித்துக் கொண்டிருக்கின்றன. தமிழ் எழுத்து வடிவங்கள் புரியமுடியாத காலத்தில் கல்வெட்டுப் படிவங்களைப் படிக்க முடியாதவர்களாக யாமிருந்தோம். அக்காலகட்டம் மீறி எழுத்து வடிவங்கள் படிக்கக்கூடிய காலகட்டத்தில் நாம் பெற்ற இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் எம்மவர் கற்பனை வளத்தில் மேம்பட்டு நின்றதை சுட்டிக் காட்டுகின்றன. ஆயினும், அவற்றிற்குக் கூட பொழிப்புரை எமக்குத் தேவைப்படுகின்றது. அதேபோல், தற்போதைய மொழிநடை கூட எதிர்காலத்தில் எமது ஓரிரு தலைமுறைகளின் பின் பொழிப்புரை தேடி நிற்கும் என்பதைத் தற்கால அறிவியல், பொறியியல் உலகம் காட்டி நிற்கின்றது. காலங்கள் மாறினாலும் மனிதன் கற்பனைக்கு காட்சிப் படிவங்கள் மாறினாலும் மனிதன் எண்ணப்பாங்கில் மாற்றங்கள் பெரிதாக இருந்ததாக இலக்கியங்கள் மூலம் அறியப்படவில்லை. தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனப் படைப்பாளிகள் படைத்துச் சென்ற படைப்புக்கள் கற்போர் மனதில் இன்ப அருவியைப் பாய்ச்சி விடுகின்றன.

06

எண்ணங்களிலே வண்ணக் கலவைகளைக் கலக்கு கின்ற சங்கப்பாடல்களிலே அழகான கற்பனை நயங்கள் காணப்படுகின்றன. கம்பர் கவித்திறத்தில் காதினுக்கும்

ஓசைநயம் ஒளிந்திருக் கின்றது. அருணகிரிநாதர் பாடல்களில் சந்தம் பல சிந்திக்கிடக்கின்றன. திருக் குறளிலே சொல்லின்பம் சொக்க வைக்கின்றது. காளமேகம் பொழிந்த கவி மழையிலே ஆங்காங்கே பகுத்தறிவு சிலேடையாகக் காட்டப்படுகின்றது. இவ்வாறு காலம் காலமாக கையாளப்பட்ட இலக்கியச் சுவைகளிலே இனிமையும் இருந்தது. பொருளும் புதைந்திருந்தது.

இவ்வாறான இலக்கியக் கடலுள் மூழ்கிய பலரும் எடுத்த முத்துக்கள் போல் இலக்கியக்கடலின் கரையில் நின்று நான் பெற்ற அற்புத இலக்கிய அலைக்கரங்களை சிறிது அலசுகின்றேன். சுவைத்துச்சுவைத்து இன்புறத்தக்க இனிமைமாறா தமிழ்கவிச்சுராங்கத்தில் சிலவற்றை காட்சிப்படுத்துகின்றேன். கவிச்சுவை பற்றிக் கம்பரும்

*"தென்னுண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்"*

என்றார்.

*"கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல*
*காற்றையும் வான வெளியையுஞ் சேர்த்துத்*
*தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் - பல*
*தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்"*

என்று மகாகவி பாரதிகூட பாடியிருக்கின்றார்.

இலக்கியக் கல்வியாளன் பயன் நோக்கிக் கற்காது. இரசனை இன்பம் கருதிக் கற்கும்போதே பயன்பெறுகின்றான். உழைப்பைக் கருதி இலக்கியம் கற்போர், உள்ளத்துணர்ச்சிக்கு இடம்தர முடியாது போவர். "இலக்கியம் சிறுகச் சிறுக மனித மனத்தைப் பாதிக்கின்றது. உள்ளத்தைப் பண்படுத்துகின்றது. மேம்படுத்துகின்றது" அவற்றை தொடருகின்ற படைப்பாளிகள் அவ்வப்போது பகிர்ந்தளிக்கும்போது மறைந்து, ஒழிந்து வாழும் இவற்றின் சுவையைப் பலரும் பெற வாய்ப்பிருக்கின்றது.

வள்ளுவப் பெருந்தகை அளித்த குறளமுதத்தைச் சுவைக்கும்போது அதில் பல்வகை சுவை பரந்து காணப்படுகின்றது. அதில் புதைந்து கிடக்கும் சுவை கருதிக் கற்கும்போது பொருள் இன்பம் மனதுள் பதிந்து வாழ்நாள் முழுதும் யாம் ஆற்றும் காரியங்களுக்கு எச்சரிக்கை ஆற்றி எம்மை வழிப்படுத்துகின்றது

*"தீயவை தீய பயத்தலான் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும்"*

என்னும் போது தீயவை செய்வதற்கு மனம் அஞ்சுகின்றது. இவ்வாறே இலக்கியச் சுவை ததும்பும் இலக்கியங்கள் மனித உள்ளங்களை ஆட்சி புரிவதைக் காணக்

கூடியதாக இருக்கின்றன. மனித மனங்களை ஆட்சி செய்கின்றபோது அது பிறிதோர் இடத்தில் வேறு விதமாகப் வெளிப்படுகின்றது. பேச்சாளர்கள் தமது பேச்சிலே அப்படியே பயன்படுத்துகின்றனர். எழுத்தாளர்கள் அதன் பாதிப்பிலே வேறுவிதமாக அப்பொருளை அல்லது ஓசையைப் பயன்படுத்துகின்றனர்.

ஒரு சொல்லைச் சொல்லும் போது அந்தச் சொல்லைவிட வேறு ஒரு சொல் அதன் கருத்தை வெளிப்படுத்த இல்லை என்பதை அறிந்து பொருத்தமான சொல்லைச் சொல்ல வேண்டும் எனச் சொல் பற்றி வள்ளுவர் ஒரு குறளிலே விளக்குகின்றார்.

*"சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை*
*வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"*

இதனையே வெற்றிவேற்கை எனப்படும் நறுந்தொகையிலே வள்ளுவருக்குப் பிற்கால அரசனும் புலவனும் ஆகிய அதிவீரராமபாண்டியன்

*"பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்*
*மெய்போ லும்மே மெய்போ லும்மே*
*மெய்யுடை ஒருவன் சொலமாட் டாமையால்*
*பொய்போ லும்மே பொய்யோ லும்மே"*

என ஒருவன் சொல்லுகின்ற சொல்லை தனது சொல் ஆற்றலினாலும் சொல்லைக் கையாளுகின்ற தன்மையினாலும் பொய்யை மெய்யாக்கி விடுகின்றான் என எடுத்துக் கூறுகின்றார்.

இவ்வாறு இலக்கியப் பாதிப்பு இக்கால பாடலாசிரியர்களிடையேயும் காணப்படுகின்றது. அக்கால கண்ணதாசனிடமும் காணப்பட்டது. புகழேந்தி

*"மங்கை ஒருத்தி மலர்கொய்வாள் வான்முகத்தைப்*
*பங்கயம் என்றெண்ணிப் படிவண்டைச் - செங்கையால்*
*காத்தாள்அக் கைமலரைக் காந்தளெனப் பாய்தலுமே*
*வேர்த்தாளைக் காணென்றான் வேந்து"*

எனக் கையாண்ட கற்பனையை கவிஞர் கண்ணதாசன்

*"பொன் வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத - நான்*
*வளைகொண்ட கையாலே மெதுவாக மூட"*

என வரி தொடுத்துள்ளார்.

இலக்கிய ஓசைச்சுவையிலே உள்ளம் பதிக்கும்போது இராமனால் சோர்வுற்று இராவணன் கலங்கி நிற்கும் வேளையிலே உலகை மறந்து கும்பகர்ணன் உறங்கிக் கொண்டிருக்கின்றான். அவ்வுறக்கம் நீக்க உள்ளங் கொந்தளிக்கும் தூதுவர்கள் கும்பகர்ணனைத் துயில் எழுப்புகின்றனர்.

*"உறங்கு கின்ற கும்பகர்ண*
*உங்கள் மாய வாழ்வெலாம்*
*இறங்கு கின்ற தின்றுகாணெ*
*ழுந்தி ராயெழுந் திராய்*
*கறங்கு போல விற்பிடித்த*
*கால தூதர் கையிலே*
*உறங்கு வாயு றங்குவாயி*
*னிக்கி டந்து றங்குவாய்"*

படிக்கும்போதே நா தாளம் போடுகின்ற ஓசையினை தன் சொல்லாட்சியினால் கம்பர் தந்திருக்கும் சுவை மெச்சத்தக்கது. இவ்வாறே திரிகூடராசப்பக் கவிராஜரும் திருக்குற்றாலக் குறவஞ்சியிலே பந்தடிக்கும் காட்சியிலே

*"செங்கையில் வண்டு கலின்கலின் என்று*
*ஜெயம்ஜெயம் என்றாட - இடை*
*சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு*
*தண்டை கலந்தாட - இரு*
*கொங்கை கொடும்பகை வென்றன மென்று*
*குழைந்து குழைந்தாட - மணிப்*
*பைங்கொடி மங்கை வசந்த சவுந்தரி*
*பந்து பயின்றனளே"*

என்று எம்மனதுள் பூம்பந்தடிக்கும் சொல்லாட்சியினைத் தன் வரிகளில் கொண்டு இருக்கின்றார்.

இவ்வாறே காளமேகம் தூது பற்றிக் கொட்டிய ஒரு பாடலிலே

*"தாதிதூ தோதீதூ தத்தைதூ தோதாது*
*தூதிதூ தொத்தித்த தூததே - தாதொத்த*
*துத்தித்த தாதே துதித்துத்தேத் தொத்தீது*
*தித்தித்த தோதித் திதி"*

தோழியின் தூதோ தீதானது. கிளி தூதுபோய்க் கூறாது பாங்கியின் தூதானது நாட்களைக் கடத்தி வைக்கப்படும் தூதாகும். இறைவனைத் தொழுது தொடர்ந்தால், நல்ல பயனளிக்காமல் வீணாகப் போகும் பூந்தாதையொத்த தேமல் என் மீது விரைவாகப் பாய்ந்து மேலும் அதிகமாகாமல் சுவையான காதலனுடைய பெயரைக் கூறி என்னைக் காப்பாற்றி வைப்பாயாக என ஓசைச்சுவைமிக்க பாடலிலே சொல்லை ஆட்சி செய்திருக்கும் பாங்கு மெச்சத்தக்கது.

அதேபோல் கற்பனை நயம் மிக்க பாடல்களை நம் முன்னோர் படைத்துள்ள பாங்கை நோக்கும்போது சீவகசிந்தாமணியில் ஏமாங்கத நாட்டின் சிறப்பைக் கூறும் ஓரிடத்தில் திருத்தக்கதேவர், தென்னை மரத்திலேயிருந்து பழுத்த தேங்காய் பக்கத்திலே இருந்த கமுக மரத்தின் தலையிலே விழுகிறது. அப்போது அம்மரத்தின் உச்சியிலே கட்டியிருந்த தேன்கூடு உடைந்துபோக தேன் வதை கொட்டுகின்றது. அப்படியே தொடர்ந்து விழும் அத்தேங்காய் கமுகு மரத்தின் கீழே வளர்ந்திருந்த பலாவிலே விழ அங்கிருந்த பலாப்பழத்தைக் கீறிவிழ அதனடியில் இருக்கும் மாமரத்தில் வீழ்ந்து மாம்பழங்கள் சிதறுகின்றன. தொடர்ந்து அதன் அடியில் இருந்த வாழை மரத்தில் வீழ்ந்து வாழைப்பழங்கள் சிந்துகின்றன. இப்போதுதான் தரைபடுகின்றது, தேங்காய் பழம். இவ்வாறு நாட்டுவளம் கற்பனையில் அழகுறுகின்றது.

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக்
கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி
வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப்
பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால்
திசைபோய துண்டு"

திருக்குற்றாலக் குறவஞ்சியிலே திரிகூடராசப்பகவிராயர் திரிகூடமலையை வர்ணிக்கும் பாடலிலே

*"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்*
*மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்*
*கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்*
*கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்*
*தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்*

*செங்கதிரோன் பரிகாலும் தேர்க்காலும் ஒழுகும்*
*கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்*
*குற்றாலத் திரிகூட மலையலங் காரர்*
*குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே"*

எனத் தன் கற்பனையை மிக எளிய வரிகளில் படம்பிடித்துக் காட்டியுள்ளார். இதுவே எழுத்தால் மனதுள் படம் வரைதலாகின்றது.

கற்பனை சுவைமிக்க கம்பராமாயணத்திலே பல தித்திக்கும் சுவைகள் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றில் ஒரு எளிமையான உவமை

"கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்"

இதேபோல் அற்புதமான பொருள் புதைந்த ஒரு தனிப்பாடலைச் சீர்காழி அருணாசலக்கவிராயர் தந்திருக்கின்றார்.

*"வெண்ணெயுற்று நெய்தேட வேண்டுமா தீபமுற்று*
*நண்ணு கனறேட னன்றாமோ - என்மனத்தை*
*நாடிச் சிவனிருக்க நாடாம னூர்தோறும்*
*தேடித் திரிவதென்ன செப்பு"*

உள்ளமே! உனக்கு என்ன பேதமை? வெண்ணெய் கையிலிருக்கும் போது நெய் தேட வேண்டிய அவசியமென்ன? விளக்கு இருக்கும்போது அனலைத் தேடிப்பிடிப்பான் ஏன்? என் மனதை நாடிச் சிவன் இருக்கும்போது அவனை அகத்துள் நோக்காமல் ஊரூராய்ச் சென்று கோயிலுக்குள் நுழைந்து பார்ப்பது ஏன்?

படிக்கும்போதே சிந்தனைக்கு வித்திடுகின்றார் அல்லவா!

இதுபோலவே பாடல் மூலம் மழை பொழியும் மகத்துவத்தை அறிவியல் கண்கொண்டு நோக்கி இலகுவான முறையில் மாயூரம் வேதநாயகம் அவர்கள்,

*"காரேயுன் னீரையெல்லாங் கள்ளன் கவர்ந்தானோ*
*நீரே யுதவாய் நெறியாமோ - நேரேதான்*
*வாரியுண்டு வாரிமொண்டு வாரியுண்டு வானிருண்டு*
*பேரிகொண்டு நீதிரண்டு பெய்"*

எனப் பாடியுள்ளார். இனி விளக்கத்தைப் பாருங்கள்.

மேகமே நீ தேக்கி வைத்திருக்கின்ற நீரையெல்லாம் கள்வன் கவர்ந்து கொண்டு போய்விட்டானோ? நீரை உதவாமல் இருப்பது நெறியாகுமா? உனக்கு நேராகத்தானே கடல் உள்ளது. எனவே கடல் நீரை மொண்டு அள்ளி அள்ளிக் குடித்து வானத்து வழியாகச் சென்று, கருமுகிலாக மாறி, இடிமுழக்கம் செய்து ஒன்று திரண்டு "சோ" வெனப் பெய் என சொற்சுவை சொட்டப் பாடியிருக்கும் பாங்கு இனிமை பயக்கின்றது.

இவ்வாறு நாம் வாழும் காலத்தில் எழுதப்பட்டு சேகரிக்கப்படும் நற்றமிழ் பாடல்களும் மனதுக்குள் புகுந்து மெல்லிய மயிற்றூரிகையால் மனதை வருடி விடுவதுடன் சுவைத்தின்புறும் கற்பனையைக் கலந்து விடுகின்றன. பாசமலர் படத்துக்காக கவியரசு கண்ணதாசன் அவர்களால் எழுதப்பட்ட தாலாட்டுப் பாடலிலே சில வரிகள்

*"நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி*
*நடந்த இளந்தென்றலே*
*வளர் பொதிகை மலைதோன்றி*
*மதுரை நகர் கண்டு*
*பொழிந்த தமிழ்மன்றமே"*

ஒரு குழந்தையைத் தாலாட்டும்போது தென்றலின் வருகையும், தமிழ் மன்றத்தின் தோற்ற வளர்ச்சியையும் எடுத்துக்காட்டி சொல்ல வரும் செய்தியைச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் புகுத்திவிடும் கவிவல்லமையை கண்ணதாசனில் காணக்கூடியதாக இருக்கின்றது.

நீலவானிலே நித்தம் காணும் நிகழ்வை கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் ஒருபாடலில் காட்டியுள்ள தன்மையைப் பாருங்கள். இளையநிலா பொழிகிறது என்னும் பாடலிலே

நிலாவானது

"முகிலெடுத்து முகம் புதைத்து விடியும் வரை தினம் நனையும்"

முகிலுக்குள் முகம் புதைப்பதனால், முகிலுக்குள் நிறைந்திருக்கும் மழைத் துளிக ளில் தினமும் நனைகிறது என அருமையாக வர்ணிக்கின்றார். அப்பாடலிலேயே

*"வானவீதியில் மேக ஊர்வலம்*
*காணும் போதிலே ஆறுதல் தரும்*
*பருவமகள் விழிகளிலே கனவு வரும்"*

எனப்பருவப் பெண்கள் நிலாப்பொழியும் நேரம் மேகஊர்வலக்காட்சியில் தமை மறந்து நிற்பதுடன் தம் உள்ளக் காதலுக்கு உருக்கொடுத்து இன்புறும் வேளையையும் இதமாக உலகுக்குக் கொண்டு சேர்க்கின்றார். மேகம் உலாப் போகும் காட்சியை

"முகிலினங்கள் அலைகிறதே
முகவரிகள் தொலைந்தனவோ
முகவரிகள் தவறியதால்,
அழுதிடுமோ அது மழையோ"

முகிலினங்கள் கடல் மோர்ந்து, நீர் சேர்த்து, உலக நன்மைக்காக மழையாகச் சொரியவில்லை. தமது முகவரிகளைத் தொலைத்துவிட்டன. அதனாலேயே மழையாக அழுகின்றன எனத் தற்குறிப்பேற்ற அணியைக் கையாண்டு அற்புதமாய்க் கற்பனையைக் கையாண்டுள்ள சுவை மெச்சத்தக்கது.

"நீலவானிலே வெள்ளிஓடைகள்
போடுகின்றதே என்ன ஜாடைகள்
விண்வெளியில் விதைத்தது
யார் நவமணிகள்"

எனத் தன் பாடலுக்கு இலக்கிய இன்பம் ஊட்டியிருக்கும் கவியரசு வெளிப் படுத்திய இன்பச்சுவை எண்ண எண்ண இனிக்கின்றது. இதைவிட ஒரு இலக்கியச் சுவையாளனுக்கு சுவையுணவு தேவையா?

இவ்வாறு எழுத எழுதக் குறையாத அட்சயபாத்திரம் போல் எங்கள் இலக்கியப்பரப்பிலே பழந்தமிழ் இலக்கியங்களும் தற்கால இலக்கியங்களும் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றை அள்ளிப்பருகி இன்பம் பெற இத்தருணம் மட்டும் போதாது. இப்பதிவு மட்டும் தாங்காது. தொடரும் வாழ்வில் தொகையாய்ப் பெருகும், சுவையாய் தித்திக்கும், தீந்தமிழ் இன்பம் சுவைப்போம்.

**உசாத்துணை நூல்:**


- இலக்கியச்சரம். அகளங்கன்

# வள்ளுவர் பெருமையும் திருக்குறளும்

*வளமான வாழ்வதனை வாழ்உயிர்க்கு வழங்கவே*
*செறிவான குறளமுதம் உவந்தளித்த வள்ளுவரை*
*சிரந்தாழ்த்திப் போற்றியே சீரிய வாழ்வதனை*
*சிறப்புடனே பேணி சிறப்பதனை உணர்த்துவோம்.*

இக்கால வாழ்வு அக்கால வாழ்வுபோல் இல்லை. ஆனாலும் கசப்பான ஒரு உண்மை இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் (அதாவது வள்ளுவர் ஆண்டு இன்றுள்ள ஆண்டுடன் 31 ஆண்டுகளைக் கூட்ட வரும் ஆண்டு) மனிதன் ஏற்று நடக்க வேண்டிய நடைமுறைகள் எதுவாக இருந்ததோ அதே நடை முறைகள் இன்று வாழுகின்ற மக்களுக்கும் தேவைப்படுகின்றது. விஞ்ஞானம் வளர்ந்திருக்கின்றது. ஆனால், மனிதன் குணங்கள் அப்படியேதான் இருக்கின்றன.

அக்கால மக்கள் மத்தியில் இருந்த பிரச்சினைகளுக்கு அருமருந்தாக சின்னச்சின்னக் குளிசைகளாக குறள் வடிவத்திலே வள்ளுவர் தந்த மருந்துகள் இக்காலத்திற்கும் அதாவது 2000 ஆண்டுகள் கழிந்த பின்பும் மக்களுக்குத் தேவைப்படுகின்றது. அதனாலேயே வள்ளுவர் ஒரு தீர்க்கதரிசியாக விளங்குகின்றார்.

திருவள்ளுவர் ஒரு துறவி, தத்துவமேதை, தலைசிறந்த புலவர். இவர் ஆதி, பகவன் என்னும் பெற்றோருக்கு சென்னையிலுள்ள மயிலாப்பூர் என்னும் இடத்தில் பிறந்ததாக வரலாறு கூறுகின்றது. இவர் 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களுடன், மன்னர்களுடன், புலவர்களுடன் வாழ்ந்து அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை உற்றுநோக்கி தனது அனுபவங்களை குறள் வடிவில் தந்திருக்கின்றார். பல இடங்களிலே தன்னம்பிக்கை

07

ஊட்டுகின்ற வரிகள் மனித இனத்தினை உயர்வுக்குக் கொண்டு செல்வதற்காக வள்ளுவரால் தரப்பட்டுள்ளன . உதாரணமாக

*"உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது*
*தள்ளினும் தள்ளாமை நீர்த்து"*

நீ எண்ணுகின்றவை உயர்வாகவே இருக்கட்டும். அது நிறைவேறவில்லை யானாலும் நிறைவேறியதாகவே கருதப்படும். இந்த வரிகள் என்னை மிகவும் கவர்ந்த வரிகளாகக் கருதப்படுகின்றன. சிலர் கூறுவார்கள் காரிலே போகும் நீ சைக்கிளில் போகும் ஒருவனை நினைத்துத் திருப்திப்படு. சைக்கிளில் போகும் நீ நடந்து போகும் ஒருவனை நினைத்துப் பெருமைப்படு. நடந்து போகும் நீ காலில்லாத ஒருவனை நினைத்துப் பெருமைப்படு என்று. எமக்குக் கீழே உள்ளவர்களை நினைத்து நினைத்து நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தால், எப்போது நாம் முன்னேறுவது? எமக்கு மேலே உயர்வில் ஒரு உலகம் இருக்கின்றது. இந்த வாழ்க்கை ஒருமுறைதான் அதில் முயன்று முன்னேற நினைக்கவேண்டும். எண்ணமே செயல் வடிவம் பெறுகின்றது. இதுவே உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல் என்பதாகும்.

இவ்வாறு ஒரு விடயத்தைச் சொல்வதன் மூலம் வேறு ஒரு விடயத்தையும் விளக்கி விடுகின்றார்.

*"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை*
*சொல்லா நலத்தது சால்பு"*

சான்றாண்மை பற்றித்தான் சொல்ல வந்தார். ஆனால், தவம் என்பது உயிர்களைக் கொல்லாததை அடிப்படையாகக் கொண்டது என்பதையும் சேர்த்துச் சொல்லி விடுகின்றார். அதாவது உயிர்களைக் கொல்லாததுதான் தவம் என்று சொல்லப்படுவது. பிறருடைய குற்றங்களை எடுத்துச்சொல்லாதது தான் சான்றாண்மை எனப்படுகின்றது என்று சான்றாண்மையையும் தவத்தையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார். இதில் ஒன்றை நாம் ஆழமாகக் கவனிக்க வேண்டும். பிறருடைய குற்றங்களை கூறக்கூடாது என்றால் அதாவது, குற்றங்களைச் சுட்டிக்காட்டவில்லையானால், குற்றங்களிலிருந்து மனிதன் திருந்தி வாழ வழி எங்கே இருக்கின்றது. சிலர் சில தவறுகளைத் தாம் அறியாமலே செய்கின்றார்கள். அப்போது அத்தவறுகளை அவர்களிடமே சுட்டிக்காட்டித் திருத்திக்கொள்ள நாம் உதவி செய்யவேண்டும். அதைவிட்டு ஒருவன் செய்த குற்றங்களை மற்றவர்களிடம் கூறிக்கொள்ளுதல் சான்றாண்மையாகக் கருதப்படாது என்று

கருதிக் கூறாது விட்டால் குற்றங்கள் அதிகரிக்க நாமும் காரணமாகி விடுவோம் அல்லவா! இங்குள்ள ஆழமான கருத்து பிறர் குற்றங்களை பிறரிடம் கூறாது குற்றம் புரிபவரிடமே எடுத்துரைக்க வேண்டும் என்ற கருத்தில் இக்குறளை நாம் உள்வாங்கலாம்.

இந்தத் திருக்குறளிலே அதிகமாக என்னைப் பாதித்த திருக்குறள்

*"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு"*

ஏன் என்ற கேள்விகளைக் கேட்டு அதன் சரியான முடிவை எடுக்க வேண்டும். இதைத்தான் சாக்ரட்டீஸ் அவர்கள்,

"யார் சொன்னார் எவர் சொன்னார் என்பதை விட்டுவிட்டு எவர் சொன்ன சொல்லையும் உனது சொந்த அறிவால் எண்ணிப்பார்" என்றார். இதேபோல்

இக்குறள் ஒவ்வொரு இளையவர்கள் மனதிலும் ஆணி அடித்தது போல் பதியப்பட வேண்டிய குறளாகும். அப்போதுதான் எதிர்கால வாழ்வில் மூடப்பழக்க வழக்கங்களும் மூடநம்பிக்கைகளும் தகர்த்து எறியப்பட்டு யதார்த்த உண்மை புலப்படும். பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளின் வாயை அடைத்துவிடாதீர்கள். இது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் எடுத்துரைக்கும் வரிகளாகின்றன.

"கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள் "

எனப் புலவர் இடைக்காடனார் பாடியுள்ளார். அதனையே இன்னும் ஒரு படி மேல்சென்று

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்"

என்று ஔவையார் கூறியுள்ளார். அதைப்பிரித்துக்காட்டிய விஞ்ஞானி ஏர்னெஸ்ட் போர்ட் அவர்கள் அணுவைப் பிரிக்கமுடியும் எனக் கண்டறிவதற்கு முன்னமே ஔவையார் அறிந்து வைத்திருந்தார். ஔவை கூறியதுபோல் அவ்வளவு ஆழமாக ஒன்றே முக்கால் வரிகளில் ஆழமான வாழ்வியல் உண்மைகளை வள்ளுவர் படைத்துள்ளார். எனவே திருக்குறளைப் படிக்கும்போது ஆழமாகவும் அழுத்தமாகவும் படிக்க வேண்டும்.

*"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூவும் மழை"*

உண்பவர்களுக்கு உணவுப் பொருள்களை உண்டாக்கி தந்து, தானும் அவர்களுக்கு உணவாக அமைவது மழை. ஆனால், தற்போது துப்பாக்கி என்பது ஒரு உயிரைக்கொல்லும் கருவியாகவே கருதப்படுகின்றது. வள்ளுவர் காலத்துப் பொருள் இக்காலத்தில் விளங்கிக் கொள்வது கடினமாகின்றது. அதனால், பொருள்நாடி ஆழமாக கற்கும்போதே அதன் இனிமை மேலோங்கும். வள்ளுவரும் நாம் வாழும் இக்காலத்தில் வாழ்ந்திருந்தால், நிச்சயமாக அகராதி துணை நாடியே இருப்பார். இது

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வழக்கே" என்பதுடன் சம்பந்தப்பட்டது.

திருக்குறளினுள் நாம் சில இடங்களில் ஒன்றுடன் ஒன்று பொருந்துவதான விடயங்கள் அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றன.

அதாவது பயப்பட வேண்டியதற்குப் பயப்படாமல் இருப்பது அறியாமை. அப்படி பயப்படுவதற்குப் பயப்படுவது அறிவுடையவர்கள் செயலாக இருக்கின்றது. ஏனென்றால், அவர்கள் எதிர்காலத்தில் நடக்கப்போவதை முன்னமே அறிந்து கொள்ளும் வல்லமையுடையவர்கள். இதனால், அவர்களுக்குத் திடீரென நடுக்கத்தைக் கொடுக்கும் துன்பம் ஏதும் ஏற்படாது. என்று வாழுகின்ற வாழ்க்கையில் எதிர்கொள்ளும் துன்பங்களுக்கு ஆய்ந்து தயங்கும் பக்குவத்தை மனிதன் கொள்ளவேண்டிய அவசியத்தை

*"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவுடையார் தொழில்"*

*"அறிவுடையார் ஆவது அறிவர் அறிவிலார்*
*அஃதறி கல்லா தவர்"*

*"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை*
*அதிர வருவது ஓர் நோய்"*

என்னும் இம் மூன்று குறள்கள் மூலமாக ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தி எடுத்துக் காட்டியுள்ளார்

குறள் வடிவத்தை நாம் உச்சரிக்கின்ற போது சில இடங்களில் அழுத்திக் கூறும்போதே அதன் அழகு புரிகின்றது.

*"கற்க கசடறக் கற்றவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

ஆழமாகக் கற்கும்போது அதில் அழகும் இருக்கும். அறிவும் இருக்கும். கற்கக் கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக. என்பதுபோல் நாமும் கற்றபடி வாழுகின்ற போதுதான். எழுதிய எம்பாட்டன் வள்ளுவனுக்குப் பெருமை சேர்ப்பதாக அமையும். உதாரணமாக

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வுஇல்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

என்னும் குறளைக் கற்கின்றபோது ஒருவர் செய்த நன்றியை மறக்கக்கூடாது என்னும் கருத்தை மூளைக்குள் அழியாத அறிவுப்பலகையாக நாம் பதித்து வைக்கின்றபோது அதனைச் செயலில் காட்டவும் தயங்கக்கூடாது. எம் இரத்தத்தில் இக்குறள் பதிந்துவிடும். இச்செய்தியை மூளைக்குத் தேவைப்படும் வேளையில் காட்டிவிடும்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங் கோவைப்போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை"

என்று மகாகவி பாரதியார் பாடியிருக்கின்றார். இவ்வாறு பாரதி புகழ்ந்துரைத்த வள்ளுவரின் 133 அடி உயரமுள்ள சிலை ஒன்று மூன்று கடல் சங்கமிக் கின்ற கன்னியாகுமரியிலே அமைக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் தந்த திருக்குறளின் பெருமையை உலகுக்குணர்த்த கலைஞர் அவர்கள் இந்தியாவின் தலைநகரில் 1976 ஆம் ஆண்டு வள்ளுவர் கோட்டத்தை அமைத்தார். அங்கு கிறினைட் பளிங்குக் கற்களிலே திருக்குறள் 1330 குறள்களையும் ஒவ்வொரு கல்லிலும் ஒவ்வொரு அதிகாரமாகப் பொறித்துச் சுவர்களிலே பொருத்தி பார்வைக்கு வைத்தார். அத்துடன் திருக்குறளின் பெருமையைப் புலவர்கள் கூறும் திருவள்ளு வமாலையையும் பொறித்து வைத்துள்ளார்.

இவ்வாறு வள்ளுவர் பெருமையானது ஐரோப்பிய நாடுகளிலும் போட்டிகள் வைத்துப் பரிசுகள் கொடுக்கப்பட்டு வளரும் சமுதாயத்தினரிடையே பரப்பப்படுகின்றது. எனவே வாழும் வரை வள்ளுவர் புகழை வாயாரப் புகழ்வோம். அவர் பெருமை உலகுக்குரைப்போம்.

# உச்சிமோந்த தமிழ் அன்னை

வண்ணச் சொல்லும் வகைவகையாய்ப் பொருளும் கலந்து வாரி என்னை அணைத்து மகிழும் எழுத்து வள்ளல்களே! எனக்காய்த் தரப்படும் சில மணித்துளிகள் என் பெருமையை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

நான் பிறக்கும் போதே சுந்தரத் தோற்றத்துடனும் இலக்கண அமைப்புடனும் இலகுவற்ற முறையுடனும் இனிமையாகத்தான் தோன்றினேன். என் தந்தையார் பிரமன் ஆணையிலும் குறுமுனி அகத்தியன் அறிவிலும் அகிலத்தில் அவதரித்தேன். கடந்து வந்த பாதையிலே நான் பதித்து வந்த கோலங்கள், காலவாரியாக மாறுபட்டுக் கொண்டேயிருக்கின்றன. மூவேந்தர் ஆட்சியிலே பூரித்து நின்ற என்னைக் கடல்கோள்கள் அச்சுறுத்தின. எனினும் காலன் என்னைக் கவரவில்லை. முதல், இடை, கடை என்று முறையே சங்கங்கள் வைத்து என்னை வளர்க்க மன்னர்களும் புலவர்களும் தங்களைப் போல் முனைந்து நின்றனர். சங்கப் பலகையிலே நான், எட்டுத்தொகை, பத்துப்பாட்டென அழகு அணிகளில் அலங்காரம் செய்யப்பட்டேன். பொய்யாமொழி, நான் பொய்யாமல் இருக்க, நீங்கள் என்னை அடிக்கடித் தொட்டுக் கொள்ளும் குறள் வெண்பாவால் ஆரம் சூட்டினான். காதல், வீரம் மேவி நின்ற காலத்திலே காதலால் மேம்பட்டேன். பண்பு மீறிய காதலால் துறவு மேவி நின்ற காலத்தில் துறவினால் மேம்பட்டான்.

08

அடுத்து வந்த பல்லவர் காலத்திலே பக்திப் பாடல்களால் இறைவனைத் தரிசிக்க வாழ்த்தி என்னைத் தூவி மகிழ்ந்தனர். தாழிசை, துறை, விருத்தம் கலந்த பாக்களினால் பாடல்களைச் சமர்ப்பித்தனர். சோழர் காலத்திலே நளவெண்பா, பரணி, பிள்ளைத்தமிழ் என வகைவகையாய்ப் படைத்தளித்தனர்.

நாயக்கர் ஆட்சிக்காலத்திலே விகடகவி, சிலேடைக்கவி, வசைக்கவி போன்ற சிறப்புமிக்க வடிவங்களை வடித்து எனக்கு அளித்ததுடன், சந்தச் சுவை கலந்த பாடல்களையும் அருணகிரிநாதர் என்னும் முருக பக்தன் எனக்களித்தான். குறவஞ்சி, பள்ளு போன்ற பிரபந்தங்கள் இக்காலத்தில் என்னை அலங்கரித்ததுடன் இவற்றிற்குச் சிந்து முதலிய செய்யுள் வகைகளைக் கையாண்டனர்.

பேச்சுவழக்கிலுள்ள சொற்கள் கையாளப்படும் தற்கால எளிய சொற்களைக் கையாளும் போக்கிற்கு நாயக்கர் காலமே வித்திட்டது என்று மனதில் நான் நினைப்பதுண்டு. நாயக்கர் காலத்தில் என்னை அலங்கரிக்க வடமொழி தழுவினர். ஐரோப்பியர் இலக்கியங்களின் போக்கைத் தழுவினர். ஐரோப்பிய நாட்டார் தம் மதம் பரப்ப என்னைத் தாராளமாக ஆய்ந்து கற்று எனக்கே பல படைப்புக்கள் ஆக்கி வைத்தார்கள் என்றால், என் பெருமையை என்னென்பேன். இக்காலத்து என்னுள் பதிந்த இலக்கியங்கள், நாடக இலக்கியங்கள், உரைநடை இலக்கியங்கள், அத்தனையையும் பட்டியலிட்டு அழகாய் எடுத்துரைக்க எனக்காய் அமைக்கப்பட்ட நேரம் போதாது. ஆதலால், ஆவலாய் என்னை அளவாய் இப்போது அளக்கிறேன். 20ஆம் நூற்றாண்டிலே கம்பதாசனை, கவிமணியை இவர்கள் போன்ற எண்ணற்றோரை நாவாரப் புகழுகின்றேன்.

இன்று 21ஆம் நூற்றாண்டிலே புதுமைப் பெண்ணாய் நான் வலம் வருவதென்றால், இலகு நடையிலே பட்டிதொட்டி எங்கும் வாழும் அத்தனை மக்களின் மனதிலும் என்னை விதைக்கின்றீர்களே. கணினிப் பரப்பில் முகநூல் வடிவினுள் முனைந்து நிற்கும் நான் கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்தினுள் நுழைகின்றேன். அதுமட்டுமல்ல, உலகெங்கும் வாழும் என் அருமைக் குழந்தைகள், தேமதுரைத் தமிழோசை உலகு எல்லாம் பரவும் வகை செய்க என என் அன்பு மைந்தன் பாரதி எடுத்துரைத்த வார்த்தைகளைத் தலை மேற்கொண்டு தாங்கள் வாழுகின்ற உலகு எங்கும் தங்கள் சின்னஞ்சிறிய விரல்கள் எடுத்து என்னுள் குதித்து விளையாடுகின்றனர். வேற்று மொழிகள் நடமாடிய நாடெங்கும் என்னை ஏற்றித் தொழுகின்றார்கள். வானொலி, தொலைக்காட்சி, மண்டபங்கள் எங்கும் ஓங்கி ஒலிக்கின்றேன். இதுமட்டுமா, எனக்காய்ப் படைத்த படைப்புக்கள் அத்தனையும் தாம் வாழும் நாட்டு மொழியில் மொழி பெயர்க்க முன்வந்துள்ளனர். இதைவிட மகிழ்ச்சி எனக்கு என்ன தேவை? மூன்று வயதில் திருஞானசம்பந்தர் பாடியபோது பெற்ற சுகத்தைவிட, இன்று அந்நிய சூழலிலே இச்சிறார்கள், என்னை வாழவைக்க வார்த்தெடுக்கின்ற படைப்புக்கள் கேட்டு நான் பஞ்சாமிர்த சுவையைப் பருகி இன்புறுகின்றேன்.

இளஞ்சிட்டுக்களே! உங்களை உச்சிமோந்து நான் வாழ்த்துகின்றேன். இக்குழந்தைகளின் அணைப்பினாலும் எனது தந்தையின் ஆசியினாலும் காலம் தோறும் தோன்றும் புலவர்கள், ஆர்வலர்களின் அன்பளிப்புக்களினாலும் காலன் கண்ணில் அகப்படாமல், இளமையாய்க் காலங்கழிக்கின்றேன்.

ஆயினும் என் மனதுள் ஒரு வேதனை நான் பிறந்த மண்ணில் என்னைக் கேவலமாக நினைப்போர் தொகை அதிகரித்துக்கொண்டு வருவதை நினைக்கும் தோறும் நெஞ்சு வெடித்துவிடுமோ என்னும் அச்சம் என்னுள் குடிகொண்டுவிட்டது. புலம்பெயர் சிறார்களே! எனது தாழ்மையான வேண்டுகோள் மொழி என்பது என்னவென்று நான் பிறந்த பூமிக்குப் புரியச் செய்வீர்களா?

1. நிலைகெட்ட மனிதர் வாழ்ந்தால், அதற்கு எதிராக உதவிடும் மாமனிதர்களும் வாழ்வார்கள்.

2. தன்னம்பிக்கையும் ஆசையும் சரியான முறையில் கையாளப்படாவிட்டால், தீயவழிக்கே ஒரு மனிதனைக் கொண்டு செல்லும்.

3. ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் ஒரு மனிதன் ஒளிந்து கொண்டிருப்பான் உறங்கிக் கொண்டிருக்கும் அவனைத் தட்டி எழுப்பினால், தனது வேலையைத் தாராளமாகக் காட்டத் தொடங்குவான்.

4. விதையில் இருந்து செடி பிறத்தல் போல எண்ணத்திலிருந்து செயல் பிறக்கிறது.

# திருக்குறள்

*"ஓதற் கெளிதா யுணர்த்தற் கரிதாகி*
*வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்*
*உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே*
*வள்ளுவர் வாய்மொழி மாண்பு"*

என மாங்குடி மருதனார் திருக்குறளின் புகழை மனதார வாழ்த்தியுள்ளார். எக்காலம் வாழ்ந்தாலும் மனிதன் அக்காலத்திலும் தவறுகள் செய்துகொண்டே இருப்பான் என்பதற்கு, நாம் வள்ளுவரைக் கற்கும்போதும், நாம் வாழுகின்ற அனுபவங்களை உற்றுநோக்கும் போதும் உணரக்கூடியதாக இருக்கின்றது. திருக் குறளைப் புரிந்துகொண்டு எம்மிடமுள்ள அழுக்குகளை அகற்ற, கற்பதற்கு இலகுவாகவும் கருத்தில் கொள்வதற்கு எளிமை யாகவும் இருக்கும் திருக்குறளை கற்கவேண்டிய அவசியம் எமக்கு இருக்கின்றது.

திருவள்ளுவர் ஆண்டு இன்று 2046. அதாவது நாம் இருக்கின்ற ஆண்டுடன் 31 வருடங்களைக் கூட்டுகின்ற போது திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும். அதாவது கிறிஸ்துவுக்கு முன்னமே திருவள்ளுவர் பிறந்துவிட்டார் என்பதே உண்மை. இதனை மறைமலை அடிகளார் பல அறிஞர் பெருமக்களுடன் இணைந்து ஆராய்ந்து இவ் ஆண்டைக் கண்டுபிடித்தார். உலக மக்கள் அனைவரும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

09

வலிமையுள்ளது வாழும். எத்தனையோ கடல்கோள்கள், இயற்கை அழிவுகள் அத்தனையையும் தாண்டி ஒரு நூல் இன்றும் 2046 வருடங்கள் தாண்டி வாழ்கின்றது என்றால், அது வலிமையுள்ளது அல்லவா? இந்தத் தலைமுறை

இந்நூலைக் கற்கிறதே அது சாட்சி இல்லையா? ஒரு ஆணின் கல்யாண வயதையும், பெண்ணின் கல்யாண வயதையும் கூட்டி இரண்டால் பிரிக்கின்ற போது ஒரு தலைமுறை வருகின்றது. இது தற்போது 25 வருடங்கள் ஒரு தலைமுறை என்று சொல்லப்படுகிறது. நான்கு தலைமுறை 100 வருடங்கள் தாண்டிய பாட்டன் பெயரே யாருக்கும் தெரிவதில்லை. ஆனால் 80 தலைமுறை கடந்து வாழ்ந்த திருவள்ளுவர் பெயர் எல்லோருக்கும் தெரிந்திருக்கின்றது.

ஆரம்பத்தில் எழுத்தாணியால் ஏட்டிலே எழுதப்பட்ட திருக்குறளின் தாய் நான்தான் என்று வள்ளுவர் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. எனது மொழி தமிழ்மொழிதான் என்று எந்த இடத்திலும் வரிகளால் வடிக்கவில்லை. திருக்குறள் என்று பெயர்கூட வைக்கவில்லை. முப்பால் என்றே ஆரம்பத்தில் அழைக்கப்பட்டது. பின் குறள் வெண்பாவால் எழுதப்பட்டதனால் குறள் எனப்பட்டு, அதன் சிறப்பு நோக்கி திரு என அடைமொழி கொடுக்கப்பட்டு திருக்குறள் எனப்பட்டது. வள்ளுவர் தன் நூலில் எந்த இடத்திலும் தமிழ் என்றோ கடவுள் என்றோ ஒரு இடத்திலும் எழுதவில்லை. ஒரு கடவுளின் பெயர் கூட அதில் எழுதிவைக்க வில்லை.

திருக்குறள் பிறரைச் சென்றடைவதற்கு முதற்காரணமானவர் ஒளவையாரே. தமிழ்ச் சங்கத்திலே திருக்குறள் அரங்கேற ஒளவையாரே சிபாரிசு பண்ணி அரங்கேறச் செய்தார்.

*"தேவர் குறளும் திரு நான்மறை முடிவும் மூவர் தமிழும் முனிமொழியும்*
*கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒருவாசகம் என்றுணர்"*
என்று அவரே திருக்குறளின் பெருமையைப் பாராட்டியுள்ளார்.

அதன்பின்பே புலவர்கள் போற்றினர். ஆனால், 1812 ஆம் ஆண்டுதான் முதன்முதல் திருக்குறள் அச்சிடப்பட்டது. அதுவே உலகெங்குமுள்ள மக்களைச் சென்றடைவதற்குக் காரணமானது. ஆனால் வள்ளுவரை நாம் இனம்காணக் காரணமானவர்கள் உரையாசிரியர்களே அவர்கள் இல்லையென்றால், திருக்குறளைத் துளிகூடப் புரிந்து கொள்ளமுடியாமல் போயிருக்கும். எனவே வள்ளுவருக்குக் கொடுக்கும் அதே அந்தஸ்தை உரையாசிரியர்களுக்கும் நாம் கொடுக்க வேண்டியது அவசியமாகின்றது. அதுவே காலமாற்றத்திற்கேற்ப புரிந்து கொள்ளும்படியாக அமைவதே சிறப்பாகின்றது.

திருக்குறளை எழுத்தெண்ணிப் படிக்கும்போது அதன் பொருள் மனதுள் அடங்கி மனதைத் திருத்தும் பணியைச் செய்கின்றது. எழுத்தெண்ணிப் படித்தல்

என்னும் போது திருக்குறள் 1330 குறள்களால் எழுதப்பட்டது. மொத்தச்சொற்கள் 14,000. மொத்த எழுத்துக்கள் 42,194. அதிகாரங்கள் 133. அறத்துப்பாலிலுள்ள குறள்பாக்கள் 380. பொருள்பாலிலுள்ள குறள்பாக்கள் 700. காமத்துப்பாலில் 250 இனி என்ற எழுத்துத்தான் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது 1705 தடவைகள். ஔ என்ற எழுத்து வரவில்லை. தமிழ் எழுத்துக்கள் 247 இல் 37 எழுத்துக்கள் இடம்பெறவில்லை. அனிச்சம், குவளை என்னும் மலர்களும் நெருஞ்சிப்பழம் என்னும் ஒரு பழமும் குன்றிமணி என்னும் ஒரு விதையும், பனை, மூங்கில் என்று இரு மரங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் கோடி என்னும் சொல் ஏழு இடங்களிலும், ஏழு என்னும் சொல் எட்டுக் குறள்களிலும் இடம்பெற்றுள்ளது (தகவல்- இணையம்) இவ்வாறெல்லாம் எழுத்தை எண்ணிப் படிப்பதில்லை. அதில் வந்திருக்கின்ற எழுத்துக்களை எண்ணிப் பார்த்தல் அதாவது நினைத்துப் பார்த்துப் படிக்க வேண்டும்.

உதாரணமாக

*"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு"*

எழுத்துக்களெல்லாம் அகரம் முதலாக உள்ளது. அதுபோல் உயிர்களுக்கெல்லாம் இறைவன் முதலாக இருக்கின்றார் என்னும் போது இங்கு யாராவது எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதல் என்பதை எண்ணிப்பார்த்து அதாவது நினைத்துப் பார்த்து எழுத்துக்களுக்கெல்லாம் முதலாவது அகரம் என்று எப்படிச் சொல்ல முடியும் என்று எண்ணிப் பார்க்கும்போது தமிழ் எழுத்துக்களுக்கு முதலாக அகரம் இருப்பது போல் என்று விளங்கிக் கொள்ள முடியும் வள்ளுவரும் வெற்றி கொள்வார்.

திருக்குறள் ஒரு வாழ்வியல் கூறும் இலக்கியம். வாழ்வியலை உணர்வு ரீதியாகப் புரிந்துகொள்ள முடியவில்லையென்றால் திருக்குறளைப் படிப்பதில் பயனே இல்லை.

வள்ளுவரின் இந்த தற்புகழ்ச்சி இல்லாத பண்பே அவரின் நூலை உலகப் பொதுமறையாகக் கொண்டு வந்திருக்கிறது. கடவுள் மனிதனுக்கு சொன்னது கீதை மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள் என்னும் அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றது. 26 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வள்ளுவர் தனது நூலென்று எழுதாததற்கு அவரது தற்புகழ்ச்சி அற்ற பண்பே காரணமாகின்றது. அவரே ஓரிடத்தில் சொல்கின்றார். தற்புகழ்ச்சி தற்கொலைக்குச் சமம் என்று.

அர்ச்சுனன் போர்க்களத்தில் வில் கூட்டத் தயங்கிக் கொண்டிருந்தபோது இவ்வாறு என் உறவுகளைக் கொல்வதை விட நான் தற்கொலை செய்துவிடுவேன் என்று கூறினானாம். அப்போது கிருஸ்ண பரமாத்மா அர்ச்சுனா! உன்னை நீ புகழ் என்றாராம். அப்போது அர்ச்சுணன் என்னை நான் புகழ்தல் ஒரு பண்பல்ல என்றாராம். அப்போது பரவாயில்லை உன் வில்லைப்பற்றி புகழ் உன் வீரத்தைப் பற்றிப் புகழ் என்றாராம். அவனும் புகழ்ந்தானாம். அப்போது கிருஸ்ணர் சரி நீ தற்கொலை செய்துவிட்டாய் இப்போது போருக்குத் தயாராகு என்றாராம். (தகவல்-இணையம்) எனவே தற்புகழ்ச்சி தற்கொலைக்குச் சமம். ஆனால், இப்போது என்ன நடக்கிறது. தாமே தம்மைப் பற்றி புகழ்வது மட்டுமல்ல, தாம் பொய்யாகத் தம்மைப் புகழ்கின்றார்கள் என்று பிறர் அறிவது கூடத் தெரியாது புகழ்வார்கள். எனவே நாம் வாழுகின்ற வாழ்க்கையில் எதனை எடுத்துப் பார்த்தாலும் திருக்குறள் அதில் எமக்குப் பாடம் கற்பிக்கும்.

மற்றவர்களுக்கு நன்மை செய்வது பற்றிக்கூறியிருக்கின்றார்.

> *"நல்லாற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்*
> *பண்புஅறிந்து ஆற்றாக் கடை"*

நாம் யாருக்கு நன்மை செய்கின்றோம் என்று தெரிந்துகொண்டு பணியாற்று என்கின்றார். அதாவது

> *"உதவி உதவி வரைத்தன்று உதவி*
> *செயப்பட்டார் சால்பின் வரைத்து"*

மூன்றடியால் உலகளந்தார் வாமன அவதாரத்தில் விஷ்ணு. (மாபலிச்சக்கரவர்த்தி கதை) இந்த இரண்டடியால் உலகளந்தார் வள்ளுவர். அதனால்தான் பண்பற்ற ஒருவனுக்கு இரண்டு கொடுக்க வேண்டும் என்கிறேன். அந்த இரண்டுதான் இந்தத் திருக்குறள். எங்கள் முப்பாட்டனை வளருகின்ற எங்கள் சமுதாயம் மறக்காமல் இருக்க, முதுமொழியாம் எங்கள் தமிழ்மொழி என்பதற்கு ஆதாரமாய் விளங்கும் திருக்குறளைப் போற்றி வாழ்வோம். அள்ள அள்ளக்குறையாத அட்சய பாத்திரமாம் இந்நூலை ஆழ்ந்து ஆழ்ந்து ஆராய்ந்து ஆராய்ந்து அனுபவிப்போம்.

# அறிந்ததும் புரிந்ததும்

# ஆடி அமாவாசை பற்றிய புதிய கண்ணோட்டம்

*தந்தையே உனை எண்ணி நான் வந்தனை செய்கின்றேன்*
*சிந்தனை செய்து நான் இத்தினம் சிறப்பாகப் பெற்றேன்*
*எந்தனுள் மனதில் உங்கள் எண்ணம் என்றுமே இருந்தாலும்*
*இந்தநாள் உங்களுக்காய் என் உணவு துறக்க*
*எண்ணினேன்.*

உயிரோடு மட்டுமல்ல உயிரைவிட்டுப் பிரிந்த பின்னும் தந்தைக்காக உலகெங்கும் தந்தையர் தினம் கொண்டாடப்படும். இது தந்தையரை மனதில் என்றும் கொண்டிருப்பார்க்கு ஏற்ற தினமாகும். இங்கு மந்திரங்கள் இல்லை. பூசைகள் இல்லை. புரோகிதர் இல்லை. ஜேர்மனியர் பரம்பரைப் பெயரையே தமது கடைசிப்பெயராகக் கொண்டிருப்பார்கள். இதுவும் தந்தையருக்குத் தரும் மரியாதையாக இருக்கிறது. நாம் எமது பரம்பரைப் பெயரை ஒன்று அல்லது இரண்டு தலைமுறையுடன் மறந்து போகின்றோம். பெற்றோர் தெரிவிப்பதும் இல்லை நாம் தெரிந்துகொள்ளும் ஆர்வம் கொள்வதும் இல்லை. உங்கள் எத்தனை பேருக்கு முப்பாட்டன் பெயர் ஞாபகத்தில் இருக்கின்றது. நினைத்துப்பாருங்கள். ஆனால், வருடம் ஒருமுறை ஆடி அமாவாசைக்கு மாத்திரம் பிதிர்க்கடன் செய்கின்றோம்.

ஆடி அமாவாசை தினத்தில் தந்தையை இழந்த இந்து மதத்தவர்கள் ஒவ்வொருவரும் விரதம் அனுஷ்டிக்கின்ற நாள். இன்றையநாள் இந்துக்கள் புனித நீராடி இறந்த தந்தையரை நினைத்துப் பிதிர்க்கடன் செலுத்தி அவர்களுக்கு மோஷ்டம் கிடைக்கவேண்டுமென்று விரதம் அனுஷ்டிக்கின்றனர். அத்துடன் இறந்த எமது தந்தையருடன் நாம் நேரடித்தொடர்பு

10

கொள்ளமுடியாது. அதனால் பிதிர்களைத் திருப்திப்படுத்தினால் அவர்கள் மகிழ்வடைந்து எமது தந்தையர்க்கு நன்மை செய்வார்கள் என்று நம்பப்படுகின்றது. அதன்மூலம் அவர்கள் சந்ததி புகழோடும் செல்வத்தோடும் நிறைந்த ஆயுளோடும் வாழும் என்றும் பிதிர்க்கடன் செலுத்தாவிட்டால், சாபத்திற்கு உள்ளாகி வம்சம் விருத்தியடையாது என்றும் சொல்லப்படுகின்றது. எள்ளும், தர்ப்பையும் கொண்டு பிதிர் தர்ப்பணம் செய்யவேண்டும் என்றால் எள்ளும் நீரும் கொண்டு பிதிர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் எனப்படுகின்றது. எள்ளும் தர்ப்பைப் புல்லும் விஷ்ணுவின் உடம்பிலிருந்து தோன்றியது. எனவே எள்ளைக் கொண்டு தர்ப்பணம் செய்கின்றபோது விஷ்ணு துர்த்தேவதைகளுக்குப் பரம எதிரி ஆனதால் எள்ளைப் பயன்படுத்துவதன் மூலம் துர்த்தேவதைகளிடமிருந்து பிதிர்களைக் காக்கமுடியும் என்று சொல்லப்படுகின்றது.

ஏதோ எல்லாம் ஒரு நம்பிக்கையுடனேயே எல்லாம் செய்துவிடுகின்றோம். அதைவிட பயம் உண்டாக்கிய மனப்படிவே காரணமாகி விடுகின்றது. பிதிர்க் கடன் செய்யாவிட்டால் சந்ததி சாபத்துக்கு உள்ளாகிவிடும் என்னும்போது இந்து மதத்தவர்கள் அல்லாத மக்கள் எல்லோரும் சாபத்துடன்தான் வாழ்கின்றார்களா? என்ற கேள்வி எழுகின்றது.

அந்த ஒரு எள் உருண்டையுடன் பிதிர்கள் திருப்திப்பட்டுவிடுவார்கள். அதன்மூலமே நல்லது செய்வார்கள். அப்படியென்றால் எல்லாமே கொடுத்து வாங்கும் வியாபார வழக்கம் தானா? எம்மிடம் நிலவுகின்றது. இவை கேலிக்கான கேள்விகள் இல்லை. என்னுள்ளே தோன்றுகின்ற வினாக்கள். அத்துடன் அதுபற்றி வேறு ஒரு பதிவிலும் குறிப்பிட்டுள்ளேன். பெற்றோரல்லாத மற்றைய உறவுமுறையினர் இறக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எந்தவித பூசைகளும் செய்வதில்லையாதலால் அவர்களுக்கு மோட்சமே கிடைப்பதில்லையா? அவை பாவப்பட்ட ஆத்மாக்கள்தானா?

அத்துடன் 20,30 வருடங்கள் தாண்டியும் மோட்ச அர்ச்சனைகள் செய்யும் போது (தர்ப்பை போட்டுச் செய்யும் அர்ச்சனைக்கு ஒரு கூலி, தர்ப்பை அற்ற அர்ச்சனைக்கு ஒரு கூலி) அந்த ஆத்மா மோட்சம் செல்வதே கிடையாதா? பிள்ளையும் இறந்துவிட்டால், பேரப்பிள்ளைகள் அதைச் செய்வார்களா? இல்லையென்பதால், பிதிர் நிலைதான் என்ன? இல்லை இறந்தவுடன் வேறு மறுபிறப்பு எடுத்துவிடுவார்கள் என்ற நம்பிக்கைக்கேற்ப மறுபிறப்பு எடுத்திருந்தால், உயிரோடு இருக்கும் ஆத்மாவிற்கு மோட்ச அர்ச்சனை செய்வதா?

இறந்தவுடன் உடலை எரித்துவிடுகின்றோம். ஆத்மா வாழும் என்றால், அது வெறும் காற்று அதற்கு எதுவுமே தேவையில்லை. மனிதன் உடல் உறுப்புக்களும் அதனுள் உள்ள மின்னலைத் தாக்கங்களும், ஓமோன்களின் சுரப்புக்களும் அவற்றின் ஒன்றிணைந்த தொழிற்பாடுகளும், சூழலுமே மனிதனின் வாழ்வு. அவர்களுக்குத்தான் தேவைகள் இருக்கின்றது. இது எதுவுமே அற்ற காற்றுக்குத் தேவைதான் என்ன?

எம்மை வாழவைத்த தெய்வங்களான எமது பெற்றோர்கள் உயிரைவிட்டுப் பிரிந்தார்கள் என்றாலும் வாழும் வரை அவர்களை நினைத்திருப்போம். அந்நாளில் ஆதரவற்ற அநாதைகளுக்கு பெற்றோர் நினைவாக உதவிக்கரங்கள் நீட்டுவோம் என்பது மனிதாபிமானம். அதைவிட்டு இவ்வாறான மூடநம்பிக்கையில் நாம் வாழ்ந்து நமது பிள்ளைகளையும் அவ்வழியில் வாழவைத்தல் எவ்வகையில் நியாயமாகப்படுகின்றது. எனவே கிரியைகளும், பூசைகளும் உதவிகளும் தொண்டுகளுமாக மாறும் பட்சத்தில் அறியாமை உடைத்தெறியப்படும்.

**பெண்கள் விரதம் இருந்தால் மாங்கல்ய பலம் பெற்று வாழ்வார்கள்.**

அழகாபுரிநாட்டு மன்னன் அழகேசன் வாரிசு இல்லாது தீர்த்த யாத்திரை சென்றபோது புத்திரபாக்கியம் பெற்றான். அவன் மகிழ்ச்சியோடு இருந்த சமயத்தில் அவன் இளமைப்பருவத்தில் இறப்பான் என்று அசரீரி கேட்டது. அதன் பின் மனம் வருந்திய மன்னன் கோயில் கோயிலாகச் சென்று ஆலயதரிசனங்கள் செய்தபோது உன் மகன் இறந்தபின் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தால், மாங்கல்ய பலத்தினால் உயிர்பெறுவான் என்று ஒரு குரல் கேட்டது. அதுபோல் அவன் இறந்ததும் பெற்றோரை இழந்த ஒரு பெண்ணை ஏமாற்றித் திருமணம் செய்து வைத்து ஒரு காட்டிற்குள் இறந்த உடலுடன் அவளைக் கொண்டு விட்டுவிட்டனர். அப்பெண்ணும் கணவன் உறங்குவதாக நினைத்தாள். விடிந்ததும் உண்மை தெரிந்து அழுதுபுலம்பி தெய்வங்களை எல்லாம் வேண்டினாள். அதன்படி அவனும் உயிர்த்தெழுந்தான். இது ஆடி அமாவாசை தினத்தில் நடந்தது. எனவே இத்தினத்தில் விரதம் இருக்கும் பெண்களுக்கு ஒளி கிடைக்கும் மாங்கல்யபலம் கிடைக்கும் என்று சொல்லப்படுகின்றது.

இக்கதை வேடிக்கையாக இருக்கின்றது அல்லவா? பச்சைக் குழந்தைக்குச் சொல்லும் கட்டுக்கதையாக இருக்கின்றதல்லவா? முன்னோர் சொன்னார்கள் என்பதற்காக முழுவதும் நம்பிவிடல் நியாயமா?

இறந்த உடலுக்குத் திருமணம் செய்து வைத்ததே குற்றம். இவ்வாறு நடப்பது எந்தவகையில் சாத்தியமாகும்.

கதை ஒருபுறம் இருக்க திருமணமான பெண்கள் இவ்விரதம் அனுஷ்டித்தல் ஆகாது. ஏனென்றால், தந்தைக்குத் தந்தையாகக் கணவன் இருக்கும்போது இவ்விரதம் அனுஷ்டித்தல் குற்றம் என்றும் சொல்லப்படுகின்றது. அப்படியானால், இக்கதை கற்பிக்கும் பாடம்தான் என்ன? தந்தையும் கணவனும் ஒன்றா?

தந்தை உயிரோடு இருக்கும் பிள்ளைகள் அன்றையதினம் தலை முழுகுவதற்குத் தடை செய்கின்றார்கள். ஏனென்றால், அது தந்தையின் உயிருக்குப் பாதிப்பாகும்.

இவ்வாறெல்லாம் எம்மவர் மத்தியில் நம்பிக்கைகள் இருக்கின்றன. இதுபற்றிச் சிறிது சிந்தித்தாலே போதும். இவ்வாறான நாட்களில் சிறப்பான காரியங்களில் ஈடுபட்டு உயிரோடு வாழும் உன்னத உயிர்களுக்கு உதவிகள் செய்யலாம். அவ்வாறான நம்பிக்கைகளை எம்மவரிடம் ஊட்டுவோம். வாழ்வின் அர்த்தங்களைப் புரியவைப்போம்.

1. சாதித்தவர் வாழ்வை தன் முயற்சியில் சாதித்துவிட்டேன் என்பார். முயன்று முயன்று தோற்றவர் முடிவு என் கையில் இல்லை என்று நினைப்பார்.

2. இன்பமும் துன்பமும் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப அமைகின்றது. சந்தர்ப்பம் வந்து அமைவதும் அவர்கள் சந்திக்கும் மனிதர்களையும் சம்பவங்களையும் பொறுத்தது.

3. மனதுக்குள் ஏற்படும் தவிப்புக்கள் விபரிக்கவும் முடியாது. விளங்கப்படுத்தினால் பிறரால் விளங்கவும் முடியாது.

4. நினைவுகள் அப்படியே இருந்து விடுவதில்லை. அது அழிக்கப்படும் அறிவுப் பலகையாகவும் இருக்கும். அதை அறிவுப்பலகையாக்குவதும் அழியாத கல்வெட்டுக்கள் ஆக்குவதும் அவரவர் மனதைப் பொறுத்தது.

# நெற்றிக்குத் திருநீறு, சந்தனம் அழகுசாதனமா? அவசியசாதனமா?

#### இந்துமத காரியங்களின் உட்கிடக்கை

இந்துசமயச் சின்னங்களாகக் கருதப்படும் விபூதி அல்லது திருநீறு, சந்தனம் போன்றவற்றை அணிவதன் அவசியம் தான் யாதோ? அவை அழகுசாதனமா? அவசியசாதனமா?

பூமியில் பிறப்பெடுத்த உடல் என்றோ ஓர் நாள் எரிக்கும் சாம்பலாகும். ஞானத்தீயில் உடல் எரிந்த பின் எஞ்சுவது சிவதத்துவமே என்னும் கருத்தை வெளிப்படுத்தி திருநீறு நெற்றியில் இடப்படுகின்றது. இது ஆரம்பப் பாடசாலையிலிருந்து நான் கற்றறிந்த விடயமாக இருந்தது. ஆனால், என்றோ ஒரு நாள் அழியவிருக்கும் உடலுக்கு வாழும்போதே அச்சுறுத்தல் தந்து கொண்டிருத்தல் முறையோ! மனம் தானே வாழ்வு. இந்த மனத்தை நாளும் அச்சுறுத்தலால் நலம் என் யாம் பெறுவோம். எனவே அறியாத பருவத்தில் அச்சுறுத்தி அளிக்கப்பட்ட பாடத்தை விடப் பாரதூரமான காரணம் யாதோ இருக்கின்றது என்பதை ஆராய மனம் விழைந்தது.

அறுகம்புல்லை உண்ணுகின்ற பசுமாட்டின் சாணத்தை எடுத்து உருண்டையாக்கி வெயிலில் காயவைக்க வேண்டும். பின் இதனை உமியினால் மூடி புடம் போட்டு எடுக்க வேண்டும். இப்போது இந்த உருண்டைகள் வெந்து நீறாகி இருக்கும். இதுவே உண்மையான திருநீறாகும். இது நல்ல அதிர்வுகளை மட்டும் உள்வாங்கும் திறன் கொண்டது. எம்மைச் சுற்றி அதிர்வுகள் இருக்கின்றன என்பது யாவரும் அறிந்ததே. எம்மை அறியாமலே அதிர்வுகளின் மத்தியில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமது உடலானது இவ் அதிர்வுகளை


11

ஏற்றுக் கொள்ளுகின்றது. திருநீறானது நல்ல அதிர்வுகளை ஏற்றுக்கொள்ளும் தன்மை வாய்ந்தது. அந்தவகையில் உடலின் முக்கிய பாகங்களில் திருநீறு இட்டுக் கொள்ளும் வழக்கம் இந்துமதத்தவர்களிடம் காணப்படுகின்றது.


இதைவிட மனித உடலிலே நெற்றி முக்கிய பாகமாகக் கருதப்படுகின்றது. அந்த நெற்றியிலேயே வெப்பம் அதிகமாகவும் வெளியிடப்படுகின்றது. உள் இழுக்கவும் படுகின்றது. சூரியக்கதிர்களின் சக்தியை இழுத்து சரியான முறையில் உள்ளனுப்பும் அற்புதமான தொழிலை திருநீறு செய்யும் அதனாலேயே திருநீறை நெற்றியில் இடுவார்கள்.


தனது உடலிலே சாம்பல் சத்துக் குறைந்துவிட்டால், இலங்கை போன்ற வெப்பமான நாடுகளில் வளரும் கோழி இனங்கள் சாம்பலிலே விழுந்து குளிப்பதைக் கண்டிருப்பீர்கள். பறவை இனமே தன் தேவை தெரிந்து சாம்பலை நாடுகின்றதல்லவா! அதேபோல்தான் மனிதனும் தன் மூட்டுவலி தோற்றுவிக்கும் இடங்களில் நீர்த்தன்மையை உறிஞ்சவல்ல திருநீற்றை அணிகின்றான். பசுமாட்டுச்சாணத்தை எரித்து திருநீறு செய்கின்றார்கள். மாடு அறுகம்புல் போன்ற பலவகையான புல்வகைகளை உண்டு தனது உடலைத் தேற்றிச் சாணம் போடும். அச்சாணம் தீயிலிடப்படும் போது ஏற்படும் இரசாயன மாற்றங்கள் உடலுக்கு மருத்துவத்தன்மையைக் கொடுக்கின்றது.


Applying Holy Ash (*Vibhuti*) on the *Adnyaa Chakra* of a person affected with the black energy of a ghost



இதைவிட இரு புருவங்களுக்கும் இடையிலுள்ள பகுதியில் மிக நுண்ணிய நரம்பு அதிர்வலைகள் உள்ளன. அதனால் அந்த இடத்தைப் பயன்படுத்தி மனவசியம் இலகுவாகச் செய்யமுடியும். அதனாலேயே மனவசியத்தைத் தடுக்க அந்த இடத்தில் திருநீறு, சந்தனம் போன்றவை இடப்படுகின்றன. சந்தனம் நெற்றியில் வெளியிடப் படும் வெப்பத்தை நீக்குகின்றது. அதிகமான வெப்பம் கூடிய நாடுகளில் ஞாபகங்கள் முதலில் பதியப்படல், திட்டமிடல் போன்றவற்றிற்குத் தொழிற்படுகின்ற நெற்றிப்பகுதியிலுள்ள Frontal Cortex என்னும் இடத்தில் அணியப்படும் சந்தனமானது வெப்பம் மிகுதியால் ஏற்படும் மூளைச்சோர்வை நீக்குகின்றது. சந்தனம் இரு புருவங்களுக்கும் இடையில் இடுகின்ற போது, மூளையின் பின்பகுதியில் ஞாபகங்கள் பதிவுசெய்து வைத்திருக்கும் Hippocampus என்னும் இடத்திற்கு ஞாபகங்களை சிறப்பான முறையில் அனுப்புவதற்கு இந்த Frontal Cortex சிறப்பான முறையில் தொழிற்படும். உடலுக்குக் குளிர்ச்சியூட்டும் சந்தனத்தை நெற்றியிலும் உடலின் பல பாகங்களிலும் இந்து சமயத்தவர் அணிந்திருக்கும் காட்சி நகைச்சுவையாகப் பார்வைக்குத் தோன்றினாலும் அற்புதமான காரணமும் அதில் உண்டு பார்த்தீர்களா!



நெற்றியின் இரு புருவங்களுக்கும் இடையிலுள்ள நெற்றிப் பொட்டிலே பட்டும்படாமலும் சுண்டுவிரலை நேராகப்பிடித்தால் மனதில் ஒருவகை உணர்வு தோன்றும். அந்த உணர்வை அப்படியே வைத்துத் தியானம் செய்தால் மனஒருமைப்பாடு தோன்றும். சிந்தனை தெளிவுபெறும். எதையும் தெளிவாகப் புரிந்துகொள்ளும் நிலைதோன்றும். அந்த நெற்றிப் பொட்டு குளிர்ச்சியுடன் இருக்க வேண்டாமா? இதற்குச் சந்தனம் சரியான மருந்து.

இந்த உண்மைகளைச் சாதாரணமாகக் கூறி விளங்க வைக்க முடியாத மக்களுக்கு நிலையில்லா வாழ்வின் நிலையை உணர்த்தி திருநீற்றை உடலில் அணிய வைத்திருக்கின்றார்கள். மதத்தைக் காட்டி விஞ்ஞான விளக்கத்தை மறைத்துக் கூறிய விளக்கங்களினால் மதம் வென்றது விளக்கம் மறைந்தது.

1. சுகமான நட்பு சுகந்தங்களை வாழ்வுக்குக் காட்டிவிடும். தீயநட்பு படுகுழியில் வீழ்த்திவிடும். இதை அறிந்தும் சில மனிதர்கள் மாண்டுவிடுகின்றார்கள்.
2. ஒரு மனிதன் செய்யும் தவறுகள் தண்டிக்கப்படும் வேளையில், அவன் ஆற்றிய புண்ணியங்கள் புதுப்பொலிவு பெற்றுத் துணைதரத் துடித்துக் கொண்டு ஓடிவரும்.
3. முடியாது என்று வாழ்வில் எதுவும் இல்லை. முடித்துக்காட்ட முனையும்போது மூளையும் எம்முடன் இணைந்து வேகத்தைக் கூட்டும். வேதனை நோய் என்று விழுந்துவிட்டால் எழுந்து நிற்கவே மனம் துணையாகாது
4. வாழும்வரை உலகவாழ்க்கையை எதிர்த்துப் போராடத்தான் வேண்டும். வானத்துக்குக் கீழே வீடு கட்டிவிட்டு வானம் விழுந்துவிடும் என்று பயப்படத்தான் முடியுமா....?

# திருநீலகண்டர்

மதங்களிலே பழமையானது இந்துமதம் என்பது யாவரும் அறிந்ததே. சைவம், வைணவம், சாக்தம், சௌமாரம், காணாபத்யம் என்பன இந்துமதத்தினுள் அடங்குகின்றன. சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சமயம் சைவசமயம் ஆகும். இச்சிவபெருமான் திருநீலகண்டர் எனவும் சைவசமயத்தவர்களினால் அழைக்கப்படுகின்றார். திருநீலகண்டர் என்னும் நாமத்தினால் சிவபெருமானை அழைத்ததன் உண்மைக் காரணம் என்ன என்பதைப் புராணக் கதை எடுத்துரைக்கின்றது. உலகத்திற்கு உண்மை ஞானத்தை முதலில் எடுத்தியம்பிய சைவசமயத்தின் ஆன்மீகக் கதைகளின் மெய்ப்பொருள் அறியாது, கதையை மட்டும் உள்வாங்கிக் கருத்தை மட்டும் விட்டுவிட்டதனால், மதம் நின்று நிலைக்கின்றது. இயற்கை மறைபொருளாக மறைந்து கிடக்கின்றது.

புராணக்கதை திருநீலகண்டர் என்னும் நாமத்திற்குக் கொடுக்கும் விளக்கமாவது. தேவர்களும் அசுரர்களும் நீண்டகாலம் வாழவேண்டும் என்று சிவனாரிடம் வேண்டிக் கொண்டனர். அப்போது சிவபெருமானும் பாற்கடலைக் கடைந்து, அதனுள் இருக்கும் அமுதத்தை அருந்தினால், நீண்டகாலம் உயிர் வாழலாம் என்று எடுத்துரைத்தார். அப்போது தேவர்களும் அசுரர்களும் இணைந்து மேருமலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது விஷம் பிரிந்து வெளியேறியது. அவ்வித்தை சிவபெருமான் எடுத்து உண்டதாகவும் அவ்விஷமானது சிவபெருமானைக் கொன்றுவிடும் என்று எண்ணிய உமையம்மையார், உடனே சிவபெருமானுடைய கழுத்தைப் பிடித்ததாகவும், அதனால் அவ்விஷமானது சிவபெருமானுடைய கண்டத்தில் தங்கிவிட்டதாகவும் இதனாலேயே சிவனுக்குத் திருநீலகண்டர் என்ற ஒரு பெயர் நிலவுவதாகவும் புராணக்கதை

12

புனையப்பட்டது. அத்துடன் அசுரர்கள் அமுதத்தை உண்டால் நீண்டகாலம் உயிர்வாழ்ந்துவிடுவார்கள். அதனால், உலகுக்குத் தீங்கு ஏற்படுமே என்று கருதிய கிருஷ்ணபரமாத்மாவும் அழகான பெண் வடிவம் தாங்கி அங்கு தோன்ற அசுரர்கள் கவனமெல்லாம் அப்பெண்வடிவில் இலயிக்க, மறுபுறம் சிவபெருமானும் தேவர்களுக்கு அமுதம் முழுவதையும் கொடுத்து முடித்துவிட்டதாகவும் அக்கதை கூறுகின்றது. இதுவே புராணக்கதை கூறும் விளக்கமாகப்படுகின்றது.

ஆனால், அற்புதமான அண்டவெளி இரகசியத்தை சுவையான கதையாக இந்துமதம் கூறியிருக்கின்றது என்றால் அதிவிவேகமுள்ள மக்கள் அக்காலத்தில் வாழ்ந்து மடிந்திருக்கின்றார்கள் என்ற உண்மை புலனாகின்றது. ஆனால் இந்த அண்டவெளி இரகசியத்தின் உண்மை விளக்கத்தை எடுத்துரைக்காது சமயத்தோடு எடுத்துரைத்த காரணத்தினால், விளக்கம் மறைந்து போக மதம் நின்று நிலைக்கிறது. இப்போது விளக்கத்திற்குள் வருகின்றேன். பாற்கடல் என்றால், என்ன? பால் போன்றிருக்கும் கடலல்லவா! அதுவே ஆங்கிலத்தில் Milkway என்றும் ஜேர்மனிய மொழியில் Milch Straße என்றும் அழைக்கப்படும் அண்டவெளியாகும். தூரத்தில் நின்று பார்க்கும்போது பால் போன்று வெண்மையாகவே காட்சியளிக்குமாம். அதனாலேயே எம்மவரும் பாற்கடல் என்றழைத்தார்கள்.

மேருமலை என்னவென்று அறிய ஆவல் மேண்படுகிறதல்லவா! அதுவே எம்மையெல்லாம் காக்கின்ற கதிரவன். கதிரவனைப் பக்கமாக நின்று பார்த்தால், மேல் நோக்கி எரியும் மலையாகத்தான் காட்சியளிக்கும். உச்சியில் நின்று பார்த்தால், புள்ளியாகவே, அதாவது எமக்குத் தெரிவது போன்றே காட்சியளிக்கும். மேரு என்பது பொன். மேருமலையெனில் பொன்மலை என்பது புலப்படுகின்றது. எனவே பொன்மலை என்பது எம்மைக் காக்கும் சூரியன் என்னும் உண்மை மிக இலகுவாகப் புரிகிறதல்லவா

அவ்வாறெனில் வாசுகி என்னும் பாம்பு! அதுவே சூரியனைச் சுற்றி வலம் வருகின்ற அந்த 9 கிரகங்களும் ஆகும். கிரகங்கள் ஒன்பதும் தலையாகவும் அவற்றின் நிழல் வால் போன்றும் தூர நின்று பார்ப்பவர்களுக்குத் தோற்ற மளிக்குமாம். இதனாலேயே மேருமலையைச் சுற்றிவருகின்ற வாசுகி என்ற பாம்பாக 9 கிரகங்களையும் எடுத்துரைத்தனர்.

சூரியக் கதிர்களிலிருந்தும் வலம் வருகின்ற கிரகங்களிலிருந்தும் தோன்றுகின்ற நச்சுவாயுவானது அண்டவெளியிலே கலந்திருக்கின்றது. இது உயிரினங்கள் தோன்ற முடியாத நச்சு நிலையாகும். அது சுழன்று பூமிக்கு

வருகின்றது. உலகெங்கும் பரந்திருக்கும் இந்த நச்சுவாயுவினால், உலகமக்கள் அனைவருக்கும் பாதிப்பே. அது எந்த வடிவில் என்று கூறமுடியாது. ஆனால், அழிவு நிச்சயமாகிறது. அந்த அழிவைத் தருகின்ற நஞ்சை கண்டத்தில் தாங்கியவராக சிவபெருமான் உருவகிக்கப்பட்டார். நஞ்சை விழுங்கவும் முடியாது துப்பவும் முடியாது. இரண்டும் ஆபத்தே. ஆனால் உலகெங்கும் நஞ்சு இருப்பது நிச்சயம். அவரவர் உடல்நிலைக்கேற்ப நாம் நஞ்சற்ற காற்றைச் சுவாசித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே கண்டத்தில் நஞ்சை அடக்கிய சிவனும் அறிவின் படைப்பே.

இப்பிரபஞ்சமே சிவனின் வடிவம். அவர் கழுத்தில் தங்கிய விஷமே இப்பிரபஞ்சத்தில் தங்கியுள்ள விஷமாகும். ஒரு உடலில் கழுத்துப்பகுதியில் விஷம் தங்கினால், அவ்விஷத்தை விழுங்கவும் முடியாது, துப்பவும் முடியாது. துப்பினால் பிறருக்குக் கேடு. விழுங்கினால், விழுங்கியவருக்குக் கேடு. இதனாலேயே திருநீலகண்டர் வடிவில் கழுத்தில்(கண்டம்) விஷம் தங்கியதாக கதை புனையப்பட்டுள்ளது.

இங்கு அசுர தேவர்களின் தோற்றம் தான் யாது! என்ற ஆராய்ச்சியில் இறங்கினால், சுரம் அசுரம் என்னும் இரண்டு பதங்களையும் எடுத்து நோக்கினால், சுரம் என்றால் தேவர்கள் அசுரம் என்றால், அசுரர்கள். இதன் விளக்கம் தான் யாது! நியூட்டனின் விதி தரும் விளக்கமே இதன் விளக்கமாகும். எந்த ஒரு செயலுக்கும் எதிர்ச்செயல் இருக்கும் என்பதாகும். தீமை இருந்தால், நன்மை இருக்கும். மகிழ்ச்சி இருந்தால், துன்பம் இருக்கும். எனவே தேவர்கள் இருந்தால் அசுரர்கள் இருக்கவேண்டும் அல்லவா! உலகில் இந்த இரண்டுவகை மனிதர்கள் வாழுகின்றார்கள். அவர்களே இந்த அசுர தேவர்கள் ஆவார்கள்.

எனவே அண்ட வெளியிலுள்ள சூரியனை நவக்கிரகங்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இதனையே மேரு மலையை வாசுகி பாம்பு சுற்றிக் கொண்டிருப்பதாகவும், இப்பிரபஞ்சம் நச்சுத் தன்மையைக் கொண்டுள்ளது. அது பல காரணிகளால் கீழே வரவிடாது தடுக்கப்படுகின்றது. இதனையே இப்பிரபஞ்சமாகிய சிவபெருமான் கண்டத்தில் தாங்கினார் என்று புராணக் கதைகள் எடுத்தியம்புகின்றன.

எனவே அழகான அற்புதமான இயற்கை நிகழ்வுகள், அக்கால அறிவாளிகளின் தவறான வெளிப்படுத்தலால் உலகிலே ஆன்மீகம் புகுந்தது. பகுத்தறிவு அழிந்தது. திருநீலகண்டர் வடிவம் தெய்வமானது. இயற்கை நிகழ்வு தெரியாமல் போனது.

# ஆலமரத்தடிப் பிள்ளையார்

*ஆலமரத்துப் பிள்ளையார்*
*பல அற்புதங்கள் காட்டுவார் - என்*
*சொந்தக் கவலை தீரவே*
*சொல்லி அழவே நாடுவேன்.*

ஆலமரத்தடிப் பிள்ளையாரைத் தொழுதால் ஆரம்பிக்கும் கருமங்கள் யாவும் நலம் பெறுமே என அளவிலா நம்பிக்கை கொண்ட பக்தர்குழாம், நாளின் ஆரம்பமே ஆலமரத்தடி என்று வாழ்வது நிஜம். இப்பிள்ளையார் எவ்வாறு இங்கு வந்தமர்ந் தார் என்னும் வினாவிற்கான தேடலின் தெளிவு பெற கீழே தொடருங்கள்.

ஆலமரத்தின் சிறப்பு அது கீழ்ச்செலுத்தும் விழுதுகளின் அமைப்பு. கிளைகளைத் தாங்கிநிற்கும் விழுதுகள் அம்மரத்தைத் தாங்கி நிற்பதாகப் பார்ப்பவர்களுக்குக் காட்சியளிக்கும். அம்மரத்தின் அருகாமையில் அற்புதமாய்ப் படர்ந்து செழித்து வளர்ந் திருந்தது அறுகம்புல். இவ் அறுகம்புற்களை உண்பதற்காக பசுமாடுகளைக் கொண்டுவந்து விடுவது அக்கால மக்களின் வழக்கமாக இருந்தது. அறுகம்புல்லில் இயற்கையாகவே பல மருத்துவத்தன்மைகள் நிறைந்திருக்கின்றன. விற்றமின் ஏ சத்து நிறைந்த இவ் அறுகம்புல் இரத்தத்தைச் சுத்திகரிப்பதுடன் இரத்தத்திலுள்ள செங்குருதிச் சிறுதுணிக்கைகளை (சிவப்பணு) அதிகரிக்கச் செய்வதுடன் இரத்தச்சோகை, இரத்த அழுத்தம் போன்ற நோய்களையும் தீர்த்து வைக்கின்றது. உடற்சூட்டைத் தணித்து வாயுத் தொல்லைகளை நீக்குவதுடன், நரம்புத்தளர்ச்சி நோய்க்கு மருந்தாகவும் அமைகின்றது. பெண்களுக்கு மாத விடாய்க் காலங்களில் வரும் தொல்லைகளும் இதனால்

13

தீர்க்கப்படும். இதைவிட இன்னும் பல நோய்களைத் தீர்த்துவைக்கும் அவ் அறுகம் புற்களைப் பசுமாடுகள் மேய்ந்து அது தரும் பாலைக் குடிப்போர், ஆரோக்கியம் மிகுந்தவர்களாகவும் காணப்படுவார்கள். அப் பாற்சுவை நோக்கியும், நிறைபலன் கருதியும் அக்கால மக்கள் அப்பசுமாடுகளை அங்கு மேய விடுவார்கள்.

ஆனால், இவ் ஆலமரத்தை நாடி யானைகள் வருவதும் வழக்கமாக இருந்தது. இனச்சேர்க்கையில் விருப்புக்கொண்ட யானைகள் அம்மரத்தை வந்தடைந்தன. ஏனெனில், இனச்சேர்க்கையின் போது ஆண்யானையின் பலத்தைப் பெண்யானை தாங்கமாட்டாத காரணத்தினால், ஆண்யானை தன்னுடைய பலத்தையெல்லாம் ஆலமர விழுதை இழுத்துத் தாங்கி நின்று பலத்தைக் குறைக்கும். இவ் யானைகள் வரும்போதும் போகும்போதும் அருகே படர்ந்து கிடக்கும் அறுகம்புற்களை மிதித்தழித்துச் சேதப்படுத்திவிடும். யானைக்குப் புற்களும், தாவரங்களும் உணவில்லையே பெரிய மரங்களையல்லவா உணவுக்காக அது நாடி நிற்கும். பசுக்களுக்குகந்த அறுகம்புற்கள் சேதப்படுவது பாதுகாக்கப்பட வேண்டுமல்லவா! இதைவிட யானைகள் போடும் லத்திக்கும் யானைகளுக்கும் பயந்த பசுமாடுகள் அவ்விடம் நோக்கி வரமாட்டாது. இதனால், யானையைத் தடுக்க நினைத்த அக்கால மக்கள், மாட்டுச்சாணத்தினால், பல உருவங்களைச் செய்து ஆலமரத்தைச் சுற்றி வைத்துவிடுவார்கள். பின் விளையாட்டாக அருகே படர்ந்து கிடக்கும் அறுகம்புல்லை அதன் மேல் குற்றி விடுவார்கள். மாட்டுச்சாணத்தின் மணத்திற்கு யானைகள் அவ்விடத்தை எட்டியும் பார்க்காயின. இச்சாணத்தின் வடிவங்களே மெல்லமெல்ல ஆலமரத்தடிப் பிள்ளையார் வடிவங்களாயின. வீடுகளில் பூஜைகள் செய்யும் போது பிள்ளையார் என்று மாட்டுச்சாணத்தையும் அதன்மேல் அறுகம்புல்லையும் குற்றி வைப்பதும் அக்காரணத்தினாலேயே.

எனவே காரணங்கள் இல்லாமல் காரியங்கள் இல்லை. காரணங்களைக் கேட்காது, நாம் காரியங்களை ஆற்றிக் கொண்டிருந்ததனால் காரணங்கள் மறைவாயின. இன்று எதற்கும் ஏன் என்று கேட்கும் பழக்கம் வளர்க்கப்பட்டால் அறிவு தெளிவுபெறுவது நிச்சயம்.

# சித்திரா பௌர்ணமி அன்று ஓர்நாள்

*சித்திரையில் வரும் பௌர்ணமிக்கு ஒரு சிறப்பு - அது*
*தாய்மார்கள் ஆன்மா ஈடேற்றம் காணும் சிறப்பு.*
*கற்றவர்கள் கூட அதற்கு தரும் மதிப்பு*

*எப்படியோ ஆகட்டும் என்ற ஒரு போக்கு.*

அன்று தாய்மார்களின் ஆன்மாக்கள் உலகில் இருந்து பிரிக்கப்பட்டு ஈடேற்றம் காணும் நாள். அவ்வுலகிலும் ஒரு இறப்பு நாள் என்றே நான் கருதுகின்றேன். அதுவும் பூமியில் வாழும் தமது பிள்ளைகள், அன்றைய நாள் விரதம் இருந்து, பூசை புரிந்த ஆன்மாக்கள் மட்டுமே ஈடேற்றம் காணும் நாள். அந்த ஆன்மாக்கள், பூமியில் வாழும்போது எப்படி நன்மைகள் செய்திருந்தாலும் பிள்ளைகள் அன்றைய நாள் விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அப்போதுதான் தாய்மார் ஆன்மாக்கள் ஈடேற்றம் காணும் என்ற ஒரு நம்பிக்கை நம்மவர் மத்தியில் புகுந்துள்ளது. அப்போது தந்தைமார்களின் ஆன்மாக்கள், மற்றையவர்களின் ஆன்மாக்கள் எல்லாம் ஆன்மாக்களின் உலகில் தங்கியிருக்கும்.

ஆடி அமாவாசை வந்தால், மீண்டும் ஒரு பிரிவு. தந்தைமார்களின் ஆன்மாக்கள் எல்லாம் ஆன்மாக்கள் உலகில் இருந்து விடைபெற்று ஈடேற்றம் காணும் நாள். அதுவும், பூமியில் வாழும் பிள்ளைகள் ஆடி அமாவாசை விரதம் இருக்கவேண்டும். தாய் பௌர்ணமியில் ஆண்டவன் காலடி நாடுவாள். தந்தை அமாவாசையில் ஆண்டவன் காலடி நாடுவார்.

14

ஆனால் திருமண பந்தத்தில் நுழையாத சகோதரர், பிள்ளைகள் இறந்தால், அவர்கள் ஆன்மாக்கள் ஈடேற்றம் காண

எந்தநாளில் விரதம் இருக்கவேண்டும். அதுபற்றி வினா எழவில்லையா? இவர்களின் ஆன்மாக்களின் நிலைதான் என்ன? மனதினுள் எழுந்த வினாக்களின் சிந்தனைகள் விரிந்தவளாய் யான், வழமைபோல் அன்றும் ஆடி அமாவாசை அன்று எனது பெற்றோர் படத்திற்கு விளக்கேற்றினேன். மனக்கவலைகள் யாரிடமும் கூறினால் அரைவாசியாகக் குறையும் மனமகிழ்ச்சிகள் யாரிடமும் கூறினால் இருமடங்கு அதிகரிக்கும். இவ்வாறே மகிழ்ச்சியோ கவலையோ எனது பெற்றோர் படங்களின் முன் பகர்வது எனது வழக்கம். அன்றும் அவ்வாறே.

அன்று சித்திரா பௌர்ணமி. அடுத்த வீட்டில் இருந்து வந்த அழைப்புக் கூட இருந்தது. நேரம் போதாமையால், வேலைக்குப் போகுமுன் அடுத்த வீட்டார்க்குச் சிறிது கையுதவி செய்துவிட்டு வரலாம் என்று அங்கு சென்றிருந்தேன். வீட்டுக்குள் சென்றபோது வாசனை மூக்கைத் துளைத்தது. அவர் தாயின் உருவப்படம் ஒரு மேசைமேல் வைக்கப்பட்டிருந்தது. அழகான பூக்கள் தாயின் படத்திற்கு வைப்பதற்காக, அன்றே வாழத்துடித்து மலர்ந்த மலர்களை அது வாழும்போதே பறித்து எடுத்து வைக்கப்பட்டிருந்தது. பூஜைக்குரிய ஆராத்தித் தட்டுக்கள், கற்பூரம், சந்தனக்குச்சி, சாம்புராணி இப்படியெல்லாம் ஒரு சுவாமி படத்திற்கு அலங்கரிப்பது போல் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

சமையலறையினுள் அமர்க்களம். 3, 4 குடும்பங்களை விருந்துக்கு அழைத்ததனால், பெண்களின் கலகலப்புப் பேச்சுக்களும் சிரிப்புக்களும் தாளித வாசனையுடன் கலந்துகொண்டு வீடெங்கும் பரவியிருந்தது. தாய்மண்ணிலே உணவுக்காக ஏங்கும் ஏழைகளுக்கு இப்படியான சந்தர்ப்பங்களில் இப்படியாகச் சமைத்துக் கொடுப்பது வழக்கம். இதுவும் இப்படியான நாள்கள் செய்வதன் அவசியமும் கூட. ஆனால், இங்கு......? ஐரோப்பிய நாடுகளில் ... கலகலப்பில் நானும் கலந்து கொண்டேன். சிறிது கையுதவியும் செய்தேன். சமையலும் முடிவடைந்தது.

தாயின் படத்தின் முன் 7 கறிகளுடன் சோறும் வடை பாயாசங்களும் படைக்கப்பட்டன. பூஜை ஆரம்பமானது. தேவாரங்கள் பாடப்பட்டன. கற்பூர ஆராத்தி காட்டப்பட்டது, சாம்புராணி தீபம் போடப்பட்டது. முடிந்தவுடன் எல்லோருக்கும் உணவு பரிமாறப்பட்டது. பின் விஜய் நடித்த சுறா படம் போடப்பட்டது. உணவருந்தி படம் பார்த்து விருந்தினர் விடைபெற்றனர்.

ஒரு மணி நேரம் வேலைக்குத் தாமதமானாலும் கூறவேண்டியவற்றைச் சரியான நேரத்தில் எடுத்துக் கூறாவிட்டால், அது கூறாமலே மறைந்து போய்விடும் அல்லவா! அதனால், அந்தத் தாயின் மகளை அருகே அழைத்தேன். இந்த 4 குடும்பங்களில் ஒருத்தியாக உணவு பிரமாதம் என்று ஒரு வார்த்தையில் கூறிவிட்டு விடைபெற்றுச் செல்லும் ஒரு சாதாரண பெண்ணாக இருக்கவில்லை என்றும் எதையும் சிந்தித்துக் கொண்டிருக்கும் நான், இன்று இந்த சித்திரா பௌர்ணமி பற்றிச் சிந்தித்தேன். உங்கள் தாயில் நீங்கள் வைத்திருக்கும் மதிப்பும் மரியாதையும் விருப்பும் புரிகின்றது. ஆனால், ஏன் இது செய்யப்படுகின்றது என்று சிந்தித்தீர்களா?

**எதற்காக உங்கள் தாயின் படத்தின் முன் படையல்கள் படைக்கப்படுகின்றன?**

உங்கள் தாயின் ஆன்மா இங்கு வந்து உணவு அருந்திவிட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காகவா? உங்கள் தாயின் படத்தின் முன் படையல்கள் படைக்கப்படுகின்றன? அது திவசத்தில் அல்லவா செய்கின்றார்கள். இன்றைய நாள் விரதம் இருந்து தந்தையின் ஆன்மா இறைவன் காலடியைச் சென்றடைய வேண்டும் என்பதற்காகவல்லவா செய்யப்படுவது. நீங்கள் படையல்கள் படைத்து அழைத்தால், உங்கள் தாயின் ஆன்மா இங்கு வந்து உணவு அருந்துவதா? இல்லை ஈடேற்றம் காண்பதா? சிந்தித்துப் பாருங்கள்.

உங்கள் தாயின் படத்தின் முன் பூஜைப் பொருட்கள் வைத்திருக்கின்றீர்கள். அதன் அர்த்தம் தான் என்ன?

உங்கள் தாய், இறையென்னும் நிலையடைந்து விட்டார் என்று உறுதியான மனநிலை நீங்கள் கொண்டதனால்தானே! உங்கள் தாயின் படத்தின் முன் பூஜைப் பொருட்கள் வைத்திருக்கின்றீர்கள். அதனால்தானே கற்பூர ஆராத்தி எடுத்தீர்கள். பின் ஏன் ஈடேற்றம் கருதி விரதம் இருக்கின்றீர்கள்? திடமான நம்பிக்கை கொள்ளாத எதுவுமே மனிதர்கள் செய்வது தவறு, என்றே நான் கருதுகின்றேன். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

**இங்கு தேவாரம் பாடப்பட்டதே, ஏன்?**

"தோடுடைய செவியன்.." என்பது சிவபெருமானைக் குறித்துத் திருஞான சம்பந்தர் பாடிய பாடல் அல்லவா! இங்கு வைக்கப்பட்டிருக்கும் உருவப்படமானது உங்கள் தாயினுடையதல்லவா! தாயின் உருவப்படத்தின் முன் இறைவனை

நினைத்துப் பாடினீர்கள் என்றால், தேவாரங்கள் கரும்பின் சக்கையைச் சப்பித் துப்பியதைப் போன்றவை. உதாரணத்திற்கு திருஞானசம்பந்தர் "தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதி சூடி" என்ற தேவாரத்தைப் பாடி உமையம்மையாரால் பாலூட்டப் பெற்றவர். அந்த கரும்பின் சாற்றை அவர் அருந்திவிட்டார். அதன் சக்கையை நாம் பாடுவதில் என்ன இருக்கின்றது? இறைவனை எண்ணி நீங்கள் பாட வேண்டுமானால், நீங்களாகவே நினைத்துப் பாடுங்கள். அதில் பொருள் இருந்தால் போதுமானது. அதை எதிர்பார்த்தால் அவர்கள் கடவுளர்களும் இல்லை. பாடல்களில் கவித்துவம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. பொருள் விளங்காது பாடப்படும் பாடல்களும் பலன் தராது. மந்திரங்களும் பலனளிக்காது. ஏனென்றால், அவை மனதில் பதியப்படுவதில்லை. மூளை ஏற்றுக் கொள்வதில்லை. சற்று சிந்தித்துப் பாருங்கள்.

**விரதமிருக்கலாமா?**

இறந்தவுடன் உயிரென்னும் ஆத்மாவானது வேறொரு உடலினுள் ஐக்கியமாகின்றது என்பது கர்மக்கோட்பாடாகப் பலரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அப்படியெனில், எங்கோ ஒரு உடலினுள் ஐக்கியமாகிவிட்ட அந்த ஆத்மாவிற்கு மீண்டும் ஈடேற்றம் காண நீங்கள் விரதம் இருப்பது பெரிய பாவம் இல்லையா! இது நியாயமாகிவிடுமா! சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

இல்லை உங்கள் தாயின் ஆத்மா இன்னும் அலைந்து திரிகின்றது என்றால், 30 வருடங்கள் கழிந்த நிலையிலும் அந்த ஆன்மா அலைந்துதான் திரிகின்றதா! இத்தனை வருடங்களும் நீங்கள் விரதம் இருந்தது பலன் அளித்திருக்காது என்ற நம்பிக்கையீனம் உங்களிடம் குடிகொண்டிருக்கின்றதா! சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

உலகில் நன்மைகள் பல செய்து வாழும் மனிதன் இறந்துவிட்டால், அவனது ஆன்மா பிள்ளைகள் சித்திரா பௌர்ணமி விரதம், ஆடி அமாவாசை விரதம் இருந்தாலேயே ஈடேற்றம் காணும் என்றால், உலகில் வாழும் வரை தீமை செய்பவர்கள். பிள்ளைகள் மூலம் ஈடேற்றம் கிடைக்குமென்று கருதியவர்களாக நிம்மதியாக இறக்கலாமே! சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

உயிரற்ற உடலால் என்ன பயன் என்று அந்த உடலைத் தீக்கிரையாக்கி விடுகின்றோமே. உடலற்ற அந்த உயிரால் என்ன பயன்! ஆன்மா என்பது உடலுள் இருக்குமானால், சத்திரசிகிச்சையின் போது அது எங்கே செல்கின்றது?

ஆழ்ந்த மயக்கம் கழிந்து எழுந்தபின் சத்திரசிகிச்சையின் போது நடந்த நிகழ்ச்சி களை எமது ஆன்மா தெரியப்படுத்தியிருக்குமே. அந்த மூளைதான் ஆன்மா என்று. அந்த மூளை கொண்ட மனிதன் சிந்திக்கத் தவறுவதுதான் ஏன்? அது ஒருபுறம் இருக்க ஆன்மா என்று அலட்டிக் கொண்டு அதன்மூலம் வருமானம் தேடுபவர்களுக்கு அது தொழிலுக்கு ஆதாரம்.

ஆனால், அனைவரையும் அறிவற்றவர்களாய்க் கருதுவது தவறு அல்லவா! எனவே வாழும்போதே நன்றிக் கடன் செய்வதாக இருந்தால், செய்ய நினைப்பவர்களுக்கு மனத் திருப்தியுடன் செய்து முடித்துவிட வேண்டும். வாழ்ந்து இறந்து எரிந்துவிட்ட, புழு பூச்சிகளுக்கு இரையாகிவிட்ட உடலுக்குச் செய்கின்றவை எல்லாம் வெறும் போலியாக பிறருக்குக் காட்டுகின்ற வெளிக் காட்டுகை என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். இந்தக் கிரியைகள் எல்லாம் எமது தாயார் தினம் போல் பெற்றோர்க்கு நன்றி செலுத்துவதற்காகவும் இறந்த அவர்களை நினைப்பதற்காகவுமே செய்யப்பட்டவை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். உயிரோடு இருக்கும் வரை செய்ய நினைக்கும் அத்தனை காரியங்களையும் செய்து எமது நன்றிக்கடனை செலுத்தவேண்டும்.

இது உங்களுக்கும் உலகுக்கும் சொல்லும் சிந்தனை. நான் வருகின்றேன் என்று ஒருவரைச் சிந்திக்கத் தூண்டிய மனதுடன் விடைபெற்றேன். அவள் சிந்தித்தாளோ இல்லையோ, உலகு உலகத்து மாயையை சிந்திக்கட்டும்.

# தமிழர் கலாசாரத்தில் தாலி

**தா**லி என்பது திருமணத்தின் போது மணவாளன் தன் உரிமைப் பெண்ணாக ஒரு பெண்ணை அடையாளப்படுத்த அணிகின்ற ஒரு சாதனமாகிய மாங்கல்யம் ஆகும். அதாவது தாலி என்பது ஒரு அடையாளச் சின்னமே. திருமணத்தின்போது ஒரு ஆண் பெண்ணுக்குக் கழுத்தில் அணிவிக்கும் ஒரு அணி கலனாகும்.

தலைநிமிர்ந்து வரும் ஒரு ஆடவன் தாலி அணிந்த பெண்ணைக் காணும்போது இவள் திருமணமான ஒரு பெண் என்று தன்னை விலத்திக் கொள்வான். இந்த வகையிலேயே மெட்டி என்னும் ஒரு அணிகலன் ஆண்கள் கால்களில் அணியப்பட்டது. தலைகுனிந்து வரும் பெண்கள், மெட்டி அணிந்த ஆண்களைக் கண்டு விலகிச் செல்வார்கள். ஆனால், அதில் இன்னுமொரு உண்மைக் காரணமும் உண்டு. மெட்டியிலுள்ள உலோகம் விஷத்தை நீக்கக்கூடிய தன்மையுள்ளது. காடுகளில் திரிகின்றபோது விஷ ஜந்துக்களின் தாக்கத்தில் இருந்து ஆண்களைப் பாதுகாக்க இம்மெட்டி அணியப்பட்டது. ஆனால், திருமணமான ஆண்களே விஷ ஜந்துக்களில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்களா? என்பது கேள்வி. இதன் மறுமுனையில் சிந்தித்தால், அக்காலத்தில் சிறுபிராயத்திலேயே பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து கொடுத்து விடுவார்கள். சிறுவயதிலேயே குடும்பத்திற்காக உழைப்புத் தேடவேண்டிய பொறுப்பு ஆண்மகனுக்கு ஏற்பட்டது. இதனால் ஆண்களுக்கு இம்மெட்டி அவசியமானது.

15

இம்மெட்டியானது நோய் எதிர்ப்பு சக்தியை உடலுக்கு வழங்கும் என்பதனாலேயே ஐம்பொன் நகைகள் அணியப்

படுவதும். செம்பு உலோகம் பயன்படுத்துவதும் காரணமாகின்றன. இதைவிட இம்மெட்டியானது தற்பொழுது திருமணநாளன்று பெண்களுக்கே அணியப்படுகின்றது. மெட்டி அணியப்படும் விரலுக்கும் கர்ப்பப்பைக்கும் இடையே தொடர்பு இருப்பதனால், இம்மெட்டியானது கர்ப்பப்பைக்கு வலிமையைக் கொடுக்கின்றது என்று அறியப்பட்டிருக்கின்றது. இம்மெட்டி விடயம் இவ்வாறிருக்க தாலிக்குத் திரும்புவோம்.

ஆரம்ப காலத்தில் தான் விரும்பும் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண்மகன் அன்பளிப்பாக மலரைக் கொடுத்தே பெண்ணை ஆண்மகன் ஆண்டு கொண்டான். இம்முறை குரங்குகளிடமும் இருக்கிறதாம். பிற்காலத்தில் பூமாலை அணிவித்தார்கள். இது ஒரு அன்பளிப்புப் பொருளாகவே கருதப்பட்டது. பின் மஞ்சள் கயிற்றில் அணிவிக்கப்பட்டது. மஞ்சளானது தோலுக்கு மென்மையையும், அழகையும் கொடுக்கும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் தன்மையுள்ளது. இதனால், மஞ்சள் கயிற்றில் தாலி அணிவிக்கப்பட்டது. முற்காலத்தில் வேட்டையாடி புலியைக் கொன்ற ஆடவன், அதன் பல்லை எடுத்துக் கழுத்தில் மாலையாக அணிவது வழக்கமாக இருந்தது. பின் திருமணத்தில் அதனைத் தன் மனைவிக்கு அணிவித்தான் என்றும் அறியப்படுகின்றது. அதனாலேயே மஞ்சளில் தாலி கட்டும்போது மஞ்சள் புலிப்பல் வடிவிலே எடுக்கப்படுகின்றது. தற்பொழுது அது பொற்தாலி என்னும் வடிவத்திற்குத் தாவிச் செல்வப்பெருமையை வெளிக்காட்டும் ஒரு சாதனமாக அணியப்படுகின்றது. இப்போது 25,30 பவுண்களிலும் பெண்ணின் எடைக்கு ஏற்பவும் அணியப்படுகின்றது. தாலியைத் தாங்கமுடியாத கழுத்துடன், விழாக்களுக்கு மட்டும் பெண்களால் அணியப்பட்டு, மறுவேளை வீட்டு அலுமாரியில் அடைந்து கிடக்கின்றது.

திருமண நாளன்று சுபமுகூர்த்த நேரத்தில் கூறைச்சீலை உடுத்தி மண மகனின் வலது பக்கத்திலே கிழக்கு நோக்கி மணமகள் அமர மணமகன் எழுந்து மணமகளின் வலதுபக்கம் வந்து வடக்குத் திசையை நோக்கி நின்று குருக்கள் மற்றும் பெரியோர் ஆசீர்வதித்துக் கொடுத்த மாங்கல்யத்தை எடுத்து, "மாங்கல்யம் தந்துநாநே நமஜீவன ஹேதுநா கண்டே பத்தாமி ஸ'புகே சஞ்ஜிவசரதசம்" என்ற மந்திரத்தைக் குருக்கள் உச்சரிக்க, கெட்டிமேளம் முழங்க (அபசகுன வார்த்தைகள் எதுவும் காதில் கேட்காவண்ணம்) பெரியோர்கள் அர்ச்சதை, மலர்கள் தூவ மணமகன் மேற்குத் திசை திரும்பி நின்று மணமகள் கழுத்தில் மாங்கல்யம் அணிவான்.

கணவன் வாழும்வரை மனைவி மார்பில் எப்பொழுதும் இத்தாலி தவழ வேண்டும். அவனை நெஞ்சோடு தான் தாங்கி வாழும் தன்மையை காலம் முழுவதும் அப்பெண் எடுத்துக்காட்ட வேண்டும். இவ்வாறு இத்தாலி அணியப்பட்ட நிலைமை மாறி இப்போது அழகுசாதனமாக்கப்பட்டுவிட்டது. தமிழர் கலாசார சின்னத்துள் ஒன்றாகக் கருதப்படும் இத்தாலிக்கு ஒரு மகத்துவமும் உண்டு. மார்பிலே உயிரோட்டம் உள்ள இதயத்தில் இத்தாலி தட்டுப்பட்டுக் கொண்டு இருக்க, அது சீன மருத்துவ முறையான அக்யூபக்சர் முறைபோல் தொழிற்படுகின்றதாம். எனவே, தாலி என்பது பெண்ணுக்கு வேலி என்பது மாத்திரம் அன்றி பெண்ணுக்கு வலிமை என்றும் சொல்லவேண்டும். கலாசார விழுமியங்கள் காரணம் இல்லாமல் தோன்றவில்லை. அது கால சூழலுக்கேற்ப கட்டிக்காக்க வேண்டியதும் அவசியமே.

1. *எதுவுமே எமக்குச் சொந்தமாவதில்லை. நாம் உயிரோடு இருக்கும்வரை அனுபவிப்போம். இல்லாது போனால் சொந்தமில்லை என்று நினைத்திருப்போம்.*
2. *உன் வாழ்க்கையின் விலைமதிப்பற்ற அனுபவங்களையும் ஞாபகங்களையும் உன் இதயத்தில் பாதுகாத்துவை.*
3. *இன்பமோ துன்பமோ உள்ளத்தின் வெளிப்பாட்டை உணர்த்தும் பாங்கு கண்ணீருக்குத்தான் உண்டு.*
4. *எல்லோரையும் திருப்திப்படுத்தி எல்லோருக்கும் நல்லவராய் வாழ்வது என்பது முடியாத காரியம்.*
5. *எல்லோரும் மகாத்மாக்களும் இல்லை. எல்லோரும் கொடியவர்களும் இல்லை.*

# தலைப்பாகை

**மோ**வாயில் முறுக்கு மீசையும், தலையிலே தலைப் பாகையும், தோளிலே சால்வையும் அணிந்துவரும் கம்பீரத் தமிழன் எமது கலாசார பாரம்பரியத்தை படம் பிடித்துக் காட்டுகின்றான். காலத்தின் மாறுதலால், கலாசாரக் கலப்பினால், அந்நிய மோகத்தினால் நாம் தேசிய ஆடைகளை மறந்து அல்லது மறுத்து காலத்திற்கேற்பக் கோலம் மாற்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஆனாலும் எமது கலாசார நிகழ்வுகளில் அதை நினைவுபடுத்திக் கொண்டிருப்பது பெருமைப்படத்தக்கதாக இருக்கின்றது. தற்பொழுது திருமண வீடுகளில், மணமகன், தோழன் போன்றவர்களும், திருமணத்தின் போது மாமன் தேங்காய் உடைக்கும்போது கட்டுகின்ற இந்தத் தலைப்பாகை என்ற சொல்லானது முண்டாசு, தலைப்பா, தலைக்கட்டு என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது.

ஆரம்பகாலப்பகுதியில் தமிழர்கள் தலைப்பாகை அணிந்து கொண்டு நடமாடிய விபரங்கள் அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆனாலும் இது வழக்கு ஒழிந்து போனாலும் அதனை மறவாமல் இருப்பதற்காகத் தமிழர்கள் திருமண வீடுகளில் இதைக் கைக் கொள்கின்றார்கள்.

16

இத்தலைப்பாகையானது தலையில் வந்து அமர்ந்ததன் உண்மைக் காரணம் என்ன என்பதை என் தேடல் மூளை தேடித் தவித்த பின் அதற்கான விபரத்தையும் தெரிந்து புரிந்து பிறர் அறியச்செய்ய விழைந்தது. மூளைக்குத் தேவையான கதிர் வீச்சுக்கள் வெளியேறாமல் இருப்பதற்காகவே இத்தலைப்பாகை

அணியப் படுகின்றது. மூளை என்பது எமது உடலின் மூலஸ்தானம். அதாவது எமது உடலின் Head of the Department. இதில் ஏதாவது பிழை ஏற்பட்டால், வாழ்நாள் முழுவதும் கடினத்தை அனுபவிக்க வேண்டியதுதான். எமது உடலினுள் ஞானசக்தி, போகசக்தி என்பன உண்டு. ஞானசக்தி மூளையிலும், போகசக்தி அடிவயிற்றிலும் இருக்கின்றது. எனவே இச் சக்திகள் வெளியேறாமல் இருக்க தலைப்பாகை அணிவது வழக்கமாக இருந்தது. இது கோயில் கோபுரம் போன்ற நிலையில் கட்டப்பட வேண்டும். கூராகக் கட்டும்போது மனித சக்தியும் பரசக்தியும் நேராக அமையும். அதாவது பூமியிலுள்ள சக்தி காலினூடாக உடலை வந்தடைந்து மனித சக்தியாகின்றது. இது எமது உடலினுள் உள்ள சக்தியாகும். அத்துடன் வெளியுலக சக்தியாகிய பரசக்தி நேராக இணைகின்றது. இதுவே இந்த தலைப்பாகை அணியும் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டது.

1. **ஒரு பெண்ணின் தேவைகளை நிறைவேற்றமுடியாத ஒரு ஆண்மகன். அவளை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்வதில் அர்த்தமே இல்லை.**

2. **ஆசிய நாட்டிலிருப்பவர்கள் இங்கு பணம் உழைப்பது ஓடுகின்ற தண்ணீரில் அள்ளி எடுப்பது என்று நினைப்பார்கள்.**

3. **அறிவுடையார் தம் அறிவை மேம்படுத்தி உறவுகளை வலுப்படுத்தி ஆதாயம் பண்ணப் பார்த்தல் இயல்பே.**

4. **பணம் ஒரு கேடுகெட்ட ஒரு நோய்க்கிருமி. தம்மில் அளவுக்கு மீறி ஆசை கொள்பவர்களை ஆட்டிப்படைக்கும். அதைத் தேடிச் செல்லும் மனிதனை பைத்தியமாக்கும்.**

5. **எந்தத் தொழில்நுட்பசாதனங்களையும் அவதானமாகக் கையாளும்போதே அதன் பயன்பாட்டைப் பெறமுடியும்.**

# தீட்டு என்றும் துடக்கு என்றும் கருதப்படும் விலக்குநாட்கள்

தமிழர்கள் மத்தியில் தீட்டு என்றும் துடக்கு என்றும் விலக்கி வைக்கும் நாட்கள் பல. இந்த நாட்களை நீக்க பூஜை, கிரியைகள் என்றெல்லாம் ஏகப்பட்ட சம்பிரதாயங்கள் எம்மவர் மத்தியில் இருக்கின்றன. எப்போதோ எமது தலையில் அரைக்கத் தொடங்கிய மிளகாய் இப்போதும் அரைக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. முப்பதாவது நாள் நடத்த வேண்டிய கிரியைகளுக்காக இந்தத் தடுப்புநாள் தந்தவர் யார்? கிரியைகள் தேவையா? இவைபற்றி விளக்கமாய்த் தெரிந்துகொள்ள மீண்டும் சுரண்டியது என் மூளை. தேடியது தெளிவுபெற பேனா திறந்தது, குனிந்தது.

**மாதவிடாய்த் தீட்டு:**

தீட்டு என்னும் சொல், மகளிர் சூதகம், ஆசூசம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. பெண்களுக்கு வருகின்ற மாதவிடாய்க் காலங்கள் தீட்டு வந்த நாட்களாகக்கருதப்படுகின்றன. இக்காலப் பகுதியில் பெண்கள் கோயிலுக்குச் செல்லும் வழக்கம் இல்லை. அதிகமாக வெளியில் நடமாடமாட்டார்கள். புத்தியைத் தீட்ட வேண்டிய பெண்கள் மூலையில் புகுந்து கிடப்பார்கள். அக்காலத்தில் போதிய சுகாதார வசதிகள் குறைந்திருந்த காரணத்தினால் பெண்கள் ஒதுங்கியிருந்தார்களே தவிர ஒதுக்கப்படவில்லை. இக்காலத்தில் இருப்பது போன்று அக்காலங்களில் போதிய கிருமிநாசினிகள் இருந்ததில்லை. பெண்கள் கைகளில் கிருமிகள் விரைவாக வளரக்கூடிய சூட்டுத்தன்மை உள்ளது. பெண்கள் வயிற்றினுள் முட்டையையே கருவாக்கக் கூடிய வெப்பத்தையுடையவர்கள். அதனால் இவர்கள் மூலம் கிருமிகள் இலகுவாகப் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள்

17

உண்டு. இக்காலங்களில் இவர்களுடைய உடலில் சுரக்கப்படும் ஓமோன்கள், மனநிலை யிலும் மாற்றங்களைச் செய்வதுடன், ஒருவித எரிச்சல் உணர்வையும் அவர்க ளுக்கு ஏற்படுத்தும்.

முதன்முதல் மாதவிடாய் கண்ட பெண்கள், மனநிலையால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பார்கள். அத்துடன் உடல் உபாதைகளும் (அடிவயிற்றில் வலி, கால்கள் நோ, இடுப்பு நோ) இவர்களுக்கு ஏற்படும். இவர்கள் மனஉணர்வு எதிலுமே மனதை ஒட்டவைக்காது. இந்த உணர்வானது கோயிலுக்குச் சென்று ஆண்டவனைத் தரிசிப்பதற்குத் தடையாக இருக்கும். அவ்வாறே மாதவிடாய்க் காலங்களில் இவர்கள் கோயிலுக்குச் செல்லும்போது, இவர்களின் உடலில் இருந்துவரும் மனஉணர்வினால் ஏற்படும் அதிர்வுகளானவை, அங்குள்ள மற்றையவர்களுக்கும் ஒருநிலைப்பாட்டு வணக்கமுறையைத் தடைசெய்யும். ஒரு மனிதனின் உடலில் இருந்து வருகின்ற அதிர்வுகள் மற்றைய மனிதர்களைச் சென்றடைகின்றன என்னும் விளக்கம் யாவரும் அறியவேண்டியதே. இதனாலேயே இந்த கட்டிப்பிடி வைத்தியம், சுவாமிமார்கள் என்று சொல்லப்படும் மனிதர்கள் செய்கின்றார்கள்.

இவர்கள் தமது கையை அடியார்களின் தலையில் வைப்பது, அடியார்களைக் கட்டிப்பிடிப்பது போன்றவையெல்லாம் செய்கின்றனர். எனவே ஒரு மனிதனின் உடலில் இருந்துவரும் அதிர்வுகள் அருகே இருக்கின்ற மனிதர்களைச் சென்றடையும். இதனாலேயே மாதவிடாய்க் காலங்களில் இருக்கின்ற பெண்களினுடைய மனநிலை அதிர்வுகள் ஆலயத்தில் வழிபாடு செய்கின்ற மற்றைய மனிதர்களின் வழிபாட்டைத் தடுக்கக் கூடியதாக இருப்பதனால், இக்காலங்களில் பெண்கள் ஆலயங்களைத் தவிர்த்துக் கொள்வார்கள். அத்துடன் சுகாதார வசதி குறைந்த அக்காலப்பகுதியில் சரியானமுறையில் தன்னை சுத்தமாக்கி வெளியில் செல்லக்கூடிய வசதி வாய்ப்புக்கள் அக்காலப் பெண்களிடம் இருந்ததில்லை. இதனாலேயே அப்பெண்கள், கோயிலுக்குச் செல்லக்கூடாது என்று சொல்லப்பட்டது. செல்லக்கூடாது என்பதை விட அப்பெண்கள் தவிர்த்துக் கொண்டார்கள் என்பதே பொருந்தும்.

**பிள்ளை பிறந்த வீட்டுத்தீட்டு:**

அற்புதமான பிஞ்சு உடல் இந்த பூமியில் வந்து பிறப்பெடுக்கின்றது. இந்த உலகமே அதனை வரவேற்கின்றது. பூமித்தாய் வாஞ்சையுடன் தாங்குகின்றாள். மருத்துவர்கள் தாதிகள் முகம் மலர வரவேற்கின்றார்கள். அக்குழந்தையின்

உடலை வருடும் இன்பமும் அக்குழந்தை முகம் பார்த்துச் சிரிக்கும் இன்பமும் கவலைகளெல்லாம் பறந்தோடச் செய்யும். ஆனால் அக்குழந்தையைக் கோயிலில் குடிகொண்டிருக்கும் ஆண்டவன் தன்னகம் வரவேற்பதில்லை. 30 நாட்கள் காக்க வைத்தே தன்னிடம் அழைப்பார். அதுவும் அக்குழந்தையில் பிடித்திருக்கும் துடக்குக் கழிய வேண்டும். அதுமட்டுமல்ல இரத்த உறவுகள் யாவரும் கோயிலுக்குத் தூரத்தில் நிற்கவேண்டும். ஏனென்றால், எல்லோருக்கும் பிடித்திருக்கின்றது அத்துடக்கு. இவ்வாறு சலித்துக் கொள்பவர்கள் இன்று நம்மத்தியில் இருக்கின்றார்கள்.

தாயின் சுத்தமின்மை இதற்கும் பொருந்தும். தாயையும் பிள்ளையையும் பிரித்துக் கோயிலுக்குக் கொண்டு போக முடியாது. தாய் உடனடியாக சரியான மனநிலைக்கு வருவதற்கும் எழுந்து நடமாடுவதற்கும் நாளாகும். இவற்றைவிட குழந்தைக்கு இலகுவில் நோய்க்கிருமிகள் தொற்றிக்கொள்ளும். இதனால் இப் பச்சிளம் குழந்தை நோய்க்கு ஆளாகலாம். ஆனால், காலப்போக்கில் மெல்ல மெல்ல தாய்ப்பாலிலிருந்து இக்குழந்தை நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற்றுக் கொள்ளும். எனவே இக்குழந்தை உலகத்தோடு தன்னை இணைத்துக்கொள்ள நாட்கள் எடுக்கும். இதனாலேயே வெளியில் குழந்தைகளைக் கொண்டு செல்வது தடைசெய்யப்பட்டது. வெளியிலிருந்து வீட்டிற்கு வருபவர்களும், வீட்டில் இருந்து வெளியில் செல்பவர்களும் ஆசையுடன் இக்குழந்தையைத் தூக்கி முத்தம் கொடுக்கும் போதும் வெளியில் இருந்து கொண்டு சேர்க்கும் நோய்க் கிருமிகள் இக்குழந்தையை வந்தடைவதுடன் இக்குழந்தைக்குப் பாதிப்பும் ஏற்படும். இந்தக் காரணத்தினாலேயே இவ்வீட்டில் இருப்பவர்களுக்கும் கட்டுப்பாடு விதித்து துடக்கு வீட்டுக்காரர் என்று பட்டமும் கொடுக்கப்படுகின்றது.

இதைவிட ஒருவிடயம் இருக்கிறது. ஒலியைக் கடத்துவதற்கு உதவும் குழந்தையின் செவிப்பறை மென்சவ்வு மிகவும் மென்மையாக இருக்கும். கோயிலுக்குக் குழந்தையைக் கொண்டு செல்லும்போது ஆலயங்களில் ஒலிக்கும் மணிச்சத்தங்கள், மேளவாத்தியங்கள் போன்றவற்றிலிருந்து வரும் பலத்த ஒலியலைகள் இக்குழந்தையின் செவிப்பறையைப் பழுதுபடுத்திவிடும். இக்காரணத்தினாலுமே கோயிலுக்கு குழந்தையைக் கொண்டுசெல்லும் வழக்கம் தடைப்படுத்தப்பட்டது.

இவ்வாறான காரணங்களினாலேயே அக்கால மக்கள் துடக்கு என்ற நாட்களைத் தடுப்பு நாட்களாகப் பயன்படுத்தினார்கள்.

**ஒரு வீட்டில் ஒருவர் இறந்தால், அவருடைய குடும்பத்தினர், இரத்த உறவினர்களுக்குத் துடக்கு.**

ஒருவர் ஒரு வீட்டில் இறந்துவிட்டால், அவ்வீட்டிலுள்ள அவருடைய குடும்பத்தாருக்கும். அவருடைய இரத்த உறவினர்களுக்கும் துடக்கு வந்து விடுவதாகவும் அவர்கள் கோயிலுக்குச் செல்லமுடியாது என்பதுவும் வழக்கமாக இருக்கின்றது. அந்த வீட்டிற்கு வருபவர்கள் யாவரும் அவ்வீட்டில் நீரருந்தக் கூடாது என்பதுவும் அவ்வீட்டிற்கு வந்து சென்றால், தலைமுழுக வேண்டும் என்பதுவும் நியதியாக இருந்தது. வெளிநாட்டில் இருந்தால் கூட உறவினர்கள் கோயிலுக்குச் செல்ல மாட்டார்கள். அவ் உறவினர்கள் வீட்டிற்குச் செல்பவர்கள் கூட குளித்து முழுகியே அடுத்த கருமங்களைச் செய்வார்கள். உறவுகள் எங்கிருந்தாலும் அன்பும் பாசமும் ஒன்றுதான். அருகாமையிருந்து பெறும் பாசத்தைப்போல் சேய்மையிலிருந்து நாளும் எண்ணி ஏங்கும் பாசமும் வலிமைமிக்கதே. சொந்தங்கள் மீளாப்பிரிவில் சென்றுவிட்டால், அத்துயரை ஈடுசெய்யவொண்ணாக் கவலையில் கலந்திருக்கும் சொந்தங்கள் வாடித்துயருறுவதும் இயற்கையே.

மனிதனின் உடலிலே சுரக்கப்படுகின்ற பெரமோன (Pheromone) என்னும் ஒரு சுரப்பானது மனிதனுடைய வியர்வை அல்லது அவருடைய தனிப்பட்ட நறுமணத்தை ஏற்படுத்தக்கூடிய தன்மையுள்ளது. இந்தத் திரவமே ஒருவருக்கொருவர் காதல் உணர்வு ஏற்படுவதற்கும் காம உணர்ச்சி ஏற்படு வதற்கும். காரணமாக அமைகின்றன. இத்திரவத்தை மூளையிலுள்ள அமிக்டாலா (Amigdala) உணர்ந்து கொள்ளும். இந்த அமிக்டாலாவானது மூளையின் உச்சியில் வலது இடது பக்கங்களில் அமைந்திருக்கின்றன. இது நாம் உணராமலேயே பெரமோனாவை ( Pheromone) அறிந்துகொள்ளும். பிரிவுத்துயரில் இருக்கும் ஒருவருடைய உடலிலே ஏற்படும் நறுமண மாற்றத்தை அருகே இருப்பவர்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் அமிக்டாலா தொழிற்படும். இதனால், இவர்களை நாடிச்செல்பவர்களின் உணர்வுகளிலும் சிந்தனையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

எனவேதான் அவ்வீட்டிற்குச் செல்பவர்களும் அவர்கள் வீட்டிற்குத் திரும்பியவுடன் குளித்து முழுகித் தத்தம் காரியங்களில் ஈடுபடுகின்றார்கள். குளிப்ப தன் காரணம் யாதெனில், நீரானது ஒலியைக் கடத்தவல்லது. அதிலிருக்கும் மூலக்கூறுகள் எண்ண அலைகளையும் கடத்தக்கூடியது. இறந்தவரின் சம்பந்தமுள்ள உறவுகளின் எண்ண அலைகளினால் பாதிப்புற்றவர்களின் எண்ணங்களை நீரலை கொண்டு நீக்குவார்கள். நீக்கும் சக்தியும் நீருக்கு

உண்டு. அதனாலேயே செப்புப் பாத்திரத்தில் நீர் எடுத்து மந்திரங்களை எமது சுவாமிமார் ஓதிக்கொடுக்கின்றார்கள். நீருக்குள்ள சக்தியே அது. அத்துடன் செப்புப் பாத்திரம் மின்னைக்கடத்தும் அல்லவா. நாம் நீரில் கூறும் சொற்கள் வலிமைமிக்கவை. எனவே தான் நீரால் தமக்குள்ளாய் நிரம்பியிருக்கும் கவலையலைகளைக் கழுவித் துடைக்கின்றார்கள்.

அடுத்து இந்தத் துடக்கு நீங்குவதற்கு 30 நாள்கள் கடக்கவேண்டும் என்னும் விடயத்திற்கு வருகின்றேன். எம்மவர்கள் சந்திரனின் வளர்ச்சி 14 நாட்கள் தேய்வு 14 நாட்கள் என்னும் 28 நாள் கணக்கையே எல்லாவற்றிற்கும் வைத்திருக்கின்றார்கள். அதனாலேயே அது 31 நாள்கள் ஆகியது. இதில் பொற்கொல்லர், பிராமணர் போன்றோர்க்கு 16 நாட்களில் துடக்குக் கழிப்பார்கள். இவர்கள் கோயில்களில் பூசை செய்பவர்கள். இது மனிதனால், காலம் காலமாகக் கொண்டுவரப்பட்ட வழக்கம். இவர்கள் ஒருநிலைப்படுத்தும் பயிற்சி மூலம் தாமாகவே தம்மைக் கட்டுப்படுத்தும் தன்மையைப் பெற்றிருப்பார்கள். இதனால் மிகக் குறுகிய காலப்பகுதியில் மீண்டும் வாழ்வியலுக்குள் தம்மை ஈடுபடுத்தும் தன்மை இவர்களுக்குள் இருக்கின்றது. இதனாலேயே இவர்கள் குறைந்த நாட்களில் துடக்கு நீங்குபவர்களாகக் கருதப்படுகின்றார்கள். தம்மைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் தமது மனநிலையில் உடனடித் திருத்தத்தைக் கொண்டுவர முடியாதவர்கள் எப்படி 16 நாட்களில் துடக்கு நீங்குபவர்களாகக் கருதமுடியும்.


இதைவிடுத்து துடக்கு என்பது அவரவர் உடல் எண்ணங்களின் தொழிற்பாடே என்பதைப் புரிந்துகொள்ளும் பக்குவம் எமக்கு இருந்துவிட்டாலே துடக்கு எம்மைவிட்டுத் தூரப் போய்விடும். புரியாத மந்திரங்களால் பலனளிக்காத கிரியைகளால் நாம் என்ன பலனைப் பெறப் போகின்றோம் என்று நாம் புரிந்து கொள்வதால் மட்டுமே நாம் பலனைப் பெற்றுக் கொள்வோம்.

*ஏனென்ற கேள்வி கேட்காது விட்டால்*
*மடையன் நீயென்று ஆக்கிடும் உலகு*
*ஆமென்று எதற்கும் தலையாட்டிவிட்டால்*
*தலையில் ஏனிந்தமூளை இடம்பிடிக்க வேண்டும்*

# நமக்கு நாமே எதிரி

*மூளைக்குள்ளே ஓர் உலகம்*
*உடலுக்குள்ளே ஓர் ஆலை*
*தோல் போர்த்திய தேகத்துள்ளே*
*தொடர்ந்து ஓடும் குருதியோட்டம்*
*உருவம் முழுதும் செல்கள் தொகுப்பு*
*உணர்ந்து பார்த்தால் உருவம் போலி*
*அழகாய்த் தோன்றும் உருவம் பொய்*
*அற்புத உடலின் உயிரோட்டம் மெய்*
*உடலே உயிரை நிதமும் காக்கும் - இதைப்*
*புரியா துடலை மனிதன்*
*உருக்குலைத்து சீரழிப்பான் உண்மை*

கருவினுள் உருவாகும் குழந்தை தேடும் உணவை கருத்துடன் தாயும் பகிர்ந்தளிப்பாள். எம்மைக் காக்கவே உடலும் தன்னைத் தயார்படுத்தும். உறுப்புக்களும் தேவைக்கேற்றாற் போல் உருவாக்கப்பட்டிருக்கும். செல்களினாலான உறுப்புக்களும் வெவ்வேறு விதமாகப் படைக்கப்பட்டிருக்கும்.




சுருங்கி விரியும் பகுதி மென்மையான செல்களாலும் இதயம் போன்ற பகுதிகள் கடுமையான செல்களாலும் ஆக்கப்பட்டிருக்கின்றன. உடல் முழுவதும் தன் ஆட்சியை மேற்கொள்ளும் செல்கள். கண்ணுக்குத் தெரியாது எம்மில் முழுவதுமாகக் காணப்படுகின்றன.


18


உடலில் ஓர் இடத்தில் காயம் ஏற்பட்டால். இரத்தமாய்க் கொட்டிக் கொண்டேயிருக்கும் காயம் நாட்செல்ல குருதிச் சிறுதட்டுக்களால் சுகமாகி மீண்டும் அப்பகுதி வழமை நிலைக்குத் திரும்புகின்றதே. அடிபட்ட இடத்தில் இறந்த செல்களுக்குப் பதிலாக வேறு செல்கள் பிரிவடைந்து உடனடியாக காயம் முழுவதையும் மூடிக்கொள்ளும். மூடிக்கொண்டதும் உடல், செல்களுக்கு பிரியும் வேலையை நிறுத்தும்படி உத்தரவிட செல்கள் கட்டளைக்குக் கட்டுப்பட்டு வேலையை நிறுத்தும் காயமும் மாறிவிடும். ஆட்டி வைப்பவனும் ஆடுபவனும் உடலுள் இருக்க நாமோ வெளியே மருத்துவம் தேடி ஆடிக் கொண்டிருக்கின்றோம். 75 முதல் 100 டிரில்லியன் செல்கள் எமது உடலுள் ஆட்சி செய்கின்றன. எமது செல்களில் கிட்டத்தட்ட 3000 விதமான புரோட்டீன்கள் உண்டு. இவை இரத்தத்தில் கலக்கக் கூடாது. அப்படிக் கலந்தால், இரத்தத்திலுள்ள புரோட்டீன்கள் சமிபாடடையாது. இந்நிலையில் செல்கள் தமக்குள் இருக்கும் புரோட்டீன் இரத்தத்தினுள் சேரவிடாது தற்கொலை செய்து கொள்ளும். ஆச்சரியமாக இருக்கின்றது அல்லவா. ஆனால் இதுவே உண்மை. தியாகத்தின் மூலம் செல்கள் எம்மைப் பாதுகாக்க நாம் செல்லக்கூடாத இடமெல்லாம் சென்று செல்களைச் சீரழிக்கின்றோம்.



மூக்கினுள் நுழைய எத்தனிக்கும் கிருமிகளை மணிக்கு 100 மைல் வேகத்துடன் உடல் வெளியகற்றும். இதன் மூலம் 100,000 கிருமிகள் உடலிலிருந்து வெளியேறும். ஆனால் நாமோ வெட்கப்பட்டு மூக்கை மூடுகின்றோம். ஆனால் தும்மலைத் தடுத்தால் உயிர் போகும் ஆபத்தும் உண்டு. அதனாலேயே ஒருவர் தும்மினால், 100 என்று தமிழரும் Gesundheit என்று ஜேர்மனியரும் God Bless you என்று ஆங்கிலேயரும் சொல்கின்றார்கள்.

பழுதடைந்த உணவுகளை நாம் உட்கொண்டுவிட்டால் உடலானது வாந்தியாக வெளியகற்றிவிடும். தேவையான உணவுகளை நாம் உட்கொண்டால் அதை சத்தாக மாற்றி தேவையான உடலுறுப்புக்களுக்கு அனுப்பும். இக்கரிசனை எம்முடலுக்கிருக்க நாமோ எதிலும் அக்கறையின்றி சாக்கடையினுள் அழுக்கைப் போடுவதுபோல்கண்டதையும் உண்டு உடலைச் சீரழித்துக் கொண்டிருக்கின்றோம்.








பேரிடிபோல் சத்தம் வரவே எம் கைகள் எமையறியாது காதுகளை ஏன் இறுகப் பொத்துகின்றன. காதுவழி செல்லும் ஒலி செவிப்பறையைத் தாக்குவதுடன் அதனூடு சென்று உடலுக்கும் ஊறு விளைவிக்கின்றது. அத்துடன் இதயநரம்புகள் சார்ந்த இதயப்பாதிப்பும் ஏற்படுகின்றது. ஒரே ஒரு தடவை எட்டுமணி நேரத்துக்கு மிகையான சத்தம் கூடிய சூழ்நிலையில் இருந்தால், இரத்த அழுத்தமானது அழுத்தத்தில் ஐந்து முதல் பத்து புள்ளிகள் கணிசமான ஏற்றத்துடன் அதிர்வு ஏற்படும். அத்துடன் நரம்புகள் இறுகுவதால் இரத்த அழுத்தமும் கூடுகின்றது. இதனால், இதயக்கோளாறுகள் ஏற்படுகின்றன. ஆனால், சிந்திக்கின்றோமா? களியாட்டங்கள், வைபவங்கள், கொண்டாட்டங்கள் அனைத்திலும் காது கிழிய ஒலிபெருக்கிகளை ஒலிக்கவிட்டு இதுவே மகிழ்ச்சி என்று ஆரவாரம் செய்கின்றோம்.

எம்மைச் சுற்றி, எம்மை நோக்கி வரத்துடிக்கும் நோய்க்கிருமிகள் உடலினுள் புகுந்துவிட்டால் உடலினுள்ளே வாள், கத்தி ஏந்தி போருக்கு நிற்கும் இரத்த அணுக்கள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். எம்மைக் காக்க எமக்குள்ளே ஓர் நண்பன். இரத்த அணுக்களினுள் வெண்குருதி சிறுதுணிக்கையே இத்தொழிலை எமக்கடிமையாய்ச் செய்கின்றது. முதலில் உள்வராமல் தடுக்கும். வந்துவிட்டால் உடலைத் தாக்காமல் பாதுகாக்கும். அது ஏந்தும் வாள், கத்தி யாதென்று தெரியுமா? முதலில் "பகோசைட்". இவை பக்டீரியாவை முதலில் இரத்தத்தால் பக்குவமாக்கும். பின் அழிக்கும். இரத்தத்தால் பக்குவமாக்கும் பொருள் யாதென்று தெரியுமா? அதுவே ஆப்ஸனின். பார்த்துப் பார்த்து பணி செய்ய பக்குவமாய் உடல் எமக்குள் தொழிலாளியாய் இருக்க நாமோ சூழலைக் கெடுக்கின்றோம். ஆலைகள் அமைக்கின்றோம். இயந்திர மயத்தில் இறப்பதற்கு வழிதேடுகின்றோம்.



எங்கிருந்தோ ஆபத்து வரும்போது முதலில் நம் தலையைத் தானே இரு கரங்களினாலும் பொத்திப் பிடிக்கின்றோம். எம்மை அறியாமலே அதன் அவசியத்தை நாம் உணர்கின்றோமா இல்லையா?

மூளையே நமது தலைமையகம். அதன் ஆட்சியில்தான் அனைத்தும் அடக்கம். மூளையில் 100 பில்லியன் நரம்பணுக்கள் உள்ளன. இரத்த ஓட்டம் தேவையான அளவு

ஓட்சிசனை மூளைக்குக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் மூளையும் தொழிற்பட முடியும். நாமென்ன செய்கின்றோம். இரத்தோட்டம் அதிகரிக்கச் செய்யும் உடற்பயிற்சி போன்றவற்றைச் செய்கின்றோமா? கணினி முன் இருந்து காலத்தைக் கழிக்கின்றோம். தொலைக்காட்சி நாடகங்களில் மூழ்கி சமுதாயத்தைச் சீரழிக்கின்றோம்.

மூளையின் அவசியம் கருதி ஒரு பாதுகாப்புக் கவசத்தினுள்ளேயே மூளை அமைக்கப்பட்டிருக்கும். இக்கவசத்திற்கும் மூளைக்குமிடையே ஒரு நீர்த் தன்மை (Cerebrospinal Fluid) பரவி இருக்கும். இது ஓடுகின்ற போதும் நடக்கின்ற போதும் அதிர்வு ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை தொழிற்படும் போது ஏற்படுகின்ற இரசாயனக்கழிவுகளை இந்த Cerebrospinal Fluid உறக்கத்தின்போது மூளைச் செல்களினூடாக ஊடுருவிப்போய் வெளியகற்றுகின்றது. பிற உறுப்புக்களுக்காகத் தொழிற்படும் மூளை தனக்காக ஓய்வெடுத்து தன்னிலுள்ள நச்சுத் தன்மையை வெளியகற்றும் நேரம் உறக்கமல்லவா? ஆனால், நாம் என்ன செய்கின்றோம். இரவிரவாகக் கண்விழித்து தூக்கத்தைக் கெடுத்து Chat பண்ணுகின்றோம். Party கொண்டாட்டங்கள், தொலைக்காட்சி என்று உறங்கும் நேரத்தைத் தொலைக்கின்றோம்.

ஏதும் பறந்தாலோ, கையை யாரும் முன்னே அசைத்தாலோ, மனதைக் கெடுக்கும் காட்சி ஏதும் கண்டாலோ முதலில் மூடுவது எம் கண் இமைகளே. கண்ணையும் கருத்தையும் பாதுகாக்க கண் இமை கைகொடுக்க கண்ணீர் துணையாக இருக்க, நாமென்னவோ பார்க்கக் கூடாதவற்றைப் பார்த்து கணினி ஒலியின் பாதிப்பை உணர்ந்தும் அதற்கேற்ப சொல்லப்பட்ட தூரத்தில் கணினியை வைத்து வாசிக்காது, கண் இமைத்து வாசிக்காது, கண்களை காயவைத்து கண்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றோம்.

செய்வதெல்லாம் செய்துவிட்டு நேர்த்திக்கடனென்றும் நேர்மையற்ற மருத்துவரென்று, போதாத காலமென்றும், பொல்லாத உலகென்றும் அடுத்த வரைக் குறைகூறி அழிவது நாமே.

இப்போது சொல்லுங்கள் எமக்கு யார் எதிரி? நமக்கு நாம் தானே எதிரி.

உதவி
- http://ta.wikipedia.org/.
- http://uyirnutpam.blogspot.com

# பாதணியை மதிப்பதா? மிதிப்பதா?

*பாதணி என்ன கேவலமா? அதை*
*வெளியே ஒதுக்குவதென்ன தர்மமா?*
*காலணி திருத்தும் மனிதனையும்*
*கேவலமாய் எண்ணல் வேதமா?*
*அர்த்தம் புரிந்தும் புரியாதுலகில் வாழ்கின்றோம்*
*அதன் பயனை மட்டுமே பெறுகின்றோம்*
*வேடிக்கை உலகதனில் மனிதன்*
*விவஸ்தையின்றி வாழ்கின்றான்*
*விளக்கம் இன்றியே உலகில்*
*பண்பாடதனைப் பேணுகிறான்*
*சிந்தனை புரியும் மனிதனையும்*
*நிந்தனை செய்து கேலி பண்ணுகிறான்.*

காலணி என்றும் செருப்பு என்றும் சப்பாத்து என்றும் பல பெயர்களில் அழைக்கப்படும் பாதணி பற்றிப் பேசப்படுவதே இவ் ஆக்கம். எமது பாதங்கள் எமது உடலைத் தாங்கி நின்று நிமிர்ந்து நிற்க உதவுகின்றன. அத்தனை தசை நார்களும் பாதங்களில் படிந்திருக்கின்றன. மனிதனின் ஆதாரசக்தி பாதங்களில் அமைந்திருக்கின்றது. மனிதனின் இரண்டு பாதங்களும் இரண்டு வைத்தியர்கள் போல் அமைந்திருக்கின்றன. பாதங்கள் இன்றி மனிதன் நிற்கமுடியாது நடக்கமுடியாது போகின்றான். இந்தப் பாதங்கள் நோய் நொடியின்றி வாழவும், குளிர் சூட்டிலிருந்து எமது பாதங்களைக்காக்கவும், அசுத்தங்கள் அதை எட்டாமல் பேணவும் பாதுகாப்புக்காக அணிவதே பாதணி என்பதை யாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். எம்மைப் பாதுகாக்கின்ற பாதணியை மதிப்பதா? மிதிப்பதா?

19

கொதிக்கும் வெயிலில் நாம் நடக்க வெப்பத்தைத் தானேற்று சூட்டிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றது. பூச்சி புழுக்கள் எமைத் தீண்டாது தடுக்கின்றது. சேற்றிலே நாம் நடக்க சேற்றைத் தான் பூசி எமது பாதங்களைத் துப்பரவாக வைத்திருக்கின்றது. நோய்க்கிருமிகள் எம்மை வந்தடையாதிருக்க பாதங்களைப் பாதுகாத்து உடலைப் பேணுகின்றது. இவ்வாறு வெளி அழுக்குகளைத் தானேற்று எமது பாதங்களைச் சுத்தமாகவே வைத்திருக்கும் பாதணியை எமது உடலும் வீட்டின் உள்புறமும் சுத்தமாய் இருக்க வெளியே கழற்றி வைத்துவிட்டு வீட்டினுள் நுழைகின்றோம். இவ்வாறு எமக்காகச் சேவை புரிகின்ற பாதணியைக் கேவலமாகக் கருதும் பழக்கம் மனித இனத்திடம் இருக்கின்றது. தமக்குதவுவாரை ஏறெடுத்தும் நோக்காத மனிதர் எம்மோடே பவனிவரும் பாதணியை மாத்திரம் எங்கே கண்டுகொள்ளப் போகின்றார்.

பாதணி பாதுகாப்புக் கவசமே தவிர மரியாதையற்ற பொருள் அல்ல என்பது யாவரும் அறிந்த விடயமே. இருந்தும் கோயிலின் வெளியே கழற்றி வைப்பது சுத்தம் கருதியே என்பதைப் புரிந்துகொள்வது ஒன்றும் பெரிய விடயம் அல்ல. ஆலயத்தினுள் பக்தர்கள் நிலத்தில் அமர்ந்திருப்பார்கள். தியானம் செய்வார்கள். அங்கப்பிரதட்சணை செய்வார்கள். இவ்வாறான நடை முறைகள் நடைபெறும் இடம் சுத்தமாக இருக்கவேண்டும் என்ற காரணத்தினாலேயே பாதணி கோயிலினுள் அணிவதில்லை. கடவுளுக்கு மரியாதை கொடுப்பதற்காக கழற்றுவதாகத் தவறான எண்ணமும் நம் மத்தியில் இருக்கின்றது.

இதைவிட பூப்புனித நீராட்டுவிழா என்பது ஒரு மதச்சடங்கல்ல. பூப்படைந்த பெண்ணில் பிடித்திருப்பதாகக் கருதும் துடக்கு நீங்கவேண்டும் என்ற கருத்தில் இவ்விழா நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. அப்பெண் உண்ட பொருள்கள் எல்லாவற்றையும் ஆரத்தி மூலம் கண்ணூறு கழித்துவிடுவதான சம்பிரதாயம் எம்மத்தியில் இருக்கின்றது. சுமங்கலிப் பெண்கள் இருவர் நேருக்கு நேராக நின்று ஒவ்வொரு தட்டங்களையும் மூன்று முறை வலது தோளால் உயர்த்தி ஆரத்தி எடுத்து தலைக்கு மேல் மூன்று முறை சுற்றி பின் பக்கமாகத் தட்டைக் கொடுத்து கண்ணூறு கழிப்பார்கள். எந்தவிதமான மத சம்பந்தமான சடங்குகளும் இங்கு இல்லை. புதிய புதிய முறைகள் அவரவர் பண வசதிக்கேற்ப நடை முறைப்படுத்தப்படுகின்றன. எமது பெண் வயதுக்கு வந்துவிட்டாள். ஆண் பிள்ளைகளைப் பெற்றவர்களே உங்கள் கவனத்தில் கொள்ளுங்கள் என்பதை நாள் குறித்து உறவினர் நண்பர்களை அழைத்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுவதே உண்மையான அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. ஆனால், இங்கு என்ன பாதணி சமாச்சாரம் வருகின்றது என்று எண்ணுகின்றீர்களா?

அழகழகாக அலங்கரிக்கப்பட்ட மண்டபம். அதனுள் அழகழகான பாதணிகள் அணிந்து மண்டபத்தில் பெண்கள் வலம் வருவார்கள். ஆடைகளுக்குக் கொடுக்கும் அவதானத்தை பாதணிகளுக்கும் கொடுப்பார்கள். இம்மண்ட பத்தில் விளக்குகள், ஆரத்தித்தட்டு பூத்தட்டு ஏந்திவரும் பெண்கள் உட்பட அழுக்காலணியில் வரிசையாக வருவார்கள். விளக்குகளுடன் கூடவே வரும் காலணி மேடை வந்தவுடன் கழற்றிவிட்டுப் போகும்படி பணிக்கப்படும். ஆனால் பருவமடைந்த பெண்ணோ பாதணியுடனே ஏறிக் காட்சியளிப்பார். ஆரத்தி எடுக்கும் பெண்கள் காலணியைக் கழற்றிவிட்டே ஆரத்தி எடுக்க வேண்டும். மேடையிலோ எந்தவித கும்பங்களோ வைக்கப் பட்டிருப்பதில்லை. ஆனால், வாசலில் வைக்கப்பட்டிருக்கும் கும்பங்களை பாதணியுடனேயே தரிசித்து திருநீறு குங்குமம் இட்டு வருவார்கள். விளக்குக்கு மரியாதை என்றால், விளக்குத் தூக்கிவரும் பெண் பிள்ளைகள் பாதணி அணிந்திருத்தல் என்ன நியாயம். புரியவில்லை, புரியவில்லை. புரியாமல் தானோ எல்லாம் நடைபெறுகின்றது.

மேடையை அலங்கரிப்பவர்கள் பாதணி அணிந்த பாதங்களுடனேயே மேடை அலங்காரங்கள் செய்வார்கள். ஆரத்தி எடுப்பவர்கள் பாதணிகளைக் கழற்றி வருகின்றபோது மேடை அலங்காரஞ் செய்தவர்கள். மேடை விட்டுச் செல்லும் அசுத்தங்களை பாதங்களில் ஏற்றுக்கொள்ளவேண்டும். பாதணிகள் பாதுகாத்து வந்த பாதங்கள் பழுதடைய இங்கு இடம் அளிக்கப்படுகின்றது. ஏனென்று கேட்டால் அது அப்படித்தான் என்னும் பதிலே விளக்கமாகப்படுகின்றது. காலம் காலமாக வரும் நடைமுறை என்னும் விளக்கத்தை மனம் ஏற்றுக்கொள்ள முடியாது போகின்றது. இது வடிவேல் பாசையில் சின்னப்பிள்ளைத் தனமாகவே படுகின்றது. காலம் காலமாக வந்த நடைமுறைகளா இப்போது பூப்புனித நீராட்டு விழாக்களில் நடைபெறுகின்றன?

காரியம் ஆற்றுகையில் காரணம் புரியவேண்டும். காரணம் புரியாது காரியத்தில் ஈடுபடல் மடைமைத்தனமாய்க் கருதப்படுகின்றது. ஆடை அலங்காரங்கள் அழகல்ல. மனஅறியாமை நீக்கும் அழகே அழகு. தெளிவுபட்ட மனதில் சிந்தனை விரிவுபடும். நான்கு பக்கப் பார்வையில் உலகை அளக்கும் ஆற்றல் புலப்படும். அது அப்படித்தான் எனில் அது எப்படி? என்று அறியும் பக்குவம் பெற்று, மனிதன் என்ற அந்தஸ்திற்கு உயிர் பெற்ற, உடல் மாக்கள் என்ற இடத்தில் இருந்து மக்கள் என்ற ஸ்தானத்திற்கு உயரும். காரணம் கேட்பவன் மடையன் என்றால், இவ்வுலகு கல் மண்ணில் இருந்து நாடுகள் என்ற அந்தஸ்திற்கு மாற்றம் பெற்றிருக்க மாட்டாது அல்லவா!

# புரட்டாதிச் சனி விரதம்

இவ்வருடம் புரட்டாதி மாதம் 24 ஆம் திகதி தொடங்கி புரட்டாதிச் சனி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. கன்னிகாமாதம் என்று சொல்லப்படுகின்ற புரட்டாதி மாதத்திலே கன்னிகா விருட்சம் பரவியிருக்கின்ற தினம் புரட்டாதி மாத முதற்சனியாகும். இந்நாளிலேயே சூரியனுக்கும் அவர் மனைவி சாயாதேவிக்கும் மகனாகச் சனீஸ்வரன் தோன்றினார் என்பது ஐதீகம்.

இச்சனிக்கிரகம் 9 கிரகங்களில் ஒன்று. இது சூரிய கிரகத்திலிருந்து மிக எட்ட இருக்கின்ற ஒரு கிரகமாகும். தனக்கு மகன் பிறந்திருக்கின்ற செய்திகேட்டு சூரியபகவான் மகனைப் பார்க்க ஆவலுடன் சென்றார். மகனைக் கண்ட மாத்திரத்தில் அவர் குஷ்டரோகியானார். இதனால் கோபம் கொண்ட சூரியனும் மகனாகிய சனீஸ்வரனைத் தூக்கி வீசினார். அவரும் தூரத்திலே முடங்கிவிட்டார். அதாவது முடவனாகி விட்டாராம். வேடிக்கையாக இருக்கின்றதல்லவா? இதுவும் புராணங்கள் கூறுகின்ற கதைதான். சூரியனுடைய தள்ளுவிசையினால் வீசப்பட்டிருக்கும் ஒரு கிரகமே சனிக்கிரகமாகும். சூரியனுக்கு அருகே எதுவுமே செல்லமுடியாது. அருகே சென்றால், செல்பவை தூக்கி வீசப்படும். ஒரு எல்லை தாண்டிப் போனால், உள்ளே இழுத்துவிடும். உறிஞ்சி இழுத்து வீசி எறியப்பட்ட ஒரு கிரகமே சனிக்கிரகமாக இருக்கலாம். இதற்கு இப்படி ஒரு கட்டுக்கதையா?

சனீஸ்வரன் கிரகங்களிலே பாபக்கிரகமாகக் கருதப்படு கின்றது. அக்கிரகத்திலிருந்து வீசப்படுகின்ற தீய கதிர்வீச்சானது, உடலிலே பல தீய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இதனாலேயே பயபக்தியுடன் சனிக்கிரகத்தை சனீஸ்வரன் என்று அழைக்கின்றோம். இக்கதிர்கள் மூளைநரம்புகளைப் பாதிக்கின்றது. எண்ணங்களை மாற்றிவிடுகின்றது.

20

இதனாலேயே சனிக் கிழமைகளில் (எள்எண்ணெய்) நல்லெண்ணெய் தேய்த்து சூரிய உதயத்தில் அரைமணி நேரம் நின்று குளிக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. ஜாதகத்தில் சந்திரராசிக்கு 1,2,5,8,12 ஆகிய இடங்களில் சனிபகவான் சஞ்சாரம் செய்கின்ற போது அந்தச் சனி பகவானுடைய கதிர்வீச்சு அதிகரிக்கும். இதனால், எள்எண்ணெயில் ஊறிய உடம்பு இக்கதிர்களைத் தாக்கவிடாது.

கிரகதோஷம் ஒருவர் வாழ்நாளிலேயே ஒவ்வொரு 30 வருடத்திற்கும் ஒரு தடவை வருமாம். இத் தோஷம் உள்ளவர்களுக்கு புத்திரபாக்கியம் குறைவு, மிருகபயம், மரணபயம், அதிகசெலவு, பணநஷ்டம், தேகசுகம் குறைவு, வீண்சச்சரவு போன்றவை நிகழும் எனப் பயம் காட்டப்பட்டுவிட்டது. மக்கள் மனதில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த இவ்வாறு கூறப்படுகின்றது. மனமே எல்லாவற்றிற்கும் காரணமானது. கிரகக்கதிர்களினால், உடலும் அதனோடு இணைந்த மனமும் பாதிக்கப்படுபவர்களுக்கு மேற்கூறியவை நிகழச் சந்தர்ப்பம் இருக்கின்றது. கிரகதோஷம் உள்ளவர்கள் சனீஸ்வரனுக்குரிய தானியமாகிய எள்ளைச் சிறிதளவில் எடுத்து, சனீஸ்வரனுக்குரிய நிறமாகிய கறுப்புத் துணியில் ஒரு பொட்டலமாகக் கட்டி, ஒரு மண்சுட்டியில் நல்லெண்ணை விட்டு அதற்குள் இந்த பொட்டலத்தை வைத்து எரித்தல் வேண்டும். எள் உணவை சனீஸ்வரன் வாகனமாகிய காகத்திற்குக் கொடுக்க வேண்டும். சனீஸ்வரனின் நிறம் கறுப்பாகக் கருதப்படுவதால், கறுப்புத்துணியில் கட்டப்பட வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. இக்காலங்களில் விரதம் இருந்தால் சனீஸ்வரன் மகிழ்ச்சியடைந்து இப்பாதகங்களைக் குறைப்பார் என்றும் கருதப்படுகின்றது. பெரியவர்கள் பால், பழம் போன்றவற்றை உணவாக உட்கொள்ளலாம் என்றும் குழந்தை நோயாளிகள் இட்லி முதலிய எளிய உணவை உட்கொள்ளலாம் என்றும் சொல்கின்றார்கள். இட்லி எனப்படுவது எளிமையான உணவு என்பது கேள்விக் குறி.

இவ்விரதம் விஷ்ணு கோயிலில் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஏனென்றால், புரட்டாதி மாதத்திலே சூரியன் கன்னிராசியில் சஞ்சரிப்பார். கன்னிராசியானது, புதனின் ஆட்சியின் உச்சவீடு. மகாவிஷ்ணுவே புதனாக அவதரித்தவர். எனவே விஷ்ணு கோயிலில் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது என்று கூறுவர். ஆனால் சிவன் கோயிலிலும் இவ்விரதம் அனுஷ்டிக்கலாம். ஏனென்றால், சனீஸ்வரன் தனக்குக் கிரகபதவி கிடைக்க வேண்டுமென்று காசிக்குச் சென்று காசிவிஸ்வநாதரை வழிபட்டுப் பதவியைப் பெற்றதன் காரணத்தினால் சிவன் கோயில்களில் இவரை வழிபடுவது சிறந்தது என்றும் கூறப்படுகின்றது. விஷ்ணு ஆதிமூலம். இவரே அவதாரங்கள் எடுக்கக் கூடியவர். சூரியன் உட்பட

கிரகங்கள் எல்லாம் தோன்றுவதற்கு முதல் இருந்த நிலையே ஆதிமூலநிலை. இந்தநிலையையே விஷ்ணுவாக உருவகித்திருக்கின்றார்கள். அவதாரம் என்றால், ஆதியிலிருந்த இரசாயன மூலக்கூறுகள் கீழே இறங்குதல். எனவே விஷ்ணு நிலையே அவதாரம் எடுக்கக்கூடிய நிலையாகக் கருதப்படுகின்றது. இந்தப் பிரபஞ்சமானது சிவனாக உருவகிக்கப்பட்டிருக்கின்றது என்பதை எனது திருநீலகண்டர் என்னும் கட்டுரையில் வாசித்திருப்பீர்கள். எனவே இந்தப் பிரபஞ்சமாகிய சிவன் கோயிலிலும் சனிக்கிரகம் இருக்கலாம் ஆதிமூலமாகிய விஷ்ணு கோயிலிலும் சனிக்கிரகம் இருக்கலாம் அல்லவா.

சனிக்கிரகத்திலிருந்து வருகின்ற கதிர்கள் உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத் துமாயிருந்ததால், எள்எண்ணெயை உடலிற்குப் பூசுகின்றோம். அது ஏற்றுக் கொள்ளக்கூடியது. ஆனால், அதை எரிப்பதன் அவசியம் தான் என்ன? என்ற வினா எழலாம். எள்ளானது எள்எண்ணெயில் எரிகின்றபோது அதன் தன்மை ஆவியாக வெளிவருகின்றதல்லவா? இதனை எமது மூளையிலுள்ள அமிக்டாலா உணர்ந்து கொள்வதுடன், அதற்கேற்பத் தன்னுடலிலே மாற்றத்தை ஏற்படுத்து கின்றது.

புரட்டாதி மாதத்திலே குளிர்காலம் ஆரம்பித்துவிடுகின்றது. சூரியவெளிச்சம் குறைந்துவிடுகின்றது. பகல் குறைந்து இரவுப்பகுதி அதிகரித்தும் காணப் படுகின்றது. இதனால் தாவரங்கள் பச்சையம் தயாரிப்பது குறைந்து விடுகின்றது. ஒட்சிசனை வெளியிடுவது குறைகின்றது. எள் உணவிலே Arginin என்று சொல்லப்படுகின்ற அமினோவமிலம் இருக்கின்றது. இந்த அமினோவமிலம் சுவாசிக்கப்படுகின்ற ஒட்சிசனுடன் இணைந்து நைத்திரிக்கமிலத்தை உரு வாக்குகின்றது. இந்த நைத்ரிக் அமிலம் அல்லது நைத்திரிக் மோனோ ஒக்சைட் இரத்தக்குழாய்களை விரிவடையச் செய்கின்றது. இரத்தக் குழாய்கள் விரிவடையும்போது உடலுக்குக் கொண்டு செல்லப்படும் ஒட்சிசனின் அளவும் அதிகரிக்கின்றது. இதனால் இக்காலப்பகுதியில் ஒட்சிசனின் அளவு உடல் உறுப்புக்களுக்குச் சென்றடைய எள் உணவு உதவுகின்றது. இதைவிட இந்த எள் உணவானது இரத்தக்குழாய்களின் சுவர்களில் காணப்படுகின்ற மெல்லிய சுவர் போன்றிருக்கும் பகுதியையும் வலுவடையச் செய்கின்றது. எனவே எள் உணவு உண்பது இக்காலப்பகுதியில் மிகவும் அவசியப்படுகின்றது.

எனவே காரணமில்லாமல் இவை ஏற்படுத்தப்படவில்லை என்பது இவற்றின் மூலம் தெளிவாக்கப்படும் போது விரதம் காப்பாளரும் விளக்கம் பெறுவர். எமது இளைய சந்ததியினரும் இவைபற்றிப் புரிந்து கொள்வதுடன் பிறருக்கும் புரியச் செய்வர்.

# வணக்கம் செலுத்துதல்

சந்திக்கும் இருவரும், நம் இருவர் மனங்களும் சந்திக்கட்டும் என்னும் கருத்துடன் இரண்டு கரங்களையும் நெஞ்சின் முன்வைத்து வணங்குகின்றனர். ஐரோப்பியர்கள் இருவர் கரங்களையும் ஒன்றிணைத்துக் குலுக்கி வணக்கத்தைத் தெரிவிப்பார்கள். இஸ்லாமியர்கள் இருவரும் அணைத்து இரு இதயங்களையும் தொட்டுத் தொட்டு வணக்கம் செலுத்துவார்கள். இவ்வாறு ஒவ்வொரு இனத்தவரும் ஒவ்வொரு விதமாகத் தம் மனங்கள் ஒன்றிணைய வணக்கத்தைச் செலுத்துவார்கள்.

தமிழர்கள் வணக்கம் செலுத்தும் முறைக்குப் பல விளக்கங்கள் கற்பிக்கப்படுகின்றன. தலை தாழ்த்தி வணங்கும் போது அகங்காரம் குறையும், அன்பும் பணிவும் கலந்த நட்பை நளி னமாக நேர்த்தியாகக் கூறமுடியும். காணும் மனிதர்களிடம் காணும் தெய்வீகத் தன்மையை உணர்த்தும் கொள்கையை கண்மூடி வணங்குதல் குறிக்கும்.

தமிழர்கள் பெற்றோர்கள், பெரியோர்கள், ஆசிரியர்கள் போன்றோரைக் காலில் விழுந்து வணங்குதல் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். பெரியோர்களின் வயது, விவேகம், பெருந் தன்மை, தெய்வீகத் தன்மை ஆகியவற்றை நாம் மதிக்கின்றோம் என்பதை பாதங்களில் விழுந்து வணங்குவது உணர்த்துகின்றது.

- இரு கரங்களையும் குவித்து தலைக்கு மேலே உயர்த்தி கடவுளை வணங்க வேண்டும்.
- தந்தையை உதடுகளுக்கு முன்னே கைகளைக் குவித்து வணங்குகின்றோம்.

21

- வயிற்றுக்கு நேரே கை வைத்து வயிற்றை அணைத்தவாறு தாயை வணங்குகின்றோம்.
- எம்மை விட வயதில் குறைந்த சிறியவர்களை இதயத்தில் கை வைத்து வணங்குகின்றோம்.
- மார்புக்கு நேரே கை வைத்து அறிவால் உயர்ந்த ஆன்றோர்களை வணங்க வேண்டும்.
- நெற்றிக்கு நேரே கைவைத்து ஆசிரியர்களை வணங்க வேண்டும்.

என வணக்க முறைகளை எம் முன்னோர் வகுத்து வைத்திருக்கின்றனர். அதன்படி இருவர் சந்திக்கும்போது வணக்கம் செலுத்தும் பண்பை வளர்த்துக் கொள்ளல் அவசியம்.

1. *வாழ்க்கையை பொறுப்புணர்ச்சியுடனும் பொறுமையுடனும் வாழவேண்டும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.*
2. *பயிற்சி மூலமே ஒவ்வொருவரும் தமது திறைமயைக் கொண்டுவர முடியும். எமக்குக் கிடைக்காது என்று மனதில் நினைத்துவிட்டால். நிச்சயம் கிடைக்காது. கிடைக்கும் என்று முயற்சி செய்தால், இதைவிடச் சிறப்பாகக் கிடைக்கும்.*
3. *குழந்தை என்பது ஒரு பெண் என்ற உறவை தாய் என்ற அந்தஸ்துக்கு உயர்த்துகின்ற உறவு. எப்படி என்று எத்துரைக்க முடியாத தாய்ப்பாசம் என்ற உணர்வைத் தாய்க்கு ஊட்டும் உறவு.*
4. *ஒருவருக்கு நல்லவராகத் தெரிபவர் வேறு ஒருவருக்கு பொல்லாதவராகத் தெரிவது இயற்கை.*

# விளக்கின் தத்துவமும் விளக்கேற்றலும்

இருளான இடங்கள், பொருள்கள் எல்லாவற்றையும் ஒளியானது விளங்கச் செய்கின்றது. எனவே இருள் விலகி ஒளி விளங்க ஏற்றப்படும் விளக்கு எரியும் போது ஆன்மீக அறிவு ஒளிர எதிர்மறை மனப்பாங்கு நீங்கும் என ஆன்மீகம் கூறுகின்றது. மேல்நோக்கித் தீபம் எரிகின்ற போது எம்முடைய எண்ணங்கள் உயர்வு நிலைக்குச் செலுத்தப்படும்.

அறிவால் பலருக்கு அறிவைக் கொடுக்கலாம். அறிவு எமக்குள் தோன்ற அறியாமையாகிய இருள் எம்மைவிட்டு நீங்கும். அறிவு, எண்ணம், செயல்களுக்குச் சாட்சியாக தீபம் ஏற்றுகின்றோம். அன்பு, மனஉறுதி, சகிப்புத்தன்மை, நிதானம், சமயோசிதபுத்தி இந்த 5 தத்துவங்களைப் புரிந்துகொண்டு தானும் தன்னைச் சார்ந்த குடும்பத்தையும் விளங்கச் செய்யவேண்டும் என்பதற்காகவே திருமணமாகி புகுந்த வீட்டிற்குள் புகும் மருமகளை விளக்கேற்றும்படிச் சொல்கின்றார்கள்.

விழாக்கள் ஆரம்பிக்கும் முன் மங்கள விளக்கேற்றல் நிகழ்வு நடைபெறும். நடைபெறப்போகின்ற விழா ஒளிமயமாக அமைய அத்தாட்சியாக நன்மக்களை அழைத்து விளக்கேற்றும்படி அழைப்பார்கள். இதைவிட எவ்வித ஆன்மீக காரணங்களும் விளக்கேற்றலுக்குக் காரணமாகாது.

22

## எழுத்தாளன்

எண்ணங்களை வண்ணங்களாய் வடிவமைத்து - தன்
எண்ணம் போல் எடுத்தாளும் வல்லமையாளன்.
தட்டச்சுத் தூரிகையால் கணினித் திரையிலே
கற்பனை ஓவியம் வரையும் கலைஞன் - இவன்
எழுத்துக்கள் பொய்யை மெய்யாக்கும்
மெய்யைப் பொய்யாக்கும்
சத்தியத்தைச் சாகடிக்கும், வாழ வைக்கும்
சம்பவத்தைச் சாக்கடையாக்கும், சரித்திரமாக்கும்

அவன் பேனாக்கு மையூட்ட முடியும்
மெய்யூட்ட முடியும், பொய் ஊட்டவும் முடியும்.
கற்பனையைப் படமாக்குவான்
காட்சியைப் பிறர் மனச்சிறையில் பதிப்பான்.
உள்ளச் சிறையில் உறைவோரை - தன்
சொல்லின் சுவையால் சொர்க்க வைப்பான்.
அவன் வரிகளுக்கு வாளும் தோற்றுப் போம்
தேன் சுவையும் அற்றுப் போம்.

தான் சேறு பூச நினைப்போரைச்
சாக்கடையுள் வீழ்த்தி அழகு பார்ப்பான்.
தான் வேறுபடுத்த நினைப்போரை
அரியணை ஏற்றி அரசாள வைப்பான்.
பணம் தேடி பாசம் இழப்போர் மத்தியிலே
புகழ் தேடிப் பொழுதிழக்கும் செயல்வீரன்.
காலத்தை வென்று வாழும் சரித்திரநாயகன் - அவன்
தூங்கினால் சரித்திரம் தொலைந்துவிடும்.

# சிந்தனையின் தேனூற்று

# 16 வயதுக்கு மேற்பட்டோர் கல்வியும் பெற்றோர் தலையீடும்

*அறிவுக் கண்ணைத் திறந்திடும்*
*விரிவாய் உலகைக் காட்டிடும்*
*வித்தியார்த்திகள் ஆகவும்*
*விஷயார்த்திகள் ஆகவும்*
*வாழவழிகாட்டும் கல்வி*

அணுவைப் பகுப்பாய்ந்த விஞ்ஞானிகளிலிருந்து உளத்தைப் பகுத்தாயும் உளவியலாளர் வரை இளையோர் கல்வித் தேர்வு அவர்கள் கையிலேயே ஒப்படைக்கப்படல் வேண்டும் என்று கூறுகின்றார்கள். கற்றல் ஒருபுறம் கற்பித்தல் ஒருபுறம் இருக்க இடையில் பெற்றோர் பிள்ளைகளின் கல்வியில் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டியது அவசியமில்லை. பிள்ளையைப் பெற்றுவிட்டதற்காக அவர்கள் உணர்வுகள் பெற்றவர்களுடையதாக முடியுமா? பிறக்கும்போதே கட்டுச் சோற்றுடன் (பால்) வந்து பிறந்தவர்கள் அவர்கள். தங்கள் முயற்சியினால், வளர்ச்சிப்படிகள் கண்டவர்கள். "அவர்கள் வளர்வதற்குப் பெற்றோர்கள் ஒத்தாசையாய் இருந்திருக்கலாம். அவர்களுக்கூடாக வந்தவர்கள் என்பதற்காக அவர்கள் உணர்வாக பெற்றவர்கள் மாறுதல் கூடாது. அவர்கள் அவர்களுக்காகவே பிறந்தவர்கள்" எனக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் கூறியிருக்கின்றார். இவர்கள் தலைமுறை இடைவெளியில் கணினி உலகில் உலகத்தையே காலடியில் வைத்திருப்பவர்கள். அவர்களிடம் பெற்றவர்கள் கற்கவேண்டியது ஏராளம் இருக்கிறது. எனவே பெற்றோர்களே! கற்றுக் கொள்ளுங்கள். கல்வித் தேர்வுக்கு வழிவிடுங்கள்.

23

பிறந்த குழந்தையை தனியறையில் தூங்கவிடுவது தொட்டு பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரையில்

தன்னம்பிக்கை போதிக்கும் கலாசாரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாடசாலை சீருடை பிள்ளைகளின் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்று சீருடையையே அறிமுகப்படுத்தாத ஜேர்மனி நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறான சூழ்நிலையிலுள்ள இளவயதினர் ஒவ்வொரு நடவடிக்கையிலும் (உதாரணம்: உணவு, உடை, பொழுதுபோக்கு) தமது ஆக்கிரமிப்பைப் பயன்படுத்தும் பெற்றோர் தாம் விரும்பிய கல்வியைத் தெரிவு செய்வதற்குரிய அடிப்படை கல்விச் சுதந்திரம், மனித உரிமையும் மறுக்கும்போது பெற்றோரிடம் ஒரு எரிச்சலை ஏற்படுத்தி பெற்றோர் பிள்ளை உறவிலே ஒரு பிளவை ஏற்படுத்துகின்றனர். பிள்ளைகளோ பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்கின்ற போது "அப்பாடி தப்பிவிட்டோம்" என்று தொலைதூரத்திலுள்ள பல்கலைக் கழகங்களைத் தெரிவுசெய்கின்றனர்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கனவு இருக்கின்றது. தமது கற்றல் வலு எத்தகையது. எது தம்மால் முடியும் என்னும் உண்மையை அவர்களே அறிந்தவர்கள். "கற்கக் கசடறக் கற்க" அதாவது தெளிவுற ஒரு விடயத்தைக் கற்க வேண்டும். அப்படிக் கற்கவேண்டுமானால், ஒன்றில் முழுமனதுடன் ஈடுபட வேண்டும். விருப்பமான துறையென்றாலேயே முழுமனதுடன் ஈடுபடமுடியும். அதில் பரிபூரண வெற்றியையும் பெறமுடியும். அதில் உயரத்தைத் தொடமுடியும். எனது மகன் டொக்டர், எஞ்சினியர் என்று கூறுவதில் எமது பெற்றோர்களுக்கு ஒரு பெருமையிருக்கிறது. இது எங்கள் நாட்டிலிருந்து விமானம் ஏறும் போது விட்டுவிட்டு வந்திருக்க வேண்டிய பெருமை. டொக்டர், எஞ்சினியர், கணினி இவற்றைவிட்டால், மற்றைய எதைப் படித்தாலும் பயனில்லை என்னும் தவறான அபத்தமான கருத்து எம்மவரிடையே இருக்கின்றது. இவற்றிற்குப் படிக்காது விட்டால், எங்கள் மானம் தான் போகும் என்று black mail பண்ணுவதனால் ஆவதென்ன? சொந்த விருப்பம், கற்கின்ற துறை என்று இரட்டைச் சூழலில் கற்கவேண்டிய நிலை இளவயதினருக்கு ஏற்பட்டு அவர்களுக்கு மனஅழுத்தம் ஏற்படுகின்றது. கல்விப்பழு சிலவேளை தற்கொலை செய்யவேண்டிய நிலைக்கும் ஆளாக்கும்.

"அம்மா எனக்கு இரத்தத்தைக் கண்டால் பிடிக்கவில்லை. நான் ஜேனலிஸ்ட் படிக்கப் போகின்றேன். அது எனக்கு நன்றாகப் பிடித்திருக்கிறது" என்னும் மகளிடம் "சும்மா இருடி நான் பி. ஏ லிட்ரிசர். இப்ப வீட்டில விதம்விதமாச் சமைக் கிறேன். விட்டுப்போட்டு ஒழுங்காப் படி. மானத்தைக் காப்பாற்றும் வழியைப் பார்" என்று ஒரு அம்மா சொல்கின்றார். தன்னால் முன்னேற முடியவில்லை

என்பதற்காக மகளாலும் முடியாது என்று ஒரு தாய் எப்படி நினைக்க முடியும். முன்னேற்றம் என்பது அவரவர் துறைகளைப் பொறுத்தது. கல்வியறிவில்லாத ஒருவர் தொழிலதிபதியாக வரவில்லையா? பல்கலைக்கழகம் செல்லாத எத்தனையோ பேர் வெளிநாடு வந்து பட்டப்படிப்பு கற்கவில்லையா? காலச்சூழல், வயதுக்கோளாறு தள்ளிப்போட்ட கல்வி காலம் தாழ்த்தி வரவில்லையா?

எங்கள் பிள்ளைகளுக்கு அறிவு போதாது. கல்வியைத் தீர்மானிக்கும் பக்குவம் அவர்களுக்கு இல்லை என்னும் அறியாமையில் நமது பெற்றோர் வாழுகின்றார்கள். எம்மை அறியாமலே எமது தோளைத் தாண்டி வளர்வது போல் எம்மை அறியாமலே அவர்களுக்கு அறிவு வளர்ச்சியும் உடல் வளர்ச்சியுடன் ஏற்படுகின்றது. சந்ததி இடைவெளி தரம் கூடிய சமுதாயத்தை உருவாக்குவதை, கற்கால மனிதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எமக்குப் புரியவில்லையா? இதைவிட ஆசிரியர் மையக்கல்வியில் கல்வி பயின்று வந்த நாம், மாணவர் மையக்கல்வியில் கல்வி பயிலும் எமது இளவயதினருக்கு ஆலோசனை கூறுவது எந்த விதத்தில் பொருந்தும். இளையோருக்குத் தாமே ஒரு துறையைத் தெரிவு செய்யும்படி பாடசாலையிலேயே அவர்களுக்குச் சலுகை வழங்கப்படுகின்றது, வழிப்படுத்தப்படுகின்றது. அவர்கள் எந்தத் தொழிலைத் தெரிவு செய்தாலும் அதில் முன்னேறவும், எந்தத் தொழிலாய் இருந்தாலும் மனிதாபிமானத்துடன் மதிப்புக் கொடுக்கவும் இந்த நாட்டில் பண்பு இருக்கின்றது. அத்துடன் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறியதும் அல்லது தமது படிப்பை முடித்ததும் தொழில்வாய்ப்புக் கிடைக்கக்கூடிய துறையைத் தான் இளையோர் நாடுவர். அந்தத் துறை பற்றிய பூரண அறிவைப் பெறுவதற்காக கணினி, நூல்கள் என நுழைந்து அலசி ஆராய்வார்கள். அதற்குரிய வாய்ப்பும் அவர்களுக்கு இருக்கின்றது. எனவே நமது சிறுவர்களுக்கு எதுவும் தெரியாது என்ற எண்ணத்தைப் பெற்றோர் கைவிடவேண்டியது அவசியம்.

இளையோர் ஆர்வமுள்ள கல்விக்கு ஊக்கம் கொடுப்பவர்கள் தான் சிறப்பான பெற்றோர்கள். இளையோர் தமக்குத் தகுந்த துறையைத் தாமே தெரிவுசெய்ய பெற்றோர்கள் ஒத்துழைக்கும் போது பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு மொடல் பெற்றோராவார்கள். பிள்ளைகளும் படிப்பில் முன்னேற்றம் காண்பார்கள்.

# அடிப்படைப் பாடசாலை கிளைளபேர்க் சோலிங்கன் (Grund Schule Klauberg in Solingen)

Germany, Solingen இன் ஆரம்பப் பாடசாலை தன் எண்ணங்களால் வரி தொடுக்கின்றது.

நின்று நிமிர்ந்து புதுப்பொலிவுடன் எதிர்கால உலகை எதிர் பார்த்துக் காத்திருக்கும் நான், இன்று பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை எனப்படும் உடல் திருத்தச் சிகிச்சை செய்யப்பட்டு சோலிங்கன் நகரில் வீற்றிருக்கும் ஆரம்பப் பாடசாலை. எனது பெயர் அன்றும் இன்றும் கிளைளபேர்க் (Klauberg) ஆகும். என்னை இப்போது பார்க்கும் போது எனக்கே பெருமிதமாக இருக்கின்றது. முதுமையிலும் இளமை காண யார் தான் முனையார்.

1698 ம் ஆண்டு முதன்முதலாக நான் இருந்த தோற்றத்தை எண்ணிப் பார்க்கின்றேன். அன்றைய நாளில் நான் பெருமை பெற்றவன் தான். ஆனால், இன்று என்ன இது பழைய கட்டிடம் என்று என்னை நாடி வராத இளைய தலைமுறையினரைக் கவர்ந்து இழுப்பதற்காக என் நகரபிதாவுடன் கலந்து ஆலோசித் ததன் காரணமாக என் தோலிலே பல வர்ணங்கள் பூசினார்கள். இரட்டைக் கண்ணாடிச் சாளரமும், இதமான மெல்லிய வண்ணப் பூச்சும், அலங்காரக் கண்ணாடிச் சுவர்களும், என் அழகுக்கு அழகு சேர்க்கும் அமர்க்கைகளும், என்னைப் புதுப்பொலிவுடன் திகழச் செய்தார்கள்.

இத்தனை வருட காலங்களின் பின் என் போல் இளமை அழகு பெற யாரால் முடியும். என் உறுப்புக்கள் சத்திரசிகிச்சை மூலம் மாற்றப்படும் போது என்னுடன் கூட வளர்ந்த உறுப்புக்களை இழப்பதற்கு நான் தயங்கினாலும் வாழும் காலத்திற்கு ஏற்றாற் போல் நான் வாழப் பழகிக் கொள்ளவேண்டும் அல்லவா!

24

மனிதர்கள் மாத்திரம் இதயம் போன்ற உடல் உறுப்புக்களை மாற்றலாம். தோலை மாற்றலாம் மூக்கின் அழகை திருத்தி அமைக்கலாம். காலத்திற்கு ஏற்றாற் போல் தம்மை மாற்றிக் கொள்ளலாம். ஏன் என்னால் மட்டும் முடியாது. கல், மண், சீமெந்து, நிறம், மரம் என்று பலவிதமான ஊட்டச்சத்துக்களுடன் உருவாகியதுதான் என் உடல். அதில் கதவு, சாளரம், படிக்கல் என்றெல்லாம் உறுப்புக்களைத் தாங்கியபடி தான் நான் வாழ்ந்தேன். ஆண்டுகள் 318 காலப்பகுதிகள் வாழ்ந்துவிட்டேன். அதற்காக உணர்வுகள் அற்றவன் நானென்று அடையாளப்படுத்தலாமா?

என்னுள் துள்ளி விளையாடி இறந்துபோன அந்த நகரபிதாவை இன்று நினைத்துப் பார்க்கின்றேன். அது மாணவர்களைக் கட்டுப்படுத்த மர ஆயுதமாகிய மரக்கரண்டி கையாளக்கூடாது என்ற சட்டம் கொண்டுவரப்பட்ட ஆரம்ப காலப் பகுதி. இது தான் வாய்ப்பு என்று அவர் அடித்த லூட்டி இருக்கிறதே. இன்றும் அதை எண்ணிப் பார்க்கின்றேன்.

மனிதர்களை விட ஞாபகசக்தி எனக்கு இருக்கின்றது. அவர் பின் பலரால் மதிக்கப்பட்ட நகரபிதாவாகி இறந்திருக்கின்றார் என்ற செய்தியும் ஒரு காலத்தில் நான் அறிந்ததே. என் சாளரத்திலே ஒரு பூச்சியைக் கொண்டுவந்து வைத்து அதனை அங்கம் அங்கமாக எடுத்துப் பேசிக் கொண்டிருக்கும் Badea, Dr. Badea வாக கற்றுப் பயன்பெற்றுப் பின் காலனுடன் உலகைக் கடந்துவிட்டார். எப்போதும் அமைதியுடன் புத்தகம் கையேந்திப் பொழுதைக் கழித்த Alice பிற் காலத்தில் Drogen இற்கு அடிமையாகி இறந்துவிட்டதாகவும் அவர் பேத்தியே இப்பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்து மாண்டதாகவும் ஆசிரியர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு அதிர்ச்சிக்கு உள்ளானேன். அப்படியென்றால், “வளரும் பயிரை முளையில் தெரியும்” என்பதில் என்ன உண்மை இருக்கின்றது.

காலமாற்றமும், பருவமாற்றமும் ஒரு மனிதனை மாற்றியமைக்கும் என்னும் உண்மை என் அனுபவப் பாடமாக அமைகின்றது. ஆனாலும் என் படி தொட்ட பலரும் பல சாதனைகள் கண்ட மகிழ்வும் எனக்குண்டு. என் படி தொட்டுப் போன பலர் பல வேதனைகள் கண்ட வேதனையும் எனக்கு உண்டு. இன்னும் தலைமுறை தலைமுறையாக நான் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். என்னிடம் வந்த பல சிறுவர்கள் உடலும் உயிரும் இழந்து காலத்து அழிவுகளுக்கு ஆளாகி விட்டார்கள். உலக யுத்தத்திலே என் உறுப்புக்கள் சேதம் கண்டாலும் ஆயுளை அது அழித்து விடவில்லை. எனக்குப் போடப்பட்ட அத்திவாரமாகிய அடிப்படை உணவு என்னை அழியவிடவில்லை.

பூமி என்னைத் தாங்கும் வரை நான் வாழ்வேன். ஏனென்றால், புதுமைகள் காணும் விஞ்ஞானிகளை, ஆராய்ச்சியாளர்களை, கட்டிடக்கலை நிபுணர்களை, நான் உருவாக்கிக் கொண்டுதானே இருக்கின்றேன். அவர்கள் அழிவிலிருந்து என்னைக் காத்துக் கொண்டுதான் இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால், ஒன்று மட்டும் மகிழ்ச்சியுடன் நான் கூறவேண்டும். வாழும் வரை நாள்தோறும் இன்பத்துடன் வாழ்பவன் நான். ஏனென்றால், என்னில் என்றும் குதித்து விளையாடுபவர்கள் கள்ளங் கபடமற்ற 9 வயதுக்கு உட்பட்ட சிறார்கள். அவர்கள் ஒவ்வொரு வளர்ச்சியிலும் இன்பங்காணுகின்றேன். சிறார்கள் ஆரம்பக் கல்விக்கும் ஆளுமைக்கும் இடந்தந்து அவர்களைத் தாங்கி நிற்கும் யான், வளர்த்துவிட நினைப்பது சிறந்த ஒரு சமுதாயத்தை. அதனைச் சரியாகப் பயன்படுத்தி வளரவேண்டியது, அந்த இளந்தலைமுறையினரே என்று கூறி இன்னும் 10 வருடங்களின் பின்னும் என் எண்ணங்களின் வண்ணங்களை வார்த்தைகளால் வடிப்பேன் என்று விடை பெறுகின்றேன்.

*அடிப்படைக் கல்வி வாழ்வுக்கு அச்சாணி*
*அதை ஆரம்பிக்கும் கல்விக்கூடம் என்றும்*
*வாழ்வில் அழியாது மனதில் நிலைத்திருக்கும்.*

1. தாமரைப்பூ எந்தளவு நீரில் நின்றாலும் அந்தளவு நீர்மட்டத்திற்கு மேலேயே நிற்கும். கல்வி அறிவு பெற்றவர்கள் தாழ்ந்து போவதில்லை. அதனாலேயே சரஸ்வதி தாமரைப்பூவில் அமர்ந்திருக்கின்றாள்.
2. தன்னம்பிக்கையும் ஆசையும் சரியான முறையில் கையாளப்படாவிட்டால், தீயவழிக்கே ஒரு மனிதனைக் கொண்டு செல்லும்.
3. நிலைகெட்ட மனிதர் வாழ்ந்தால், அதற்கு எதிராக உதவிடும் மாமனிதர்களும் வாழ்வார்கள்.

# சீ......தனம் புலம்பெயர்விலுமா!

*பணமென்னும் பிசாசு ஆட்டுகின்ற ஆட்டம்*
*மனமென்னும் பேதைக்குப் போடுகின்ற தூபம்*
*விதை போட்டது யாரென்று புரியாத போதும்*
*புலம்பெயர்ந்தும் திருந்தாத மந்தையர் கூட்டம்*
*பெண்ணைப் பெற்றால், வயிற்றில் புளியைக் கரைக்கும் நிலைமை புலம்பெயர்விலுமா!*

பலரின் புலம்பல் என் பார்வையிலும் என் கருத்திலும் இங்கு பதிவாகின்றது.

சீதனம் பெறும்போதே தனம் என்னும் செல்வம் சீ என்னும் வெறுப்புக்கு உள்ளாகின்றது. பெற்றோர் பெண்ணைப் பெற்று கல்வி, செல்வம், குடும்பப் பொறுப்பு, பொறுமை அத்தனையும் சேர்த்துக் கொடுக்கத் திருமணம் என்னும் பெயரில் தாலியைக் கழுத்தில் கட்டிவிட்டு சொந்தம் கொண்டாடும் ஆண்மக்களே!

பெண் என்பவள் இச்சமுதாயத்தை ஒரு குடும்பத்தைச் சுமக்கின்ற அச்சாணி. இப்பெருமை எல்லாம் சேர்த்தே பூமிக்கு, பூமாதேவி என்னும் பெண்பால் பெயரிட்டார்கள். செல்வத்தைக் கொடுப்பதாகக் கருதும் கடவுளையே பெண்ணாகக் கருதி இலக்குமி என்று பெயரிட்டார்கள். வாழவந்த வீட்டிற்கு வளம் சேர்க்கும் பெண்களை பணம் சேர்த்துக்கொண்டு வாருங்கள் என்று வாயைப் பிளந்து கொண்டிருக்கும் வறிய கையாலாகாத ஆண் சமுதாயமே!

25

திருமணம் என்பது இருவர் இணைந்து வாழுகின்ற ஒரு கோட்டை, வளருகின்ற விருட்சம். இது தகர்த்து எறியப்படவோ? இடையில் வெட்டி விழுத்தப்படவோ கூடாது. இக்கோட்டைக்கு

உற்றார், உறவினர்கள் அரணாக இருக்கவேண்டும். ஆரம்பமே, அடித்தளமே ஆட்டம் கண்டால் வாழ்க்கையை நிறுத்தமுடியுமா? வாழ்வு நிலையாகுமா?

பணமில்லாது வாழ்வில்லை. பணமே வாழ்வுமில்லை. இது புரிந்தே உலகில் யாவரும் வாழுகின்றனர். ஆனால், பிறரின் உழைப்பில் பணம் சேர்க்க நான் நினைப்பதில் நியாயம் இருக்கின்றதா? பெண்ணையும் ஆணையும் சேர்த்து வைக்கலாம். இதனால் வம்சம் விருத்தியாகும், வாழ்க்கை சிறக்கும். பெண்ணோடு சேர்த்து பணத்தையும் தாருங்கள். அப்போதுதான் ஓரளவாவது வாழ்க்கையை என்னால் கொண்டு இழுக்கமுடியும் என்று கேட்பது ஆணுக்குக் கேவலம் இல்லையா?

யாழ்ப்பாணத்து அரசர் காலத்து நடைமுறைகளின் தொகுப்பாகிய சீதனம் என்பது, யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் ஆண்ட காலத்தில் 17 ஆம் நூற்றாண்டில் கொண்டுவரப்பட்ட தேசவழமைச் சட்டமாகும். கேரளாவில் நடைமுறைப்படுத்தப்படும் மருமக்கட்தாயச் சட்டத்தின் கூறுகள் யாழ்ப்பாண சமுதாய நிலைமைக்கு ஏற்ப மாற்றமடைந்து யாழ்ப்பாண சீதனமுறை கொண்டு வரப்பட்டது. ஆண் கொண்டுவரும் சொத்து முதுசம், பெண் கொண்டுவரும் சொத்து சீதனம், ஆணும் பெண்ணும் சேர்ந்து தேடிக்கொள்ளும் சொத்து தேடிய தேட்டம். இவ்வாறு விக்கிபீடியா சீதனத்துக்கான விளக்கம் கொடுக்கின்றது. இப்போது முதுசம் எங்கோ மறைந்தது? சீதனம் இங்கே நிலைத்தது. தேடிய தேட்டமே நடக்கவேண்டியது.

பெண்கள் தொழிலின்றி வீட்டில் கணவன் உழைப்பை எதிர்பார்த்துக் காத்திருந்த காலப்பகுதியில், பணம் படைத்த பெற்றோர் நன்கொடையாக, அதாவது அன்பளிப்பாக மகளின் திருமண மகிழ்வில் கொடுத்த நிகழ்வு நடந்து முடிந்துவிட்ட நடைமுறை ஆகும். இன்று பெண்ணும் ஆணும் சரி சமமாக உழைக்கும், அல்லது ஆணை விட பெண் கூடுதலாக உழைக்கும் காலம். இக்காலத்திலும் சீதனம் என்றபெயரில் பிச்சை எடுக்க நினைப்பது சமுதாய சீர் குலைவு

*"சீதனம் எவன் கேட்டால் செருப்பெடுத்தடி*
*கோவணம் கட்டிய கும்பகனை மணமுடி"*

ஏனென்றால் பெண் தன் குடும்பத்தை நடத்தக்கூடிய வலிமை மிக்கவள் இல்லையா? ஆண் எப்படித்தான் இருந்தால் என்ன?

*"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்"*

கற்பு நெறியில் தன்னையும் காத்து, தன் கணவனையும் காத்து, தகுதி வாய்ந்த புகழையும் காத்து உறுதி தளராது வாழ்பவளே பெண் என்று வள்ளுவரே கூறியிருக்கின்றார்.

சீதனம் கேட்பதும், கொடுப்பதும் குற்றம் என்றே கருதுகின்றேன். கடந்த காலத்தை மறந்து சீதனம் கேட்பது பெண்களே என்பது உண்மையே. அவர்கள் கருத்தில் ஆணுக்குப் பின், பெண்ணைப் பெற்ற தாய்மார் ஆணைக் கொடுத்துக் கறக்கும் பணத்தைப் பெற்று அடுத்துத் திருமணத்திற்காகக் காத்திருக்கும் பெண்ணுக்கு சீதனம் கொடுக்கத் திட்டம் இடுகின்றனர். மகனை வளர்க்க செலவு செய்ததை வரும் மருமகள் குடும்பத்திடம் இருந்து கறக்க நினைக்கிறாள். அடிப்படையில் இயலாமையே இதற்குக் காரணமாகின்றது. புலம்பெயர்வில் அதிகமாக அரசாங்கப் பணத்தில் வளர்க்கும் மகனுக்கே சீதனம் எதிர்பார்க்கும் பெற்றோர். பெற்றேன் கஷ்டப்பட்டு வளர்த்தேன் என்றெல்லாம் வாய் அளப்பது சரியா? தாய் சொன்னார். தனையன் தலை ஆட்டுகின்றான். தாயிற் சிறந்த கோவில் இல்லை என்று காரணம் காட்டி பணத்துக்கு தலை பணிந்து நிற்கின்றனர் ஆண்கள். அதனால், கோவிலினுள்ளே உள்ள சக்தியாக இருக்க வேண்டிய தாய். சீதனம் கேட்டு பழமொழியையே மாற்றி அமைக்கின்றாள்.

பெண்ணைப் பெற்றவர்கள் கூறுகின்றார்கள். பிள்ளையைப் படிக்க வைத்து சிறந்த உத்தியோகம் பெறவைத்து திருமணம் செய்து கொடுக்கும்போது சீதனமும் தா எனக் கேட்டல் எவ்வகையில் நியாயம் ஆகின்றது. என் பிள்ளை உழைத்துக் கணவனையும் கண் கலங்காது பார்த்துக் கொள்வாள். தன் வாழ்க்கையையும் உயர்வுக்குக் கொண்டு வருவாள். கணவன் உழைப்பில் மண்டியிட்டுக் கிடக்க வேண்டிய அவசியம் இல்லை. தன் மகளை வாழவைக்க அக்காலம் போல் மருமகனுக்குச் சீதனம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. பணம் மட்டுமா, தங்க நகையையே விரும்பாத பெண்களுக்கு தங்க நகைகளும் சீதனமாகக் கேட்கின்றார்கள். வாழ வழி அற்று புலம்பெயர்ந்த நிலைமை மறந்து சொந்த நாட்டில் வீடற்று தங்க வந்த இடத்திலேயே சீதனமாக வீடும் கேட்கின்றார்கள். இரவு பகலாக உழைத்து இரண்டு மூன்று வேலை என்று செய்து வீட்டை வாங்கி, வங்கிக்கு பணத்தைக் கட்டிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், வீட்டை மகள் பெயருக்கு எழுதும்படி கூறிப் பின் மகனை வளைத்துத் தன் மகளுக்கு அவ்வீட்டை எழுதிக் கொடுக்கப்பண்ணும் பெற்றோரின் திறமைக்கு நாம் என்ன

மடையர்களோ? என்று கேள்வி கேட்கும் பெண்ணைப் பெற்றோர், வாழும் வரை உழைத்து வீடு வாங்கி மீண்டும் வாடகை வீட்டில் குடியிருக்க விரும்புவாரோ!

ஐரோப்பிய நாட்டில் வளருகின்ற பெண்கள் கணவனை விலை கொடுத்து வாங்க மறுப்பதனால், திருமண கலாசாரம் மறைந்து போகும் நிலை ஏற்படுகின்றது. ஐரோப்பிய கலாசாரம் மேலோங்குகின்றது. இயற்கையான உடல் இச்சைகள் தவறான வழிகளில் தடுமாறும் சூழல் ஏற்படப் போகின்றது. கலாசாரக் கட்டுப்பாடுகள் மீறும் நிலை வரும் காலங்களில் மேம்படப் போகின்றது. ஐரோப்பிய நாடுகளில் சூழல், சுற்றம், உறவினர் போன்றோருக்குப் பயந்து பெண்கள் வாழ்ந்த நிலைமை இல்லையென்பதால் சுதந்திரம் என்ற பெயரில் பெண்கள் நடமாடுவதற்கு வழிவகுக்கும் ஆண்களைப் பெற்றவர்களே சிந்தித்துப் பாருங்கள். புலம்பெயர்வில் சீ....... தனம் தேவையா?

எழுதிவிட்டேன். இதுபற்றி காலம் காலமாக எழுதப்படுகின்றது. ஆயினும் சமுதாயம் சீர்பெற ஒரு சிந்திப்பு என்னாலும் நடக்கட்டும்.

**அடையாளப்படுத்தல்**

வாழ்வின் அத்தியாயங்கள் ஒருநாள் மறைந்துபோம். வாழ்வின் தடயங்கள் ஒருநாள் அழிந்துபோம். வாழ்க்கையின் ஆதாரங்கள் நிலைப்பது கலைஞன் வாழ்க்கையில் மட்டுமே.

பெற்ற பிள்ளைகளும் பரம்பரையை மறந்துபோம். தந்தையின் தந்தை பெயர் வரை பரம்பரை ஞாபகங்கள் நிலைத்திருக்கும் அதன்பின் வாழ்ந்தோம் என்பதற்கு அடையாளமே இல்லாமல் போய்விடும். வாழ்ந்தே ஆகவேண்டுமென வாழ்க்கை சொல்கிறது. வாழ்க்கையின் ஆசைகளும் கூடிக்கொண்டே போகின்றது. தடுத்து நிறுத்த எண்ணுகையில் புதிதாய் ஒன்று பிறப்பெடுக்கின்றது. புதுமையாகத்தான் இருக்கின்றது. ஆனால், புரியாமலே போகின்றது. பிறப்பவர் யாவரும் ஞானிகள் இல்லை. பிறந்தவர் யாவரும் மேதாவிகளும் இல்லை. விஞ்ஞானிகளும் இல்லை. அடையாளப்படுத்தல் தேவை என்றால், அடையாளம் தேடவேண்டும். அடையாளப்படுத்தல் என்பது எம்மால் இயன்றவரை எம்மை நாமே அடையாளப்படுத்துவோம். அப்போது நாமில்லா உலகில் நம்மைப் பற்றிப் பேசுவார் உலகில் பலர்.

# பூக்களின் படைப்பு (அனுபவம்)

எங்கள் இல்லம் மலர்கள் நிறைந்த பூங்காக்கு நடுவே அமைந்திருந்தது. எனது தாயாருக்குப் பூக்கள் என்றால், அலாதிப் பிரியம். வகைவகையான மலர்ச்செடிகளை தேடிப் பெற்று வீட்டைச்சுற்றி நட்டிருந்தார். காலையில் வீட்டுவாசலைத் திறந்தால், முட்டி மோதிக்கொண்டு பவளமல்லிகை வாசனை வீட்டினுள்ளே நுழைந்துவிடும். அந்த அனுபவத்தை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன். அலாதியாய் அமர்ந்து கொள்ளும் இந்த வாசனைக்கு ஈடுசெய்ய ரோஜா மலர்களின் வாசனை எமது கெட்ட எண்ணங்களை ஓடவிரட்டும். அனுபவித்துப் பாருங்கள்.

பாடசாலையில் நான் பணிபுரிகின்ற காலங்களில் தினமும் காலையில் பணிக்காய் நான் புறப்படத் தயாராகியதும் எனது தாய், வாசலில் வந்து நின்று எனக்கு ஒரு முத்தம் தந்து வாசல் கதவருகே நடப்பட்டிருந்த ரோஜா மலர் ஒன்றைப் பறித்து எனது பின்னலில் வைத்து விடுவார். இது தினமும் நடைபெறுவது. முத்தமும் மலரும் எனது காலை அன்பளிப்புகள். அன்று ஒருநாள் எதையுமே சிந்தித்து சரி பிழை பார்க்கும் நான், யதார்த்தமாக அன்று காலை எனது தாயிடம் இந்த ரோஜாமலர் எவ்வளவு அழகாக இருக்கின்றது. ஆசையாக மலருகின்ற மலரை சிலகாலம் வாழவிடாமல் பறித்து நாம் கூந்தலில் வைப்பது தவறில்லையா அம்மா! என்று கேட்டேன். அவற்றிற்கும் வாழ ஆசை இருக்கும் அல்லவா அம்மா! என்றேன். பொதுவாகவே மலர்கள் என்றால், மனதைப் பறிகொடுக்கும் எனது அம்மாவும், பார்த்தாயா இதுபற்றி எதுவுமே நான் நினைத்துப் பார்க்கவில்லையே. இன்றிலிருந்து நான் பறிக்கவில்லை என்று கூறினார். அன்றைய நாள் திடீரென இரத்தக்கொதிப்பு அதிகமாகி எனது தாயாரும் என்னைவிட்டு

26

ஒரேநாளில் நினைத்துப் பார்க்க முடியாதவாறு மீண்டுவரா உலகுக்கு உயரப் போய்விட்டார். அவர் சொன்னதைச் செய்துவிட்டார். வார்த்தைகளின் வலிமையை நினைத்துப் பார்க்கின்றேன். எண்ண எண்ண கொந்தளிக்கும் நினைவுகள். எனது சிந்தனை எந்த விதத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை நினைத்துப் பார்க்க வேதனையாக இருந்தது.

அம்மாவின் உடலைக் கொண்டு வந்து வீட்டின் நடுவே வைத்தார்கள். அவரைச் சுற்றி மலர்களால் அலங்கரித்தார்கள். எனது தந்தை ஊரின் பெரிய மனிதராகக் கருதப்பட்டவர் என்ற காரணத்தினால், பல நிறுவனங்களிலெல்லாம் இருந்து மலர் வளையங்கள் கொண்டுவந்து அம்மாவின் காலடியில் வைத்தார்கள். சுற்றிவர மலர்களின் நறுமணத்தை நுகர்ந்தபடி அம்மா ஆழ்ந்த மீளா உறக்கத்தில் படுத்திருந்தார். நானும் அவரருகே அழுதபடி அமர்ந்திருந்தேன். அங்கே மலர்கள் எனக்குக் கற்பித்த பாடம் இன்றும் என் அனுபவப் பாடமாகக் கருதுகின்றேன்.

உலகத்தில் படைக்கப்பட்ட அனைத்தும் பிறர் பயன்படுவதற்காகவே படைக்கப்படுகின்றன. மனிதன் பிறந்தால், அவனால் உலகு உய்ய வேண்டும். நான்கு பேராவது வாழவேண்டும். படைக்கப்பட்ட உருவாக்கப்பட்ட அனைத்தும் பிறர் பயன்படுவதற்காகவே என்ற உண்மைத் தத்துவத்தை யாம் புரிந்து கொள்ளவேண்டும். மலர்கள் மலர்ந்து மண்ணில் சருகாகி மாய்கின்ற போது அந்தப் படைப்பின் பலன் நிறைவேற்றப்படுவதில்லை. அதனைப் பறித்து ஆண்டவன் காலடியில் சேர்க்கின்ற போது அம்மலர் இன்புறுவது நிஜமே. அதனைக் கூந்தலில் வைத்து ஒரு பெண் பெருமை கொள்ளும் போது அக் கூந்தலில் அமர்ந்திருக்கின்ற மலரும் பெருமை கொள்கின்றது. அதன் வாசனை அவள் செல்கின்ற இடமெல்லாம் கூடவே செல்கின்றது. திருமண வீடுகள், ஆலயங்கள், முதல்ராத்திரி என்று அனைத்து இடங்களிலும் அழகாய்க் காட்சியளிக்கும் மலர்கள், ஒருநாள் வாழ்ந்தாலும் பிறர் மனதைச் சந்தோசப்படுத்தி நான் இறக்கின்றேன் என்ற பெருமிதத்தில் இறக்கின்றன. பிறரை அழகுபடுத்தி பிறர் மனதை கொள்ளை கொள்ள வைத்து தன்னை இழக்கின்ற மலர் தந்த பாடம் எனது அம்மாவின் இறுதி அஞ்சலியாக அமைந்திருந்தது. அம்மாவைச் சூழவர படுத்திருந்து எனக்குப் பாடம் நடத்திய மலர்களைப் பார்த்து ஒரு ரோஜாமலரைப் பறித்து எனது அம்மாவின் கூந்தலில் வைத்தேன். வெடித்தது அழுகை. படித்தேன் பாடம்.

# அன்னையர் தினம்

பிறக்கும் போது அழுகின்றோம். எம் தாயையும் அழ வைக்கின்றோம். வருகின்ற காலங்களில் என்னால் நீங்கள் அழப்போவதற்கு ஆயத்தமாகுங்கள் என்பது போல் வருகையின் வலி தாய்க்கு வந்துவிடும். ஒரு மனிதன் 45 அலகுகளே நோவைத் தாங்குவான்.

ஆனால் ஒரு தாய் பிரசவத்தின் போது 57 அலகுகள் நோவைத் தாங்குகின்றாள். 21 எலும்புகள் ஒன்றாக உடையும் போது ஏற்படும் வலி அப்போது ஏற்படுகின்றது. இவ் அளவுகளை முகநூலில் வாசித்தறிந்தேன். வலியின் தாக்கத்தைத் தாயாய் உணர்ந்திருக்கின்றேன். வயிற்றினுள் இருக்கும்போது தன் வாய்க்குக் கட்டுப் போட்டாள். வளர்ந்து பெரியவனாகும்போது தன் வார்த்தைக்குக் கட்டுப்போட்டாள். வளருகின்ற போது தன் தாய்ப்பால் சுத்தமாக தன் ஆசைகளை அடக்கினாள்.

பூமிக்கு ஒப்பாக பொறுமைக்கு இலக்கணமாக வாழ்ந்து நல்மனிதர்களை உருவாக்க நாளும் பகலும் உழைக்கும் ஒரு தாய் தனது பிள்ளை கெட்டவனாக வரவேண்டும் என்று ஒருக்காலும் நினைக்க மாட்டாள். அதேபோல் தன் பிள்ளை கால் கை இழந்திருந்தாலும் பேசமுடியாதவனாக இருந்தாலும் பார்க்கமுடியாது இருந்தாலும் ஏன் வலது குறைந்து உருவமே மாறுபட்டு வாயிலிருந்து நீர் வடிய உலகத்தையே புரியாதவனாக இருந்தாலும் முகத்தைச் சுளிக்காது முழு அன்புடன் அவனைப் பராமரிக்க ஒரு தாயாலே மட்டுமே முடியும். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" வளர்ந்து தன் மகன் பெரியவனாகக் காட்சியளித்தாலும் அவன் தாய் கண்களுக்கு அவன் சிறுபிள்ளையாகவே காட்சியளிப்பான்.

27

அந்தத் தாய்மையைப் போற்றி ஒரு தினம். அதுவே அன்னையர் தினம் ஜேர்மனியில் இன்றைய நாள் 13.05 கொண்டாடப்படுகின்றது. மலர்க் கொத்துகளை தம்முடைய தாயாருக்கு அன்பளிப்பாக வழங்கி தம்முடைய அன்பை வெளிக்காட்டி பரிசுப் பொருள்களைப் பிள்ளைகள் தாய்மாருக்குக் கொடுப்பதும் அவர்கள் விரும்பியபடி நடப்பதும் வழக்கமாக இருக்கின்றது. என்றுமே தமது பிள்ளைகளை மலர்களாகக் காணும் தாய்க்கு மலர்க் கொத்துக்களை வழங்குவது இயல்பே.

அமெரிக்கா மேற்கு விர்ஜினிய மாநிலத்தைச் சேர்ந்த பெண்மணி Ann Maria Reevas Jaris அவர்களால் 1865 இல் இத்தினம் பற்றிய தீர்மானம் முன் வைக்கப்பட்டது. பின் அவர் மகள் Ann Marie Jarvis அவர்கள் 12.05. 1907 அன்று தனது தாய் இறந்து இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை தனது தாய் ஞாபகார்த்த தினத்தை மெதடிஸ் ஆலயத்தில் நடத்தினார். மற்றைய தாய்மார்களுக்கு முன்பாக தனது தாயை நினைத்து 500 கார்னேஷன் மலர்களை வைத்தார். இவரே அதிகாரபூர்வமான அன்னையர் தினத்தைக்கோரி தனது முழு நேரத்தையும் அர்ப்பணித்து அரசியல்வாதிகள், பாதிரிமார், தொழில் அதிபர்கள், மகளிர் சங்கங்கள் போன்றோர்க்கு கடிதங்கள் எழுதி அதிகாரபூர்வமான விடுமுறை தினத்தைக் கோரினார்.

இவ்வாறிருக்க இந்நிலைமை வேகமாக வளர்ந்து 1909 இல் அமெரிக்காவில் 45 மாநிலங்களில் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. 1914 ஆம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி அமெரிக்க ஜனாதிபதி உட்ரோவ் வில்சன் அவர்கள் அன்னையர் தினத்தை அறிவிக்கும் உத்தியோகபூர்வமான கூட்டறிக்கை ஒன்றில் கையெழுத்திட்டார். அதன்படி ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம் கொண்டாடுவது உறுதிசெய்யப்பட்டது.

இந்நாள் மனிதர்கள் ஒவ்வொருவரும் கொண்டாட வேண்டிய நன்னாள். கருவில் தாங்கிய தாயை காலமெல்லாம் காக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அவர் காலில் விழுந்து வணங்குதல் மூலம் நல்லாசிகளைப் பெறல் பிள்ளைகள் கடமையாகின்றது.

# ஆழ்ந்த அன்பில் ஆழ்ந்திருப்போம்

ஒவ்வோர் இதயங்களிடையும் பாசமாயும், இளம் உள்ளங்களைப் பிணைத்து கலந்து நிற்கையிலே காதலாயும், தன்னலமின்றி பிற உயிர்களின் மேல் பரந்து நின்று பரிவாயும், ஆண்டவன் காலடியில் சேவித்து அனைத்தையும் அடக்கி ஒடுக்கி சேவித்து நிற்கையிலே பக்தியாயும் பல்வேறு வடிவங்கள் தாங்கி வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு உணர்வு. இவ்வுணர்வின் வடிவமாகிய அன்பைப் பெறாத, அனுபவிக்காத உயிரினமே இல்லையல்லவா! ஈரமில்லா நெஞ்சமுள்ள கல் நெஞ்சக்காரர்கள் கூட ஏதோ ஒரு அன்பின் வடிவத்தைக் கொண் டேயிருப்பார்கள். ஆனால் அதையும் மீறிய இரும்பு இதயம் படைத்த மனிதர்களல்லா மாக்கள் கூட இவ்வுலகில் மனிதர்களாக நடமாடுகின்றார்கள். அன்பின் வலிமையும், ஆழமும் அறியாமலே வாழ்க்கையில் பல கொடூரமான காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

குஞ்சுக்கு உணவூட்டும் பறவைகளும், குட்டியை அணைத்தபடி கிளைவிட்டுக் கிளைபாயும் குரங்குகளும், சிறகுக்குள் குஞ்சுகளைத் தூங்கவைக்கும் கோழிகளும், காதலால் இணைந்து பிணைந்து நிற்கும் பாம்புகளும் இப்படி எத்தனையோ எத்தனையோ ஜீவராசிகளின் அன்பின் வெளிப்பாடுகளை அளந்து பார்க்க முடிகின்றது.

*"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு*
*என்போடு இயைந்த தொடர்பு"*

28

என்று உயிரோடு இணைந்து உடல் பிறந்த முக்கியத்துவமே பிறருடன் அன்பு செலுத்தி வாழ்வதற்காகவே என எமது முப்பாட்டன் வள்ளுவனார் அழகாய் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்.

தோண்டத்தோண்ட ஊற்றெடுக்கும் ஊருணி, அள்ளஅள்ள ஊற்றெடுக்கும் ஆழ்ந்த அன்பு. இவ்வாறான அன்பானது இறுக்கமான இதயத்தைக் கூட இளக வைக்கும் பண்பு கொண்டது. இதனாலேயே திரைப்படங்களில் உள்ளத்தை உருக்கும் காட்சிகளைப் பார்க்கும்போதும் எம்மையறியாமலே பொலபொல வென்று கண்ணீர் ஊற்றெடுக்கின்றது.

வெற்றிடத்தை நிரப்பும் காற்றுப்போல் அன்புள்ளார் இதயத்தை நாடி அகிலமே சென்றடையும். இவ்வாறான பண்பு கொண்ட அன்பைப் பெறாதவர்களுடைய உயிர் வாழ்க்கை பாலைநிலத்திலே பட்டுப்போன மரம் தளிர்த்ததைப் போன்றிருக்கும்.

*"இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல் மற்று*
*எல்லாம் இருந்துமவற் கென்செய்யும் - நல்லாய்*
*மொழியிலார்க்கு ஏது முதுநூல் தெரியும்*
*விழியிலார்க்கு ஏது விளக்கு"*

பேசத்தெரியாதவர்களுக்கு தொன்மையான நூல்கள் இருப்பினும் அவற்றால் ஒரு பயனும் இல்லை. பார்க்கும் கண் அற்றார்க்கு விளக்கு இருந்தும் பயன் இல்லை. அதுபோல் குடியிருக்கும் வீடும், செலவழிக்கப் பொருளும், பணி செய்ய ஏவலாரும் இருந்தாலும் நெஞ்சில் அன்பில்லாதவனுக்கு இது எதிலுமே பயன் இல்லை என நன்னெறி எடுத்துக்காட்டுகின்றது.

"வாடிய பயிர்களைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று கூறிய வள்ளலார் போல் உள்ளத்திலே அன்பென்னும் மாளிகையைக் கட்டி வைப்போம். அங்கு குடியிருக்க அனைத்து நுண்ணுயிர்களையும், விலங்குகளையும், பறவைகளையும், மனிதர்களையும், இனமதபேதமின்றி ஏற்றுக் கொள்வோம். அன்புள்ளார் இதயத்திலே வன்முறைக்கு இடமில்லை மனிதாபிமானம் நிறைந்திருக்கும். பணிவு பரிமளிக்கும், விட்டுக்கொடுக்கும் பண்பு வீற்றிருக்கும், கல்லையும் கனியவைக்கும் கலை கலந்திருக்கும். ஆதலால்,

*ஆழ்ந்த அன்பில் வீழ்ந்த மனதை*
*ஆட்டிப் படைக்கும் சோதனை - அதை*
*மீட்டிப்பார்க்க விரும்பாது மீண்டும்*
*ஆழ்ந்த அன்பில் ஆழ்ந்திருப்போம்.*

# உண்மை நட்பைத் தேடிப் பெறுவோம்

உற்ற நட்பை உவப்புடன் கூற விரும்புகையில், மற்றைய நட்பையும் சுட்டிக்காட்ட விழைவது இயற்கையே. கண்டொன்று பேசி, கட்டியணைத்துப் பல நகைச்சுவைக் கதைகள் கூறிப் புறமதில் பல கதைகள் புனைந்து கூறும் நட்பும் ஒரு நட்பே. இந்நட்பானது அடியிலிருந்து கரும்பை நுனிவரை உண்பது போன்றது. இனிப்புச் சுவையை இன்பத்தை உடனே தந்து மேலே போகப் போக சுவை குன்றிப் போதலைப் போன்றிருக்கும் என முன்னமே நாலடியார் கூறி வைத்திருக்கின்றார். கற்கக் கற்க நயம் பயக்கும் நூல் போல் பழகப்பழக இனிய நன்மை விளைவிப்பதே உண்மை நட்பாகும்.

பெற்ற தாயிடமும் பிரியமுடன் துணைசேர்ந்த துணையுடனும் பகிர்ந்துகொள்ள முடியாத எத்தனையோ விடயங்களை உண்மை நண்பரிடம் கூறி மனப்பாரம் குறைக்கின்றோம். தூய்மைக்கு இலக்கணமாய் உயிரினும் மேலாய்ப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய நட்பின் புனிதம் நோக்கியே வள்ளுவப் பெருந்தகை தன் அறிவுப் பெட்டகத்தில் தீ நட்பு, கூடாநட்பு, நட்பு, நட்பாராய்தல் என நான்கு அதிகாரங்களை எழுதி, விபரமாய் விளக்கியுள்ளார். பாரதி தன் "கண்ணன் என் தோழன்" என்னும் பாடலில் தன்னை அர்ச்சுனனாகவும் கண்ணனைத் தோழனாகவும் பாவனை பண்ணி நல்ல நட்பின் இலக்கணங்கள் அத்தனையையும் கண்ணனில் கண்டு அழகாகப் பாடியுள்ளார்.

29

*"ஈனக் கவலைக ளெய்திடும் போதில்*
*இதஞ் சொல்லி மாற்றிடுவான்*

*பிழைக்கும் வழி சொல்ல வேண்டுமென் றாலொரு*
*பேச்சினிலே சொல்வான்*

*உள்ளத்திலே கருவங்கொண்ட போதினில்*
*ஓங்கி அடித்திடுவான் - நெஞ்சில்*
*கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னாலங்கு*
*காறியுமிழ்ந் திடுவான்"*

என நட்பின் இலக்கணங்களைக் கண்ணன் பாட்டில் அறியக்கூடியதாக இருக்கிறது. எனவே உண்மை நண்பன் உரிமையுடன் எதையும் எடுத்துச் சொல்ல வல்லவனாய் இருத்தல் வேண்டும்.

"காய் முற்றின் தீங்கனியாகும். இளந்தளிர் நாள் போய் முற்றின் என்னாகிப்போம்" அதாவது காயானது, முற்றினால் உண்ணக்கூடிய இனிய பழமாகும். இளந்தளிரானது முற்றுமானால், முடிவில் சருகுபோல் போய்விடும். நல்லவர்களுடன் நாம் நண்பர்களாக இணையும் பொழுது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியடைந்து முடிவில் அவர்கள் நட்பானது பழம் போல் இனிக்கின்ற இன்பத்தைப் பெறுவோம். கயவர்களுடன் பழகும் போது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து சருகுபோல் உயிரற்று பறந்து போவோம் என்பதை நன்னெறி நவின்றீன்ற சிவப்பிரகாசர் மூலம் அறிந்தோம். இதனையே தான் "சேராத இடந்தனிலே சேர வேண்டாம்" அதாவது நல்லிணக்கம் இல்லாதவர்களுடன் இணங்க வேண்டாம் என உலகநீதி கூறுகின்றது.

எனவே "பன்றியோடு கூடிய கன்றும் பவ்வி தின்னும்", "பூவோடு கூடிய நாரும் மணம் பெறும்" என மனங் கொள்வோம். கர்ணனுக்கோர் துரியோதனன், குசேலனுக்கோர் கண்ணன், ஔவைக்கோர் அதியமான் என நாம் அறிந்த கதாபாத்திரங்களை நினைவில் நிறுத்தி கற்கக் கற்க நயம் பயக்கும் நூல் போல், பழகப்பழக இனிய நன்மை தரும் சிறந்த நட்பைத் தேடிப் பெறுவோம்.

# எழுத்தாளனை ஏளனம் செய்யும் சமுதாயம்

**கோ**ல் எடுக்கும் மன்னன் மக்களுக்காய் மக்களை ஆட்சி செய்கின்றான். எழுதுகோல் எடுக்கும் எழுத்தாளன் மக்களுக்காய்த் தன் அறிவை விதைக்கின்றான். தன் நேரம், பொழுதுகளை தான் வாழும் சமுதாயத்துக்காக அர்ப்பணிக்கும் போது, இதைப் புரியாத பலரும் எழுத்தாளரை மனநோயாளர் என்று ஏளனம் செய்வது மனதுக்கு வேதனையாக இருக்கின்றது.

சொல்லும் பொருளும் சுகமானால், வெல்லும் இவ்வுலகம். அச்சொல் மற்றவர் உள்ளத்தை நல்லதாக்க வேண்டுமென சொல்வடித்தல் குற்றமா? சூழ இருந்து சுற்றத்தாருடன் திரைப்படம் பார்த்துச் சிரித்து, இரசித்து, திரைக்கதை விமர்சித்து ஆஹா ஓஹோ என்று அலசி, கதாநாயகி சிரிக்கும் போது சிரித்து, அழும்போது அழுது தம்மை மறந்திருக்கும் மக்கள், அத்திரைப்படத்தின் மூலக்கதை ஒரு எழுத்தாளனால் உருவானது எனச் சிந்திக்கத் தவறி விடுகின்றார்கள். வைரமுத்து, கண்ணதாசன் போன்ற திரைப்படப் பாடலாசிரியர்கள் பாடல்கள் காதுக்குள்ளே ஒலிக்க Head Phone மாட்டித் திரிவதும், அப்பாடல்களுக்கு ஆட்டம் போடுவதும் ஒரு எழுத்தாளன் எழுத்திலேயே அப்பாடல் உருவானது என்று உணர்ந்து கொள்ளாமலே நடைபெறுகின்ற நடவடிக்கைகளேயாகும். கண்ணதாசன், வைரமுத்து கவிஞராக அந்தஸ்துப் பெற்றது, அவர்கள் எழுதிய முதல் வரிகளில் அல்ல. எழுதியெழுதிக் குவித்ததனாலேயே, அவர்கள் கவிஞர்களாக அந்தஸ்துப் பெற்றார்கள். பணமும் புகழும் அவர்களை நாடி வந்தது.

30

ஒரு திரைப்படமோ, பாடலோ ஒரு எழுத்தாளன் இல்லாது உருவாக முடியாது. அடிப்படையை விட்டுவிட்டு வெளிப்படையை

இரசிப்பவர்கள் மனப்பக்குவத்தை என்னென்பது? பணத்துக்காகவும் புகழுக்காகவும் மாத்திரம் எல்லோரும் எழுதுவதில்லை. ஆத்ம திருப்திக்காகவும் எழுத்தைப் பயன்படுத்துகின்றார்கள். தமது எழுத்துக்களால், சமுதாயத்தில் யாரோ ஒருவர் விழிப்புணர்வு பெறவேண்டும் என்று எழுதுகின்றார்கள் எனப் புரியாத மனிதர்கள், பணம் தேடும் முயற்சியே முயற்சி ஆகும், ஆத்ம திருப்தி என்பது மனித மனவுணர்வன்று என்ற முட்டாள்தனமான எண்ணப் போக்கைக் கொண்டிருக்கின்றார்கள். பணத்தை நோக்கமாகக் கொள்பவர்கள், கலையுணர்வை ஏளனம் செய்வதில் ஆச்சரியம் இல்லை. கடல் மண்ணிலே பேருருவம் செய்யும் படைப் பாளி, தன்னை மறந்து, நேரத்தை இழந்து படைக்கும் படைப்பு ஒரு மழைவரக் காற்றடிக்க அழிந்துபோகும் என்று தெரிந்தும் இரசித்து இரசித்துத் தன் கலைப் படைப்பை வெளிக்கொண்டு வருகின்றான். அதில் அப்படைப்பாளி காணும் சுகத்தை கலையுணர்வற்றோர் அறியார்.

பாரதி இறந்தபோது அவரருகே கூட்டம் கூடவில்லை. ஆனால், இன்று பட்டிதொட்டி எங்கும் பாரதி பாடல்கள் அனைத்தும் இசையோடு இணைந்து நடனம் புரிகின்றன. பாரதி வாழ்ந்த அதேகாலத்தைப் போன்றே இக்காலத்திலும் எமது தமிழ்ச் சமுதாயம் வாழுவதை நினைக்க வேதனையாக இருக்கின்றது. வாழும்போது எழுத்தாளரைப் புகழாது, வாழ்ந்து மடிந்தபின் விழா எடுப்பதன் நோக்கம் யாதென்று புரியேன். வள்ளுவர் அன்று எடுத்த எழுத்தாணியால், இன்று உலகமெங்கும் அவர் புகழ் பேசப்படுகின்றது. அவர் வேலையற்று எழுதிக் குவிக்கின்றார் என்று அன்று எத்தனை பேர் எள்ளி நகையாடினார்களோ?

எழுதும் கைகள் ஓய்வதில்லை. எழுத்தாளன் எண்ணங்களோ மறைவதில்லை. வாழும்போதே சமுதாயத்திற்காய்ப் பலரைச் சிந்திக்கச் செய்து, சிலரைத் திருத்தவும் செய்து, உலகம் உய்வடையத் தம் பொழுதுகளைத் தாரைவார்க்கும் எழுத்தாளனைப் போற்றத் தயங்கினாலும் தூற்றாதிருங்கள். எழுத்தாளர்கள் உறங்கிவிட்டால், உங்கள் காதுகளுக்கு இனிமையான பாடல்கள் கிடைக்காது, நற்சிந்தனைகள் கிடைக்காது, கண்டுகளிக்க திரைப்படங்கள் கிடைக்காது, நல் அறிவூட்டும் நூல்கள் கிடையாது, உண்டு குடித்து உறங்கும் மிருக வாழ்க்கையே வாழவேண்டிய சூழ்நிலையே ஏற்படும்.

# என் 18, 20களின் இன்றைய ஏக்கம்

உலகமே என் கைக்குள் அகப்பட்டது. என் ஒருவிரல் தடவத்தடவ நாய்க்குட்டி போல் என் கண்முன்னே காட்சிகள் என் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஆஜராகின்றன. உலகத்து மொழிப் படங்கள் எல்லாம் வீட்டில் உட்கார்ந்தபடி இரசித்துப் பார்க்கின்றேன். இன்று என் இளமை வெகுதூரம் நின்று ஆதரவாய் என்னைப் பார்க்கிறது. ஒரு சினிமா பார்ப்பதற்காக ஓராயிரம் மன்றாட்டம் போட்டுப் பெற்றோர் படைசூழ பவித்திரமாய் படமாளிகை அண் மித்து, சொட்டும் வியர்வையைக் கைக்குட்டை ருசி பார்க்க, வரிசையில் நின்று அடிபட்டு உதைபட்டு நுழைவுச்சீட்டுப் பெற்று, இரத்தவெறி கொண்ட மூட்டைப் பூச்சிகளுக்கு இலவச இரத்ததானம் வழங்கித் தடித்த கால்களுடன் உடல் சொறிந்த விரல் வீங்க, வீடு வந்த அந்த இளமைப்பருவம் இன்றுள்ள DVD, Internet, Ipod, Laptop பார்த்து ஏங்குகிறது. முதன் முதல் தொலைக்காட்சி பார்த்த திருநாவுக்கரசர் இன்று இருந் திருந்தால், நடந்து, தவண்டு, உருண்டு, புரண்டு போய்க் கைலைக்காட்சியைக் கண்டு கழித்திருக்கமாட்டார். மடிக் கணினியைத் தடவித்தடவியே கைலாயத்தைக் கண்முன்னே கொண்டு வந்திருப்பார். மடிக்கணினியை தொலைக்காட்சியில் தொடர்புபடுத்தி பெரிதாகப் பார்த்து மகிழ்ந்திருப்பார். இல்லை யென்றால் கட்டிலில் படுத்து ஐபொட்டை முகத்தின் நேரே பிடித்து ஆனந்தமாய் கைலைக்காட்சியைக் கண்டு அனுபவித்திருப்பார்.

31

நின்றபடிப் பத்துமாடி ஏறிக் கண்ணுக்கெட்டும் தூரம் வரை கண்டு கழிக்கின்றேன். விமானத்தில் இருந்தபடியே உண்டு குடித்து கழித்திருந்து உலகெல்லாம் வலம் வருகின்றேன். மயிலேறி உலக வலம் வந்த முருகப்பெருமானும், மயிலின்

சிறகுகளை வருத்தித் தான் பயணம் செய்த அனுபவத்தை எண்ணி இப்போது ஏங்கித்தான் இவ்வுலகை வாஞ்சையுடன் பார்த்திருப்பார்.

பாடசாலை சென்ற பிள்ளை. இன்னும் தான் வீடு வரவில்லை, என்று ஏக்கங் கொண்ட ஆச்சி, வாசற்படி நின்று வருத்தம் கொள்ளத் தேவையில்லை. செல்போன் (Handy) கையில் இருந்திருந்தால், அழுத்தித்தான் பார்த்திருப்பாள். ஆறுதலும் அடைந்திருப்பாள்.

கணினி முன் இருந்த வண்ணம் கடகடவென்று கடிதம் எழுதி, கடித நண்பர் தொடர்புகொண்டு Whatsapp, Viber வினாவுக்கு விடை பரிமாறும். இக்கால நிலையை எண்ணிப் பார்க்கும்போது கடித உறை வாங்கி முகவரியை முன் எழுதி முத்திரையை அதில் ஒட்டி வாய் பிளந்த பெட்டியிலே போட்டுவிட்டு வாரக் கணக்காய்க் காத்திருந்து பதில் கண்டு பதில் அனுப்பிய பருவகால நினைவுகள் இன்று பரிதாபமாக என்னைப் பார்க்கின்றன.

எறும்பு உணவு சேர்ப்பதுபோல் பந்தி போட்ட நூலகங்களுள் நுழைந்து நுழைந்து என் பசிக்கு உணவுகளைச் சேகரித்து உண்டு கக்கிய ஆய்வுக் கட்டுரை பார்த்த இன்றைய சென்னை லைப்ரரி . கொம் (Chennai library.com) என் காலடியில் கிடந்து ஆய்வு செய், ஆய்வு செய் என்று என்னைக் கடித்துக் கிளறுகிறது.

இப்படி எத்தனையோ ஏக்கங்களுடன் என் 18, 20கள் நான் இன்று இருந்திருக்கலாமே என்று என் இதயக்கதவைத் தட்டித்தட்டி தொடர்பாடல் செய்கிறது. மீண்டும் நான் இறந்து இப் பூமியில் இளையவளாய்ப் பிறக்கவேண்டும். காலம் காலமாய்க் காணுகின்ற புதுமைகளை இளமைக் காலத்திலேயே இரசித்து இன்புற வேண்டும்.

**பொறாமை**

*புகழடைந்தார் நிலை கண்டு பொறாமையில் புழுங்காது*

*புகழடையக் காரணத்தைப் புரிந்து கொண்டு – உங்கள்*

*புகழ் வாழ்வு காண புரிந்தொழுகல் சாலச் சிறந்தது.*

# என் கேள்விக்கு என்ன பதில்

தமிழகத் தாத்தா!

உங்களை நம்பினேன். இன்று கேட்கிறேன். என் கேள்விக்கு என்ன பதில். இரட்டைக் கலாசாரம் மத்தியில் தமிழச்சியாய் ஜேர்மனி மண்ணில் வாழுகின்ற ஒரு சின்னவள் யான். சிரந்தாழ்த்தி சில கேள்விகள் உங்கள் காதுகளுக்குச் சிந்துகின்றேன். மனங்கொள்ள முறையாய் விடை நீங்கள் தரவேண்டும். என் தாய் என்னைத் தமிழ் கலாசாரத்தில் வளர்க்கின்றாள் என்று தான் நினைக்கின்றேன். உங்கள் ஆதரவாளர்களின் தொலைக்காட்சி என்று சொல்லப்படுகின்ற கலைஞர் தொலைக்காட்சியே முதல் முதல் என் வீடு தேடி வந்த ஒலி ஒளிக் காட்சி. தமிழர் உணவு, உடை, மொழி, கலாசாரம் கற்க இந்த ஊடகமும் ஒரு கல்விக்கூடமாக அமையும் என்று என் தந்தையும் இணைந்தே தொலைக்காட்சி இணைப்பைத் தந்தார். தமிழ் மழை கொட்டும் உங்கள் வசனநடையில் மகிழ்ந்தவர்கள் அல்லவா என் பெற்றோர். உங்கள் பொக்கை வாயிலிருந்து புறப்பட்டு வந்த தமிழ் கண்டு புளகாங்கிதம் கொள்வோம். இன்று உங்கள் நாட்டில் உங்கள் ஆட்சியில் தமிழகம் இருந்து புறப்பட்டு வெளிநடப்புச் செய்யும் தமிழ் கலாசாரம் கண்டு மனம் மிக வருந்துகின்றோம்.

32

தாத்தா! கோடையென்ன, மாரியென்ன போர்த்திக்கட்டிய உடையில் நான் வெளிவருவேன். கேட்டால், தமிழர் கலாசாரம் என்று ஆடையில் அடக்கம் போதித்தாள் என்தாய். அந்நிய ஆடவர் கைபடும்போது அருவருப்பு உணர்ச்சி தோன்ற வேண்டும் என்று கற்பு மொழி ஊட்டினாள் என் அன்னை. இக்காலகட்டத்திலே உங்கள் தொலைக்காட்சி இணைப்பைத் தந்தார், என் தந்தை.

ஏங்கி விட்டோம். விநாயகர்சதுர்த்தி என்றால் தலைமுழுகித் தெய்வதரிசனம் காண ஆலயம் செல்வது வழக்கம். அந்தக் காட்சிகளை இந்திய மண்ணிலே எவ்வாறு நடக்கிறது என்று பார்க்கலாம். இந்த ஆலய வழிபாட்டின் மகிமைதனை மனங்கனியக் காணென்று தொலைக்காட்சி முன் இருத்தினர் என் இனிய பெற்றோர். ஆனால் நடிக நடிகையர் அங்கங்கள் எல்லாம் அங்கிங்கெல்லாம் தென்பட ஆடைகள் அணிந்து பேட்டி என்ற பெயரில்போட்டு வந்த ஆடைகளைக் கண்டபோது ஆச்சரியப்பட்டேன். அப்படியென்றால், எனக்குள் தோன்றிய கேள்வி. அம்மா எனக்கு இங்கே சொன்னதெல்லாம் பொய்யா தாத்தா? தமிழ் கலாசாரத்தில் ஊறிய தனித்துவமான நாடு இந்தியா என்று என் அம்மா சொன்னதெல்லாம் பொய்யா தாத்தா?

அரசியல்வாதியாய் யான் உங்கள் தோற்றத்தைக் காணவில்லை. செந்தமிழ்க் காவலராய் சிந்தையில் உங்களைக் கொண்டுள்ளேன். உங்கள் முன்னே கால் நீட்டிக் கால் நீட்டிக் காட்சி பொம்மைகளாய் துண்டுகட்டி மேடைகளில் தொங்கி ஆடும் மங்கையர்களைக் கறுப்புக் கண்ணாடியூடாக நீங்கள் கண்டு கொண்டிருப்பதைப் பார்த்தபோது, உங்களைப் பற்றி அம்மா எனக்குச் சொன்னதெல்லாம் பொய்யா என்று சந்தேகிக்கின்றேன்.

மக்கள் உள்ளங்களில் நல்ல விடயங்களைப் பதிக்கும் நல்ல மாயப் பொருள் சினிமா என்பார்களே. அந்நிய நாட்டில் தமிழர் கலாச்சாரத்துடன் தமது வாரிசுகளை வளர்க்கத் துடிக்கும் என் பெற்றோர் போன்றோர்களின் எண்ணங்களில் மண்ணைத் தூவும் கைமருந்தாக அல்லவா இவ்வாறான தொலைக்காட்சிகள் இருக்கிறன. நாம் நாமாக வாழவேண்டும் தாத்தா. அந்நிய மோகம் நமக்கு வேண்டாம் தாத்தா. இந்த மண்ணில் அந்நிய கலாசாரத்தின் அருவருப்புகளைக் கண்டு கொண்டிருக்கும் எம்போன்ற வளர் தலைமுறைகளுக்கு நல்ல மனப்பதிவுகள் கிடைக்காதா?

அருவருப்பான காட்சிகளைக் குடும்பமாய் கண்டுகழிக்க வழிசெய்த தாத்தாவே! கண்மூடி நான் இருக்க இந்திய மண்ணில் நான் பிறக்கவில்லை. ஜேர்மன் மண்ணிலே பிறந்து வாழும் ஒரு தமிழிச்சி. இக்காட்சிகளை இன்னும் நாம் காணத்தான் வேண்டுமா? கேட்பேன், கேட்பேன் திரும்பத் திரும்பக் கேட்பேன். இத்தனை விடயங்கள் தவிர இன்னும் பல என் நெஞ்சில் இன்னல்கள் செய்கின்றன. மீண்டும் உங்கள் பதில் கண்டு தொடரும்.

இவள்

தமிழ்மகள்

# ஒரு நாட்டின் உயர்வுக்கு ஆசிரியர் பங்கு

சூரியனிலிருந்து எறியப்பட்ட நெருப்புப் பந்து தணிந்தது. பூமி என்னும் அழகான வடிவாய் உருமாறியது. உயிரினங்களும் மரங்களும் தோன்றி அற்புதமான உலகாய் உருவெடுத்தது. இயற்கை மனிதனுக்குக் கிடைத்த அழகான கொடை ஆகும். இத்தனையும் இயற்கையிலிருந்து பெற்றுக்கொண்ட மனிதன், தன் முயற்சியைப் பயன்படுத்தி அழகான நவீன பூமியாக மாற்றியமைக்கின்றான். இப்பூமியைச் சிலர் ஆக்க நினைக்காது கொடிய ஆயுதங்கள் கொண்டு அழிக்க நினைக்கின்றார்கள். புதுமைகள் புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாக வேண்டுமானால், சிறப்பான கல்வியை இளைய தலைமுறையினர் காணவேண்டும். உலகம் அழிவை நோக்கிப் போகாமல் இருக்கவேண்டுமானால், ஒழுங்கான முறையில் பிள்ளைகள் வளர்க்கப்படல் வேண்டும். இதற்கு அடிப்படைக்கல்வி சிறப்பாக இருக்கவேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய பெரியவர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் இவை நான்கும் ஒரு பிள்ளைக்கு அவசியம். பிள்ளை பிறந்தவுடன் அம்மாவைக் காண்கின்றது. அம்மா சொல்லி அப்பாவைக் காண்கின்றது. அப்பா, அம்மா பிள்ளைக்குக் குருவைக் காட்டுகின்றார்கள். ஆசிரியர்கள் கடவுளை வழிபட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றார்கள். எனவே ஒரு பிள்ளையை உருவாக்கும் பொறுப்பு முதலில் பெற்றோருக்கு இருக்கின்றது. அதன்பின் ஆசிரியர் கையிலே தான் தங்கியிருக்கிறது. தெய்வத்தைவிட முன்னிலையில் வைத்துப் பாராட்ட வேண்டியவர்கள் ஆசிரியர்களே. "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்பார்கள். ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் ஆசிரியரைப் பொறுத்துத்தான் கல்வியில் அப்பிள்ளை காட்டும் ஆர்வமும்

முன்னேற்றமும் வளர்ச்சியும் தங்கியிருக்கும். ஆசிரியர் கற்பித்தவை மாணவர்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்திருத்தல் வேண்டும். குரு நிந்தை செய்வோர், குரு நிறைவாய்க் கிடைக்காதவர்களாகத்தான் இருக்க வேண்டும். மாணவர் வகையை "அன்னம், ஆவே, மண்ணொடு கிளியே, இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யெரி" என தலை, இடை, கடை மாணாக்கராய்ப் பிரித்தல் போல நல்லாசிரியர்களுக்கும் இலக்கணம் கூறப்படுகின்றது.

*நிலம், மலை, நிறைகோல், மலர் நிகர் மாட்சியும்*
*உலகியல் அறிவோடு உயர் குணம் இயையவும்*
*அமைவன நூலுரை ஆசிரியர்"*

எனப்படுகிறது.

தன்மேலே இருக்கும் சுமையால் கலங்காது, தோண்டினாலும் துன்புறாது நிலம். அதேபோல் விவாதங்கள் செய்து வருத்துபவர்களைக் கண்டு கலங்காது பொறுமை காப்பவர் ஆசிரியர். பொருள்களின் அளவைச் சந்தேகம் இல்லாமல் காட்டும் தராசு போல, சந்தேகம் தீருவதற்காக கேட்கப்பட்ட வினாவின் பொருளை விளக்குவதாலும், நடுநிலைமை மாறாது நிற்பதனாலும் தராசு ஆசிரியர்களுக்கு உவமையாக்கப்பட்டது. எல்லோராலும் விரும்பப்படுகின்ற மலர் போல் எல்லோராலும் விரும்பப்படுபவராகவும் சரியான நேரத்திலே பூ மலர்வது போலே கற்பிக்கும் நேரத்திலே முகமலர்ச்சியுடன் கற்பிப்பவரே ஆசிரியர். ஆனால் கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு போன்ற ஆசிரியர்களும் இருக்கவே செய்கின்றனர். ஆயினும் ஒரு மாணவன் வளர்ச்சிக்கு பெற்றோரை ஊக்கப்படுத்தி அதற்கான அறிவுரை வழங்கி அம்மாணவனை நல்நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஆசிரியர் ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

வீட்டுச்சூழல் தவிர்ந்து மற்றைய பொழுதுகளில் தமது பள்ளிப்பருவத்தில் கூடுதலான நேரத்தை பாடசாலையிலேயே ஒரு பிள்ளை கழிக்கின்றது. அந்நேரத்தில் அப்பிள்ளையைக் கண்காணிக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடமே ஒப்படைக்கப்படுகின்றது. குழந்தைகள் உலகத்திற்கு அவசியம். இவர்களே எதிர்கால உலகத்தை ஆளப் போகின்றவர்கள். எதிர்கால உலகை ஆளப் போகின்றவர்களை ஒழுங்கானமுறையில் வழிநடாத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. தவறு செய்யாத மனிதன் உலகத்தில் இல்லை. அந்தத் தவறை அறிந்து அவன் திருந்தி நடக்கும்போது அவன் வாழ்க்கை சிறப்புப் பெறுகின்றது. அனைத்தும் அறிந்த பெரிய மனிதர்களே தவறுகள் செய்கின்றபோது சிறிய பிள்ளைகள் எப்படித் தவறு செய்யாமல்

இருப்பார்கள். பிள்ளைகள் களிமண் போன்றவர்கள். அவர்களை எப்படியும் நாம் வடிவமைக்கலாம். முறையானவர்கள் கைகளில் வளர்க்கப்படும் பிள்ளைகள் முறையாக வளர்வார்கள். தவறானவர்கள் கைகளில் வளர்க்கப்படும் பிள்ளைகள் முறைகேடாக வளர்வார்கள். பிள்ளைகளில் மட்டும் தவறை நாம் காணமுடியாது. ஏனெனில் அவர்கள் பூமியில் பிறப்பெடுக்கும் போது வெற்றுப் பத்திரிகைகளாகவே வந்து பிறந்தார்கள். பெற்றோரும் சூழலுமே அவர்களில் பதிவுகளை ஏற்படுத்தக் காரணங்களாகின்றன.

ஆசிரியர் தொழில் மற்றைய தொழில்களைவிடப் பொறுப்பான தொழில். ஒரு சமூகத்தை உருவாக்கும் தொழில். பிள்ளைகளில் அவதானமும் அவர்களுக்குப் பாதுகாப்பும் கொடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ள தொழில். இத்தொழிலுள்ள ஆசிரியர்கள் தமது தொழிலை ஒரு சேவை மனப்பாங்குடன் செய்தல் வேண்டும். பொறுப்பில்லாது பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தலே எமது கடமை. அவர்கள் ஒழுக்க நடத்தைகளுக்கு நாம் காரணம் இல்லை என்று ஒரு ஆசிரியர் சொல்ல முடியாது. ஒரு கடமையில் ஒருவர் ஈடுபடும்போது அக்கடமையில் முழுக் கவனமும் எடுத்தல் வேண்டும். அக்கடமையில் வருகின்ற நன்மை தீமைகளுக்கு அவர் களே காரணங்களாகின்றனர். ஒரு மாணவனுக்குக் கல்வி கற்பிக்கும்போது அம்மாணவனைப் பற்றிய பூரண அறிவு அவனைக் கற்பிக்கும் ஆசிரியருக்கு இருக்கவேண்டும். அரசாங்கப் பணத்தில் வாழ்ந்து கொண்டு தாமும் சோம் பேறிகளாக இருந்துகொண்டு தமது பிள்ளைகளையும் சோம்பேறிகளாக வளர்க்கும் பெற்றோர்களால் சீரற்ற பழக்கவழக்கங்களுள்ள பிள்ளைகள் உருவாகுவதாக ஆசிரியர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தாமும் தொழிலுக்குப் போகாமல், மதுபானங்களுக்கு அடிமையாகி வீட்டிலே அடைந்து கிடக்கும் பெற்றோர்களின் பிள்ளைகள் போதைப்பொருளுக்கு அடிமைகளாவதாகவும் அப்பிள்ளைகளின் பழக்கவழக்கங்கள் மோசமான நிலையில் இருப்பதாகவும் இவையெல்லாம் எம்மால் அவதானித்துக் கொண்டிருக்க முடியாது என்றும் சலிப்படைகின்ற எத்தனையோ ஆசிரியர்கள் நம் மத்தியில் வாழ்கின்றார்கள். பொறுப்பான பதவி வகித்துக்கொண்டு பொறுப்பில்லாத வார்த்தைகளை நாக்கூசாது சொல்பவர்களாக இவர்கள் காணப்படுகின்றார்கள். மருத்துவர் ஒரு உயிருக்கு எப்படி உத்தரவாதமோ அதேபோல் ஒரு ஆசிரியர் ஒரு உயிரின் வாழ்வியலுக்கு அவசியமானவர். பணம் ஒன்றே குறிக்கோளாகப் பதவி வகிப்பவர்கள், இந்த நாட்டிற்குப் பாவம் செய்பவர்களாகக் கருதப்படுவார்கள். ஏனென்றால், ஒழுக்கம் மீறிய ஒரு பிள்ளை வளர்ந்து பெரியவனாக வரும்போது அப்பிள்ளை அந்நாட்டைச் சீரழிக்கும் ஒரு குடிமகனாக உருவெடுப்பான். இப்படி ஒவ்வொரு

பிள்ளைகளும் வளருகின்ற போது, அந்நாட்டில் குற்றம் செய்பவர்களும், சட்டத்தை மதிக்காதவர்களும், ஒழுக்க நடவடிக்கைகளை மீறுபவர்களும் போதை வஸ்துகளுக்கு அடிமைகளாகுபவர்களும் அதிகரித்துக் காணப்படுவார்கள். அதன்பின் அந்நாட்டின் வீழ்ச்சி நினைத்துப் பார்க்கமுடியாத அளவிற்குப் பார தூரமானதாக இருக்கும்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்றெல்லாம் பழமொழிகள் உண்டு. பள்ளிப்பருவத்தில் கண்ணும் கருத்துமாக வளர்க்கப்படும் பிள்ளை எதிர்காலத்தில் சிறந்த ஒரு பிரஜையாக உருவெடுக்கும் என்பது திண்ணம்.

1. பாடசாலை முதல்நாள் என்பது ஒவ்வொரு மனிதனும் அரிச்சுவடு தொடங்கும் ஒரு கோயில். கல்வி என்னும் கடவுள் அருள்தரும் ஆலயம். வாழ்வின் வெளிச்சத்திற்கு அடிகோலும் வசந்தவாசல்.

2. ஐரோப்பியநாடு சுகமானது அதுவே துணையின்றி வாழ்வார்க்குப் பயமானது.

3. ஆடம்பரமான வாழ்வு வரும் போகும். ஆதரவான உள்ளம் கிடைப்பதும் அரிது தொடர்வதும் அரிது.

4. எது எப்படி எங்கே வாழவேண்டுமோ. அது அங்கே அப்படியே வாழவேண்டும்.

5. கலைகள் மனிதனுக்குக் கிடைப்பது கடவுள் கொடுக்கும் வரம்.

6. ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் ஒரு மனிதன் ஒளிந்து கொண்டிருப்பான். உறங்கிக் கொண்டிருக்கும் அவனைத் தட்டி எழுப்பினால். தனது வேலையைத் தாராளமாகக் காட்டத் தொடங்குவான்.

# குழந்தை வளர்கிறதா?
# வளர்க்கப்படுகிறதா?

பஞ்சு உடல் ஒன்று பூமித்தாயிடம் புகலிடம் தேடி அன்னை என்ற ஆதாரத்தின் துணையோடு அகிலத்தை வந்தடைகின்றது. இராட்சத உருவங்களாய்ச் சுற்றித் தன்னைச் சூழ்ந்து நிற்கும் வைத்தியர்களையும் இருண்ட உலகு விட்டு வெளிச்சமான ஒரு புரியாத உலகத்தையும் கண்ட குழந்தை தொண்டை விரித்துத் தன் தொனியைக் குரல் எனக் கொண்டு வருகின்றது. குரல் எடுக்க யாரும் துணை கொடுத்தாரா? புரியாத உலகில் வெற்றுக் காகிதமாய் எழுதப்படாத இதயத்துடன் பிறந்த அந்த விநாடி தொட்டு வியத்தகு சாதனை புரியும் வின்னர்களாகத் தடம்பதிக்க அவர்கள் வளர்ந்தார்களா? வளர்க்கப்பட்டார்களா?

தொட்டில் வந்த பிள்ளை சுவை தேடி, உடல் உறுதிநாடி அவதரிக்கும் போதே அன்னையின் மார்பகத்தில் பால் சுரக்கச் செய்து கட்டுச் சோற்றுடன் உலகுக்கு உதயமாகிறது. உணவின்றி உடல் எங்கு உருப்பெறப்போகிறது என்று உள்ளிருந்து உற்பத்தித் தொழிற்சாலையை ஊக்குவித்ததோ! பாதப்பெருவிரல் பக்குவமாய்த் தான் இழுத்து, சிறுவாயில் விரல் வைத்துச் சுவை பார்க்கும் போதும், பட்டுப் போன்ற பாதம் நோகாது உருண்டு பிரண்டு சிற்சில பற்பல யோகாசனக் கலையைத் தானாகவே செய்து உடலை வளர்க்கின்றது. அதற்காக ஒரு உபாத்தியாயரை உதவிக்காய் அமர்த்தினோமா? என்னே அற்புதம்!

உறுதியாக உணவு உட்கொள்ள உடல் வலுப்பட்டு விட்டதா? பற்களின் தேவை. உணவைப் பதப்படுத்துவதற்காக அன்று தொடங்குவது அகப்பட்ட பொருளை வாயினால் கடிகடியென்று கடிக்கின்றது. அது விறகா விரலா என்பதைப் புரியாத அஃறிணைப் பொருளல்ல குழந்தை. கடிப்பதையே காண்கின்றோம். அதன்

34

கருத்தைப் புரிந்தோமா? அத்தனையும் அதன் பற்கள் வெளிவரவேண்டும் என எடுக்கும் முயற்சியே. தன் தேவைக்காய்த் தானாகத் தோற்றுவித்த பற்களல்லவா!

அறிவு துளிர்க்கின்றது. அண்மையிலுள்ள பொருளென்ன. சேய்மையிலுள்ள பொருளென்ன. அளைந்து உறவாட ஆசை பூக்கின்றது. ஆராய மனம் துடிக்ககையில் பட்டதைத் துணைகொண்டு எழுந்து பிடித்துப்பிடித்து நோக்கிய குறியை நாடி நடைபயில்கின்றதே. நம் துணை தேவையென நாம் எடுக்கும் முயற்சியெல்லாம் நம் தற்பெருமை தானென்று நாம் அறியவேண்டும். தானாய் தன் முயற்சியில் தானாய் எழுந்து தளிர்நடை பயிலும். சமநிலைப்படுத்த தன் இரு பிஞ்சுக் கரங்களையும் சமநிலைப் பலகையாய் விரித்துத் தன் தள்ளாடும் தளிர்ப்பாதங்களைத் தாண்டித் தாண்டி வைத்து அழகாய் நடந்துவரும் காட்சியை அகக்கண்ணிலே நிறுத்துங்கள். ஐயோ இதுவன்றோ அதிசயம்!

பொருள் நோக்கிச் சுவை நோக்கி எம் அதரங்களின் அசைவை நோக்க முனைகின்றதே. அன்று தான் பேச்சுக்கலைக்கு முக்கியத்துவம் தேடுகின்றது. பேசுகின்றபோது எங்கள் உதடுகளின் அசைவை இமைவெட்டாது. உற்று நோக்கித் தன் மென் இதழ்களையும் அசைத்துப் பார்க்கும். அங்கே பேச எத்தனிக்கும் முயற்சியின் முழு வடிவத்தையும் நாம் காணலாம்.

இத்தனையும் சுயமாய் நடைபெறுகின்ற போது பறவைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே பாகுபாட்டை நாம் காண்கின்றோம். குழந்தைகள் நடைபயிலும் காலம் வரை உணவு ஊட்ட வேண்டியவர் உதவிநாடி நிற்க வேண்டியுள்ளது. இதற்காகப் பெற்றோர்கள் என்ற அந்தஸ்தைத் தந்த அந்தக் குழந்தைகளில் எங்கள் கருத்துக்கள் அத்தனையையும் திணிக்க முயலலாமா? அவர்களுக்கென ஓர் உலகம், உணர்வு, ஆசைகள் அனைத்தும் உண்டு. எழுந்து நடமாட எவ்வளவோ முயற்சிகளைத் தங்களுக்காகத் தாங்களாகவே மேற்கொள்ளும் அவர்கள், தாமாக வாழ முயற்சி எடுக்க மாட்டார்களா! அவர்கள் அவர்களுக்காகவே இப் பூமியில் பிறப்பெடுத்தவர்கள். இதனையே அப்துல்கலாம் அவர்கள் "உங்கள் குழந்தைகள் உங்களுக்கூடாக வந்தவர்கள் உங்களுக்காக வந்தவர்கள் அல்ல. அவர்கள் வளர நீங்கள் உதவியாக இருக்கலாம். அவர்கள் உணர்வாக மாறுதல் கூடாது" என்றார். குழந்தை வளரத் தாய் வளர்க்கிறாள். என்பதைவிட தாய் தாயாக வளர்கிறாள் என்பதே மெய். குழந்தை குழந்தையாக வளர்கிறது என்பதும் மெய் ஆகும்.

# சுதர்மம்

ஆண்டவன் சிருஷ்டியின் அற்புதப் படைப்பு மனிதன். இறைவன் மனிதன் கையில் முக்கிய பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு அமைதி காணுகின்றான். இப் பொறுப்புக்களில் ஒன்று உன்னத பண்பாகிய நன்மை செய்தல். நன்மை செய்தல் என்ற பதத்தினுள் அடங்கும் உதவி என்ற பதத்திற்குள் உள் நுழைவோம். கேட்பவர்க்கு இல்லையென்னாது வாரி வழங்கும் கொடையும் உதவியே. "உடுக்கை இழந்தவன் கை போல் ஆங்கு இடுக்கண் களைவதும்" உதவியே.

வாழ்க்கையிலே நிம்மதி இழந்து, உறவுகளைப் பறி கொடுத்து, அல்லல்பட்டு அடைக்கலம் எனப் புகுந்தவர்களை அந்நியநாடு, அன்புக்கரம் கொடுத்து ஆதரவு தந்து அடிப்படை தேவைகள் மட்டுமன்றி ஆடம்பர தேவைகளையும் பூர்த்தி செய்கின்றது. சொந்தமா? பந்தமா? சொல்லிக் கொள்ளும் நட்பா? யாரென்று தெரியாத ஒரு அந்நியனை தன் உடன்பிறப்புப் போல் நினைத்து உதவுகின்றது. இங்குதான் உதவியின் உண்மைத் தன்மையை நாம் அடையாளம் காணமுடிகின்றது. இன வேறுபாடு, சாதிவேறுபாடு, மதவேறுபாடு என மனிதனை மனிதனே பங்கு போட்டுக் கொள்ளும் நாடுகளுக்கிடையே ஒரு எடுத்துக்காட்டாக நாம் புகுந்த மனை விளங்குகின்றது. அதைப் போற்றிப் பாடாவிட்டாலும் தூற்றாமல் இருக்கவேண்டியது எமது கடமை.

35

உதவி பற்றி நாம் விரிவாக நோக்குவோமேயானால், அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்திய பொதுமறை திருக் குறள் தந்த தெய்வப்புலவர், திருவள்ளுவர் தான் அனுபவித்து உதிர்த்த வார்த்தைகளான,

*"உதவி வரைத்தன்று உதவி உதவி*
*செய்யப்பட்டார் சால்பின் வரைத்து"*

என்ற குறளை எடுத்து நோக்கினால், உதவியைப் பெறுபவர்க்கு நாம் செய்யும் உதவி எந்த அளவிற்கு பயன்படுகின்றதோ. அந்த அளவே உதவியின் அளவு அமையும் என்பதே அதன் உள்ளார்ந்த பொருள் ஆகும். நாம் உதவியை யாருக்குச் செய்கின்றோம் என்பது முதலில் அறியப்படல் வேண்டும். அதாவது "பாத்திரம் அறிந்து பிச்சை போடு" என்ற பழமொழியோடு இக்கருத்து ஒன்றி நிற்கின்றது. பசித்தவனுக்கு உணவு பரிமாறப்படல் வேண்டும். எனக்குப் பசியில்லை என்று கூறும் விருந்தாளியை நோக்கி இதுதான் சுதர்மம் என்று கூறி வலுக்கட்டாயமாக உணவைத் திணிப்பது எந்தவகையில் நியாயமாகப்படும். கேட்டோமா? கொடுத்தார், பெற்றோம் என்று அவர் கூறும் நிலைதான் ஏற்படும். அவன் சால்பின் வரைத்துத்தானே உதவி அமைதல் வேண்டும். பழங்கள் இருக்கும் வரை பழமரத்தைப் பறவைகள் அண்மிப்பது போல ஒட்டி உறவாடிய சொந்தங்கள், வெறுமையாக வழியிழந்து நிற்கும் போது விட்டு விலகிவிடும். இது நடைமுறை வாழ்க்கை. நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற கருத்துக்களே உலகுக்கு ஏற்ற பொதுமொழியாக அமைகின்றன. மனிதனிடம் கொடுக்கப்பட்டிருப்பது அட்சயபாத்திரம் அல்லவே, கொடுக்கக் கொடுக்கக் குறையாமல் இருக்க. எனவே "தனக்குண்டு தானம் வழங்கு" என்பதும் சுயபுத்தி கொண்டு சுயமாகச் சிந்திக்க வேண்டியதுதான். ஆனாலும், மனிதன் கர்மம் செய்யப் பிறந்தவன். ஏதோ ஒருவகையில் அவன் கர்மம் செய்தேயாக வேண்டும் என பகவத்கீதை கூறுகின்றது. தனது மகனுக்காவது ஒரு மனிதன் கருமம் செய்திருப்பான். எனவேதான் இறுதி மரியாதையில் மகன் அவனுக்குக் கர்மம் செய்கின்றான் என அர்த்தமுள்ள இந்துமதத்தில் கண்ணதாசன் விளக்கியுள்ளார். கர்மம் செய். பலனை எதிர்பாராதே என பகவத்கீதை கூறுவது போல் ஔவையும்

*"நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி*
*என்று தருங்கொல்? என வேண்டா - நின்று*
*தளரா வளர் தெங்குதாள் உண்ட நீரைத்*
*தலையாலே தான் தருதலால்"*

என்று தன் வாக்குண்டாம் என்னும் நூலில் கூறியிருக்கின்றார். அதாவது அடியிலேயிருந்து வேர் மூலமாகக் குடித்த நீரை இளநீராகத் திரும்பவும் தென்னை மரம் தருவதனால், அதேபோல் ஒருவருக்கு நன்றி செய்தால் அந்த உதவிக்கு எப்பொழுது பதில் உதவி புரிவாரோ என்று நினைக்க வேண்டியதில்லை.

உதவி பற்றிக் கீதையும் வள்ளுவமும் முரண்பட்டு நிற்பது போல் தோன்றினாலும் வள்ளுவம் கூறுவது, நீங்கள் செய்யும் உதவியின் பயன் அதனைப் பெற்றுக் கொள்ளுபவனின் மனதைப் பொறுத்தது என்பது மட்டுமே. அந்தப் பலனைத்தான் எதிர்பார்க்காதே என்று கீதை சொல்கின்றது. வள்ளுவம் கூட பலனை எதிர்பார் என்று கூறவில்லை. பலனானது உதவி பெற்றுக் கொள்பவர் மனதைப் பொறுத்தே அமையும் என்கிறது. இந்துமதத்தின் அடிப்படை பகவத்கீதை. பகவான் கிருஷ்ண பரமாத்மா மூலம் இறைவாக்காக அருளப்பட்டது. கீதையைத் தலைமேற்கொண்டால், 'உன்னுடைய கர்மம் நன்மை செய்வதாக இருந்தால், அதை யாருக்கு வேண்டுமானாலும் செய் அதுவே சுதர்மம்" என்பதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். இதை அடிப்படை வித்தாக மனதிலே ஆழமாகப் பதிக்கவேண்டும். நன்மை செய்வதாக இருந்தால், சொந்தமோ, பந்தமோ, உறவோ, பகையோ, யாருக்கு வேண்டுமானாலும் செய்ய வேண்டும். இதனையே ஔவைப்பிராட்டியும்

*"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா*
*உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா*
*மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்*
*அம் மருந்து போல் வாரும் உண்டு"*

என்கிறார். உடன்பிறப்பு, சுற்றம் என்று உன் கவனத்தைக் குறுக்கிவிடாதே. உறவினர்கள் தான் நன்மை செய்வார்கள் என்றிருக்க வேண்டியதில்லை. மலையிலுள்ள மருந்து உன் நோயைத் தீர்க்கின்றது. அந்த மருந்து போன்ற அந்நியர்களும் உதவிக்கு வருவார்கள் என்று அழகாகச் சொல்லியிருக்கின்றார். அதனால் எமது பார்வையானது விரியவேண்டும். அகலக்கண் கொண்டு பார்க்க வேண்டும்.

எனவே "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" "முடிவு இறைவன் கையில் இருக்கின்றது. நீ வெறுமனே செயற்படு" என்னும் வாக்கியங்களை அகங்கொண்டு ஆட்டி வைப்பவன் இருக்கின்றான். ஆவதைப் பார்ப்போம். எனத் தெளிவான சிந்தனையுடன் செயல்படுவோம். நாம் பெற்ற உதவிகள் மனதில் பதிந்திருக்கும் என மனந்தெளிவோம். ஒரு கரம் வழங்க மறுகரம் அறியாதிருக்கும் எனத் தொழிற்படுவோம்.

# தமிழர் கலாசாரமும் புலம் பெயர்வில் பெற்றோர் பங்கும்

இவ்வுலகம் உருவாகி கோடிக்கணக்கான ஆண்டுகளாகி விட்டன. உயிரினங்கள் உருவாகி பல இலட்சக்கணக்கான வருடங்கள் ஆகிவிட்டன. அன்று தோன்றிய நாள் முதல் மனித இனம் பிறந்து இறந்து பின் புதிதாய்ப் பிறந்து எனத் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றது. இவ்வாறே மனித இனம் தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதற்கு அம்மக்களிடம் இருந்து வந்த உறவுமுறைகளே காரணமாக இருந்திருக்கின்றன. ஆரம்பகாலம் உண்ணவும் உறங்கவும் வாழ்ந்த மனிதனின் சிந்தனை வளர்ச்சியுற்றதன் காரணத்தால், இன்று சிறந்த கலாசாரப் பண்புகளைக் கொண்ட மனிதனாக வாழ்ந்து கொண்டிருக் கின்றான். இன்றைய வாழ்க்கைச் சூழ்நிலையில் புலம் பெயர்வில் எமது இளந்தலைமுறையினர், கலாசாரம் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பது கேள்விக்குறியாக இருக்கின்றபோதும் அதைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு பெற்றோராகிய எம்மைச் சார்ந்தே இருக்கின்றது.

முதலில் கலாசாரம் என்றால் என்ன என்கின்ற தெளிவு எம்மத்தியில் ஏற்பட வேண்டும். வாழுகின்ற காலநிலை பௌதிக சூழலுக்கேற்ப மனிதனால் ஏற்படுத்தப்பட்ட கால ஆச்சாரமே கலாசாரம் எனப்படுகின்றது. இது ஒரு எழுதப்படாத சட்டமாக இருக்கின்றது. சுவாமி விவேகானந்தர் கருத்தும் இதுவேயாக இருக்கின்றது. கலாசாரம் என்னும் சொல்லானது பழந்தமிழ் இலக்கியங்கள் எதிலுமே காணப்படவில்லை. கல்சர் (Culture) என்னும் சொல்லானது ஆங்கிலத்திலே வரலாற்றுத் துறையில் ஒரு பொருளிலும் மானிடவியல் துறையில் வேறு ஒரு பொருளிலும் கையாளப்படுகின்றது. கிரேக்கர் உயர் பண்புடைமையை பண்

36

பாடு என்கின்றார்கள். Mathew Arnold என்ற மொழி ஆய்வாளர் கூறும் கல்சர் என்ற சொல்லுக்குரிய விளக்கமானது பண்பாடு என்ற சொல்லுடன் பொருந்தி வருகின்றது. இதே பொருளில் எமது பழந்தமிழ் இலக்கியங்களில் சொற்கள் கையாளப்பட்டிருக்கின்றன. உதாரணமாக "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" என நெய்தற்கலி 16 இலேயும் வள்ளுவர் திருக்குறளிலே பண்புடைமை என்ற தலைப்பில் ஒரு அதிகாரத்தையும் கையாண்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. எனவே கலாசாரம் என்பது பண்பாட்டுடன் பொருந்தி வருவதாக உள்ளது. பண்புபடுதல், பண்பாடு எனப்படுகின்றது. எனவே மனிதனின் பண்பட்ட நிலையே கலாசாரமாகின்றது.

சிந்துவெளி நாகரிக காலத்துக் கலாசாரமானது அக்காலச் சூழலுக்கமைய அமைந்திருந்தது. சங்கம் தொட்டு இன்றுவரை கலாசாரத்தில் மாறுபாடுகள் ஏற்பட்டுக் கொண்டுதான் வந்திருக்கின்றன. சங்ககாலத்தில் கள்ளுக் குடித்தல் ஒரு கூறாக இருந்தபோது அது குற்றமாகக் கருதப்படவில்லை. சமணர் வருகை அதைக் குற்றமாகக் காட்டியது. பெண்டீர் பலரை மணக்கும் வாய்ப்பு இருந்த போது அது பண்பாட்டுக் குறையாகச் சொல்லப்படவில்லை. எனவே காலத்துக்குக் காலம் மாறுபாடுகள் ஏற்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றன.

Pascal Gisberd என்னும் அறிஞர் தன்னுடைய ஆய்விலே சூழ்நிலை சமூக நிலைக்கேற்ப உளம் சார்ந்து உருவாவதே கலாசாரம் என்கிறார். நிலத்தின் பண்பட்டநிலை அக்ரிகல்சர் (Agriculture) போல் மனதின் பண்பட்டநிலை கலாசாரம். எனவே மக்களது அறிவுநலம், கொள்கைநலம், ஒழுக்கநலம், வாழ்க்கைநலம் போன்றவை பண்பட்டநிலையே கலாசாரம் என்று முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இந்நலங்கள் எல்லாவற்றையும் எமது வளரும் தலைமுறையினர் அவர்கள் வாழுகின்ற சூழ்நிலையிலே பெறக்கூடியதாக இருக்கின்றது. இதற்குப் பெற்றோரின் கண்காணிப்பும் அவசியமாகின்றது.

ஒரு இனத்தின் குணநலன்கள் பிறப்பிலேயே வருவதில்லை. பிறந்த சூழல், வளரும், வாழும் சூழலுக்கேற்பவே அமையும். தொடக்கத்தில் இருந்த குணங்கள் பரிணாமவளர்ச்சி, அறிவு வளர்ச்சி, மேம்பட விரிவடையும். வெவ்வேறு இனங்களாகப் பிரிந்து மாறுதலடையும். இல்லையேல் மறைந்து போகும். இதுவே இன்றைய எமது இளந்தலைமுறையினர் நிலையாக இருக்கின்றது. எங்கள் இளந்தலைமுறையினர் சூழல் சுற்றம் நோக்கியே தம் வாழ்க்கைப் பாதையைக் கடக்கின்றனர் என்பது கண்கூடு. ஆனால் அவர்கள் காலில் சக்கரம் பூட்டப்பட்டிருக்கின்றது. கையில் மௌசை வைத்துக்கொண்டு

உலகத்தையே காலடிக்குக் கொண்டு வருகின்றனர். அவர்கள் வெற்றிப்போக்கில் கலாசாரம் கண்ணுக்குத் தெரிவதில்லை. தாம் வாழுகின்ற சூழலுக்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்வார்கள். 1871ஆம் ஆண்டு ஆராய்ச்சியில், ஒரு ஓநாயுடன் சேர்ந்தே வளருகின்ற ஒரு மனிதக் குழந்தையானது ஓநாயுடைய இயல்புகளைப் பெற்றிருப்பதாக டார்வின் எடுத்துக்காட்டுகின்றார். சுற்றுச் சூழலில் இருந்து அகற்றப்படுகின்ற குழந்தை தண்ணீரிலிருந்து அகற்றப்பட்ட மீன் போலாகும் என்று கருதப்படுகின்றது.

எனவே வாழும் சூழலிலுள்ள தவறான போக்குகள், அவர்கள் பாதையில் பங்கம் விளைவிக்காத வகையில் பெற்றோர் பார்வை அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் நீருக்குள் நின்றபடி நீரின் சிறந்த அம்சங்களைப் பெற்றுக் கொண்டு பக்குவ நிலையுடன் வாழும் சூழலைக் கற்றிருக்க வேண்டியது அவசியமாகின்றது. சமுதாய வளர்ச்சிக்கேற்பத் தாமும் வளர்ந்திருக்க வேண்டியதும் கடமையாகின்றது.

கலாசாரம் என்பது தனிமனிதனைச் சார்ந்து நிற்பதன்று தனி மனிதர் பலர் சேர்ந்தது தான் இனம். இனம் பல சேர்ந்ததுதான் சமூகம். எனவே நமது தமிழ் கலாசாரமானது இன வழி சமூகத்தின் போக்கைத் தாங்கி நிற்கின்றது. காலங்காலமாக சிறந்த பல நற்பண்புகளைக் கொண்டதாகக் கருதப்படும் புலம்பெயர்விலும் போற்றிப் பாதுகாக்கப்படல் அவசியமாகின்றது. ஒரு கலாசாரத்தின் மூலவேர்கள் மொழியும் திருமணமுமாகின்றன.

ஒரு மொழி அழிவதாக மொழியியலாளர்கள் தெரிவிக்கின்றார்கள். ஒரு மொழி அழிகின்றபோது அதன் பண்பாட்டு அம்சங்களும் அழிந்துவிடுகின்றன. உலகிலுள்ள 600 கோடி மக்கள் 6000 மொழிகளைப் பேசுகின்றார்கள். 3000 மொழிகள் ஆயிரத்துக்கும் குறைவானவர்கள் பேசுகின்றார்கள். அதிகமான மக்கள் பேசுகின்ற 20 மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வாறான தமிழ்மொழி எமது கலாசாரத்தைச் சுமந்து செல்கின்ற வண்டியாகக் காணப்படுகின்றது. இப்புலம்பெயர்வில் தமது பிள்ளைகளுக்கு தமிழ்மொழியைக் கற்பிக்க வேண்டும் என்ற முனைப்புடன் செயற்படுவோர் குறைவாகவே இருக்கின்றார்கள்.

அந்தப் பெற்றோர்களுடைய பிள்ளைகள் கூட 500, 1000 அந்நியநாட்டுப் பிள்ளைகள் படிக்கின்ற பாடசாலையில் 4, 5 பிள்ளைகளாகவே படிக்கின்றார்கள். அவர்கள் கூட ஒருத்தரை ஒருத்தர் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் தமது கல்வி

மொழியையே பேசுகின்றார்கள். அதைவிடக் கூடிய நேரத்தை அந்நிய மொழிக்காரருடன் செலவு செய்யும் இவர்கள், வீட்டில் பெற்றோருடன் தமிழ் மொழியில் உரையாடுவார்கள் என்று பார்த்தால், வீட்டில் தொலைக்காட்சியுடனும் கணினியுடனும் கைத்தொலைபேசியுடனும் தமது பொழுதைக் கழிக்கின்றனர். மொழி கற்பதற்காகத் தொலைக்காட்சித் தொடர்பை ஏற்படுத்தினோமேயானால், அதில் கலாசார சீர்கேடுகள் நிறைந்தே காணப்படுகின்றன. எனவே மொழியின் முக்கியத்துவம் நோக்கிப் பெற்றோர் தமது பிள்ளைகளின் மொழியறிவை அதிகரிக்கச் செய்யும் வகையில், மொழியில் கவர்ச்சியை ஏற்படுத்தவல்ல கலைகளைத் தமிழ்மொழியில் கற்பிப்பதன் மூலம் தமிழ்மொழியில் நாட்டம் கொள்ளச் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

புலம்பெயர் மக்களுடன் தொடர்பு கொள்வதிலுள்ள இலகுத் தன்மையும் பண்பனுபவமும் நமது மக்களிடம் கிடைப்பதில்லை. ஆசிரியர் தொட்டு வைத்தியர் வரையுள்ள அந்நியோன்யப் போக்கு எம்மவருடன் பழகுவதில் எமது தலைமுறையினருக்குக் கிடைப்பதில்லை. மதிப்பு என்றபெயரில் கண்டிப்பும், வரதட்சணை, தாலிகட்டல் என்றபெயரில் பெண் அடக்குமுறையும் எமது கலாசாரத்தில் எம் இளஞ்சந்ததியினருக்கு வெறுப்பை ஏற்படுத்துகின்றது. இதுவே இலகுவாக நட்புரிமையுடன் பழகக்கூடிய புலம்பெயர் கலாசாரத்தில் விருப்பை ஏற்படுத்துகின்றது. முற்காலம் சமூகம் என்ற அமைப்பு சிறிய அளவில் கூட உருவம் கொள்ளாத காலம் அது. சமூகம் என்ற அமைப்பு உருவான காலத்தில், ஒரு சிலரே சேர்ந்து வாழ்ந்தனர்.

இச்சேர்க்கை ஒரு அமைப்பாக உருவாகும் வரைத் திருமணம் என்ற சமூக அமைப்புமுறை உருவாகவில்லை. ஊரை ஆளும் முறை வர தலைமுறைச் சொத்தாகச் சிலர் அனுபவிக்க விரும்பியபோது திருமணமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. எந்த உடைமையும் தேவையில்லையென இஷ்டம் போல் அலைந்து திரிந்த நிலை மிகப்பழைய நிலை. பின் கால்நடைகள், ஆடவர் உரிமைகள், உடைமைகள் ஆயின, அதன் பின் நிலம் பெண்களின் முதல் உடைமைகள் ஆயிற்று. நிலம் உடைமையாக அந்நிலங்களில் பயிர்ச் செய்ய ஆள்த் துணை தேவைப்பட்டது. ஆளைப் பெற்றுப் பெருக்க ஆண் துணை நிரந்தர தேவையாயிற்று. நிலத்தை நிரந்தர உடைமையாகக் காக்கவும் மற்றவர் இடையூறிலிருந்து மீட்கவும் பெண்ணுக்கு ஆண் துணை நிரந்தர முதன்மையாயிற்று. இதன்மூலமே திருமணம் என்ற அமைப்பு உருவாயிற்று என க.ப. அறவாணன் ஆய்ந்து தெரிவிக்கின்றார். திருமணம் ஒருவருக்கு

ஒருவர் என்ற நிலையான உளநிலையிலிருந்து தவறி உடல்நிலைக்கு மாற்றப்படும் போது விவாகரத்து மலிவாகப் போகின்றது. இந்தத் திருமண முறிவுகளுக்கு அடிப்படைக் காரணம் தனிக்குடித்தனமே என உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். நாட்டின் அரசியலுக்கு ஆலோசகர் தேவைபோல் வீட்டின் அரசியலுக்கும் ஆலோசகர் தேவையே. இதற்கு அனுபவ பலம் மிக்க பெற்றோர் அருகிருப்பது அவசிய மாகின்றது.

இப்போதுள்ள வரதட்சணை முறை ஆரியர் சார்பில் தமிழர்களிடம் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். பண்டைக் காலத்தில் காதல் மணம் பெருவழக்காய் இருந்தது. காலப்போக்கில் கற்புமணம் முதன்மை பெற்றது. அக்காலப்பகுதியில், பெண்ணைப் பெற்றோர்கள் மணமகனுக்கோ மணமகன் பெற்றோருக்கோ எதுவுமே கொடுத்ததில்லை. பெற்று, வளர்த்து, ஆளாக்கி நல்வழியில் நெறிப் படுத்திய பெண்ணை ஆண்மகனுக்குக் கொடுத்த பெற்றோர், வேறு யாது கொடுத்தல் வேண்டும்.

ஆனால் பெண்ணைத் தன்னுடன் அழைத்துச் செல்லும் ஆண்மகன் பெண்ணின் தாய்க்குப் பால்க்கூலி அல்லது முலைக்கூலி அன்பளிப்பாக அளிக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது. பழங்குடிகளிடம் ஆடு, மாடு, நிலம், பொருள் ஆகியவற்றைப் பெண்ணின் பெற்றோருக்குக் கொடுத்துப் பெண்ணை எடுக்கும் வழக்கம் இருந்தது. ஆனால், இன்றுள்ள நிலை பெண்பிள்ளையைப் பெற்றோர் ஆண்மகனுக்கு வரதட்சணை கொடுத்தலாக ஆரியமுறைப்படி புலம்பெயர்ந்தும் தொடர்கின்றது. இந்நிலையில் வெறுப்புக் கொள்ளும் எமது இளந்தலைமுறையினரின் வெறுப்புக்குப் பெற்றோர் ஆளாகாமல் இருப்பதும் அவசியமாகப்படுகின்றது.

இவ்வாறு எமது மக்களிடம் காணப்படும் சில தவறுகளைக் கூர்ந்து நோக்கும் எமது இளஞ்சந்ததியினர், அந்நிய கலாசாரத்தை நாடிச் செல்வது தவிர்க்கமுடியாது போகின்றது. இன்று இளஞ்சந்ததியினரிடம் அடித்தளமாய்க் காணப்படுவது மொழிக்கல்வி, அறிவு, பொது அறிவு, மனவளர்ச்சி, வாழ்க்கை வசதி போன்றவையே. இவற்றில் நாட்டம் கொள்கையிலே கலாசாரம் தவறி விடுகின்றது.

முற்றுமுழுதாக அந்நிய கலாசாரத்தின் மத்தியில் வாழும் எமது இளந்தலை முறையினர் பெரும் இக்கட்டான சூழ்நிலையிலே தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களைக் குறை கூறமுடியாத நிலையில் நாம்

இருக்கின்றோம். நாம் முற்றுமுழுதாக தமிழ் கலாசாரம், தமிழ்மொழி, தமிழ் உறவினர் என்று ஒன்றாக வாழ்ந்தோம். ஆனால், எங்கள் பிள்ளைகள் அப்படியல்ல. முழுக்கமுழுக்க அந்நிய கலாசாரத்தில் பல்வேறுபட்ட கலப்புச் சூழலில் தம் வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றனர். வாழ்நாள் முழுவதும் பார்த்துப் பழகிய எமது வாழ்க்கை வேறு. ஓரிரு நிகழ்ச்சிகளில் மட்டும் கண்டு கலந்து வாழும் எங்கள் பிள்ளைகளின் நிலை வேறு.

எனவே அவர்கள் மனநிலையைப் புரிந்து விட்டுக் கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக் கொடுத்து அவர்கள் அருகிருந்து நாட்டைக் கற்று, சூழலைக்கற்று, நமது எதிர்கால சந்ததியினரை எமது கலாசாரத்துடன் வாழவைத்து, அவர் தம் பெருமையினை உலகறியச் செய்யவேண்டிய பெரும்பணி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பம் எம்மால் முடியாது என பெற்றோர் ஒதுங்கும் பொழுது பிள்ளைகள் குறைநிறைகளை அவதானிக்க முடியாமல் போகின்றது. நல்ல ஒரு சமுதாயத்தை நல்ல ஒரு கலாசாரத்தைப் புலம்பெயர்வில் கட்டிக்காக்க முடியாது போன பெரும் பழி பெற்றோர்களிடம் வந்து சேர்கின்றது.

1. உலகில் எது நடந்தாலும் ஏதோ ஒரு காரணத்தாலேயே நடைபெறுகிறது.
2. விதையில் இருந்து செடி பிறத்தல் போல எண்ணத்திலிருந்து செயல் பிறக்கிறது.
3. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் பலர் குணத்தையும் மாற்றிவிடும் என்பது உண்மை.
4. என்னதான் மாற்றான் தாயிடம் பாசம் வைத்தாலும் பெற்றோரிடம் பெறும் பாசத்திற்கு ஈடாகுமா.
5. பூமி சுழலும் திசைக்கு சுழலவேண்டியதுதான் ஒருநாள் காணாமல் போய்விடுவோம் இதுதான் உண்மை.
6. என்னைப் போல் மற்றவனும் வாழவேண்டும் என்று நினைப்பதுவே தான் மனிதநேயம்.

# தாய்மொழியாம் தமிழ்மொழியைப் பேசத் தயங்குவது ஏன்?

தன்னை மறந்தோன் தன் தாயை மறந்தோனாவான். தன் தாயை மறந்தோன் தன் தாய்மொழியை மறந்தோனாவான். தாய் ஒரு மனிதனுக்கு எவ்வளவு அவசியமோ அதேபோல தாய்மொழியும் அவசியமாகின்றது. மேடைப்பேச்சுக்கும் பலர் பார்வைக்கும் மட்டுமே தாய்மொழியை நேசிப்பதாய்க் காட்டி விட்டு வீட்டிலும் வாழ்விலும் வேற்றுமொழியில் நாட்டம் கொண்டிருப்பார்க்குத் தம் தாய்மொழியின் அழகும் தனித் தன்மையும் இரத்தத்தில் ஊறிய இலகுத்தன்மையும் புரியாது.

தாயின் கருவறையில் சுருண்டு கிடந்த போதே ஒரு குழந்தை தாய்மொழியைக் கற்கத் தொடங்குகின்றது. தாயின் கருவறையில் 11ம் நாளே மூளையைப் பிரித்தெடுக்கக் கூடியதாக இருக்கின்றது. குழந்தை பிறந்த போது உடலில் 11 வீதம் மூளை இருக்கும். வளர்ந்த பின் மனிதனின் உடலில் 2.5 வீதமே மூளை இருக்கும். எனவே கிரகித்தல் என்பது குழந்தையின் வளர்ச்சிப்படியில் முதல்நிலை பெறுகின்றது. கருவறையினுள்ளேயே தனது குழந்தை கேட்டற் புலனைப் பெற்றிருக்கின்றது என்பதை அறிந்த தாய் அக்கால கட்டத்திலேயே அப்புலனை அதிகரிக்கச் செய்ய முயல்தல் வேண்டும். குழந்தை பிறந்தவுடன் அமுதென்று பெயர் கொண்ட தமிழின் முதல் வார்த்தையை அம்மா என்று உச்சரிக்கும் குழந்தைக்கு மம்மி என்று உயிரற்ற உடலுக்குக் கொடுக்கும் பிரத்தியேகமான வார்த்தையை மூளையில் பதிக்கின்றாள். அப்போதிருந்தே தாய்மொழியின் அவசியம் குழந்தைக்கு அற்றுப் போகின்றது.

37

தாய்மொழியில் அறிவுபெற்று அதில் சிந்திக்கும் குழந்தை தன் கல்வி மொழியிலும் சிறப்படையும் என்பது உளவியலாளர்

கருத்தாகும். வாழ்க்கைக்குக் கல்வி மொழி அவசியமாய் இருந்தாலும் உணர்வுபூர்வமான சிந்தனைப் போக்கிற்கு தாய்மொழி அவசியமாகின்றது. "தாய்மொழியைப் போற்றி வீழ்ந்த நாடும் இல்லை. புறக்கணித்து வாழ்ந்த நாடுமில்லை என்று வேலூர் மாவட்டம் பேராசிரியர் முத்துசிவன் அவர்கள் கூறியிருக்கின்றார். உலகத்து மொழியெல்லாம் கற்க ஆர்வமுள்ள ஒருவன் தன் தாய்மொழியைக் கற்க ஆர்வப்படவில்லையென்றால் தன் இனத்தைத் தன் கலாசாரத்தை தன் பண்பாட்டை எப்படிக் கட்டிக்காக்க முடியும். தமிழ் இனம் ஒன்று இருந்தது என்று சொல்லவேண்டிய நிலையே எதிர்காலத்தில் தோன்றும். கல்வி மொழிகளில் எமது மொழிகளிலுள்ள சிறந்த பல இலக்கியங்கள் சிறுகதைகளை கவிதைகளை மொழிபெயர்க்கும்போது எமது மொழியின் சிறப்புக்களை நாம் வாழும் மண்ணின் மக்கள் புரிந்துகொள்ள முடியும். இதைவிட நாம் வாழும் கல்விமொழியின் படைப்புக்களை எமது தாய்மொழியில் மொழிபெயர்க்க முடியுமல்லவா! அத்தோடு எத்தனையோ ஆராய்ச்சிப் புதையல்கள் வெளிக் கொண்டுவரப்படும். இவற்றிற்கெல்லாம் தாய்மொழிப்பற்று மனதில் ஏற்படவேண்டும்.

உலகிலுள்ள மொத்த மொழிகளின் எண்ணிக்கை 6809. இவற்றிலே 700க்கு உட்பட்ட மொழிகளில் மட்டுமே எழுதவும் பேசவும் முடியும். 100 மொழிகள் மட்டுமே சொந்த வரிவடிவத்தில் எழுதப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் மூலமொழியாகத் திகழ்பவை 6 மொழிகளே. அவை எபிரேய மொழி, கிரேக்கமொழி, சமஸ்கிருதமொழி, இலத்தீன்மொழி, தமிழ்மொழி, சீனமொழி. இவற்றிலே சீனமொழி, தமிழ்மொழி தவிர்ந்தவை பேச்சுவழக்கில் இல்லாதவை கிரேக்கமொழி தற்போது புது வடிவில் பேசப்படுகின்றது. எனவே வரிவடிவிலும் பேச்சுவழக்கிலும் ஆட்சிசெய்து மூலமொழியாகத் திகழும் தமிழ் பேசுவதற்கு யாரும் வெட்கம் கொள்ளத் தேவையில்லை. தமது வாரிசுகளுக்குத் தமிழறிவையூட்ட வெட்கப்படத் தேவையில்லை. குறுமுனி தந்த தமிழ், குழந்தையாய் தவழ்ந்து கன்னியாய் என்றும் ஆட்சி செய்யும் தமிழ், தான் பிறந்த நாட்டிலே இன்று அல்லாடுகின்றது. தமிழ்ச் சங்கங்கள் வைத்துத் தமிழ் வளர்த்த தமிழ்நாட்டிலே உருவாகும் திரைப்படங்களும் தொலைக்காட்சி நிகழ்வுகளும் ஆங்கிலத்தைத் தத்தெடுத்து நன்றாக வளர்க்கின்றன. ஆங்கிலேயர் நம் நாட்டை விட்டுச் சென்றாலும் அவர்கள் மொழி எம்முடையோர் நாவிட்டு நகர மறுக்கின்றது.

நான் கண்ட நிகழ்வொன்று தமிழர்கள் மாத்திரமே கூடியிருக்கும் சபையிலே ஆங்கிலத்தில் ஒருவர் உரையாற்றுகின்றார். வீதியில் நடக்கும் போது

ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றார். கேளிக்கையாகவும் வேடிக்கையாகவும் இருப்பதென்னவென்றால் அங்குள்ளவர்கள் அனைவரும் தமிழ் தெரிந்தவர்கள். ஓரிருவர் அரைகுறை ஆங்கிலம் புரிந்தவர்கள். இவ்விடத்தில் ஆங்கிலம் ஏன்? என்பது புரியாத விடயமாக இருக்கின்றது. மொழி என்பது கருத்துப் பரிமாற்று ஊடகம். தாம் நினைப்பதை பிறருக்கு உணர்த்துவதற்காகப் பயன்படுத்துகின்ற ஒரு சொற்கோவை. இலக்கண இலக்கிய விதிகளுக்கமைய ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு மொழி ஊடகமே தமிழ். இம்மொழி தெரிந்தவர்களிடம் இம்மொழியில் பேசுவதுதானே உண்மைத்தன்மை. ஒவ்வொரு இனத்தவரும் தம்மை அடையாளப்படுத்த தமக்கென ஒரு மொழியை உருவாக்குகின்றார்கள். ஐரோப்பியர்கள் தமது மொழியை நேசிப்பதாகப் பேசிக்கொண்டு திரிவதில்லை. ஆனால் தம்முடைய மொழி தவிர்ந்த எந்த மொழியையும் பேசுவதில்லை. பல மொழிகளைத் தேடித்தேடிக் கற்றிருந்தாலும் தேவைக்கேற்பவே அவற்றைப் பயன்படுத்தும் பண்புள்ளவர்கள். மேடைநிகழ்வுகளில் தமது மொழி தவிர்ந்த பிறமொழி பயன்படுத்துவதில்லை. பிறமொழி தெரிந்தவர்கள் மட்டுமே சபையில் கூடியிருக்கும் பட்சத்தில் பிறமொழியைப் பயன்படுத்துவார்கள். இது மொழிப் பற்று என்று நாம் சொல்லிக்கொள்ளும் விடயம் இல்லை. தேவையில்லை என்பதே அதற்கான காரணம். தேவை கருதியே மொழி பேசப்படுகின்றது. அதைப்புரிந்து கொண்டு இனிய தமிழ் பேச நாக்கூசத் தேவையில்லை. அந்நிய மொழியில் ஆசை கொள்ளலாம். அதற்காக அதற்கு அடிமையாக வேண்டியதில்லை. அனைத்து மொழிகளும் அறிந்திருத்தல் சிறப்பு. அதை தேவைப்படும் நேரத்தில் பயன்படுத்துவது பெருமை. தகுதியற்ற இடங்களில் பயன்படுத்துவது சிறுமை.

மேலைத்தேய நாடுகளில் தமிழ்மொழிக் கல்வி எமக்கு உழைப்புக் கல்வியல்ல என்பது உண்மையே. ஆனால், விஞ்ஞானமோ பொறியியலோ கற்று கல்லுடனும் மண்ணுடனும் சதையுடனும் உறவு வைத்திருக்கும் ஒருவரை விட மொழிக்கல்வியும் இலக்கியக்கல்வியும் கற்ற ஒருவரால் வாழ்க்கையின் உன்னத மனிதப்பண்புகள், மனித உணர்வுகள், ஒழுக்கநெறிகளை சிறப்பாக அறிந்து கொள்ள முடியும்.

அதைவிட எம் தேசம் விட்டுப் பரந்து வாழும் எம்மவர்கள் மத்தியில் தமிழைக் கற்றுத் தமிழைப் பேசி இங்கு என்ன செய்ய முடியும், என்ன சாதிக்க முடியும் என்னும் ஒரு கருத்து நிலவுகின்றது. இங்குள்ளவர்கள் அனைவரும் தாம் வாழும் தேசத்து மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர்களும் இல்லை பேசித் தெளிந்தவர்களும் இல்லை. ஆனால், எமது தாய்மொழியை அனைவரும்

புரிந்தவர்களே. அத்துடன் தாய் நாட்டுத் தொடர்பை என்றும் கொண்டிருக்க வேண்டும். தமக்குப் பின் தமது வாரிசுகளுடன் தமது உறவுகளை தாய்நாட்டிற்குக் காவிச்செல்ல வேண்டும். எமக்கென சீர் பெற்ற, சிறப்புப் பெற்ற காலங்கடந்த உன்னத இலக்கியச் செல்வங்கள் கொண்ட ஒரு மொழி இருக்கின்றது என்று நினைத்து, வீட்டிலும் வீட்டிற்கு வெளியிலும் தமது வாரிசுடன் தமது மொழியில் பேசுவது சாலச்சிறந்தது என்பது உண்மையே. இதன்மூலம் அழியாச் செல்வமாய் என்றும், எங்கும் தமிழ்மொழி அரசோச்சும் என்பது திண்ணம்.

*"பார் பிறந்த தேதியினை பகலறியும் - நீர்சுமக்கும்*
*கார் பிறந்த தேதியினை கடலறியும் - நிலத்தடியில்*
*வேர் பிறந்த தேதியினை விதையறியும் - நற்றமிழின்*
*சீர் பிறந்த தேதியினை செகத்தினிலே யாரறிவார்"*

1. **குடும்ப வாழ்க்கை என்பது கண்ணாடிப் பாத்திரம்போல் பேணிப் பாதுகாக்க வேண்டியது. அத்தனை உறுப்பினரும் அதனை அவதானமாகப் பயன்படுத்தாது விட்டால் உடைந்து சுக்குநூறாகிவிடும்.**
2. **சோகங்கள் என்றும் தொடர்வதில்லை. அடிக்கடி இன்பங்களும் வந்துபோகும். இது இயற்கை கற்பிக்கும் பாடம்.**
3. **வாழ்வின் அர்த்தமும் மகிழ்ச்சியும் ஆழமான அன்பிலேயே வரும்.**
4. **சுகமான நட்பு சுகந்தங்களை வாழ்வுக்குக் காட்டிவிடும். தீயநட்பு படுகுழியில் வீழ்த்திவிடும். இதை அறிந்தும் சில மனிதர்கள் மாண்டு விடுகின்றார்கள்.**
5. **சிரித்தாலும் அழுதாலும் உடலானது கண்ணீர் தானமே செய்கின்றது.**

# புலம்பெயர்வில் பெற்றோர் தமது பிள்ளைகளின் திருமணத்தின் பின் அவர்களுடன் இணைந்து வாழ்தல் சிறப்பைத் தருமா?

புலம்பெயர் வாழ்வில் பெற்றோர் பிள்ளைகளின் திருமணத்தின் பின் அவர்களுடன் சேர்ந்து வாழ்தல் சிறப்பைத் தருமா சிரமங்களைத் தருமா என்னும் கேள்விக்குரிய முக்கிய கதா பாத்திரங்கள் பெற்றோர்களே. பெற்றோர்கள் ஒவ்வொருவருடைய அனுபவங்களுமே, பிள்ளைகள் எடுக்கும் தீர்மானங்களிற்கு வழிகாட்டியாக அமைகின்றன.

ஒரு உயிர் உலகத்தில் பிறப்பெடுக்கும் முன் ஒரு வீட்டில் வாடகை செலுத்தாமல் குடியிருந்ததே! அந்த வீடு பூமியைத் தாங்கும் ஓசோன் படைபோல் தன்குழந்தையைத் தாங்கிக் கொண்டு, பத்தியம் காத்துப் பகல் இரவாய்க் கண்விழித்து, பிள்ளையைப் பெற்றெடுத்ததே அந்தத் தாயுடன் சேர்ந்து வாழ்தல் சிறப்பைத் தருமா சிரமத்தைத் தருமா? சிந்தித்துப் பார்க்க வேண்டிய கடமை ஒவ்வொரு பிள்ளைக்கும் உண்டு.

*"பிள்ளைக்குத் தந்தை ஒருவன் - நம்*
*எல்லோருக்கும் தந்தை இறைவன் - நீ*
*ஒருவனை நம்பி வந்தாயோ இல்லை*
*இறைவனை நம்பி வந்தாயோ"*

என்று கண்ணதாசன் பாடி வைத்தார். அந்தத் தந்தையைத் தான் தெரிந்தோ தெரியாமலோ நம்பி ஒருவன் இந்த பூமிக்கு வந்து பிறக்கின்றான். திருமண வயது வரை ஒரு பிள்ளையை உருவாக்கப் பெற்றோர் செலவழிக்கும் நேரம், பணம், செலவு, பிரயாணம் போன்றவைக்கு எத்தனை கோடிப் பணத்தை அள்ளிக் கொடுத்தாலும் பிள்ளைகளால் மீளச் செலுத்த முடியாது.

38

இந்தப் பெற்றோர் பிள்ளைகளுக்குச் சிரமமாக இருப்பார்கள் என்று பிள்ளைகள் நினைப்பது தவறாகும்.

நவீன உலகிலே மேலைநாட்டு வாழ்விலே ஒரு வருடத்தில் மூன்றில் ஒரு திருமணம் விவாகரத்தில் முடிகிறது. இந்தத் திருமண முறிவுக்கு அடிப்படைக் காரணம் தனிக் குடித்தனமாகவே இருக்கின்றது. உலக ரீதியாக கூட்டுக் குடும்ப வாழ்க்கை அருகியது விவாகரத்துக்கு முக்கிய காரணம் என உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். இளந்தம்பதிகள் வாழும் வீட்டில் பெற்றோர் சேர்ந்து வாழ்ந்தால், பிள்ளைகளுக்கு அறிவுரைகள், புத்திமதிகள் கூறி அவர்களை நல்ல வழியில் ஒற்றுமையாக வாழவிடுவார்கள். அனுபவம் என்பதே தலைசிறந்த ஆசான். தாம் பெற்ற அனுபவங்கள், தமது பிள்ளைகளை நல்வழிப்படுத்த பெற்றோருக்கு உதவுகின்றது. அவசரத்தில் எடுக்கின்ற முடிவுகளை ஆறுதலாக எடுத்துக் கூறும் போது எடுத்த முடிவு பைத்தியக்காரத்தனம் போல் தோன்றும். அவசர உலகில் நின்று நிதானமாகச் சிந்திக்க இளந்தலைமுறை விரும்புவதில்லை.

கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் சண்டை தீர்க்கப்பட வேண்டியதே தவிர தொடரக்கூடாது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெரியோர் புத்திமதிகள் சமாதானத்துக்கு வழிவகுக்கும். சண்டையானது வளர்ந்து வர பெற்றோர் இடந்தர மாட்டார்கள். குடும்ப வாழ்வின் சக்தி, வலிமை பற்றி இளையவர்களுக்குத் தெரியாது. அன்பை அறியாது பணத்தை மட்டும் குறியாகக் கொண்டு அவர்கள் வாழ்கின்றார்கள். இவர்களுக்குக் குடும்பத்தைப் பாதுகாக்கும் பெற்றோர் சேர்ந்து வாழ்ந்தால், சுகமாக இருக்கும் சுமையாக இருக்கமாட்டாது. ஒரு நாட்டின் அரசியலுக்கு ஆலோசகர் தேவை போல் ஒரு வீட்டின் அரசியலுக்கும் ஆலோசகர் தேவை அல்லவா? அது ஏன் உரிமையும் பாசமும் உள்ள பெற்றோர்களாக இருக்கக்கூடாது.

ஒவ்வொரு குடும்பமுமே ஒரு நாடு. அந்த நாடு சீரழிய அந்த நாட்டிலுள்ள குடும்பங்கள் காரணமாக இருத்தல் பெரிய தவறாகும். நான் சிறுமியாக இருந்தேன் எனக்கு விளையாட்டு பொம்மைகளில் அனுபவம் ஏற்பட்டது. நான் பெண்ணாக வளர்ந்தேன். பெண்மையில் அனுபவம் ஏற்பட்டது. நான் தாயானேன், தாய்மையில் அனுபவம் ஏற்பட்டது. நான் பாட்டியானேன் எனக்கு உலக அனுபவம் அனைத்தும் வந்தது. அனுபவம் தருகின்ற புத்தியை அறிவு தருவதில்லை. ஒரு பாட்டி தான் பெற்ற அனுபவப் பாடத்தைத் தன் பிள்ளைக்குப் போதிப்பாள். பிள்ளையின் பிள்ளைக்கும் போதிப்பாள். இதனால், அப்பாட்டி தலைசிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்குவாள். எனவே சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கவும், அனுபவப்பாடம் கற்ற பெற்றோர் சேர்ந்திருப்பது

சிறப்பைத் தரும். இதனையே ஒரு முதியவர் இறந்தால் ஒரு பெரிய நூலகமே எரிகிறது என்று ஒரு ஆபிரிக்கநாட்டு முதுமொழி கூறுகின்றது.

இத்துடன் 120க்கும் அதிகமான நாடுகள் கலந்துகொண்ட ஐக்கியநாடுகள் வயோதிபப்பேரவை முதியவரை சுதந்திரமான இயல்பான குடும்ப சூழலில் வாழவிடுதல் சமூகநீதி எனத் தீர்மானித்தார்கள். ஒரு மனிதன் தனித்தீவல்ல. அவன் சமுதாயத்துடனே இணைந்து வாழவேண்டும். ஒரு சமுதாயத்துடன் இணைந்து வாழாத மனிதன் ஒரு மனநோயாளி போலாவான். அவன் சமூகத்துடன் இணைந்து வாழவேண்டுமானால், குடும்பத்துடன் சேர்ந்து வாழவேண்டும். சமூகநெறி விழுமியங்களைச் சொல்லிக் கொடுக்கும்போதே சமூகத்துடன் சேர்ந்து வாழ இளையவர்களும் பழகுகின்றார்கள்

இதைவிடப் பெற்றோர் பிள்ளைகளுடன் சேர்ந்து வாழும்போது அவர்கள் பிள்ளைகளின் பொருளாதாரப் பெருக்கம், பிள்ளை வளர்ப்பு போன்றவற்றிற்கு ஒத்தாசையாக இருப்பார்கள். பிள்ளைகளுக்கு நோய் ஏற்படும்போது பெற்றோர் வீட்டுக்கடமைகளைச் செய்வார்கள். மருத்துவர் படுக்கையில் இருக்க வேண்டு மென்று சொன்னால், தனிக்குடித்தனமாக வாழும் இளையவர்கள் படுக்கையில் எப்படி இருக்கமுடியும்? இந்த அனுபவம் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கும். எனக்குத் தெரிந்த குடும்பம் ஒன்றில் அம்மா பிள்ளையைத் தொட்டிலில் போட்டுவிட்டு தொலைக்காட்சியையும் போட்டுவிட்டுக் கார் பழகப் போவார். பிள்ளைகளோ தொலைக்காட்சியுடன் வளரும். இதைவிட கணவனும் மனைவியும் வேலைக்குப் போகும் குடும்பத்தில், பிள்ளையானது, அப்பா வேலைக்குப் போகும்போது அம்மாவிடம் எறியப்படும். அம்மா வேலைக்குப் போகும்போது அப்பாவிடம் எறியப்படும். இப்போது பந்தாகப் பிள்ளை ஒவ்வொருவரிடமும் எறியப்படுகின்றது. இவ்வாறு ஆதரவு குறைந்து வாழும்போது ஆரோக்கியமான மனநிலையுடன் பிள்ளை எவ்வாறு வளரமுடியும்! எனவே அன்புடனும் ஆதரவுடனும் அரவணைப்புடனும் வளரும் பிள்ளையே எதிர்காலத்தில் ஆளுமையுள்ள பிள்ளையாக உருவெடுக்க முடியும். ரேப்ரெகோடரில் தாலாட்டுப் பாட்டுக் கேட்டு வளரும் பிள் ளைக்கும் பாட்டி தாலாட்டுப் பாட்டுக் கேட்டு வளரும் பிள்ளைக்குமிடையே பாரிய வேறுபாடு இருக்கின்றது.

புரட்டஸ்தாந்து கத்தோலிக்க மதத்தவரிடையே ஆராய்ச்சி நடாத்திய எமில் தூக்கேம் என்பவர் குடும்ப ஆதரவு குறைவாகவுள்ள புரட்டஸ்தாந்து மதத்தவரிடம் தற்கொலை அதிகமாகவும், குடும்ப ஆதரவு மிகுதியாகவுள்ள கத்தோலிக்க மதத்தவரிடையே தற்கொலை குறைவாகவும் உள்ளதாகக் கண்டறிந்து சமூக ஒருமைப்பாடு என்னும் ஒரு கோட்பாட்டை உருவாக்கியுள்ளார். எனவே

குடும்ப அமைப்பு சரியான முறையில் செயற்படாது விட்டால் மனித நாகரிகத்தின் பிழைப்பே கேள்விக்குறியாகிவிடும்.

மேற்குலக நாடுகளில் இளங்குற்றவாளிகளின் புள்ளிவிபரங்களைக் கணிப்பிட்டபோது 70 வீத அமெரிக்கக் குற்றவாளிகள் பெற்றோரின் சரியான பராமரிப்பும் ஆலோசனையும் இல்லாமல் வளர்க்கப்பட்டவர்கள் எனவும் 75 வீத ஜேர்மனிய இளங்குற்றவாளிகள் தாய் ஒன்று தகப்பன் இரண்டு எனவும் தாய் இரண்டு தகப்பன் ஒன்று எனவும் வளர்ந்த பிள்ளைகளே எனக் கண்டறிந்தார்கள். இந்தத் திருமண முறிவெல்லாம் ஏற்படுவதற்குக் காரணம், முறையான அறிவுரைகள் பெற்றோர்கள் அருகேயிருந்து வழங்காதமையே தான். எனவே இளங்குற்றவாளிகளைத் தவிர்ப்பதற்கும் பெற்றோர் சேர்ந்து வாழ்தல் அவசியமாகப்படுகிறது.

உழைப்பால் மனிதன் உயர வேண்டுமானால் உதவிக்கு ஆள் வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டு இந்த ஐரோப்பிய ஒன்றியம். எனவே உழைப்பால் உயர பெற்றோரைக்கூடவே வைத்திருப்பது சாலச்சிறந்தது. உலகத்திலேயே ஒருவனின் வளர்ச்சி கண்டு பொறாமைப்படாது பெருமைப்படுபவர் பெற்றோர் மட்டுமே. எனவேதான் "ஈன்ற பொழுதில் பெருதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்டதாய்" என்று வள்ளுவப் பெருந்தகை கூறினார்

இரண்டு வாயுக்கள் ஒன்றிணைந்தால் தான் தண்ணீர் கிடைக்கும் நமது உடம்பில் பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் சரியான சதவீதத்தில் இணைந்து போனால் தான் உடல்நிலை சரியாகும். எனவே மழலை தொட்டு முதியவர் வரை இன்பம் அனுபவிக்க ஒரு வீட்டில் கண்டு கேட்டு உண்டு உற்றறியும் உறவு கடவுள் நமக்குக் கொடுத்த பரிசு. அதை ஏற்றுக்கொள்வோம்.

பெற்றோருடன் சேர்ந்து வாழ்வதா? இல்லையா? என்று இளைய தலை முறையே தீர்மானம் எடுக்க வேண்டியவர்கள். ஆனால், பெற்றோர் பெறுமதி மிக்கவர்கள். அவர்களுடன் சேர்ந்து வாழ்தல் சிறப்பைத்தரும் என்பது தவிர்க்க முடியாத உண்மையாகும்.

# திருமணத்தை எதிர் நோக்கியிருக்கும் பெண்களே

39

பெண்ணைப் பெற்ற பெற்றோர் அவளை ஒரு ஆணிடம் கையளிக்கும் வரை யார் பொருத்தமானவன் என்று தேடிக் கொண்டே இருப்பார்கள். அலை அடித்துக் கொண்டுதான் இருக்கும். காற்று வீசிக் கொண்டுதான் இருக்கும். பெற்றோரும் வரன் தேடிக்கொண்டுதான் இருப்பார்கள். ஏனென்றால் தனித்து ஒரு மனிதனால் இன்பமாக வாழ்ந்துவிட முடியாது. அதனால் பொருத்தம் தேடி இரு மனங்களைப் பொருத்திவிடுகின்றார்கள். ஆனால், தேடி ஆராய்ந்து, சேர்த்து வைக்கும் திருமணங்கள் சில ஆண்டுகளில் மனப்பொருத்தம் இன்றி ஒருவரை ஒருவர் குறை கூறியவண்ணம் பிரிந்து அகன்று விடுகின்றன.

காரணம் தான் என்ன? தேடிவைத்தல் நன்றா? அவர்கள் தேடிக்கொள்ளல் நன்றா? வாழ்க்கை என்பது ஒரே ஒருமுறைதான். இதை ஆத்திகனும் நம்பவேண்டும். நாத்திகனும் நம்ப வேண்டும். மறுபிறப்பு உண்டென்று நம்பும் ஆத்திகன் கூட நம்ப வேண்டியது மறுபிறப்பில் அவன் சூழல் வேறு, சொந்தம் வேறு, வாழ்க்கை வேறு, ஏன் .... அவனே வேறு. முற்பிறப்பு பற்றி ஒரு அணுக்கூட அவனால் புரிந்துகொள்ள முடிவதில்லை. புரியாது வரப்போகின்ற மறு பிறப்புக்காக புரிந்துகொள்ள வேண்டிய இப்பிறப்பில் அனுபவிக்க வேண்டிய எத்தனையோ விடயங்களை இழந்து வாழ்வோர் பலர். இவ்வாறு இருக்கும்போது பிறந்த பிறப்பை மனிதன் புரிந்து நடந்துகொள்ள வாழ்க்கையைப் பூரணமாக வாழவேண்டும். அதில் பிரிவுகளோ இணைவுகளோ காரணத்தோடே நடக்கவேண்டும்.

கலாசாரம் என்றபெயரிலும் பிறர் எம்மைப்பற்றி என்ன நினைத்து விடுவார்கள் என்னும் தன்மான உணர்விலும்,

அந்தஸ்து வெறியிலும் இளைய தலைமுறைகளின் எதிர்கால வாழ்க்கையை சீரழிக்கும் எத்தனையோ பெற்றோர்கள் எம்மிடையே இருக்கின்றார்கள். எமது பிள்ளைகளின் குடும்ப வாழ்வு என்று நினைத்து அவர்கள் சந்தோசமே எமது சந்தோசம் என்று ஒவ்வொரு பெற்றோரும் நினைக்கின்ற பொழுதே பொருத்தமான கணவனைப் பெண்ணுக்கும் பொருத்தமான மனைவியை ஆணுக்கும் தெரிவுசெய்ய முடியும்.

பொதுவாகவே பொருத்தம் பார்த்து தேர்ந்து செய்கின்ற திருமணங்கள் குடும்பங்களின் நிலைமைகளைக் கருத்தில்கொண்டு செய்யப்படுகின்றன. இதில் பணம் என்பதை மீறிப் பண்பை கவனித்தல் அவசியமாகின்றது. ஐந்து விரலும் ஒன்றாக இல்லாவிட்டாலும் ஒரு மரபணுவில் இருந்து வரும் பிள்ளைகளுக்கு அந்த மரபணுத் தாக்கம் இல்லாதுவிடாது. சகோதரர்களிடையே ஒற்றுமைப் போக்கு சில விடயங்களில் காணப்படும். அதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். குடும்பத்தில் ஒருவருக்கு இருக்கின்ற குணமானது மற்றைய சகோதரர் சிலரிடமாவது இருக்கவேண்டும். முயற்சி இல்லாத சில சகோதரர் இருந்தால் மற்றையவரிடமும் அக்குணம் இருக்க சந்தர்ப்பம் இருக்கின்றது. ஒருவர் கோபக்காரனானால் மற்றையவர்களிடமும் இக்குணம் இருப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கின்றது. குடும்பப் பழக்கவழக்கங்கள் எவ்வாறு கூட வருகின்றது என்றால் ஒன்றாக வளருகின்ற சகோதரர்கள், ஒருவரை ஒருவர் பார்த்து வளருகின்ற போது பழக்கவழக்கங்கள் அவ்வாறே பின்பற்றப்படுகின்றன. பேசுகின்ற தன்மை, நடவடிக்கைகள், சமூகப்பார்வை அனைத்துமே ஒன்றாக அமைகின்றன. தொற்றுவியாதி போல் கூடவே இருந்து மூளை கற்றுக்கொள்ளும் விடயங்களாக இவை அமைகின்றன.

திருமணங்கள் முறிவடைந்து விடக்கூடாது. என்று அக்கறை கொள்ளும் பெற்றோர் இதனாலேயே குடும்ப நிலைமைகளைக் கவனத்தில்கொண்டு திருமண ஒப்பந்தங்கள் செய்கின்றார்கள். ஆனால், இளந்தலைமுறையினர் இதை உணர்ந்து கொள்வதில்லை. நான் குடும்பத்தை திருமணம் செய்யவில்லை. அவரைத்தான் திருமணம் செய்யப் போகின்றேன் என்று அடம்பிடிக்கின்ற இளையவர்கள் பெற்றோர் அனுபவத்தை சிந்தித்துப் பார்த்தல்வேண்டும். அத்துடன் பெற்றோர் பார்க்கும் பொருத்தம் சரிதானா என்னும் பரிசீலனை செய்யும் உரிமையும் ஒரு பெண்ணுக்குத் தேவை.

காதல் உணர்வினால் இணைந்து கொள்ளும் இளந்தலைமுறையினர் கூட தற்செயலாக வருகின்ற ஒரு ஈர்ப்புக்குத் தம்மை முழுமையாக ஈடுபடுத்த

முயலுதல் கூடாது. எதிர்காலம், திருமணம், குடும்ப வாழ்க்கை, குடும்ப மகிழ்ச்சி, யதார்த்தம் இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டே திருமணத்தை முடிவு செய்தல் வேண்டும். முடிவுசெய்த பின் முறித்துக்கொள்ள முன்வருவதை விட முதலிலேயே முயற்சி செய்து தனக்கு வரும் கணவனை புரிந்துகொண்டு திருமணம் செய்வது அவசியமாகின்றது. அதற்கு எத்தனை காலமும் பொறுத்திருக்கலாம். திருமணத்தின் முன் அவரைப் புரிந்துகொள்ள அவருடன் பழகமுடியாது என்னும் பிற்போக்கான எண்ணத்தைக் கைவிட்டுவிடுங்கள். நன்றாக நண்பர்களாகவே பழகிப் பாருங்கள். முடிவை எடுத்துவிட்டு முறிக்க முயலாதீர்கள். உண்மைக்கும் போலிக்கும் வேறுபாடு கண்டுகொள்ள முடியாத வரை உங்கள் எதிர்கால வாழ்வு நரகமே என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். காதலித்து விட்டேன். அவனைத் திருத்தமுடியும் என்று நீங்கள் நம்பினால், அதை நடத்திக் காட்டும் தைரியம் உங்களிடம் இருக்கின்றதா என்னும் நம்பிக்கையைப் பரிசீலனை செய்து பாருங்கள்.

திருமணம் செய்துவிட்டீர்களா? குடும்ப வாழ்க்கை சிக்கலானது. பொறுப்புக்கள் நிறைந்தது. அதேபோல் இப்பிறப்பும் அழகானது. அதை சிக்கல் நிறைந்ததாக மாற்றி வாழும் காலம் முழுவதும் மகிழ்ச்சி இல்லாது, அழுது புலம்பி இப்படியே இருந்து இறந்து விடுவோம் என்று மட்டும் எண்ண வேண்டாம்.

பொறுப்புக்களும் பொறுமையும் மனிதனுக்கு இருக்க வேண்டியது அவசியமே. அது கணவன் மனைவி இருவருக்கும் அவசியமானது. பிரச்சனை என்று வரும்போது பேசித் தீர்க்கும் மனநிலை இருவருக்கும் அவசியம். மனம் திறந்து இருவரும் பேசும் சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும். குற்றம் யாரிடம் உள்ளதோ மன்னிப்புக் கேட்கும் மனநிலை அவரிடம் இருக்கவேண்டும். குற்றத்தை யாராக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளும் நல்ல மனம் தேவை. எதையும் ஆற அமர இருந்து சிந்திக்கும் குணம் வேண்டும். ஆத்திரம் அறிவைக் கெடுக்கும். சிறுவிடயத்தைக் கூட ஆறுதலாக ஏற்றுக் கொள்ளாது, ஆத்திரப்பட்டு காட்டுக் கூச்சல் போடுவதும் காது கிழியக் கத்துவதும், கூட இருக்கும் குடும்பத்தினரைப் பாதிப்பதுடன் இக்குணம் அனைவரையும் பற்றிக்கொள்ளும். குடும்ப அமைதி சீரழிந்து போகும். மனநிலையில் பாதிப்பு ஏற்படும். எனவே பொறுமைசாலிகளை தேடிக்கொள்ளுங்கள்.

தேடல் நிறைந்த வாழ்வில் எதிர்பார்ப்புக்கள் நிறையவே இருக்கும். கணவன் தன்னைத் தாங்கவேண்டும் என்று மனைவியும், மனைவி தன்னைத் தாங்க வேண்டும் என்று கணவனும் நினைப்பது இயற்கை. அவர்கள்

ஆசைக்கேற்ப சின்னச் சின்னப் பரிசில்களை அல்லது அரவணைப்பை இருவரும் பகிர்ந்துகொள்ள வேண்டும். அன்பும் ஆதரவும் இல்லை என்றால் ஏக்கம் இருவர் மத்தியிலும் இருப்பதுடன் இடையில் சிறிய இடைவெளி வந்துவிடும். எனவே உங்களுக்காக ஏங்கும் ஒரு பொருத்தத்தைத் தேடுங்கள்.

முயற்சி இல்லாத ஒரு மனிதனால் தன்னையும் தன் குடும்பத்தையும் மகிழ்ச்சியில் வைத்திருக்க முடியாது. கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பொறுமையுடன் கையாளத் தெரிந்திருக்க வேண்டும். காலத்தைக் குறைகூறி காரியத்தைக் கைவிட்டு விடக்கூடாது. வாழ்க்கையை முன்னிலைக்குக் கொண்டுவரும் எண்ணமே நோக்கமாக இருக்கவேண்டும். கையில் இருக்கும் பணத்தைக் கரைப்பதை விட பெருக்குவதைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். அடுத்தவர்களை விட நானே நம்பர் 1 என்னும் எண்ணத்தை மனதில் பதிக்கவேண்டும். அவர்களே முன்னேறத் துடிப்பவர்கள். மமதையை விட்டு மனங்களைப் போற்றி வாழ்வில் முன்னேற்றம் காணும் பொருத்தத்தைத் தேடுங்கள் வாழ்வில் மகிழ்ச்சி காண்பீர்கள்.

பணத்தை மட்டும் குறியாகவும் பாசத்தை ஒரு சிறு பகுதியாகவும் கொள்ளும் பொருத்தமும் வாழ்க்கையில் கசப்பை ஏற்படுத்தும். உண்மைப்பாசம் மனதில் இருந்தால் மனைவி பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்கும் மனநிலை கணவனுக்கு ஏற்படும். அதனால் உண்மை அன்பைத் தேடிப்பெறுங்கள். எனது குடும்பம், எனது வாழ்க்கை, எனது குடும்பத்தின் மகிழ்ச்சி என்று எண்ணும் பொருத்தத்தை பொறுமையாகத் தேடுங்கள்.

வாழ்க்கை முறியாது வாழவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், உங்கள் கண்கள், அறிவு ஆராய்ச்சி கொள்ளட்டும். முயன்று வெல்லுங்கள். பிறகு பார்த்துக் கொள்வோம் என்று அசட்டையாக விட்டுவிட்டீர்களேயானால் வாழ்க்கை சூனியம். அதிலிருந்து மீளமுடியாது. பிரிந்து வாழுகின்றபோதும் மனதில் பெரிய சுமையுடனே வாழ்வீர்கள். சமுதாயத்திடையே கறை பூசப்பட்டவர்களாகவே காணப்படுவீர்கள். உங்களிடம் உள்ள உண்மை, அதாவது சரியான தீர்மானம் யாருக்கும் புலப்படாது. உங்களிடமுள்ள குறைகளே பேசப்படும். நிறைகள் வீசப்படும். அதனால் பின்வரும் பழியைவிட முன்வரும் பழி மேலானது.

ஒருமுறையே வாழ்கின்றோம். அதை இன்பமாக வாழுங்கள்.

# திருமணம்

உலகத் தோற்றங்களில் உன்னதமான தோற்றம் மனிதத் தோற்றம். இதன்மூலமே குடும்பம், குழந்தைகள், நாடு, அபிவிருத்தி, கண்டுபிடிப்புக்கள், உலகமாற்றங்கள் போன்ற அனைத்துப் பரிமாணங்களும் உருவாகின்றன. ஆணும் பெண்ணும் மனதாலும் உடலாலும் ஒன்றுபட்ட வாழ்க்கையை வாழ்வதன் மூலம் சிறப்பான குடும்பம் உருவாகின்றது. இக்குடும்பம் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயத்தின் மூலம் உருவாக வேண்டியதன் அவசியம் கருதியே திருமண நடைமுறை உலகில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆதிகால மனிதனின் உறவுமுறையின் ஆரம்பமே இத்திருமணம் தான். மனிதர் கூட்டத்திலிருந்து மனிதக் குடும்பம் உருவாகவும் உடலுறவில் ஒழுங்குநிலை தோன்றவும் திருமண நடைமுறை தேவைப்பட்டது. முதலில் ஆளும் வர்க்கத்தின் தலைமுறைச் சொத்தை அனுபவிக்க அரசர் திருமணத்தை உருவாக்கினர்.

மனித இனம் விலங்கினமாய் வாழ்ந்த காலத்தில் உறவு முறையற்ற உடலுறவு மேற்கொண்டனர். சமூகம் என்னும் ஒரு அமைப்பு உருக்கொள்ளாத காலத்தில் யாரோடும் சேரலாம் என்றிருந்தது. சமூகமெனும் அமைப்பு உருப்பெற்ற காலத்தில் ஒரு சிலர் ஒரு சிலரோடு சேர்ந்து வாழும் போக்கு உருவாகிப் பின் விரும்பியவர் விரும்பியவரோடு சேர்ந்து வாழ்ந்தனர்.

40

இச்சேர்க்கை வாழ்க்கை ஓர் சமூக அமைப்பாக உருவாகும் வரை திருமணம் என்ற நடைமுறை வழக்கில் இருந்ததில்லை. விலங்குகளாய் மனிதன் எந்தவித உடைமைகளுமற்று

உணவைத் தேடி அலைந்த காலத்தில் திருமணம் தேவைப்படவில்லை. பின் ஆண்கள் கால்நடைகளை உடைமைகளாக்கப் பெண்கள் நிலங்களை உடைமைகளாக்கினர். நிலங்களில் பயிர் செய்வதற்கு ஆள்களின் துணை தேவைப்பட்டது. ஆள்களைப் பெருக்கவும் நிலங்களைப் பாதுகாக்கவும் பெண்களுக்கு ஆண்களின் துணை நிரந்தரத் தேவையாகப்பட்டது. இதனால் திருமணம் அவசியமாக்கப்பட்டது. நிலங்கள், கால்நடைகள் உடைமைகள் ஆகியது போல் ஆள்களும் உடைமைகளாக ஒவ்வொருவரும் தங்கள் குழந்தை களை (குழந்தைச்செல்வம்) உடைமைகளாக்கினர். இதற்குத் திருமணம் அவசியமாகியது.

விலங்குகளுடன் இணைந்து பகுத்தறிவில்லாது வாழ்ந்த மனிதன் ஆதிகாலத்தில் அவற்றைப் போலவே உறவு கொண்டான். சகோதரன் சகோதரி, தாயும் மகனும், தந்தையும் மகளும் உறவு கொண்டனர். கணவன் இறந்தபின் மூத்தமகனைத் திருமணம் செய்துகொண்ட நிலையையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. (J.G.Frager, Totemism &Progancy-1970 Vol. IVP .28).

இவ்வாறு வரன்முறையற்ற காட்டுமிராண்டி நிலையிலிருந்து குழுமண முறை உருவாகிற்று. ஒரு குழு ஆடவர் ஒரு குழு பெண்கூட்டத்தை மணந்து கொண்டு வாழ்ந்தனர். இக்குழுமண முறையிலிருந்தே பல கணவன் முறை உருவாகியிருக்கலாம். பாண்டவர் ஐவரை மணந்து வாழ்ந்த திரௌபதி பற்றிய கதை ஒரு காலத்தில் இந்தியாவிலும் இப்பல கணவன்முறை இருந்திருக்கலாம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இக்குழு மணத்தின் பின்னேயே ஒருவன் ஒருத்திமுறை உருவானது. விரும்பிய ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழவும் குடும்பம் நடத்தவும் எந்தவித தடையும் பண்டைய காலத்தில் இருந்ததில்லை. இதனையே களவுமணம் என்றனர். விரும்பிய ஒரு பெண் விரும்பிய ஒரு ஆடவனுடன் ஊரைவிட்டு வெளியேறிக் கூடி வாழ்ந்தமையையே உடன்போக்கு என்றனர். அக்காலத்தில் இத்தகைய மணமுறைகளில் எந்தவித தடையும் இருந்து இல்லை. இது பற்றிச் சங்ககால அகப்பாடல்களில் அறியக்கூடியதாக இருக்கின்றது. இதில் ஏற்பட்ட சிற்சில தவறுகளினால், திருமணச் சடங்குமுறை தோன்றியது. இதனையே தொல்காப்பியர் தன் கற்பியல் என்னும் பகுதியில்

*"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்*
*ஐயர் யாத்தனர் கரணம் என்ப"*

என்று கூறியிருக்கின்றார். அன்றைய திருமணங்களில் ஐயர் இல்லை. மந்திரங்கள் இல்லை. தீ வலம் இல்லை. ஆரியர் தமிழ்நாட்டினுள் புகுந்தபின்பே இம்முறைகள் எல்லாம் கையாளப்பட்டது. அக்காலத் திருமணங்கள் பற்றி இரு அகநானூற்றுப் பாக்களில் எடுத்தாளப்பட்டிருக்கின்றது. அறவாணன் தன்னுடைய தமிழர்மேல் நடந்த பண்பாட்டுப் படையெடுப்பு என்னும் நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

- திருமணத்திற்கு நல்ல நாள் தெரிவுசெய்யப்பட்டது.
- வளர்பிறை நாட்களில் திங்களும் ரோகினியும் ஒன்றாக சேர்ந்திருக்கும் நாள் நல்லநாளாகக் கருதப்பட்டது.
- திருமணங்கள் விடியற்காலையில் நடத்தப்பட்டது.
- மணநாளுக்கு முந்தியநாள் முற்றத்தில் வெண்மணல் பரப்பப்பட்டது. பந்தல், தோரணங்கள் கட்டப்பட்டன.
- முரசுகள் முழுங்கின, விளக்குகள் ஏற்றப்பட்டது.
- கடவுளைப் போற்றி வழிபட்டனர்.
- மணமகளை அலங்கரித்து பந்தலுக்கு அழைத்து வந்தனர்.
- மங்களகரமான பிள்ளைகளைப் பெற்ற பெண்கள் பூவும், நெல்லும் நிறைந்த நீர்க்குடங்களைச் சுமந்து வந்தனர்.
- குழந்தைகளைப் பெற்ற வாழ்வரசிகள் இக்குடங்களிலுள்ள நீரை மண மகளின் மேல் ஊற்றுவர். அப்போது கணவனுக்கேற்ற மனைவியாக வாழ் வாயாக என பெற்றோரும் மற்றோரும் வாழ்த்துவர்.
- மணமகனிடம் மணமகளை ஒப்படைத்து வாழ்த்தொலி எழுப்புவர்.
- அன்றிரவே மணமகளும் மணமகனும் தனியறையில் கூடிமகிழ விடப்படுவர்.
- மணநாளன்று விருந்தினர் அனைவருக்கும் விருந்து வழங்கப்பட்டது.
- இடையர்களின் திருமணத்தில் செம்மறியாட்டின் பாலை உறை ஊற்றி எடுத்த தயிர், வரகரிசிச்சோறு, பொரித்த ஈயல் ஆகியவை விருந்துணவாக வழங்கப்பட்டது.

பின் ஆரியர் வரவின் பின் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் வந்ததுடன் அருந்ததி காட்டல் என்ற வட இந்திய மரபும் சேர்ந்தது. பண்டைக் காலத்தில் தாலிகட்டும் சடங்கு இருந்ததில்லை. ஆண் பெண்ணுக்குத் தாலிகட்டும் முறை பிற்காலத்திலேயே பேசப்படுகின்றது. கந்தபுராணம் என்னும் நூலில் முருகன் தெய்வானையின் கழுத்தில் தாலி கட்டியதாகக் கூறப்படுகின்றது. அதுவும் தெய்வானை ஆரியப் பெண்ணாகக் காணப்பட்டார். இப்பழக்கத்தைத் தமிழர்கள் ஆரியச்சார்பு பெற்ற மலையாள நாயகர்களிடமிருந்து பெற்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இவ்வாறு நாம் திருமண நடைமுறைகள் மாற்றம் பெற்று வந்திருந்தமையை அறிந்து கொள்கின்றோம். தற்காலத்தில் தமிழர் உலகமெங்கும் புலம்பெயர்ந்து வாழுகின்ற சூழ்நிலையில் அவர்கள் பழக்கவழக்கங்கள் திருமணவாழ்க்கை முறைகள் போன்றவை அவரவர் வாழுகின்ற நாடுகளின் சூழலுக்கேற்ப மாறுபடுவதை அறியக்கூடியதாக உள்ளது.

1. **பிரயாணம் செய்யும் வாகனத்தில் சாரதியை மீறி பயணம் செய்ய முடியுமா. பலரை ஏமாற்றலாம். ஆண்டவன் கண்களைக் கட்டமுடியுமா.**
2. **கொழுத்த பிள்ளை அழகு என்பதற்காக கொழுப்பைப் பிள்ளைக்கு உண்ணக் கொடுக்க முடியுமா.**
3. **ஒரு மனிதன் செய்யும் தவறுகள் தண்டிக்கப்படும் வேளையில், அவன் ஆற்றிய புண்ணியங்கள் புதுப்பொலிவு பெற்றுத் துணை தரத் துடித்துக் கொண்டு ஓடிவரும்.**
4. **முடியாது என்று வாழ்வில் எதுவும் இல்லை. முடித்துக்காட்ட முனையும் போது மூளையும் எம்முடன் இணைந்து வேகத்தைக் கூட்டும். வேதனை நோய் என்று விழுந்துவிட்டால் எழுந்து நிற்கவே மனம் துணையாகாது.**

# நன்றி கூறல்

**கொ**தித்துக் கொண்டிருக்கும் சூரியனால் வீசியெறியப்பட்ட பூமிக்கல், தணிந்தது, குளிர்ந்தது. பூமி என்னும் பெயர் கொண்டு அற்புதமான உலகை வான்வெளியில் உருவாக்கியது. சுழன்று கொண்டிருக்கும் பூமிக்குச் சூரியனின் கொதிப்புச் சாதகமாகியது. என்னைத் தூக்கி எறிந்தாலும் நான் உன் சொத்து. என்னாலும் தனித்து வாழமுடியும் எனக்கென்று உறவுகளை உருவாக்க முடியும். எறிந்துவிட்டும் என் மேல் உன் பார்வையை வீசிக் கொண்டு இருக்கின்றாயே. உன்னை நான் தூற்றுவதா? நன்றிகூறி வாழ்த்துவதா? என்று பூமிப்பந்து சூரியப் பிளம்பைப் பார்த்துக் கேட்டது. இவ்வாறு இப்பூமி நன்றி உணர்வைக் காட்டி நிற்க, எம்மைத் தாங்கி நிற்கின்ற இப்பூமியை நினைத்துப் பார்க்கும்போது அனைத்துக்கும் காரணகர்த்தா யாரென்று புரிந்துகொண்டு கடவுள் என்று ஒருவரைக் கற்பனை செய்து கொண்டு மனமானது அனைத்துக்கும் அவர்தான் ஆதாரம் என்று அடையாளப்படுத்துகின்றது. நெருப்புப் பிளம்பை உள்ளடக்கி வெளிக்கோதை மட்டும் குளிர்மையாக்கி உயிரினங்களெல்லாம் தாங்கியபடி சுழன்று கொண்டிருக்கும் அந்த அன்னையைப் பூமித்தாயை நினைத்தபோது பெண்ணாகப் பூமியை உருவகித்த உண்மைத் தன்மை புரிகின்றது.

அந்தக் கதிரவன் எறிந்த பூமி மனிதக் கரம் பட்டுத் தனித் தன்மை பெற்றது போல் தனியே வாழும் மனிதர்களுக்கு உலகமே ஒத்தாசை கொடுக்கிறது. இவ்வாறு தனித்துவிடப்பட்டாலோ தனித்துவிட்டாலோ யாரும் வாழாது மாண்டு விடுவார்கள் என்று யாரும் கருதிவிடக் கூடாது. பூமியில் விழுந்த குழந்தை யாரும்

41

உதவுவார்கள் என்று நம்பியா இப்பூமியில் பிறந்தது? அக்குழந்தை வாழ்க் கையை வாழப் பழகிக் கொள்ளவில்லையா!

*"கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்*
*விருப்புற் றமுதளிக்கும் மெய்யன் - உருப்பெற்றால்*
*ஊட்டி வளர்க்கானோ ஓநெடுவாய் அன்னாகேள்*
*வாட்டம் உனக்கேன் மகிழ்".*

என அதியமான் பாடியது போலும்

*"அத்தி முதலேறும்பீ ஆனவுயிர் அத்தனைக்கும்*
*சித்தம் மகிழ்ந்தளிக்கும் தேசிகன் - முற்றவே*
*கற்பித்தான் போனானோ காக்கக் கடனிலையோ*
*அற்பனோ அன்னாய் அரன்"*
(அத்தி- யானை) எறும்பு. ஈ

எனப் பாடிய உப்பை கூற்றுப் போலும்

ஒரு மனிதன் வாழுகின்ற வாழ்க்கையில் வைத்தியர்கள். நாட்டு உதவிகள். எதிரிகள், சூழல் என அத்தனையும் ஒரு மனிதனுக்கு உதவி நிற்கின்றன. பாதையில் சென்று பனியில் விழுந்து விடாதிருக்க நகர சுத்திகரிப்பாளர் பனியை விலக்கிவிடுகிறார். பாதை வெளிச்சமாகிறது. மனை விளங்க சேகரித்த குப்பைகளை வீசிவிட்டால், அவற்றைச் சுத்தமாக்குபவர் துணைபுரிகிறார் வீடு சுத்தமாகிறது. நோயால் வருந்தாதிருக்க வைத்தியர் உதவி செய்கிறார். ஆனால், என்றும் கண்டறியா அந்த ஆண்டவனை நாம் வேண்டித் தொழுது நன்றி சொல்வோம். உலகில் பிறந்த மனிதர்களுக்கு உலகே ஏதோவகையில் உதவிசெய்யும். கண்முன்னே காட்சியளிப்பவர்களும். அவர்களைத் தாண்டி கண்ணிலே நாம் காணாவிட்டாலும், எம் வாழ்க்கைக்குத் தூண்டுகோலாய் உதவியாய் பலருக்குள்ளே பலர் மறைந்திருந்து உதவி செய்துகொண்டே இருப்பார்கள். உதாரணத்திற்கு நாம் உண்ணுகின்ற தேசிய உணவு சோற்றை எடுத்துக் கொண்டால், அதை விற்கும் கடைக்காரனுக்கு நன்றி சொல்ல வேண்டும். அதை விற்பனை செய்யும் மொத்த வியாபாரிக்கு நன்றி சொல்ல வேண்டும். அதை உற்பத்தி செய்த உழவனுக்கு நன்றி சொல்லவேண்டும். உழைக்கும் ஊக்கத்தை உருவாக்கிய அவன் தாய்க்கு நன்றி சொல்லவேண்டும். அது விளைவிக்கும் நிலத்துக்கு நன்றி சொல்லவேண்டும். நிலத்தை உழும்

எருதுக்கு நன்றி சொல்ல வேண்டும். விளைவிக்க உதவும் சூரியனுக்கு நன்றி சொல்ல வேண்டும். இப்படி அரிசிச் சோற்றுக்குள்ளேயே இத்தனை நன்றிகள் கூற வேண்டுமானால், நாம் வாழும்வரை உடலும் உளமும் வளரப் பாதுகாக்க உதவுகின்ற எத்தனை பேருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

எவர் உதவியும் எனக்குத் தேவையில்லை. என்னால் தனித்து இயங்க முடியும் என எவர் கூறினாலும், எவர் உதவியுமின்றி எவராலும் வாழமுடியாது. வாழ்க்கை என்பது ஒருத்தரை ஒருத்தர் தாங்கியே வாழவேண்டி இருக்கின்றது. வாழ்க்கை முழுவதும் ஒரு மனிதன் வாழ பலர் ஒத்தாசை கிடைத்துக்கொண்டே இருக்கும். நன்றி சொல்லத் தொடங்கிவிட்டால், உலகத்து உயிர்கள், உணவு தரும் தாவரங்கள் அனைத்துக்கும் நன்றி சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும். புழு பூச்சிகளைக் கூட நாம் விட்டு வைக்க முடியாது. இந்நன்றியுணர்வு மனிதனுக்கு மட்டுமா இருக்கின்றது. வாலை ஆட்டும் நாயும் பாலைச் சொரியும் பசுவும் இளநீர் தரும் தென்னையும் நன்றியுணர்வுக்குச் சாட்சிகள் இல்லையா?

அதனாலேயே வள்ளுவப் பெருந்தகை செய்ந்நன்றி அறிதல் எனும் அதிகாரத்தை ஆக்கியுள்ளார். நன்றி சொல்வது மட்டுமல்ல. நன்றி உணர்வு உள்ளவர்களாகவும் நாம் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

1. காலத்தை வென்று வாழ மனிதன் முயற்சிப்பதே இவ்வுலகத்தின் வளர்ச்சி.
2. இல்லை என்று உலகில் எதுவும் இல்லை. உள்ளதனைத்தும் கொண்டே வளர்வது மனிதன் கொள்கை.
3. மனதுக்குள் ஏற்படும் தவிப்புக்கள் விபரிக்கவும் முடியாது. விளங்கப்படுத்தினால் பிறரால் விளங்கவும் முடியாது.
4. என்னதான் ஞானியானாலும் உயிருக்கு ஆபத்து என்று வரும்போது அதைக் காப்பாற்றவே முனைந்து நிற்பார்கள்.
5. வாழும்வரை உலக வாழ்க்கையை எதிர்த்துப் போராடத்தான் வேண்டும். வானத்துக்குக் கீழே வீடு கட்டிவிட்டு வானம் விழுந்துவிடும் என்று பயப்படத்தான் முடியுமா.

# புகுந்த நாட்டைப் போற்றித் தொழுவோம்

"நாடென்ன செய்தது நமக்கு என்று கேள்விகள் கேட்பது எதற்கு. நீ என்ன செய்தாய் அதற்கு என்று நினைத்தால் நன்மை உனக்கு" இந்த வரிகளை உச்சரிக்காத எமது தலைமுறை உறவுகள் இருக்கமுடியாது என்று நினைக்கின்றேன். பொருளுணர்ந்து பாடல்களை உள்வாங்காத ஒரு வாழ்வு தானே நாம் வாழ்ந்து வந்தோம். உயிர்வாழ இடம் நாடி உறைந்த இடம் தானே, நாம் வாழும் நாடு.

இன்று தரம் உயர்ந்து வளம் பெருக்கி, தரித்து நிலையூன்றி சுகதேகியாய்த் தடம்பதித்து உயர்ந்து நிற்கின்றோமேயானால், எம்முடைய ஊக்கம் மட்டும் காரணம் என்று யாரும் கூறினால் அது நன்றி மறந்த நலன் விரும்பிகளின் கூற்றே ஆகும்.

பிறந்த மண்ணில் வாழ வழி தெரியாதவர்கள் பலர் வாழ வழி கண்ட இடம் நாம் வாழும் நாடு. கல்வி அறிவை முழுமையாகப் பெற முடியாதவர்கள் கூட முன்னேற்றம் காணும் நாடு, நாம் வாழும் நாடு. நோயுற்றுக் கலங்கி நிற்காது, நோயின் வலி தெரியாது வாழும் நாடு நாம் வாழும் நாடு. இதற்கு முதலில் நாம் வாழும் நாட்டிற்கு தலை வணங்குவோம்.

அனைத்து நலங்களையும் ஒருபுறம் வைத்துவிட்டு, சுக நலத்தை மட்டும் விவேகத்துடன் நோக்கினால், இங்கு நோய் கண்டவுடன் மருத்துவ உதவி கிடைக்கும். அதன்பின் தான் பணம் பக்கம் பார்வை திரும்பும்.

42

நாம் பிறந்த மண்ணில் நோய்க்கான காரணம், அதற்கான விளக்கம் மருத்துவரிடம் வினவினால், "நீங்கள்

மருத்துவரா? நீங்களா வைத்தியம் பார்க்கப் போகின்றீர்கள்? என்னும் பாங்கில் மருத்துவரிடமிருந்து விளக்கம் பெறப்படும். நோய் பற்றிய விளக்கம் அறியாமலேயே நோயாளி மருந்து உட்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். ஆனால், இங்கோ நோயாளிகள், தான் பெற்றுக்கொண்ட நோய்க்கான பூரண விளக்கம் பெறுவதுடன் வந்த நோயைத் திருப்பி அனுப்புவதற்கு மேற்கொள்ளப்படும் சகல வைத்திய நடைமுறைகள் பற்றியும் மருந்துகளின் பலன்கள் பற்றிய பூரண விளக்கமும் பெற்றுவிடுவார்கள்.

பணக்கார நோய் எம்மைப் பற்றிக்கொண்டால், பிறந்த மண்ணில் பண வசதியில்லாதவர்கள் உயிரை விடத்தான் வேண்டும். இல்லையெனில், வசதி படைத்தவர்களிடம் கையேந்தி நிற்கவேண்டும். தாயாகும் பெண்ணைப் பெற்ற தாய் போல் பராமரிக்கும் தாதியரும், நோயாளியைப் பலவிதமான பரிசோதனைகள் செய்து குணப்படுத்த பரிசுத்தமான இதயத்துடன் வைத்தியர் மேற்கொள்ளும் நவீன ஆய்வுகூடப் பரிசோதனைகள் போன்றவற்றையும், மனிதநேய மருத்துவத் தன்மைகளையும் பண்பான இதயத்துடன் நாம் உற்று நோக்கினால், பண்பற்ற வார்த்தைகளால் இந்நாட்டைப் பழித்துப் பேச மனம் உட்படாது, என்னை இந்த நாடு எதற்காக இப்படிப் பராமரிக்க வேண்டும்? நான் இந்த நாட்டிற்கு என்ன நன்மை செய்து இங்கு வந்து குடியமர்ந்தேன்? குடியுரிமை பெற்றேன்? என்னும் வினாக்களை எமக்குள்ளே வினவிக்கொண்டால், எம்மை அறியாமலே, கையெடுத்து இந்நாட்டை வணங்குவதற்கு எமது மனம் முற்படும்.

இந்நாட்டிலிருக்கும்மருத்துவக்காப்புறுதித்திட்டம்பற்றிப்பார்ப்போமேயானால், எல்லோரையும் வாழ வைக்க உருவானதே இத்திட்டம் ஆகும். மாத வருவாயில் ஒரு சிறுதொகை மருத்துவக் காப்புறுதிக்குச் செலுத்தினோமேயாயின் பாரிய நோய்வரினும் தயங்கத் தேவையில்லை. நாம் சர்வதேச மருத்துவ காப்புறுதி செய்திருந்தோமேயானால், அனைத்து நாடுகளிலும் மருத்துவ உதவி இலவசமாகக் கிடைக்கும்.

சடுதியாக விபத்து ஏற்படும் பட்சத்தில் எங்கிருந்தாலும் கவலை கொள்ளத் தேவையில்லை. அக்காப்புறுதி போதிய பணத்தைத் தந்துதவும். நோயை நாம் பெறவில்லையானால், உழைப்பில்லாது வாழுகின்ற மக்களுக்கு அப்பணத்தை வழங்கி உதவி புரியும். நாம் செலுத்தும் பணம் நமக்கு உதவாது விட்டாலும் வேறு யாருக்காவது உதவுகின்றது அல்லவா! எம்மை அறியாமலே பிறருக்கு நாம் உதவுகின்றோமல்லவா! இச்செயலைப் புரியவைப்பதும் இந்நாடே.

எந்தத் தொழிலிலும் வந்த நாளிலிருந்து ஈடுபடாதவர்களாய் இருந்த போதும், பாரிய நோய் வாட்டியபோது எழுந்து நடக்கமுடியாத வேதனையில் துடித்தபோதும், கைகொடுத்து உதவி, நின்று நிமிர்ந்து ஓடி நடக்க வைக்கும் இந்த நாட்டு மருத்துவ உலகுக்கு நாம் தலை வணங்குவோம். வாழும் நாட்டிலிருந்து நாம் பெறும் வளங்களுக்காக அந்நாட்டை வழிபடுவோம்.

தாம் வாழுகின்ற நாட்டு வளங்களைத் துஷ்பிரயோகம் செய்வதுடன், அந்நாட்டு வளங்கள் யாவற்றையும் அனுபவித்து விட்டு, அந்நாட்டை பழித்துப் பேசுகின்ற மக்களை அவதானித்துப் பொங்கிவரும் வார்த்தைகளை வெளியிடுகின்ற ஒரு எழுத்தாளன் வரிகள், வாசகர், நேயர்கள் மனதில் ஒரு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும். அந்தவகையில் என் வரிகள் உங்கள் மனதில் பாதிப்பை ஏற்படுத்தி இருந்தால், மகிழ்ச்சி கொள்வேன்.

1. **நினைவுகள் அப்படியே இருந்துவிடுவதில்லை. அது அழிக்கப்படும் அறிவுப் பலகையாகவும் இருக்கும். அதை அறிவுப்பலகையாக்குவதும் அழியாத கல்வெட்டுக்கள் ஆக்குவதும் அவரவர் மனதைப் பொறுத்தது.**
2. **எதுவுமே எமக்குச் சொந்தமாவதில்லை. நாம் உயிரோடு இருக்கும் வரை அனுபவிப்போம். இல்லாது போனால் சொந்தமில்லை என்று நினைத்திருப்போம்.**
3. **மற்றவர்களுக்காக நீதியற்ற எந்தக் காரியத்தையும் செய்துவிடாதே.**
4. **இன்பமும் துன்பமும் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப அமைகின்றது. சந்தர்ப்பம் வந்து அமைவதும் அவர்கள் சந்திக்கும் மனிதர்களையும் சம்பவங்களையும் பொறுத்தது.**

# புரியாத புதிர்

எமது வாழ்க்கையில் அடுத்த நிமிடம் என்ன நடக்கப் போகின்றது என்று எமக்குத் தெரிவதில்லை. இன்று ஒரு மாதிரி நாளை ஒரு மாதிரி. ஏன் அடுத்த நிமிடமே ஒரு மாதிரி எமது வாழ்க்கை திரும்பி நிற்கிறது.

வெளியிருந்து வரும் காரணிகள் தவிர எமது மூளையே எம்மைச் சிலசமயங்களில் ஏமாற்றிவிடுவதும் உண்டு. சரியாகச் செய்துவிட வேண்டும் என்று ஒரு விடயத்தைச் செய்யும் போது எம்மை அறியாமலே பிழை ஏற்பட்டு எமது மதிப்புக்கு பங்கம் வந்துவிடுகின்றது. பேசுகின்ற போதுகூட ஒன்றை நினைத்து ஒன்றைப் பேசும் நிலமைகூட ஏற்படுவது உண்டு. இங்கு எமது மூளை எம்மை ஏமாற்றி விடுகின்றது. பிறர் சுட்டிக்காட்டும்போது கூனிக்குறுகி நின்று விடுகின்றோம். இச்சம்பவம் சந்திக்காத மனிதர்கள் யாருமில்லை என்று சொல்லிவிடலாம். சிலசமயங்களில் சில விடயங்களில் வீட்டு வேலைக்காரி கூட அறிவாளியாய்த் தொழிற்படுவாள். என்னால் முடியும், என்னால்தான் முடியும் என்று யாரும் கர்வம் கொள்ளல் மடத்தனம். உனக்குள்ளும் மடமை ஒழிந்திருக்கிறது என்று ஒருசமயம் உணர்ந்து கொள்வாய். அது எப்படி, எங்கிருந்து, எவ்வகையில் வெளிப்படும் என்று யாருக்கும் புரியாது.

43

நாம் என்று நாம் நினைப்பது கூட எமக்குச் சொந்தமில்லை என்பதே உண்மை. வெளிக்காரணிகளை, எமது என்று கையாளும் போது கூட நாம் தவறி விடுகின்றோமே. சிலவற்றில் தவறு ஏற்படும்போது திருத்த முடியாது பிறர் உதவிகளை நாடுகின்றோம். எல்லாம் தெரிந்த மனிதன் என்று உலகில் யாருமில்லை. தெரிந்ததுகூட தெளிவுறும் போது அவன் உலகில்

இருப்பதில்லை. இன்று எமக்கே சொந்தமானது. நாளை வேறு ஒருவருக்குச் சொந்தமாய் இருக்கின்றது. உதாரணமாகக் குடியிருக்கும் வீடு. சொந்தப்பெயர் கூட சில சந்தர்ப்பங்களில் மாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இல்லை வேறு யாருக்கோ இப்பெயர் சொந்தமாய் இருக்கின்றது. எமக்கே உரிய இதயம் கூட அறுவைச்சிகிச்சையின் போது மாற்றப்பட்டு விடுகின்றது. உனக்கென்று எதுவுண்டு மானிடனே? இதை உணர்ந்தும் ஆசையில் உழன்று மாய்கின்றாயே!

நான் என்று சொல்வது உடலா? அதற்கு மேலே என்று விக்ரமன் பாணியில் சொல்லும் உயிரா? அதற்குமேலே இரண்டும் கலந்த உணர்வா? அந்த நானே என்னைப் புரிந்துகொள்ள முடியாதபோது நான் எனக்குச் சொந்தமாவதில்லையே. காலம் காலமாய் அளவாய், அவதானமாய், கண்ணும் கருத்துமாய் உடல் உறுப்புக்களுக்குப் பங்கம் வராத வகையில் பார்த்துப் பார்த்து எமது உடலுறுப்புக்களுக்கு உணவு பரிமாறுகின்றோம் அல்லவா! எங்கிருந்தோ வரும் நோய் எம்மை ஏமாற்றிவிடுகின்றதே! அவதானமாய்த் தானே இருந்தேன்? எப்படி இந்நோய் வந்தது என்று திகைத்து நிற்கின்றோம் அல்லவா? காரணம்.... கேள்விக்குறி. பிரபலங்களை நோய் வந்து பின்னுக்குத் தள்ளி விடுகின்றதே. யாரோ போட்ட துப்பாக்கிக் குண்டு நடிகர் எம்.ஜி.ஆரின் குரலுக்குக் கங்கணம் கட்டியதல்லவா? 19 ஆண்டுகள் பிரபல அனுபவம் பெற்ற விமானஓட்டி ட்ரிஸ்டன் லோரைன் பிரிட்டிஸ் விமானநிறுவனத்தால் வெளியகற்றப்பட்டார். காரணம் புகழ் புரிந்த சாதனை. விமானம் மூலம் கிடைத்த நச்சுவாயு. நினைக்காத ஏதோ வாழ்க்கையில் நடந்து வாழ்க்கையையே திசைதிருப்பி விடுகின்றது.

எம்மை அறியாமல் எமக்குள்ளே ஏற்படுகின்ற கோபம் யாருக்குச் சொந்தமானது எமக்குத்தானே. அதை நாம் விரும்பி ஏற்றோமா? துணிவென்று பாடம் சொல்லும் நாமே இறப்பை எண்ணித் துவண்டு விடுகின்றோமே. எமக்குள் ஏற்படும் இவ்வுணர்வு துணிவென்று நிமிர்ந்து நிற்கும் எம்மை ஏமாற்றி விடுகின்றதே. காலம் கற்றுத் தரும் பாடம் கல்லூரிப் பாடத்தை விட சாலச் சிறந்தது. வாழ்க்கை கற்றுத் தரும் பாடத்தின் போதுதான் முன்னோர் எழுதி வைத்த அனுபவக்குறிப்புக்கள் மனிதன் மனதில் உறைக்கின்றது. இதனால்தான் முதியோர் வாழ்வில் தேவை மூதுரை எமக்குத் தேவை. அப்படிப் பார்க்கும்போது தெளிவான அறிவுடன் தெளிந்த சிந்தனையுடன் தொழிற்படும்போதே எம்மை நாமே ஒரு இடத்தில் ஏமாற்றிவிடுகின்றோமே இதை என்ன என்பது? எனவே முற்று முழுதாக வாழ்வே புரியாத புதிர் தான்

# பெண்ணின் பெருமையை உணர்வோம்

பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் படையைப் போல் குழந்தையைப் பாதுகாக்கும் கருவறையினுள் வாழ்ந்து, பூமியைக் குளிரச் செய்யும் கடல் போன்ற கருப்பைத் திரவத்தினுள் மிதந்து, கரு இருளில் களித்துறங்கிய கருமுகில் பெண் ஆனவள், கருவிறங்கி உலகின் குளிர்மைக்காய்க் கண் விழித்தாள். உலகின் ஒளி பூமித்தாயின் மடியில் புகலிடம் புகுந்தது. பெண்ணாய்ப் பிறந்து கள்ளிப் பாலுக்கு இரையாகிய காலம் கரைந் தோடி, அவள் சொல்லுக்காய் நாடு விழித்திருக்கும் காலம் காட்சிக்கு வந்து விட்டது. இன்று விண்வெளியில் உலாவந்த பெண் தைரியத்தின் முழுவடிவம், இன்பம் சுவைக்கும் சுதந்திரப் பறவை.

ஆணுக்குப் பெண் அடிமை, ஆணின் விலா என்பிலிருந்து பிறந்தவள் பெண் போன்ற பொல்லாத உலகில் பலர் சொல்லுகின்ற விளக்கமற்ற வார்த்தைகள் இன்றும் நம் மத்தியில் நிலவுகின்றன. பெண் என்றும் அடிமையில்லை. அவளை யாரும் அடக்கவுமில்லை. அவளே அடங்கி வாழ்ந்தாள். அவளின் மென்மை அடக்கத்தை அணிகலனாக்கியது.

அன்றும் இன்றும் பெண்களைப் பாடும் கவிஞர்களே உலகில் அதிகம். கொடியெனக் கணவன் தோளில் சாய்ந்தாள். கொழுகொம்பாய் அவன் இருக்க, அவனைப் படர்ந்தாள். கரமென மாமியார் உறவில் கைகோர்த்தாள். ஆசானாய் குழந்தைகளை ஆற்றுப்படுத்தினாள். நாத்தனார் வாழ்வில் நலன் விரும்பியானாள். மொத்தத்தில் குடும்பச் சொத்தே அவளானாள். பல வீடுகளின் ஆட்சியே நாட்டின் ஆட்சி. பல வீடுகள் இணைந்ததே, நாடு. வீடு விளங்க நாடு விளங்கும். எனவேதான்

44

பெண்கள், வீட்டின் ஒளி அல்லது நாட்டின் ஒளி என்கின்றோம். இந்த வீட்டிற்கு விளக்கேற்ற ஒரு பெண் தேவை என மாமியார் நாடுவதன் சூட்சுமம்தான் என்ன? விளக்கேற்ற விரல்கள் அற்றவர்களா வீட்டிலிருப்போர். புகுந்த வீட்டின் பெருமை ஒளியை உலகிற்கு விளக்கவென புகுந்தவளாதலால் விளக்கெரிக்க ஒரு பெண் வரவேண்டுமென்ற வார்த்தையைப் பிரயோகித்தனர். பெரியோர். மென்மையான இதழ் பட்ட ஊதுகுழல் வெறுங்காற்றை உள்ளெடுத்து இசையாக வெளியே பரப்புதல் போல கணவன் மனையில் மென்மையாகப் புகுந்து சாதாரண குடும்பத்தைத் தரமான குடும்பமாய் உலகிற்கு உணர்த்தப் புகுமனையில் கால் வைப்பாள்.

உடலுறுதி கொண்ட ஆணைவிட மனவுறுதி கொண்ட பெண் சிறப்பு மிக்கவள். பெண்ணுக்குப் பிரசவம் என்பது மறுபிறப்பு என்பார்கள். ஒரு குழந்தை பிறக்கும் வரை எத்தனையோ வேதனைகளைச் சுமக்கின்றாள். தன் உயிரைப் பணயம் வைத்து அந்தக் குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள். குழந்தை பிறந்து மறு வருடமே அடுத்த குழந்தைக்குத் தயாராகி விடுகின்றாள். இதுவே அவளின் தைரியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. கருணைக்கும் இரக்கத்திற்கும் சகிப்புத்தன்மைக்கும் பொறுமைக்கும் இருப்பிடம் பெண்தான். எனவேதான் ஒரு குழந்தை வளரும் வரையில் தாயின் பராமரிப்பில் இருக்க வேண்டுமென்று சட்டம் கூறுகிறது.

இல்லறத்தை விடச் சிறந்த அறம் ஒருவனுக்கு இல்லை. இந்த இல்லறத்தைச் சிறப்பான முறையில் நடத்த வேண்டுமென்றால், சிறந்த இல்லாள் தேவை. இதன் மூலமே அவன் சமூகத்தின் முன் ஏறுபோல் பீடுநடை பயில முடியும் என வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கின்றார். உடலால் வாழும் ஆணைவிட உள்ளத்தால் வாழும் ஆற்றல் பெற்ற பெண் உலகில் சிறப்புப் பெறுகின்றாள். இந்தப் பெண்மையின் பெருமையை உணர்ந்துதான்

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"

என்று கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள் கூறுகின்றார்.

"ஒரு அழகிய கற்புடைய பெண் ஆண்டவனின் முழுமையான சிறந்த படைப்பாகவும், தேவதைகளின் பெருமையாகவும், உலகின் அதி அற்புதமான தனித்த அதிசயமாகவும் விளங்குகின்றாள்" என்று ஹெர்மிஸ் என்னும் அறிஞர் கூறுகின்றார்.

"நாம் பெற்றிருக்கின்ற வாழ்விற்கும், அந்த வாழ்வைத் தகுதியுள்ளதாக அமைத்துத் தந்ததற்கும், நாம் கடவுளுக்கு அடுத்தபடியாகப் பெண்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம்" என்று பொவீ என்னும் அறிஞர் மொழிந்துள்ளார்.

இதனையே தான் நமது மகாகவி பாரதியாரும்

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்
புவி பேணி வளர்த்திடும் ஈசன்."

என்று முழுமையாகப் பாடிச் சென்றார். எனவே பெண்ணின் பெருமையை உணர்வோம். புவி பேணி வளர்த்திட அவள் புகழ் பாடுவோம்.

உயர்ந்தோர் உள்ளம்

பெருக்கத்துப் பணிவும் தாழ்வுவரின் தளராமையும்
உயர்ந்தோர் உள்ளத்தின் பண்பாகும்.

அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்தோர் உயர்ந்தோராகார்
உள்ளத்தால் உயர்ந்தோர் உயர்ந்தோராவார்.

மனிதரில் தரம் பார்க்காது குணம் சேர்க்கும்
உயர்ந்தோர் உள்ளம்.

# சூரிய வழிபாடும் பொங்கல் விழாவும்

*உவகை பொங்க உண்மை பொங்க*
*உறவுகள் பொங்க திறமைகள் பொங்க*
*நேர்மைகள் பொங்க நன்மைகள் பொங்க*
*புதுமைகள் பொங்க நிஜங்கள் பொங்க*
*பொங்கட்டும் பொங்கலே*

வாழ்க்கை பொங்க வசந்தம் பெருக உள்ளமெல்லாம் பொங்கித் ததும்ப நன்றியை மனமுவந்து நாம் வாழ்வதற்கு ஆதாரமான ஆண்டவன் சூரிய பகவானுக்காக நன்றி செலுத்துகின்ற நாளே இந்த பொங்கல் பண்டிகை என்பது யாவரும் அறிந்ததே. பகலவன் இன்றி உயிர்கள் ஏது? உலகுதான் ஏது? பாரபட்சம் பார்த்து பகலவன் கதிர்களைத் தருவதில்லை. பாரபட்சம் பார்த்து எமக்கு எதிரிகளான பக்றீரியாக்கள் வளர்வதைத் தடுப்பதில்லை.

அதனால் நன்றி சொல்லும் மகத்தான பண்புக்கு அடையாளமே இப்பொங்கலின் திருநாளாகும். இதனையே ஜேர்மனியர் Ernte Danke Fest என்று தோட்டங்களில் விளையும் உருளைக்கிழங்கு, பூசணி போன்ற மரக்கறி வகைகளைப் படைத்துக் கொண்டாடுகின்றார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் நாம் இன்றைய தினம் மாத்திரமே சூரியனுக்கு படையல்கள் படைத்துக் கொண்டாடிவிட்டு வருடம் முழுவதும் சூரியனின் கதிர்கள் எம்மீது விழவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால், பத்தாயிரம் ஆண்டுகள் பழமையான அஸிரிய, அகேடிய, பாபிலோனிய நகரங்களின் முக்கிய வழிபாட்டுக்கடவுள் சூரியனே. இவர்கள் சூரியனை ஷாமேஷ் என்று அழைக்கின்றார்கள்.

45

புத்தி, ஆரோக்கியத்தை அளிக்கும் கடவுளாகக் கருதி எகிப்திய மக்கள் அமான் என்றும் கிராஸ் என்றும் சூரியனையே வழிபடுகின்றனர். வீரம் தரும் கடவுளாக பெரு, மெக்சிக்கோ நாட்டவர்கள் சூரியனை வழிபடுகின்றனர். பெருநாட்டிலுள்ள இன்கா என்னும் பழங்குடியினர் தாங்கள் சூரியனிலிருந்தே வந்தவர்கள் என்று கூறுகின்றனர். ஜப்பானிலும், சீனாவிலும் சூரியன் பெண் கடவுளாக வணங்கப்படுகின்றது.

தைமாதம் பிறக்கும்போது சூரியன் மகரராசியில் பிரவேசிக்கின்றார். இக்காலப்பகுதியில் தட்பமும் வெப்பமும் மிதமாக இருக்கும். இதனால் பயிர்கள் நன்றாக விளைந்து நற்பலனைத் தருகின்றன. அதனால் அப்பலனைத் தரும் சூரியனுக்குப் பொங்கல் படைத்து பொங்கலோ பொங்கல் என்று தமிழரும், ஹங்கரோ, ஹங்கர் என்று ஜப்பானியரும் பொங்கல் விழாக் கொண்டாடுகின்றனர். ஜப்பானியரும் சீன நாட்டவர்களும் சூரியனைப் பெண் தெய்வமாகவே வழிபடுகின்றனர். எமக்கு மாட்டுப் பொங்கல் போல் ஜப்பானியர்களுக்கு குதிரைப்பொங்கல் அமைகின்றது. குதிரைகளை நன்றாகக் கழுவி அலங்கரித்து மாலை போட்டு இனிப்பு வகை கொடுத்துக் கொண்டாடுவார்கள். இதே போல் பர்மாவிலும் இந்நாளில் புத்தாடை அணிந்து கால்நடைகளுக்குப் பூஜை செய்வது வழக்கத்தில் இருக்கின்றது.

காலைச்சூரிய வழிபாடு மனிதனுக்குச் சாலச்சிறந்தது என்பது யோகாக் கலையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இது இன்று நேற்றல்ல ஆதி மனிதன் கூட சூரியனை வழிபட்டுத் தன் நன்றியைத் தெரிவித்திருக்கின்றான். காயத்திரி, உஷ்ணிக், அனுஷ்டப், பிரஹதி, பங்கதீ, திருஷ்டுப், ஜகதி என்ற பெயர்களையுடைய குதிரைகள் சூரியபகவானை இழுத்து வருவதாக நம்பப்படுகின்றது. சூரியனுக்குரியவையாக தாமிர உலோகம், கோதுமைப் பண்டம், செந்தாமரை, செம்பட்டு, கபிலைப்பசு, மாணிக்கம், எருக்கங்குச்சி, காரப்பொருள்கள் போன்றவை கொள்ளப்படுகின்றன. மகரசங்கராந்தி நாளன்று இத்தைப்பொங்கல் கொண்டாடப்படுவதனால், மேற்கு வங்காளத்திலுள்ள சாகர்தீவு ஸ்நான கட்டடத்தில் புனித நீராடி பிதிர்க்கடன் செய்தால் புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்து வருகின்றது.

நாட்டுக்கு நாடு இத்தினம் கொண்டாடப்படும் விதம் வேறுபடுகின்றது. பொதுவாக காதரிசி எனப்படும் வெல்லம் கலந்த பச்சரிசியை ஊறவைத்து அதில் சீனி, ஏலக்காய், பிசைந்த வாழைப்பழம் ஆகியவற்றைக் கலந்து செய்வதுதான் இக்காதரிசி. முதன்முதலாகக் காதுகுத்தும் பிள்ளைகளுக்குக் கொடுப்பதனால்

இப்பெயர் வழங்கப்பட்டது. இதனைப் பொங்கல் அன்று படைப்பது வழக்கமாக இருந்தது. ஆனால், தற்பொழுது அவரவர் வசதிக்கேற்ப பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. குளிர் கூடிய ஐரோப்பிய நாடுகளில் மின்னடுப்பில் பானை வைத்து வசதிக்கேற்ப சூரியன் வெளிவரும் நேரம் பார்த்து பொங்கல் படைத்து வழிபடுவர். சிலவேளைகளில் அன்றைய பொழுது சூரியன் மேகக் கூட்டங்களுக்குள் மறைந்தே இருப்பார். ஆயினும் காணாத போதும் கண்டதாகக் கருத்தில் கொண்டு பொங்கல் படைத்துத் தம் கலாசாரத்தைப் பேணுகின்றனர்.

சூரியன் பற்றிய அற்புத நிகழ்வு ஒன்று கர்நாடக மாநிலத்திலுள்ள வித்யாசங்கர் கோவிலில் நிகழ்கின்றது. இக்கோவிலிலே கிழக்குப் பார்த்த மண்டபம் ஒன்று உள்ளது. இம்மண்டபம் 12தூண்களினால் தாங்கி நிற்கின்றது. இந்தத் தூண்களின் காலடியில் காலைச்சூரியனின் கதிர்கள் விழுகின்றன. ஒவ்வொரு தமிழ் மாதமும் ஒவ்வொரு தூணாக ஒவ்வொரு தூணின் காலடியில் சூரியக்கதிர்கள் விழுவதுபோல் தூண்களை அக்கால கட்டடக் கலைஞர்கள் வடிவமைத்துள்ளனர். வானியல் தெரிந்த இவ்வல்லுனர்கள் பூமி சுழற்சியின் தன்மையை அழகாக இக்கட்டடக்கலையின் மூலம் கொண்டு வந்திருக்கின்றனர்.

இயற்கையின் வனப்பிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம் இயற்கைக்கு நன்றி சொல்லத் தயங்கினால் நன்றிகெட்ட மனிதர்களாவோம். அதனால், இது தமிழருக்கு மட்டுமே உரித்தான நாள் என்று கருதாது ஒவ்வொரு மனிதர்களும் கொண்டாட வேண்டிய திருநாள் என்பதை மனம் பதிக்கவென இப்பதிவு தந்துள்ளேன். இப்பதிவுக்கு பெண்மணி சஞ்சிகையின் உதவியும் எனக்குக் கிடைத்தது.

# மகளிருக்காய் ஓர் தினம்

*"பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான்
புவிபேணி வளர்த்திடும் ஈசன்"*

ஞானம் என்னும் பொருள் வைக்கப்பட்டுள்ள இடம் பெண் என்பதை மகாகவி பாரதி உலகுக்கு வெளிப்படுத்திச் சென்றுள்ளார். எனவே தான், மனிதனை வாழவைக்கும் இந்தப் பூமியைப் பூமாதேவி என்றும் ஆகாயத்தை ஆகாயவாணி என்றும் கடலைக் கடலன்னை என்றும் நதிகளைக் கங்கை என்றும் காவேரி யென்றும் எங்கெங்கும் இயற்கை சக்திகளில் பெண் வடிவம் காண்கின்றோம். கல்வி, செல்வம், வீரம் இம் மூன்றும் பெறக் கலைமகள், அலைமகள், மலைமகள் என முச்சக்திகளான பெண் தெய்வங்களை வழிபட வேண்டியது அவசியமாகின்றது.

ஒரு பெண் வாழும் வீடு சிறப்பாய் அமைந்தாலேயே நாடும் சிறப்புறும் வீடுகள் நிறைந்ததுதான் நாடு. எனவே, இல்லறத்தை ஒரு பெண் நல்லறமாக்காது விட்டால், உலகு உவகை கொள்வது எங்கே? உயர்ச்சியடைவது எங்கே? உலகத்தை வளர்த்து வாழவைக்கும் புத்தகங்களாகவும் கலைகளாகவும் கல்விக் கழகங்களாகவும் பெண்கள் விளங்குகின்றனர் எனப் பெண்கள் பற்றிச் ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார். எனவே உலகமே அவள் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்பது வெள்ளிடை மலை.

46

இவ்வாறு உலகத்திற்குப் பெருமை சேர்க்கும் பெண்ணைப் பொதுவாகவே கவிஞர்கள், கொடிக்கு உவமைப்படுத்துவார்கள். கொடி மென்மையானது. பூத்துக்குலுங்கும் கொடியானது, ஒரு பற்றுக்கோடு கொண்டே படரும். அந்தக்கொடியான கொழு

கொம்பின்றி படராது விடுமேயானால், நீண்டு வளராது. புதராகப் படர்ந்து காணப்படும். கொழுகொம்பிலே படரும்போது நிறைந்த பூக்களைத் தந்து கொழுகொம்பையே அழகாக்கும் தன்மையைக் கொண்டிருக்கும்.

கொடி கொழுகொம்பிற்கு அழகைத் தருதல் போல பெண்ணானவள் தன் கணவனைக் களிப்புறச் செய்கின்றாள். பூக்களைத் தந்து கொடி மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருதல் போல பிள்ளைகளைப் பெற்று சமூகத்திற்குச் சிறந்த பணியாற்றுகின்றாள். கணவன் என்னும் கொழுகொம்பைப் படர்ந்து வாழுகின்றாள்.

இளமையில் பெற்றோரில் தங்கித் திருமணத்தின் பின் கணவனில் தங்கி முதுமையில் பிள்ளைகளில் தங்கி வாழும் பண்பு பின்தங்கியவளாகவே அவளை ஆக்கிவிடுகின்றது. பெண்ணின் கருணை, பொறுமை, சகிப்புத்தன்மை, மென்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இவையனைத்தும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் ஆண்வர்க்கம், அவளை அடிமைப்படுத்துவது காலாகாலமாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், இன்று இந்நிலைகளை உடைத்தெறிந்து பெண்வர்க்கம் துணிந்து முன்னேற்றம் கண்டுள்ளது.

ரேடியத்தை உலகுக்களித்த மேரிகியூரி அம்மையார், விஞ்ஞான உலகில் முத்திரை பதித்தவர். முறையான கல்வி வசதியில்லாத நிலையிலேயே 18ஆம் நூற்றாண்டு கரோலின் கர்ஷேல் என்னும் விண்வெளி வீராங்கனை 3 புதிய நட்சத்திரக்கூட்டம், 8 வால்நட்சத்திரம் மற்றும் பல கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளார். ஆயினும் ஐரோப்பிய மண்ணில் கூட அடக்குமுறை தலைவிரித்தாடியது.

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான பெண்கள் சூனியக்காரிகள் என்று உயிருடன் தீ வைத்துக் கொழுத்தப்பட்டனர். அவர்கள் செய்த சூன்யம் என்னவென்றால், ஆண்மருத்துவர்கள் இருக்கும் போதே நோயுற்றவர்களைத் திறமையான முறையில் சிகிச்சையளித்து குணமாக்கியமையே ஆகும்.

இவ்வாறு பெண்மையின் இயல்பான ஞானத்தில் பொறாமை கொண்ட ஆண்வர்க்கம், பெண் இனத்தின் மேல் அடக்குமுறையை வளர்த்துக் கொண்டிருந்த போது 1910ஆம் ஆண்டு டென்மார்க்கிலுள்ள கொப்பன் காகன் (Koppen hagen) என்னும் இடத்தில் கிளாராசெற்கின் (Clarazetkin) என்பவர்

ஒரே தொழில்புரியும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமான வருமானம் கிடைத்தல் வேண்டும். கர்ப்பம் அடைந்த பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படல் வேண்டும். பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படல் வேண்டும் என கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்தார்.

இவர் தூக்கிய போர்க்கொடியே மகளிர் தினத்திற்கு அடிகோலியது. 1917இல் இரஷ்யாவிலுள்ள Sanktpetersburg என்னும் இடத்தில் ஆரம்பித்த பெண் ஆடைத்தொழிலாளிகளின் வேலைநிறுத்தத்தை நினைவுகூறும் முகமாக 1921 பங்குனி 8இல் சர்வதேச மகளிர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. தற்பொழுது வருடாவருடம் உலகளாவிய ரீதியில் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகத்தை உய்வடையச் செய்யும் பெண்கள் தமது பொறுப்பை உணர்ந்து கடமை தவறாது கண்ணியமாக வாழ்க்கையை நல்லமுறையில் நடத்தினால், உலகு உவகை கொள்ளும் என்பது திண்ணம்

பாலைவனக் குடிநீர் அம்மா
கோடைகாலக் குளிர்நீர் அம்மா
மாரிகால வெப்பமூட்டி அம்மா
வருவாய் காணாத் தொழிலாளி அம்மா
கொட்டும் மழைக்கு ஈடாமோ அம்மா
கொட்டும் பரிவுக்கு
இடியைத் தாங்கி மழை தரும் மேகம் போல்
பிள்ளை உதையைத் தாங்கி உறவு தந்த உத்தமி
வானத்தின் எல்லை தெரிவதில்லை – தாயின்
பாசத்தின் அளவும் சொல்லக் கணக்கில்லை
வெட்டிப் பொலிவாவது வைரம் – தாயை
ஒட்டிய வாழ்வில் தரமாவது பிள்ளை.

# மழலைகள் உலகம் மகத்தானது

*தேன் வந்து காதில் பாய*
*சிந்திய சிரிப்பில் எந்தனை மறந்து - என்*
*இதழ்கள் என்னை அறியாது விரிய*
*இதயப் பெட்டகம் இன்ப அருவியில்*
*மூழ்கிப் பெருக்கெடுத்து ஓடியது*

வான் மழையில் நனைந்தால் குளிர் எடுக்கும் மழலை மொழியில் நனைந்தால் சுவை எடுக்கும். தேன்சுவை மிகைப்படின் திகட்டும். மழலைத்தேன் மிகைப்படத் தித்திக்கும்.

கவிதையும் காவியமும் இலக்கியமும் படைக்கப்படலாம் அவற்றில் சுவை ததும்பும். ஆயினும் சிறுகுழந்தை தனது குரலெடுத்து உதிர்க்கும் வார்த்தைகள், இதயத்தில் இன்ப உணர்ச்சியை தூண்டி கவலைக்கு விடைகொடுக்கும்.

உயர்ந்த கருத்தை ஏற்க உள்ளம் ஒன்றி நிற்கவேண்டும். ஆனால், மழலை மொழி தானாகவே செவிப்புலன்களைக் கவர்ந்துவிடும். எவ்வளவோ பரபரப்பான வேலையின் ஈடுபாட்டையும் குறைத்துவிடும். உடம்பின் இரத்த ஓட்டம், இதயத்துடிப்பு, நுரையீரல் இயக்கம் அனைத்தையும் ஒருவகை ஒழுங்குமுறைக்கு இயைபுபடுத்தி இயங்க வைக்கும் சக்தி மழலைமொழிக்கு உண்டு. குழலிசையிலும் குயிலிசையிலும் அருவி இசையிலும் கேட்டுணர முடியாத ஒரு நுண்ணிய வேறுபாட்டை மழலை மொழியில் காண்கின்றேன்.

47

எவ்வாறு மழலை மொழியில் மகத்தான சக்தி படைக்கப்பட்டுள்ளது. அடிக்க உயர்த்திய கைகளையும் அணைக்க வைக்கும் அபாரசக்தி அதற்குண்டு. அம்மா என

வாயெடுத்து முதல்மொழி தொடுக்க இதயராகம் இன்ப இசை மீட்டத்தொடங்கும். சொல் இணைத்து வாக்கியம் வடிக்க சுவை தொடராய் வடிந்துவரும். களங்கமில்லா மனதிற்கு எடுத்துக்காட்டு அவர்கள் எண்ணங்களில் வடிக்கும் சொல்லோவியம். குழந்தைகள் வளர்கின்ற போது அவர்கள் எண்ணங்களில் வில்லங்கம் தோன்றும் போதுதான் குரலிலும் கரகரப்பும் மாற்றங்களும் ஏற்படுகின்றது போலும்.

மழலை மொழியில் மயங்கி நிற்கும் யாம், அதன் அழகுச் சிரிப்பில் மதிமயங்கி நிற்பது ஒன்றும் வேடிக்கை இல்லையே. குழந்தைச் சிரிப்பில் ஒரு சில நிமிடங்கள் உங்களை மறக்கின்றீர்கள் அல்லவா? உங்களை அறியாமலே உங்கள் உள்ளங்களும் உதடுகளும் சிரிக்கின்றன அல்லவா? இந்த அபார சக்தியை என்னென்று யாம் அழைப்பது. இவ்வாறான மழலைகள் உலகத்து அனைத்துக் குழந்தைகளுக்கும் என் பறக்கும் முத்தங்களைப் பறக்கவிடுகின்றேன்.

இவ்வாறான சக்தி படைத்த குழந்தைகளில் சில, குமரனாய், குமரியாய், முழுமனிதனாய் மாறுகின்றபோது குணநலன்கள், போக்குகள், பேச்சுகள், நடத்தைகள் அனைத்தும் மாறுபட்டு சிலசமயங்களில் பெற்றோரால் தாக்குப்பட்டு சில சமயங்களில் மற்றோரால் ஏச்சுப்பட்டு, உலகப் பார்வையில் ஓரங்கட்டப்படுகின்றமைக்கு யார் காரணம்? கள்ளங்கபடமற்ற பிஞ்சு உள்ளம் கள்ளம் நிறைந்த வஞ்ச உள்ளமாய் வடிவெடுப்பதற்கு யார் காரணம்? எழுதப்படாத வெள்ளைக் கடதாசியாய் உலகில் அவதரிக்கும் குழந்தை மூளை என்னும் பாத்திரத்தில் நிரப்புகின்ற அனுபவ உணர்வுகள்தான் எவை?

குழந்தையாய் தவழும்போது அன்பாய் அணைத்த பெற்றோர், அக் குழந்தை வளருகின்ற போது தமது பல அபிலாசைகளை அக்குழந்தைமேல் புகுத்துகின்றனர். வயலின் இசையைப் பிள்ளை இரசிக்கின்றதா? அனுபவிக்கின்றது? முழு ஈடுபாட்டுடன் அவ் இசையில் இருக்கின்றதா? என்பதைப் பரிசீலனை செய்யாமலே அப்பிள்ளை வயலின் வித்துவானாய் வரவேண்டும் என்று பெற்றோர் நினைக்கும் போது வீட்டில் சிக்கல் ஏற்படுகின்றது.

அடுத்த வீட்டுப்பிள்ளைக்கு முடிகின்றது. உன்னால் மட்டும் ஏன் முடியவில்லை? என்றால், அப்பிள்ளை வேறு இப்பிள்ளை வேறு என்று பெற்றோரால் புரிந்துகொள்ள முடிவதில்லை. இங்கு பெற்றோரின் முதல் தவறு தென்படுகின்றது. ஒரு பிள்ளையுடன் தன் பிள்ளையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது

பிள்ளையின் மனதில் வஞ்சனை வளர்கிறது. பெற்றோரின் நிராகரிப்பும், காட்டும் வெறுப்பும் பிள்ளையின் நடத்தையைச் சீர்குலைக்கும் என்பதும் உண்மையே.

நல்ல வளர்ப்பு முறையில் வளருகின்ற பிள்ளை தவறுகளைச் சந்திக்கின்றது என்றால், அங்கு சூழலும் நட்பும் ஆட்சி புரிகின்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். சூழல் பிள்ளையின் பழக்கவழக்கங்களில் மாற்றத்தைக் கொண்டு வருகின்றது என்றால், பெற்றோர் சூழலை மாற்றுவதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பிள்ளையின் சுதந்திரத்தை அளவுக்கதிகமாகக் கட்டுப்படுத்துவதை விட்டு அவர்கள் போக்கில் சென்று மனமாற்றத்தை ஏற்படுத்தும் வழிவகைகளைச் செய்தல் வேண்டும். சொற்களுக்குப் பொருள் இருப்பது மட்டுமல்ல, அதன் பொருளுக்கேற்ற வலிமையும் இருக்கின்றது. இதைத்தான் கட்டுரைத்தல் என்பார்கள். பெற்றோர் தமது பிள்ளைகளைச் சரியாக அறிந்து கொள்ளாததும், அவர்களை மதிக்காததும், அவர்கள் நிலையில் மாறுதல் காணப்படுவதற்குக் காரணமாகின்றது. அவர்களைப் போற்றிப்பாருங்கள். சொற்களின் வலிமையைப் புரிந்து கொள்வீர்கள்.

மனமானது ஒரு சக்தி நிலையம். அதன் சக்தியை அதிகப்படுத்துவதும் குறைப்பதும் பெற்றோர் கையிலேயே தங்கியுள்ளது. இளம்வயதிலே குற்றவாளிகள் உருவாகுவதற்கு பாரம்பரியம், சுற்றுப்புறச்சூழல், உடல் அமைப்புக் குறைபாடு, மூளையில் ஏற்படும் இரசாயனப் பொருள்களின் மாற்றங்கள் போன்றவையும் பொதுக் காரணங்களாக அமைகின்றன. இவற்றிலும் கூடிய அக்கறை காட்ட வேண்டியது வளர்ந்தோர் கடமையாகும்.

குழந்தை வளர்ப்பு என்பது சாதாரண விடயம் அல்ல. பெற்றோரில் சிலர் இப்பரீட்சையில் வெற்றி பெறுகின்றார்கள். சிலர் தோல்வியைச் சந்திக்கின்றார்கள். வெற்றி பெறுவதனால் எதிர்கால உலகம் பிரகாசம் அடைகின்றது. தோல்வியடைவதனால் எதிர்கால உலகம் சீரழிகின்றது.

# சர்வதேச முதியோர் தினம்

பூமிச்சுழற்சி காலங்களைக் கழியச் செய்கின்றது. நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி, வயதை வளரச் செய்கின்றது. வளருகின்ற வயது முதுமைக்கு வழிசமைக்கின்றது. பூமிகூட வயதாகி விட்டதனால் தன்னுடைய சுழற்சியில் சிறிதளவு குறைந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

முதுமையிலும் அழகு கொண்டு மனிதர்கள், முயன்று கொண்டிருக்கின்றார்கள். தன் அனுபவப்பாடத்தால், உலகை வழிநடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், பூமி சுழன்று கொண்டிருப்பது போல் மனிதன் வாழ்க்கையிலும் சுழற்சி காணப்படுகின்றது. முதுமையில் மனிதர்கள் குழந்தை போலாகி விடுகின்றார்கள். முதுமையில் மூளை தன் செயற்பாட்டில் தளர்வு காண யாதும் தெரியாக் குழந்தை நிலைக்கு மனிதர்கள் ஆளாகின்றார்கள். மூளைச் சேமிப்புப் பகுதி தொழிற்பாடு குறைய மெல்ல மெல்ல தனது பதிவுப்பகுதி அழியத் தொடங்குகின்றது.

இதனால், வயதானோர், பல உளவியல் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள். இம்முதுமையில், மூளையின் நரம்பு மண்டலங்களின் அணுக்களின் எண்ணிக்கையானது குறையத் தொடங்குகின்றது. உடல் எதிர்ப்பு சக்தி குறையும் போது பலவித நோய்களுக்கு உட்படுகின்றார்கள். இழையச் சீர்கேடு ஏற்படுகின்றது. உடற்தசைகளின் பாரம் குறைகின்றது. தோல் சுருக்கம் காணுகின்றது. பார்வை பாதிக்கப்படுகின்றது.

48

மூட்டுவலி ஏற்படுகின்றது. 60 வயதுக்கு மேல் முதியோர் முள்ளந்தண்டிலுள்ள அணுக்கள் குறைவதனால், அவர்கள்

உணர்வு ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றார்கள். இவ்வாறாக பாதிப்புக்குள்ளாகும் முதியோர், படிவளர்ச்சி கண்டு முதுமை பெற்று இறக்கின்றார்கள் என்று படி வளர்ச்சிக் கோட்பாடு கூறுகின்றது.

பிறந்தவர்கள் இறக்கின்றார்கள் என்பது நியதி. இது தவிர்க்க முடியாது போகின்றது. தசைச் சுருக்கம் அகல பலவிதமான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் முதுமையை யாரும் தடுத்து நிறுத்தமுடியாது. பலவிதமான நோய்கள் உடல் மூட்டு வலிகள், உளவலிகள் கொண்டிருக்கின்ற வயதானவர்களைப் போற்றிப் பாதுகாக்கவேண்டிய அவசியத்தையும், அவர்களை கௌரவப்படுத்தி மதிக்கவேண்டிய அவசியத்தையும் கருதி ஒக்டோபர் 1ம் திகதியை சர்வதேச முதியோர் தினமாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபை பிரகடனப்படுத்தியது.

இது 1990ஆம் ஆண்டு மார்கழி மாதம் திகதி 45/106 பிரிவு-மானத்திற்கமைய பிரகடனப்படுத்தப்பட்டது. ஆயினும் 1991 ஆம் ஆண்டே உலகமெங்கும் முதன் முதலாக அனுஷ்டிக்கப்பட்டது. இது ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் தேசிய தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

பொதுவாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதியோராகக் கணிக்கப்படுகின்றனர். ஐ.நா வின் கணிப்பீட்டின்படி ஒவ்வொரு பத்துப்பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் காணப்படுகின்றார்கள். 2050 இல் 5 க்கு ஒன்று என்றும், 2150 இல் 3 க்கு ஒன்று என்ற அடிப்படையிலும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பிறப்பு வீதம் குறைவடைந்து இறப்பு வீதமும் குறைவடைவதனால், முதியவர்கள் உலகளாவிய ரீதியில் அதிகரித்துள்ளார்கள். இன்று உலகம் முழுவதும் 60 கோடி முதியவர்கள் காணப்படுகின்றார்கள். இலங்கையிலே 2006 கணிப்பீட்டின்படி அண்ணளவாக 22 இலட்சம் முதியோர்கள் காணப்படுகின்றார்கள்.

ஜேர்மனியிலே அண்ணளவாக 20 மில்லியன் முதியோர்கள் காணப்படுகின்றார்கள். காலப்போக்கில் இத்தொகை மேலும் அதிகரிக்கலாம் எனத் தெரியவருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் 60 - 70 வயதுக் கிடைப்பட்டோர் 54.4 வீதமும் 70 - 80 வயதுக்கு இடைப்பட்டோர் 34.3 வீதமும் 80 - 90 வயதுக்கு இடைப்பட்டோர் 1.3 வீதமுமாக உள்ளனர். இதில் அதிகமானவர்கள் வறுமைக்கு உட்பட்டவர்களாகவே உள்ளார்கள்.

இந்த வகையில் இவர்களின் பராமரிப்பை முக்கியப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

அடுத்தவர்களில் தங்கி வாழவேண்டிய முதியோர்களை, அவர்கள் வாழும் போது முழுமையாகப் பராமரிக்க முடியாது சில பிள்ளைகள் தவிக்கின்றனர். வேலைக்குச் செல்லவேண்டிய அவசியம் கருதி அவர்களை வீட்டில் தனியே விடுவதனால், பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. முதியோர் விடுதிக்கு அவர்களை அனுப்புவதனால் வயதானோர் பல மன உளைச்சல்களை அடைவதாக அறியப்படுகின்றது.

தனிமை அவர்கள் உள்ளத்திலே பய உணர்வை ஏற்படுத்துகின்றது. அதுவே மனநோய்களை ஏற்படுத்துவதாகக் கருதப்படுகின்றது. இதுபற்றி மனிதநேயங்கொண்ட மனிதர்கள் சிந்திக்க வேண்டும். செயற்பட வேண்டும். இன்றைய இளந்தலைமுறையினர் நாளைய முதியோர்கள். இன்றைய முதியவர்கள் நிலை. நாளைய இளந்தலைமுறையினர் நிலை. எனவே சிந்தித்துச் செயற்படுத்துவோம்.

சொற்சுதந்திரமென நாவடக்க மறந்தால்
சொல்லுக்கேது சுதந்திரம்
புலனடக்கம் புரியாதுலகில் தறுதலையாய் வாழ்ந்தால்
குலநடுக்கம் குலத்தையே அழிக்கும்
கட்டவிழ்ந்த மந்தைகளாய் மேய்ப்பாரிழந்தால்
கெட்டழியும் வாழ்வு கெடுத்து விடும் சுதந்திரம்
வாழ்வை உயர்த்த வழிகாட்டும் சுதந்திரம்
வானம்பாடியாய் வாழ்வை வளமாக்க வேண்டும்
சீரழியாது வாழ்வைச் சிறப்பாக்க
பேணிட வேண்டும் சீரான கட்டுப்பாடு

# வன்முறை

ஒரு மனிதனின் பழக்கவழக்கங்களுக்கு அவன் வாழு கின்ற சூழ்நிலை காரணம் என்பதுபோல், வன்முறைக்கும் அவன் வளர்கின்ற சூழலும், குழந்தைப் பருவத்திலிருந்து அவன் ஆழ் மனப்பதிவுமே காரணமாகின்றன. மூளையில் தேங்கிக் கிடக்கின்ற பதிவுகள் ஓர் சமயத்தில் அவனை அறியாமலே அவனிடமிருந்து வெளிப்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக ஓரிடத்தில், தாயைக் கண்ட சேய் இரு கரங்களையும் நீட்டித் தாயை நோக்கி ஓடி வருகின்றது. இடையில் தடையாய் நின்ற தளபாடத்தில் தட்டுப்பட்டு விழுகின்றது. ஓ... என்று அலறல். ஓடிவந்து பிள்ளையைத் தூக்கிய தாயவள், "இந்தக் கதிரையா? பிள்ளையை அடித்தது. இதுக்கு அடிபோட வேண்டும். பிள்ளைக்கு அடித்தாயா? அடித்தாயா?" என்று பிள்ளையைச் சாந்தப்படுத்துவதற்காக கதிரையை மாறிமாறி அடிக்கின்றாள். இங்கு தன்னை வருத்துவதைத் திருப்பி அடிக்க வேண்டும் என்னும் வன்முறை தாய் மூலம் பிள்ளைக்குப் போதிக்கப்படுகின்றது. இவ்வாறு சிறு வயதிலிருந்தே வன்முறை படிப்படியாகச் சிறுவர்கள் மனதில் விதைக்கப்படுகின்றது. கதிரைக்கு அடிபட்டு விட்டதா? கதிரை அழப் போகின்றதே தடவிவிடுங்கள் என்று கூறலாம். இல்லையேல், நீங்கள் கவனமாக வந்திருக்கலாமே என்று உண்மையை ஆறுதலாகச் சொல்லியிருக்கலாம். ஆனால், புரியாத வயதில் புகட்டும் பாடம் வன்முறையின் ஒரு வடிவமே.

49

மடியில் போட்டு மழலைக்குத் தாலாட்டுப் பாடுகின்றாள், தாய். "ஆராரோ ஆரிரரோ ஆரடித்து நீ அழுதாய். கண்மணியே கண்ணுறங்காய். அத்தை அடித்தாளோ அமுதூட்டும் கையாலே.

மாமா அடித்தாரோ மல்லிகைப் பூச்செண்டாலே, அடித்தாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணி வைப்போம்" இதன் உள் அர்த்தம் புரிகிறதா? பழிக்குப் பழி. குழந்தை அழுவதற்கான காரணங்கள் பல இருக்க இப்படியொரு வினா குழந்தையிடம் தேவைதானா? தாலாட்டின் மூலம் ஊட்டப்படும் உள்மன ஊட்டச்சத்தை உணர்ந்து நாம் பார்க்கின்றோமா? இவ்வாறு தவறு என்று அறியாமலே சிறுவயதிலிருந்து குழந்தைகளுக்கு வன்முறை ஊட்டப்படுகிறது.

கதவை இழுத்து அடித்துப் பூட்டுவது வன்முறை, குழாய் நீரை விசையாகத் திறப்பது ஒரு வன்முறை, தீங்கேதும் செய்யாத தேனீயைத் தன்னைக் குத்திவிடும் எனப் பயந்து அடித்து உயிரைப் போக்க வைப்பதும் வன்முறை. கோபம் வந்தவுடன் கையில் கிடைக்கும் பொருளை வீசி எறிவதும், உடைப்பதும், கையில் அகப்பட்டதைக் கருவியாகக் கொண்டு குழப்படி செய்யும் குழந்தையை அடித்துத் துன்புறுத்துவதும் வன்முறையின் வடிவங்களே. சின்னாபின்னமாக உடைந்து சிதறும் பொருள்கள் ஒருவித மன உளைச்சலை மனதில் ஏற்படுத்துகின்றது. உள்மனதில் பாதிப்புப் படருகின்றது.

நினைப்பெண்பதும் மனமென்பதும் ஒன்றே. மனிதனின் நினைப்பால் தக்கவாறு வாழ்வு அமைகின்றது. எனவே, எதிர்காலம் எங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது சிறப்பான சமுதாயமாக வளர, அதன் அடிப்படை அவதானமாக உள்ளத்தில் பதியப்பட வேண்டியது அவசியம். எமது நடவடிக் கைகளை நாமே உற்று நோக்குவோம், பண்பான எண்ணங்களை மனதில் பதிப்போம்.

# வாசித்தலின் நன்மை

*"விலங்கொடு மக்க ளனையர் இலங்கு நூல்*
*கற்றாரோடு ஏனை யவர்"*

கல்வியறிவுடையோரே மனிதரென்றும், அஃதிலாதோர் விலங்குகளெனவும் திருவள்ளுவர் எடுத்தியம்புகின்றார். "நீட்டோலை வாசியான் நின்றான் குறிப்பறிய மாட்டான் காட்டில் நன்மரம்" என்று சொன்னார் ஔவைப்பிராட்டியார். பரந்துபட்ட அக்கல்வியறிவை சிந்தையில் நிறுத்தி, அறிவுச் செல்வத்தை சிரத்தையுடன் தேடும் போது மனித வாழ்வு சிறப்படைகின்றது. அக் கல்வியின் ஆணிவேராக வாசித்தலே அமைகின்றது. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது முதுமொழி. மனவிசாரங்களும், மனவிகாரங்களுமற்ற இளமைப்பருவக்கல்வி சிந்தாது, சிதையாது, சிதறாது மனதில் நன்றாகப் பதியும். எனவே கல்விக்கு அடித்தளமான வாசிப்பு இளமையிலேயே அரும்பி வருதல் வேண்டும். வாசிப்பு என்பது மேலோட்டமாய் வாசித்தல், ஆழமாய் வாசித்தறிதல் என்று இரு வகைப்படுகின்றன. சஞ்சிகைகள் மேலோட்டமாய் வாசிக்கப்படுகின்றது. அதுகூட மூளையின் ஏதோ ஒரு மூலையில் பதியப்பட்டு அவ்வப்போது எமது தேவைக்கு வெளிக்கொண்டு வரப்படுகின்றது. "கற்க கசடற கற்க" என்பது போல சந்தேகம் நீங்க கற்கும்போது ஆழ்மனதில் கற்கும் விடயம் ஆழமாகப் பதியப்படுகின்றது.

50

ஆரம்பக் கல்வியைத் தொடங்குவதற்குப் பாடசாலைக்கு வரும் மாணவன் ஏறத்தாழ 2700 க்கு மேற்பட்ட சொற்களைக் கற்றுக்கொண்டே வருகின்றான் என ஆய்வுகள் கூறுகின்றன. கற்கும் ஆவலுடன் வருகின்ற ஒரு சிறுவனின் மூளையானது வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டும்போது

மேலும் மெருகேற்றப்படுகின்றது. புதிய சொற்களைக் கற்கும் ஆர்வம் தேடலின் உச்சத்திற்குக் கொண்டுவிட வாசித்தலின் பெறுமதி ஊக்குவிக்கப்படுகின்றது. மொழிப்பயன்பாடு அதிகரிக்கின்றது. கற்றலில் மொழிச் செல்வாக்கு அதிகரிக்கின்றது. வாசித்தலில் ஊக்கம் குறைந்த மாணவன் கற்றலும் பின் தங்கி இருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

வாசித்தலுக்கு மனம், கண், நா, காது, மூக்கு, குரல் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் வாசித்தலுக்கு மன ஒருமைப்பாடு அத்தியாவசியமாகின்றது. வாய்விட்டு வாசிக்கும் போது ஏற்படுத்தப்படுகின்ற உச்சரிப்பானது வாய்மூடி மனதால் வாசிக்கின்ற போதும் எமது மனதினுள் ஒலிக்கும் எனவே கற்பிக்கின்றபோது உச்சரிப்பு சரியான முறையில் கற்பிக்கப்பட வேண்டும். வெறுமனே வாசித்துச் செல்லும்போது அதில் பயன் ஏதும் கிடைப்பதில்லை. பொருளுணர்ந்து மனதுள் ஆழப்பதிக்கும் போதே வாசிப்பு முழுமையுறுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாசிப்புப் பழக்கமானது பண்பாட்டு விழுமியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

கல்வியைப் பெறுவதற்கு காட்சி, அனுபவம், கேள்வி முதலிய பலவழிகள் உளவேனும், அவற்றுள் தலைசிறந்தது காட்சிப்படுத்தல் மூலம் கிடைக்கும் வாசித்தலே. செய்தித்தாளிலே, ஆசிரியர் குறிப்பு, உலகச்செய்திகள், விளையாட்டுத்துறை, பொது அறிவு, இலக்கியம், குறுக்கெழுத்துப் போட்டி போன்ற பலவிடயங்கள் அடங்கிக் காணப்படுவதனால், ஒவ்வொருத்தரும் தாம் தமக்கு விருப்பமான துறையைத் தெரிவுசெய்து வாசிக்கக்கூடியதாக இருக்கின்றது. செய்தி, கட்டுரை, விமர்சனம், அறிக்கை போன்றவை செய்தித்தாளில் இடம்பெறுவதால் இவை ஒவ்வொன்றின் வேறுபாடுகளையும் அறிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது. இன்று கணினித்துறை உலகமெல்லாம் மிகச்சிறந்த துறையாகக் கருதப்படுகின்றது. வாசித்தலுக்கு இலகுவானதாகவும் உலகம் முழுவதும் இருக்கும் விடயங்களைத் தேடி வீட்டினுள்ளே இருந்தபடி தேடிப் பெறமுடியாத பல புத்தகங்களை விரல் தட்டலின் மூலம் கண்முன்னே கொண்டுவந்துவிட முடிகின்றது. இப்போது கைக்கடக்கமான மின்சாரப்புத்தகம் (Electronic Book) பலர் கைகளில் தவழுகின்றது. தேவையான புத்தகத்தைக் கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து போகும் இடங்களுக்கெல்லாம் கொண்டு சென்று வாசிக்கக் கூடியநிலை ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறு வாசித்தல் மனிதர்களிடையே மேலும் மேலும் வளர்க்கப்படுகின்றது. சஞ்சிகையிலே வருகின்ற தொடர்கதையானது மக்களிடையே தொடர்ந்து வாசிக்கும்

பழக்கத்தைத் தூண்டுவதாக இருக்கின்றது. சிரிப்பதனால் நோய் தீரும். நகைச்சுவை துணுக்குகள் வாசகரைச் சிரிக்க வைத்து அவர்கள் மனதிலே மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஓமோன்கள் சுரக்கப்பட வாசித்தலும் ஒரு காரணமாக அமைகின்றது.

கணிதம், விஞ்ஞானம், மொழி முதலிய பாடங்களைக் கற்கும் மாணவன் ஒரு விவேகியாக இருந்தாலும் பொது அறிவு இலனாயின் அவனுடைய விவேகத்தால் முழுப்பயன் பெறமுடியாமல் போய்விடும். பாடநூல்களோடு பற்பல உலகச்செய்திகள் அறியும்போதே பரந்துபட்ட உலக அறிவு பெற்று உலகுக்கேற்ப வாழப்பழகிக் கொள்வான். பல்வேறுபட்ட கலாசார விழுமியங்களை வாசிப்பின் மூலம் அறிந்து கொள்வதுடன் நல்லன தீயன எவையெனப் பகுத்துணரும் பண்பைப் பெறும் அவனுள்ளம், விரிவடைகின்றது. எதிர்கால வாழ்வுக்குத் தம்மை ஆயத்தஞ் செய்து கொள்ளும் உன்னதநிலை உண்டாகின்றது. வாசித்தலைப் பொழுதுபோக்காகக் கொண்டிருக்கும் ஒரு மனிதன் வேறு தேவையற்ற எண்ணங்களுக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாதவனாகக் காணப்படுவான்.

எதிர்காலச் சிற்பிகள் அறிவாளிகளாகவும் உள்ளத்தால் உயர்ந்தவர்களாகவும் வளர வேண்டுமானால், கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பதற்கிணங்க, ஒவ்வொருவரும் நல்லனவென கண்டவற்றை வாசித்துக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதுவே அவனை வாழ்வின் உச்சிக்கு இட்டுச் செல்லும். ஆய்வுக்கு வழிவகுக்கும், புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ஊக்கமளிக்கும், புதுமை விரும்பியாக மாற்றும், சிறந்த சிந்தனைவாதிகளாகத் திகழவைக்கும்.

"கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என்னும் முதுமொழிக்கிணங்க நாலுங்கற்று உலகின் நாயகர்களாய்த் திகழ்வோம்.

# வாழவந்த நாட்டுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம்

தாய்நாடு ஒரு மனிதனுக்குத் தாயைப் போல் அமைகின்றது. ஒருவன் அந்தத் தாய்நாட்டை விட்டு வேறு நாட்டுக்குத் தஞ்சம் புகுந்தால், அந்த நாடு அவனுக்கு வளர்ப்புத் தாயைப் போல் அமையும். சொந்தத் தாயை விட்டுப் பிரிந்தவன், வளர்ப்புத் தாயை சொந்தத் தாயைப் போலவே கருதவேண்டும். தாய்க்குச் செய்யும் நன்றிக்கடனை வளர்ப்புத்தாய்க்கும் செய்யவேண்டும் அல்லவா? வாழுகின்ற நாட்டை விட்டுச் செல்லுகின்ற நிலை வந்தால், நிலத்திலிருந்து விட்டுச் செல்லுகின்ற போது பின்பக்கம் ஒட்டியிருக்கின்ற மண்ணைத் தட்டிவிட்டுச் செல்வது போல், அந்த நாட்டை மறந்து செல்லுதல் கூடாது. வாழவந்த நாடு உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு தந்து , உற்றார் உறவினர்கள் போல் நீ ஏன் வாழும் நாட்டு மொழி கற்கவில்லை? எனக் கேட்டு மொழியை இலவசமாகக் கற்பித்து, வாழ்வதற்கான வேலைவாய்ப்புக்களைத் தேடித் தருவதுடன் சகல வசதிகளும் தந்து தஞ்சம் புகுந்தவர்களைப் பாதுகாக்கின்றது.

தஞ்சம் புகுந்த நாட்டிற்கு வந்தவர்கள் தமக்குக் கிடைக்கின்ற வருமானத்தில், கிடைக்கும் அரசாங்க உதவிகளில் மிச்சம்பிடித்து, தாய்நாட்டில் இருக்கும் உறவினர்களுக்கு அனுப்புகின்றார்கள். இப்படிச் செய்கின்ற போது அந்த நாட்டுக்கு அந்நியசெலாவணி அதிகரிக்கின்றது. இப்படிப் பார்க்கும்போது வாழவந்த நாடு தஞ்சம் புகுந்தவர்களுக்கு உதவி செய்வதுடன், அவர்கள் உறவினர்கள், அவர்கள் தாய்நாடு போன்றவற்றிற்கும் உதவுகின்றது. அகதிகளைக் காப்பது புகுந்த நாட்டின் கடமை அல்ல. அது ஒரு மனிதாபிமான செயல். இந்த மனிதாபிமானம் காட்டும் நாட்டுக்கு அகதிகளாய் வந்தவர்கள் என்ன செய்ய வேண்டும். சிலர்

51

உடலில் வலிமையும், வயதும் இருந்தும் உடம்பை வளைத்துப் பணி செய்யாது, வீட்டில் அடைந்து கிடந்து சோம்பேறிகளாக யாருக்கும் பயனற்றவர்களாக வாழுகின்றார்கள். வேலை செய்து கிடைக்கும் வருவாயை விட வேலை செய்யாமலே ஆடம்பர வாழ்க்கை கிடைக்கும் சந்தோசத்தில் வாழுகின்றார்கள். குழந்தைகள் அதிகமாகப் பெறுகின்றபோது குழந்தைகளுக்காக அரசாங்கம் வழங்கும் பணம் (Kindegeld) அதிகரிக்கின்றது. முதல் இரண்டு பிள்ளைகளுக்குக் கிடைக்கும் பணத்தைவிட மூன்றாவது பிள்ளைக்கு அதிகமான பணம் வழங்கப்படுகின்றது. அதனால், குழந்தை உற்பத்தி சிறந்த உற்பத்தி எனக் கருதி அத்தொழிலிலேயே ஈடுபட்டு விடுகின்றனர். இந்தக் குழந்தைகள் நாட்டுக்கு உதவுகின்ற பிள்ளைகளாக வளர்க்கப்பட்டால்,குழந்தை உற்பத்தி பலனைத் தரும். ஆனால், பெற்ற குழந்தைகளையே சரியானமுறையில் வளர்க்கத் தெரியாது வளர்க்கும்போது அவர்களால் நாட்டுக்கு நன்மையா? தீமையா? ஏற்படும்.

சரியான முறையில் பிள்ளைகள் வளர்க்கப்படாத போது கிரிமினல்களும் நாட்டைப் பழுதடையச் செய்பவர்களும் அதிகரித்து விடுகின்றனர். இந்த நாட்டவர்கள் இப்படியான தவறுகளைச் செய்தால் பொறுத்துக் கொள்ளலாம். வாழ வந்தவர்கள் செய்யலாமா? உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமா? களவு செய்தல். அரசாங்க உடைமைகளைப் பழுதடையச் செல்தல், உதாரணமாக, பஸ், புகைவண்டியில் இருக்கையில் காலணி அணிந்த காலைத் தூக்கி வைத்தல், ஆயுதங்களால் இருக்கைகளை கிழித்தல், கூரான ஆயுதங்களால் அரசாங்க உடைமைகளில் கீறுதல், வீதிச் சுவர்களில் தேவையற்ற படங்களை வரைதல் போன்றவை. இவ்வாறான வேலைகளைச் செய்யும் போது அரசாங்கம் இதைத் திருத்துவதற்கு மேலதிகச் செலவுகளைச் செய்யவேண்டி ஏற்படும். இது அகதிகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட செலவுடன் மேலதிக செலவை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைகின்றது. சிந்திக்கத் தெரியாத எதிர்காலப் பார்வை இல்லாத பெற்றோர்களுக்கு புத்தி சொல்ல வேண்டிய பொறுப்பு ஆசிரியர்கள், சமூகநல சேவையாளர்கள், ஆலோசகர்களையே சாரும். நாட்டுப்பற்றும் சூழல் பற்றும் மனிதனுக்கு அவசியம். "நாடு என்ன செய்தது எனக்கு என்று கேள்விகள் கேட்பது எதற்கு? நீ என்ன செய்தாய் அதற்கு என்று நினைத்தால் நன்மை உனக்கு" என்ற பாடலைப் போல் பிறர் எமக்குச் செய்ய வேண்டும் என்பதை விடுத்து நாம் பிறருக்குச் செய்ய வேண்டும் என்று நினைத்துப் பார்ப்போம். சுயநலவாதிகளால் ஒரு நாடு முன்னேற்றம் காணாது. பொதுநலவாதிகளே ஒரு நாட்டைக் கட்டிக் காக்கக் கூடியவர்கள்.

கற்பிக்கும் பாடங்களின் ஊடாக ஒழுக்க முறைகளைக் கற்பித்தல் வேண்டும். வன்முறைகளை வெளிப்படுத்துகின்ற பிள்ளைகளைச் சரியான புத்திமதிகளைக் கூறித் திருத்த வேண்டும். அதிகமான கண்டிப்பும் கூடாது. கண்டிப்பு அதிகரித்துவிட்டால், கண்டிப்பவர்கள் இல்லையென்றால், பிள்ளை தவறுகளை அதிகமாகச் செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றது. பொருள்களை உடைக்கும், தனது சேட்டைகளைப் பிற பிள்ளைகளிடம் காட்டும். அம்மாவின் உறவு பிள்ளைகளுக்கு அவசியம். எவ்வாறான அவசிய வேலைகள் இருந்தாலும், அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு பிள்ளைகளுடன் உறவாட வேண்டும். அவர்களைச் சிரிக்கவைக்க வேண்டும். நல்ல விதையிலிருந்தே நல்ல மரம் வளரும். அதை மனதில்கொண்டு பிள்ளைகளை வளர்த்தால், எந்த நிலையிலும் அவர்களுக்கு மனநோய்கள் வருவதற்குரிய வாய்ப்புகள் இல்லை. சிறுவயதில் கவனிக்காமல் விட்டுவிட்டு வளர்ந்தபின் ஐயோ! என்மகன் கெட்டுப் போய் விட்டானே என்று கலங்குவதில் பயனில்லை. சொல்லுக்கு இருக்கும் சக்தி வேறு எதற்கும் இல்லை. சொற்களை நாம் சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் மனங்களை வெல்லலாம். மனங்களை வென்றெடுக்கும் போது அறிவுரைகள் பலிக்கும்.

நாம் வாழுகின்ற நாட்டிலே அடிப்படை உணவு, சுகாதார வசதிகளுடன் வாழ்வதற்குரிய பொருள்கள் குறைவான விலையில் கிடைக்கின்றன. ஏனென்றால், நாடு சுத்தமாகவும் நாட்டிலுள்ள மக்கள் சுகதேகியாகவும் வாழவேண்டும் என்பதற்காகவே ஆகும். இவற்றைச் சரியான முறையில் வெளிநாட்டவர்கள் பயன்படுத்தல் வேண்டும். இதைவிடுத்து சுகத்தைக் கெடுக்கும் மதுபானம், சிகரெட், Drogen போன்றவற்றைப் பாவித்து குற்ற வேலைகள் செய்து நாட்டைச் சீர்குலைப்பதனால், தொலைக்காட்சியும் die Ausreißer (வீட்டை விட்டு வெளி யேறியோர்) Teenager außer Kontrolle (கட்டுப்பாடற்ற பருவ வயதினர்) die Mädchen gang போன்ற நிகழ்ச்சியும் நடத்தவேண்டியது அவசியமாகின்றது.

எனவே ஒவ்வொரு மனிதர்களும் எதிர்கால வாழ்க்கையை மனதில் கொண்டு தாம் சரியானமுறையில் நடந்து தம்மை ஏற்றுக்கொண்ட நாட்டுக்கு நன்றியுள்ளவர்களாக நடந்து தமது பிள்ளைகளைச் சிறப்பான முறையில் வளர்த் தால் வாழவந்த நாடு நம்மை ஏற்றுக் கொண்டதற்கு நன்றியுள்ளவர்களாவோம்.

# கார்னிவால் (Karneval) கொண்டாட்டம்

Rosenmontag அன்று திங்கட்கிழமை. ஜேர்மனி முழுவதும் விடுமுறைநாள். அன்றுதான் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம். வருடாவருடம் Rosenmontag என்று அழைக்கப்படும் இந்நாளில் தம்மை வேறுவிதமாகக் காட்டும் மக்கள் விதம்விதமான ஆடை அலங்காரங்களில் தம்மை மாறுபடுத்தியிருப்பர். - பாகை குளிரிலே காட்டு மிருகங்கள் எல்லாம் நாட்டில் நடமாடுவது போல் காட்சியளிக்கும். அரசி, அரசர்கள் எல்லோரும் வீதியில் வலம் வருவது போல் தோன்றும். முகங்களிலே பல வண்ணங்கள் பூசி வண்ணக்கலவையாக மக்கள் காட்சியளிப்பார்கள். நிறுவனங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்று எங்கும் கொண்டாட்டம் களைகட்டியிருக்கும். மொத்தத்தில் ஜேர்மனி முழுவதும் கண் கவரும் வண்ணங்களில் காட்சியளிக்கும். சிறியவர்கள், இளையவர்கள், பெரியவர்கள், வயதானோர் என்ற பேதமின்றி அனைவரும் மாறுபட்ட தோற்றத்தில் தம்மை அலங்கரித்து சின்னக் குழந்தைகளாக சிறகடிப்பார்கள். எல்லோரும் இப்படிக் காணப்படுவதனால், விசித்திரமாக யாரையும் யாரும் பார்ப்பது கிடையாது.

பலவிதமாக இக்கொண்டாட்டம் நடைபெறுகிறது. ஊர்திகள், முகமூடிகள், விநோத ஆடைகள், கலை நிகழ்வுகள் என இந்நிகழ்வு அழகு பெறுகிறது. பற்பல நிறுவனங்களின் ஊர்திகளிலே இனிப்புப் பண்டங்களையும், வேறுவிதமான பொருள்களையும் மக்களை நோக்கி எறிந்த வண்ணம் பவனி வருவார்கள். வீதியில் பார்வையாளர்கள் அவற்றைப் பொறுக்கி எடுத்து மகிழ்வார்கள். குடைகளை மறுபக்கமாக விரித்து எறிகின்ற பண்டங்களைச் சேகரிப்பதும் ஒரு சுவாரஷ்யமான காட்சியாகும். இங்கு பஞ்சத்தில்

52

இருப்பவர்கள் மாத்திரம் பொருள்களைப் பொறுக்கி எடுப்பதில்லை. போட்டி போட்டு பொறுக்குவதற்கு சிறியவர்கள் மகிழும்போது பெரியவர்கள் ஒத்தாசை புரிவார்கள். வீட்டில் சிறியவர்கள் இல்லாத பெரியவர்கள் வீதியில் நிற்கும் சின்னஞ் சிறுசுகளின் பைகளை நிரப்புவதற்கு முனைந்து நிற்பார்கள்.

இவ்விழா லத்தீன் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது. 5000 ஆண்டுகளுக்கு முன் முன்னோடிக் கலாசாரத்தைத் தோற்றுவித்த மொசப்பதேமியாவில் இவ்விழா கொண்டாடப்பட்டிருக்கிறது என்று அறியப்படுகின்றது. ரோம், கனடாவிலுள்ள கியூபெக், தென் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இவ்விழா நடைபெறுகின்றது. ஒவ்வொரு நாடுகளும் ஒவ்வொரு காரணங்களுக்காக இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர். பழங்கால ரோமாபுரியில் வேளாண்மையைக் கடவுளுக்குக் கொடுத்த விழாவாகக் கொண்டாடப்பட்டது.

தற்காலத்தில் ஜேர்மனியில் இவ்விழா கொண்டாடப்படுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. போரிலே பிரான்ஸ் நாட்டவரைத் தோற்கடித்தமைக்காகக் கொண்டாடப்படுவதாகவும், மாரி காலத்தைத் துரத்தியடிப்பதற்காகக் கொண்டாடப்படுவதாகவும் காரணங்கள் கூறப்பட்டாலும் ஒரு வலுவான காரணம் ஏற்றுக்கொள்ளப்படுவதாக உள்ளது.

ஈஸ்டர் விழா (Osterfest) விற்கு முன் 6 கிழமைகள் கிறிஸ்தவர்கள் விரதம் அனுஷ்டிப்பார்கள். சாம்பல் பெருநாள் (Aschenmittwoch) அன்று தொடங்கி 6 கிழமைகளின் பின்வரும் பெரியவெள்ளி (Karfreitag) வரை இவ் விரதம் அனுஷ்டிக்கப்படும். அதனால் அதற்கு முதல் இவ்வாறு ஆடிப்பாடிக் குடித்து மகிழ்வார்கள். பின்னே வரும் மன அடக்கத்திற்கு முன் ஆசைகள் எல்லாவற் றையும் அனுபவிப்பார்கள். மனதை இவ்வாறெல்லாம் குதூகலப்படுத்துவார்கள். பியர் விலைப்படும், ஆடை விற்பனை நிலையங்கள் ஆனந்தத்தில் குளிக்கும்.

விரதம் என்னும்போது சாப்பிடாமல் ஆறு கிழமைகளும் கோயிலில் போய் அமர்ந்திருந்து அனுஷ்டிப்பதில்லை. ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடித்தது போலவும் தம்மால் முடிந்தது போலவும் விரதம் இருப்பார்கள். சிலர் இறைச்சியை, சிலர் மதுபானங்களை, சிலர் இனிப்புப்பண்டங்களை, சிலர் டிஸ்கோ போன்று ஒவ்வொருவரும் தத்தமக்கேற்றது போல் ஒன்றைத் தவிர்த்து இவ்விரதத்தை அனுஷ்டிப்பார்கள்.

இது ஒரு சமய சம்பந்தப்பட்ட விழாவானாலும் கொண்டாடுபவர்கள் அனைவரும் இக்காரணத்தை மனதில் பதித்துக் கொண்டாடுவது இல்லை.

குடித்துக் கும்மாளமிட்டு கூத்தடித்து மகிழ்ச்சியை வெளிச்சமிட்டுக் காட்டும் மனநிறைவான நிகழ்வாகவே கருதுகின்றார்கள். இன்றையநாள் மனதிலுள்ள மன அழுத்தங்கள் எல்லாம் என்னை விட்டுவிடு என்று தலையில் கைவைத்து ஓடிவிடும். மொத்தத்தில் இவ்விழா காண்பவர்கள் கண்களுக்கு விருந்தளிக்கும் விழா என்று கூறுவதில் சந்தேகமே இல்லை.


**இந்நிகழ்வின் மூலம் என் மனச் சிந்தனை:**

வருடம் ஓர் நாள் தம் கவலைகள் மறந்து ஜேர்மனியர் களித்திருக்கும் நாள். கலாசாரப் போர்வைக்குள் நுழைந்து மனதுக்குள் மறைந்துள்ள ஆசை களை துடிப்புகளை மறந்து எம்மவர் துடிப்போடு துள்ளித் திரியவேண்டிய காலங்களில் கூட துவண்டு கிடப்பது எதனால்? அவர் என்ன சொல்வார் இவர் என்ன சொல்வார்? என்னும் எண்ணப்போக்கே. வாழுகின்ற வாழ்க்கை ஒன்றே. இப்பூமியில் பெற்றோர் இன்பத்தின் வழி நாம் வந்து பிறந்துவிட்டோம். செல்களின் தொகுப்பில் வடிவம் பெற்றோம். சில காலங்களே வாழ்கின்றோம். பின் மண்ணோடு மண்ணாகி மறைந்து போகின்றோம். பார்வைக்குத் தூரச் செல்லும் வாகனம்போல் மெல்ல மெல்ல எங்கள் பற்றிய நினைவுகள் எங்களைச் சார்ந்தவர்களை விட்டு மறைந்து விடுகின்றது. மறுபிறப்பு எமக்கு உண்டு என்னும் நம்பிக்கை அற்ற ஒரு எண்ணத்துடன் வேறு ஒரு வடிவமாகவும் வாழ்வாகவும் வரப்போகின்ற ஒரு வாழ்வை எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வை அடக்கி வாழ்கின்றோம். தெரிந்தோ தெரியாமலோ புரிந்தோ புரியாமலோ எம்மவர் இப்படித்தான் வாழவேண்டும் என்பது விதியாகிப் போனது.

தினம் ஒன்று எம்மை எல்லாம் மறந்து குழந்தைகளின் குதூகலத்தோடு நாமும் குழந்தைகளாய் மாறி ஒரு நாளை களிப்பதற்குக் கூட நாம் தயங்கு கின்றோம். ஆனால் வெள்ளையர்கள் அனுபவிக்கப் பிறந்தவர்கள். அதனால் நீண்டகாலம் வாழும் பாக்கியம் பெற்றவர்கள். எம்மைப்போல் வரப்போகும் துன்பம் கருதி இன்றே கவலையில் ஆழ்ந்திருக்கும் கவலை அவர்களுக்கு இல்லை. திட்டமிட்டுத் தம் வாழ்க்கையை சீராகக்கொண்டு செல்கின்றார்கள். வருடம் குறைந்தது ஒரு தடவையாவது சுற்றுலா சுற்றி வந்து ஒரு வருட மன அழுத்தத்தை நீக்கி விடுகின்றனர். அதற்கான திட்டத்தை வருட ஆரம்பத்திலேயே போக்கி விடுகின்றனர். இவ்வாறான விழாக்களின் மூலம் மனச்சுமையை இறக்கி வைக்கின்றார்கள்.

வாழப் பிறந்த வாழ்க்கையை இன்பமாக வாழ எத்தனிப்போம்.

# ஜேர்மனிய கல்விமுறை




கல்வி என்பது அனைத்து நாடுகளிலும் சகலருக்கும் ஊட்டப்படும் அறிவு ஊக்குவிப்பு உணவே. அதனை உலகநாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான கல்வித்திட்டங்களை உருவாக்கி அதற்கமைய அறிவைப் போதிக்கின்றன. ஜேர்மனியநாடு அறிவென்னும் அங்குசத்தை மக்களுக்கு விதைப்பதற்கான கல்விமுறையினை வகுத்திருக்கும் பாங்கினை இக்கட்டுரையிலே நோக்குவோம்.

இங்கு ஒரு குழந்தை 2 வயது வரும்போது மழலைகள் பாடசாலைக்குச் (Kindergarten) செல்வதற்கு ஆயத்தமாகிவிடும். பெற்றோர்கள் பிள்ளைகள் பிறந்தவுடன் பிள்ளைகள் பற்றிய விபரத்தை இளையோருக்கான நிறுவனத்தில் (Jugendamt) பதிவுசெய்து விடுவார்கள். அந்நிறுவனம் பிள்ளை இப்பாடசாலைக்குச் செல்வதற்கான வயது வரும்போது, அவரவர்

53

வீட்டிற்கு அருகாமையிலுள்ள மழலைகள் பாடசாலைகளைப் பெற்றோருக்கு அறிமுகப் படுத்தும். அப்போது பெற்றோர் தமது பிள்ளைக்குச் சௌகர்யமான மழலைகள் பாடசாலையைத் தெரிவு செய்வார்கள். அங்கு பிள்ளையைப் பதிவு செய்து அனுப்புவார்கள்.

இங்கு 2 வயதிலிருந்து 6 வயது வரை பிள்ளையானது பிற பிள்ளைகளுடன் இணைந்து கல்வியைத் தொடர்வதற்காகவும் ஆளுமையுள்ள ஒரு பிள்ளையாக வளர்வதற்குமான பயிற்சியளிக்கப்படும். இப்பயிற்சியில் விளையாட்டுக்கள், மைதானத்தினுள்ளும் வகுப்பறையினுள்ளுமென நடைபெறுகின்றன. அத்துடன் பிள்ளைகள் மனநிலையைப் புரிந்துகொள்ளும் வகையில் படம் வரைதல், நிறந்தீட்டுதல் போன்ற கலைப்படைப்புக்களும் கற்றுத் தரப்படும். சுதந்திரமாகத் தொழிற்பட்டு கற்றல் விளையாட்டுடன் நடைபெறுவதனால், இம்மழலைகள் பாடசாலைக்குச் செல்வதற்குப் பிள்ளைகள் தயங்குவதில்லை. இங்கு அதிகார அடக்குமுறையில்லை. எழுத்து வாசிப்புக் கற்பித்தல் இல்லை. பிள்ளைகளை அருகில் இருத்தி கதைகள் வாசிப்பதும், பாடல்கள் சொல்லிக் கொடுப்பதும், நடனத்துடன் இணைந்த பாடல்கள் பழக்குவதுமான நடைமுறைகள் காணப்படுவதனால், இம்முறையானது பிள்ளைகளைக் கவர்கின்றது. இங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் அரவணைப்பில் உணவு உண்ணும் முறை, பற்துலக்கும் முறை, தொடர்புடைய பிள்ளைகளுடன் உரையாடும் முறை போன்றவை சிறப்பாக பயிற்றுவிக்கப்படும். அதாவது பிள்ளைகள் கல்வியில் அடியெடுத்து வைப்பதற்கான ஆயத்தம் இங்கு சரியான முறையில் வழங்கப்படும்.

இதன்பின் கோடை விடுமுறை முடிந்து (கிட்டத்தட்ட புரட்டாதி மாதம்) புதிய கல்வி ஆண்டு ஆரம்பிக்கும் போது பிள்ளை 6 வயதாகியிருக்கும் பட்சத்தில் அப்பிள்ளை ஆரம்பக்கல்வி தொடர்வதற்கு ஆயத்தமாகும். இப்போதும் இளையோர் நிறுவனம் (Jugendamt) இவர்களுக்கான பாடசாலைகளை அறிமுகப்படுத்தும். பெற்றோரும் தமது வீட்டிற்கு அருகாமையிலுள்ள பாடசாலை களில் தமது பிள்ளையைப் பதிவு செய்து வைப்பார்கள். அதில் ஒன்றில் இடம் கிடைக்கும் பட்சத்தில் பிள்ளை அடிப்படைக்கல்வியைத் தொடர அனுமதி கிடைக்கும்.

அடிப்படைக்கல்வி வகுப்புத் தொடங்கி 4 ஆம் வகுப்பு வரை தொடரும். இக்காலப்பகுதி பிள்ளைக்கு 6 வயது தொடங்கி 10 வயதுவரையுள்ள காலப்பகுதியாகும். இப்பாடசாலையில் எழுத்து, வாசிப்பு, கணக்கு, சுயமாகக் கற்றல், இசை, இசைக்கருவி, விளையாட்டுக்கள், ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, சுயாதீனமாகத் தொழிற்படல், போன்றவை கற்பிக்கப்படும்.

மூன்றாவது கல்வியாண்டு சுற்றுலா மேற்கொள்ளப்படும். பெற்றோரை விட்டுப் பிள்ளைகள் தனிமையில் தமது தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கான தைரியத்தை வளர்க்கும் நோக்கினையும், சக மாணவர்களுடன் நட்புரிமையுடன் பழகும் பண்பினை வளர்க்கும் நோக்கினையும் கொண்டு இச்சுற்றுலா மேற்கொள்ளப்படும். சிறுவர்கள் சுற்றுலா இடத்திலிருந்து தமது கைப்பட கடிதம் ஒன்றை வரைந்து தமது பெற்றோருக்கு அனுப்பி வைப்பார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளுடன் உரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

இப்பாடசாலையில் முதன்முதலாக வெளிநாட்டு மொழி கற்பிக்கப்படும். பொதுவாக ஆங்கிலமொழி இப்பாடசாலையிலேயே ஆரம்பிக்கப்படுகின்றது.

போக்குவரத்து நடைமுறைகள், மிதியுந்து சவாரிப் பயிற்சிகளும் இக்காலப் பகுதியிலேயே கற்பிக்கப்படுகின்றன.

இப்பாடசாலையானது பாடசாலைப் படிமுறையின் முதற்கட்டமாக அமைகின்றது. Grund Schule என்று அழைக்கப்படுகிறது. இங்கு வகுப்பில் கற்றல் திறன் குறைந்த மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களின் கற்றல் திறன் குறைந்த முக்கிய பாடங்களுக்கு மேலதிக பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இதைவிட ஒவ்வொரு பாடசாலையிலும் Offene Ganztagsschule அமைந்திருக்கின்றது. இது காலை 7.30 தொடக்கம் 16.00 மணிவரை திறந்திருக்கும். இது பாடசாலையில் ஒரு பக்கத்தில் அமைந்திருக்கும் அவ்வப் பாடசாலைக்குரிய ஒரு கட்டிடமாக இருக்கின்றது. இங்கு வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் அல்லது பாடசாலை வீட்டுவேலைகளை (Hausaufgaben) பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது கடினமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இங்கு விடுவார்கள். பிள்ளைகளும் பாடசாலை 8.10 க்கு ஆரம்பிக்கும் முன்னும் பாடசாலை விட்டபின்னும் 16.00 மணிவரை இப்பாடசாலையிலேயே இருப்பார்கள். இங்கு பிள்ளைகளுக்கான மதிய உணவு வழங்கப்படுகின்றது. விளையாட்டுக்கள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. வீட்டுப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. 1 தொடக்கம் 4 ஆம் வகுப்பு வரையுள்ள இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள், புள்ளித் தராதரம் அடிப்படையில் Sekundestufe 1 க்கு அனுப்பப்படுகின்றார்கள்.

ஒவ்வொருவருடமும் இரண்டு பரீட்சைச் சான்றிதழ்கள் வழங்கப்படும். இவற்றில் முதலாவது ஆண்டு புள்ளிகள் அற்று பிள்ளையின் வகுப்பு


நடைமுறைகளை ஆசிரியர் கவனத்தில் கொண்டு அவற்றை எழுதிக் கொடுப்பார். அடுத்துவரும் ஒவ்வொரு வருடமும் அரையாண்டுச் சான்றிதழும் இறுதி ஆண்டுச் சான்றிதழும் வழங்கப்படும். இதற்காக இக்காலப்பகுதியில் இடையிடையே பரீட்சைகள் வைக்கப்பட்டு அப்புள்ளிகளைச் சேகரித்து, அப்புள்ளிகளின் அடிப்படையிலும், வகுப்பிலே ஆசிரியர் கற்பிக்கும் போது பிள்ளையின் இணைந்த செயற்பாடுகளையும் அதாவது வாய்மொழி பதிலிறுத்தலையும் அவதானித்தும் சான்றிதழுக்கான புள்ளிகள்


1 (sehrgut), 2(gut), 3(befriedigend), 4(ausreichend), 5(mangelhaft), 6(ungenügend) என எண்களிட்டு வழங்கப்படும். 1அதிதிறமையையும் 6 போதாமையையும் எடுத்துக்காட்டுகின்றது. 1,2,3, புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஏனையவை போதாமையைக் குறிக்கும்.

4ஆம் ஆண்டு அரையாண்டு சான்றிதழின் அடிப்படையில் 5 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தெரிவுசெய்யப்படும். 4ஆவது வருட அரையாண்டு சான்றிதழின்போது வகுப்பாசிரியர் மாணவர்களின் பெற்றோரைத் தனிப்பட்ட முறையில் அழைத்து அவரவர் எப்பாடசாலைக்குப் பதிவு செய்வதற்கான தகுதியைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதை விளக்கிச் சொல்வார். அதன்படி பெற்றோர் பிள்ளைகளை அடுத்துவரும் கல்வி ஆண்டுக்கான பாடசாலைகளைத் தெரிவு செய்வார்கள். அவை தொடர்முன்னணிப் பாடசாலை (weiterführendeschule) என்று அழைக்கப்படுகின்றன.

அவை Gymnasium, Realschule, Gesamtschule, Hauptschule என நான்காகப் பிரிக்கப்படும்.

இதைவிட Sonderschule என்னும் பாடசாலையில் மூர்க்கத்தனமான கற்றல் கடினமான, அல்லது வலது குறைந்த பிள்ளைகள் கற்பதற்காக அனுப்பப்படுகின்றனர்.





இப்பாடசாலையின் படி முறைகள் Primarstufe Sekundestufe 1, Sekundestufe 2 Zweiter Bildungsweg எனச் செல்கின்றன.

## Sekundestufe 1:

இப்பாடசாலைகளே அடிப்படைக் கல்விக்கும் பல்கலைக்கழகக் கல்விக்கும் இடைப்பட்ட பாடசாலைகளாகக் காணப்படுகின்றன. இப்பாடசாலைகளிலேயே மாணவர்கள் தம் எதிர்கால வாழ்க்கைக்குத் தம்மைத் தயார்ப்படுத்தும் நடைமுறைகளில் ஈடுபடுவர். ஆசிரியர்கள் ஏனைய நிறுவனங்கள் போன்றவை அவர்களை நெறிப் படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.




இப்படிமுறையிலேயே 5 தொடக்கம் 10 வரையுள்ள வகுப்புக்கள் அடங்குகின்றன. பாடசாலைகளும் Gymnasium, Realschule, Gesamtschule, Hauptschule என நான்காகப் பிரிக்கப்படுகின்றன. 9 அல்லது 10ஆம் வகுப்பில் பாடசாலை இப்படிமுறை முடிவடைந்துவிடுகின்றது.

## Sekundestufe 2:

11 தொடக்கம் 12 வரையுள்ள வகுப்புகள் இப்படிமுறையில் அடங்குகின்றன. இக்கல்வியை Abitur என்று அழைப்பார்கள். இவ்வகுப்புக்களை Gymnasium, Gesamtschule என்னும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அப்பாடசாலையிலேயே தொடர வாய்ப்பிருக்கின்றது. ஆனால், Hauptschule, Realschule என்னும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள், 10 ஆம் வகுப்பை சித்தியடைந்திருந்தால் Gymnasium, Gesamtschule ஆகிய இவ்விரண்டு பாடசாலைகளில் ஏதாவது ஒரு பாடசாலையில் தமது Abitur கல்வியைத் தொடர்வார்கள். அல்லது Hauptschulabschluss, Realschulabschluss பெற்று தமது தகுதிக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவுமான தொழிற்கல்விக்கான பயிற்சியைப் பெறுவதற்குத் தயாராவார்கள். இதுபற்றிப் பின் விபரமாகப்

பார்க்கலாம். Gymnasium, Gesamtschule ஆகிய இவ்விரண்டு பாடசாலைகளிலும் தமது Abitur செய்வதற்குரிய தராதரத்தைப் பெற்றிருக்காத பட்சத்தில் beruflichen Schulformen, Berufskollegs, Fachoberschulen oder Berufsoberschulen சென்று தமது தொழில் வாய்ப்புக்கான கல்வியைத் தொடர்வார்கள். அல்லது இங்கு Abitur செய்து பல்கலைக்கழகம் செல்வதற்குரிய வாய்ப்பைப் பெறுவார்கள்.

Zweiter Bildungsweg :

கல்வியைப் பாடசாலைகளில் தொடராது விட்டவர்கள், வேறு நாடுகளில் இருந்து வந்தவர்கள், பாடசாலைக் கல்விக்குரிய வயதைக் கடந்தவர்கள், இங்கு கல்வி கற்பதற்குரிய வாய்ப்பைப் பெறுகின்றனர் Hauptschulabschluss, Realschulabschluss, பெறவும், Abitur திரும்பப் படிப்பதற்கும் பல்கலைக்கழகம்



செல்வதற்கும் வாய்ப்பிருக்கின்றது. இது இரவுப்பாடசாலையாகவும் volkshochschule போன்ற தனிப்பட்ட பாடசாலைகளாகவும் அமைகின்றன. இங்கு பலவித மான பாடப்பிரிவுகள் கற்பிக்கப் படுகின்றன.

ஒவ்வொரு மாணவர்களும் 18 வயதுவரை கட்டாயக்கல்வி கற்கவேண்டியது அவசியமாகின்றது. இதற்கு ஒவ்வொரு பிள்ளைகளின் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் பொறுப்பாகின்றார்கள். இக்கட்டுப்பாடு ஜேர்மனிய வதிவிட உரிமை பெற்ற பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, இங்கு வாழுகின்ற அனைத்து வெளிநாட்டுப் பிள்ளைகளுக்கும் கூட இருக்கின்றது.

இவ்வாறு ஜேர்மனிய கல்விமுறை அமைகின்றது. ஜேர்மனிய நாட்டிலே எத்தனை வயது கடந்தாலும் கல்வி கற்று முன்னிலையில் திகழ்வதற்குரிய வசதி வாய்ப்புக்கள் இருக்கின்றன.

# கூட்டை விட்டு வெளியே வாருங்கள்

சிலர் தம்மைச் சுற்றி ஓர் கோட்டை வரைந்து அதன் உள்ளே வாழ்ந்துகொண்டு வெளியே வர வழியின்றித் தவிக்கின்றார்கள். இது தான் வாழ்க்கை எனத் திட்டம் தீட்டுகிறார். வாழ்வின் விடியலைச் சுற்றியுள்ள கோட்டினுள்ளே சுற்றிச் சுற்றித் தேடுகிறார். செக்கிழுக்கும் மாடு போல் குறித்த இடத்திலேயே சுற்றி வந்து தரிக்கிறார். வலைக்குள் அகப்பட்ட மீனால் நீந்தமுடியாது. பெட்டிக்குள் அடைக்கப்பட்ட நாகத்தால் சீறமுடியாது. குகைக்குள் உறங்கும் சிங்கத்தால் சீற்றம் கொள்ள முடியாது: எமக்குள்ளே தூங்கிக் கொண்டிருக்கும் திறமையைத் தட்டி எழுப்பி வீறுநடை போடச் செய்தால், எந்தக் கூட்டையும் தாண்டி வெளிவரும் உத் வேகம் தோன்றும்.

மதங் கொண்ட யானையை அடக்கும் அங்குசம் போல், மனத்துள் தாழ்வு மனப்பான்மை என்னும் அங்குசம் வெற்றிப் பாதையை நோக்கி இலட்சியத்துடன் செல்லும் மனதை அடக்கும். அதை அழித்து எடுக்கும் முயற்சிகள் வெற்றி காண்பது நிச்சயம்.

"தையலை உயர்வு செய்" என்று பெண்ணடிமை உடைக்கப் பாரதி ஏடெடுக்கவில்லையானால், அடிமை விலங்கை உடைக்கப் பெண்கள் முன்வந்திருப்பார்களா? அடிமைப்படுத்தப்பட்ட பெண் தன் ஆக்ரோஷத்தை ஆணித்தரமாக வெளிப்படுத்த முடிந்திருக்குமா? "உன்னையே எண்ணிப்பார்" என்று சோக்ரடீஸ் சொன்னது போல் உங்களுக்குள்ளே என்ன இருக்கின்றது எனத் தோண்டிப்பாருங்கள்.

54

உள்ளத்துள் உறங்கிக் கிடக்கும் உண்மைகளை, அனுபவங்களை, தத்துவங்களைக் கொட்டித் தீருங்கள். பெரிய

வனாந்திரத்தையே கொழுத்திவிடும் தீக்குச்சி போல் எழுத்தாணி கொண்டு மடமையை நீக்குங்கள். குறுகிய மனப்பான்மையுடன் கூனிக் குறுகி நிற்காது, பரந்துபட்ட மனத்துடன் பலவற்றைச் சிந்தியுங்கள். கனி தரும் விருட்சங்களாக வியாபித்திருந்து வேலி போட்டு வாழாது, வேலியைத் திறந்து விடுங்கள். கனிகள் பலரின் பசி தீர்க்கும் உணவாகட்டும். அவர்கள் உண்ட களிப்பில் நீங்கள் இன்பங் காண்பீர்கள்.

உங்களை இருகரம் கொண்டு வரவேற்கக் கணினி காத்திருக்கின்றது. அந்த இலத்திரனியல் உங்கள் இரும்பு வரிகளையும் பொன் வரிகளாக்கிக் காட்டும்.

## எழுந்திடு பெண்ணே! எழுந்திடு!

உன் இமைக் கதவுகளை இழுத்து மூடாதே
உன் இதயமது இருண்டுவிடும்
உன் பஞ்சுமெத்தையிலே முட்கள் பரந்து கிடக்கட்டும்
உன் இருக்கையிலே இரும்பு ஆணிகள் நிமிர்ந்து நிற்கட்டும்
தூங்கிவிடாதே தூரிகை கொண்டு உன் வாழ்வோவியம் தீட்டு
பாதையிலே ரோஜாக்கள் மட்டும் விரிந்து கிடப்பதில்லை
கல்லும் மண்ணும் விதந்து கிடக்கும் பூமியிலே
வீர நடை போட்டு நிமிர்ந்து செல்
உன் இரத்தச்சுவடுகள் இரத்த சரித்திரம் பேசட்டும்
பூமியைச் சுருட்டி எடுத்து உருட்டி விளையாடு
நச்சுப்பாம்புகள் அதில் நசுக்கப்படட்டும்
மறைந்த உண்மைகள் விஸ்வரூபம் எடுக்கட்டும்
பெண்ணே!

உன் மானிடப்பிறப்பு மாய்ந்து விடுவதற்காகவல்ல
காலத்தை வென்று காவியம் படைக்க

# கோபம்

**கோ**பம் என்பது உணர்ச்சிகளின் வெளிப்பாட்டின் ஒரு அங்கமே ஆகும். கோபதாபங்கள் ஏற்படாத மனிதர்கள் யாருமில்லை என்று சொல்லிவிடலாம். முற்றுந்துறந்த முனிவர்கள்கூட கோபத்தால் சாபமிடுதல் யாவரும் அறிந்ததே. இக் கோப உணர்ச்சி சாந்த உணர்ச்சியின் மறுபக்கமே. திடீரென எரிச்சலை ஊட்டுகின்ற ஒரு சம்பவத்தினால் இது மூளையில் சுரக்கப்படும் ஒரு திரவத்தினாலேயே கோபம் ஏற்படுகின்றது. கோபிக்கவே கூடாது என்று பலமுறை சிந்தித்தாலும் நம்மை அறியாமலே இரத்த நாளங்களிலே ஒரு துடிப்பை இது கொண்டு வந்துவிடுகின்றது. மூளையின் ஒரு பகுதியில் கோபத்தை அடக்கவேண்டும் என்று சொல்லி ஒரு திரவகம் சுரக்க, இல்லையெனத் தூண்டிவிடும் திரவகம், அடக்கமுடியாத கோபம் கொண்ட வருக்குச் சொல்லும். அப்போது இரத்த நாளங்களிலே துடிப்பை ஏற்பட கோபம் கொள்கின்றார்.

கோபிக்க வேண்டும் என்று யாரும் எண்ணுவதில்லை. இவ் உணர்ச்சியைப் பலர் பலவிதமாக வெளிக்காட்டுவார்கள். எதிரே தெரிகின்ற பொருள்களைப் போட்டு உடைப்பதும், தன்னைவிடப் பலம் குறைந்தவர்களில் தமது உணர்வுகளை வெளிப்படுத்திக் கோபம் மிகுந்த வார்த்தைப் பிரயோகங்கள் செய்வதும், தாக்குவதும், மனம் அறியாது, மனதுக்கு மீறிய வார்த்தைப் பிரயோகங்களை உதிர்ப்பதும், தன்னைக் கட்டுப்படுத்த முடியாது வீட்டை விட்டு வெளியேறுவதும் என இதன் பிரதிபலிப்புத் தென்படும். ஆனால், இதைவிடக் கொடுமையான கோபங்களே கொலை வெறியாகத் தெறிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

55

இது யாரை அதிகம் தொற்றிக் கொள்கின்றது என்றால், உடல் தளர்ச்சியுற்று மனத்தளர்ச்சியுற்ற ஒருவருக்கு ஒவ்வாத

சில வார்த்தைப் பிரயோகங்கள் பிறர் நடவடிக்கைகள் கோபத்தை அதிகரிக்கச் செய்யும். இதைவிட பருவ வயது (Wechsel Jahr) மாற்றங்கள் இயல்பாகவே பெண்களுக்கு ஒருவகையான எரிச்சல் குணத்தையும் திடீரென உடலில் தோன்றும் மாற்றங்களால் கோப உணர்வுகளையும் கொண்டுவரும். மாதவிடாய்க் காலங்களில் பெண்களுக்கு ஒருவித சினம் ஏற்படும். இது தவிர்க்க முடியாததும் கூட.

பிள்ளைகளின் தவறான நடத்தைகளால் கூட சில குடும்பங்களில் கோபதாபங்கள் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதுண்டு. பெற்றோர் தமக்கு அடங்காத பிள்ளைகளைக் கோப மீதியினால் தண்டிக்கின்றனர். எதற்காகப் பிள்ளைகள் தவறு செய்தார்கள் என்று ஆராய்ந்து பார்க்காமல், கையில் கிடைப்பதைக் கொண்டு அடிக்கின்றனர். இப்படிச் செய்கின்ற போது பிள்ளைகள் திருந்துவதற்கு வழி கிடைக்கப் போவதில்லை. தமது கோபம் தீருவதற்குப் பிள்ளைகள் பலிக்கடாவாகின்றனர். பிள்ளைகள் தவறு செய்கின்ற போது அத்தவறுக்கான காரணங்களைக் கேட்டு அறிந்து அதைத் திருத்துவதற்குரிய வழிவகைகளைச் செய்வதுவே சரியான முறையாகக் காணப்படுகின்றது. பிள்ளைகளுக்குக் கொடுக்கின்ற தண்டனை பிள்ளைகளைத் திருத்துவதற்காக இருக்க வேண்டுமே யொழிய தமது கோபத்தைத் தீர்ப்பதற்காக இருத்தல் கூடாது.

**ஒருவரின் கோபத்தைத் தவிர்ப்பதற்குரிய வழிமுறைகள்:**

1. கோபப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நீர் அருந்துதல் வேண்டும்.
2. கோபம் ஏற்படுகின்ற இடத்தைவிட்டு நகர்ந்துவிடல் வேண்டும்.
3. கோபப்படுபவர் கோப உணர்ச்சியைத் தூண்டும் வகையில் மேலும் மேலும் வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். எதிர்த்துப் பேசுதலால் எரிச்சலே அதிகரிக்கும்.
4. கணவன் குறிப்பறிந்து நடந்துகொள்ளும் பக்குவத்தை மனைவிமார் அறிந்திருத்தல் வேண்டும். வீட்டில் பொறுமை காக்க வேண்டியது பெண்கள் கடமையாகும்.
5. மனதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய ஒரு சிறப்பான மருத்துவம் தியானமே. கண்களை மூடி ஒரு நாளுக்கு 5 நிமிடம் என ஆரம்பித்து மனதை ஒருநிலைப்படுத்தும் வித்தையைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆழ்மனக்கட்டுப்பாடுகள் இந்தக் கோப உணர்ச்சியைக் கட்டுப்படுத்தும் வல்லமையுடையது.
6. ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளைச் சரிவரச் செய்தால், அடுத்தவரைப் புரிந்துகொண்டு நடந்தால் கோபப்படுவதற்குச் சந்தர்ப்பம் இருக்காது.

# நம்பிக்கை

தன்னம்பிக்கை கொண்டு தடம்பதிக்கின்ற வேளை தடுக்குமோ விதி. நம்பிக்கை கொண்டு எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு காலடிக்கும் இடையூறு வரும்போது எதிர்பார்க்காது ஒன்று நடந்துவிட அதன் காரணம் புரியாது விழிக்கும் போது விதியை நோக்குகின்றோம். நம்பிக்கையுடன் நூற்றுக்கு நூறு வீதம் நம்புகின்ற ஒரு செயல் தடைப்படின் விதியை நம்புகின் றோம். விதியை மதியால் வெல்லலாம் என்னும் ஒரு நம்பிக்கை கொண்டு தொடருகின்றோம். நடக்கும் என்றிருப்பது விதியல்ல. நடந்ததுதான் விதி.

ஒரு பெண் மண்சோறு விளையாடிய தாய் மண்ணை விட்டு புகைப்படத்தில் அறிமுகமாகிய புதுமுகத்திற்குக் கழுத்து நீட்டி அந்நிய நாட்டில் வாழ வருவது. நம்பிக்கையே. மொழி. கலாசாரம். மனிதர்கள் அனைத்தும் புதிது. ஆனாலும். அந்நிய நாடு பற்றி எழுதப்படாத வெள்ளைக் கடதாசியாய் நம்பிக்கை என்னும் துடுப்புக் கொண்டு களம் புகுகின்றாள். வாழ்கின்றாள். ஆள்நடமாட்டமில்லா வான்வெளியில் விமானியை முற்று முழுதாக நம்பி ஆகாயத்தில் நாம் பறக்கவில்லையா? நம்பிக்கை இல்லாதவன் வாழ்வில் நிம்மதிதான் காண்பது எங்கே. முடியாது என்று துவண்டாலும் மீண்டும் முயற்சிக்கத்தானே வேண்டும். பூமிப் பந்தில் வந்து விழுந்து நாம் எழுந்து நடந்தேயாகத் தான் வேண்டும். விதியை எண்ணி வீணாய்க் காலத்தை விரயமாக்கும் வீணர்களாய் நாம் வாழலாமா?

56

"நம்பினார் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு" எனப்படுவது. இறைவனை நம்பினார் கைவிடப்படார் என்பதே.

ஆனால், அதன் உண்மை தத்துவம் உருக்கொள்வது, என்னால் முடியும் என நாம் திடமாகக் கொள்ளும் எண்ணப்பதிவு ஆழ்மனதை அச்சடித்தது போல் ஆட்கொள்ளுகிறது. ஆட்கொண்ட எண்ணம் அகலவிரிகின்றது. பிரபஞ்ச சக்தியுடன் தொடர்புகொள்கின்றது. அதை அடைவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. எனவே எல்லாம் ஆவது மனதாலேயே. வில்லியம் ஜேம்ஸ் கொண்ட நம்பிக்கை எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்ட முதல் மனிதனாய் முகம் காட்டியது. நயாகரா அருவி மீது குறுக்கே நடந்தார், சார்ள்ஸ் பிளான்டின். அவர் கொண்டது தன்னம்பிக்கை. நம்பிக்கை என்பது வாழ்வில் மரணிக்க விடாமல் மனிதனை வாழவைக்கும் சக்தியுள்ளது. துவண்டு விடாதீர்கள். சோதனை மேல் சோதனை ஏற்படினும் வாழும் மண் சோதனைக் களமாயிடினும் நம்பிக்கை என்னும் துடுப்புக் கொண்டு வாழ்க்கைப் படகை வழிநடத்துங்கள்.

பாரப்பா இவ்வுலக பிரச்சினைகள்
பகிரப்பா விதியென்ற சிறப்புப் பெயரால்
தேடப்பா நம்பிக்கை என்ற ஆயுதத்தை - எதிர்நீச்சல்
போடப்பா வாழ்வின் சிக்கல்களை

பொறாமை

**புகழடைந்தார் நிலை கண்டு பொறாமையில் புழுங்காது**
**புகழடையக் காரணத்தைப் புரிந்து கொண்டு – உங்கள்**
**புகழ் வாழ்வு காண புரிந்தொழுகல் சாலச் சிறந்தது.**

**பொறாமைப்படுபவர் மனம் ஓர்நாள் வெளிப்படின் – அதுவே**
**அவர் புகழைத் தொலைக்கும் கருவியாகும்.**

# வாழ்க்கையில் வெற்றி பெறும் வழி வகைகள்

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற ஔவையார் கூற்றுக்கிணங்க அரிய பிறப்பாகிய மானிடப் பிறப்பெடுத்த மனிதன், மற்றைய உயிர்களினின்றும் மேம்பட்டவன். மனம் என்ற மாபெரும் சக்தி படைத்தவன். மனதைக் கொண்டிருப்பதனாலேயே நாம் மனிதர்களாகின்றோம். வளமுடன் வாழ வழிகாட்டுவது அந்த மனம்தானே. இந்த மனதின் சக்தியை சிதறவிடாமல் ஒரு குறிக்கோளுக்குள் குவித்தோமேயானால், நாம் எண்ணுகின்ற எக் காரியங்களிலும் வெற்றியை அடைந்து விடலாம்.

நமது எண்ணங்களை சிதறவிடாது நமது குறிக்கோளில் மனம் முழுவதையும் ஒருமுகப்படுத்துகின்றபோது எண்ணங்களுக்கு ஆற்றல் மிதமாகின்றது. அடுப்பில் ஒரு பாத்திரத்தினுள் நீர் கொதித்துக் கொண்டிருக்கும் போது, அந்தப் பாத்திரத்தின் மூடி தள்ளியதைப் பார்த்த ஜேம்ஸ்வர்ட் தனது கவனம் முழுவதையும் அதில் செலுத்தி நீராவிக்குத் தள்ளும் சக்தி இருக்கின்றது, என்று அறிந்து ரயில் என்ஜினைக் கண்டுபிடித்தார். அப்பிள் மரத்தில் இருந்து விழும் பழம் கீழ்நோக்கி விழுவதை அவதானித்து ஏன் விழுகின்றது! மேலே செல்லவில்லை என்று சிந்தித்துத் தனது கவனம் முழுவதையும் ஒருமுகப்படுத்திய சேர்.ஐசாக் நியூட்டன் புவியீர்ப்பு சக்தியைக் கண்டறிந்தார்.

57

லூதர் பர்பாங் ஆண்டுக்கணக்கில் ஆராய்ச்சி செய்து செடி கொடிகளுக்கு உயிர் இருக்கின்றது என்று கண்டறிந்தார். கணினிக்குள் தன் மூளையை ஒருங்கிணைத்த காரணத்தினாலேயே வின்டோஸ் நிறுவனத்தின் உரிமையாளர்,

பில்கேட்ஸ் உலகத்திலேயே இரண்டாவது பணக்காரன் என்ற நிலையை அடைந்தார். ஒரே விடயத்தில் தமது எண்ணங்களைச் செலுத்தியவர்களே தலைசிறந்த விஞ்ஞானிகளாகியிருக்கின்றார்கள். எனவே, எண்ணங்கள் ஒருமுகப்படுத்தப்படல் வேண்டும். சூரியனுடைய கதிர்களை ஒரு கண்ணாடி லென்ஸ் மூலம் குவிக்கும் போது ஒளிக்கதிர்கள் ஒன்றாக திரண்டு லென்ஸை ஊடுருவிச் சென்று எரிக்கின்ற நெருப்பாக மாறுகிறது. லென்ஸின் கீழே வைக்கப்பட்டிருக்கும் பஞ்சை எரித்து விடுகின்றது. திரண்டு ஒருநிலைப்படும் எண்ணம் உச்சத்தை அடையும். ஒரு செயல் வெற்றியடைய வேண்டுமானால் முழுமனத்தையும் செலுத்துவது, முழு ஆற்றலையும் ஒன்று குவிப்பது, முழு அறிவையும் புகுத்துவது போன்ற 3 திறன்களும் ஒன்றிணைய வேண்டும். அப்போதுதான் வெற்றி கிட்டும்.

முதலில் ஒரு குறிக்கோளைத் தெரிவுசெய்ய வேண்டும். தன்னம்பிக்கையுடன் அக்குறிக்கோளைப் பிரார்த்தனை மூலம் ஒவ்வொருநாளும் மனம் ஒன்றிக் கேட்கும் போது மனதில் ஆழமான உறுதி ஏற்படும். பிரார்த்தனை என்றபெயரில் எமது மனதிற்கு நாமே கட்டளையிடுகின்றோம் அல்லவா. இதன்மூலம் ஆழமாகக் குறிக்கோள் மனதில் பதியும். அப்போது முயற்சியில் மனம் ஒன்றிவிடும். வாகனம் ஓட்டும் போது எப்படி மனம் ஒன்றி வாகனத்தைச் செலுத்துகின்றோம் அப்படியேதான். இந்த மனித உடலால் எதுவுமே செய்யமுடியாது. மனம்தான் எல்லாவற்றிற்கும் காரணம். அதனை வெற்றி கொள்ளுங்கள். வெற்றி என்பது நாம் விரும்பியதெல்லாம் வெற்றி கண்டுவிடுவதல்ல.

எம்முடைய தீமைகளைத் தீய எண்ணங்களைத் தீய ஆசைகளை தீய செயல்களை வெற்றிகொள்ள வேண்டும். வள்ளுவர் வழியில் தவம் என்னும் நூலிலும் தீய எண்ணங்களில் நின்று வெற்றி கொள்தல் மாபெரும் வெற்றி என்கிறார். இவையெல்லாவற்றையும் வென்றுவிட்டால், பிறரால் நாம் குறை கூறப்படமாட்டோம். குறையில்லாமல் வாழுகின்ற வாழ்க்கையே மேன்மையான வாழ்க்கை. இவ்வாழ்க்கையுடன், நாம் கொண்ட ஒரு குறிக்கோளை நோக்கி மனம் ஒருமைப்பாட்டுடன் செல்லும் போது நாம் கொண்ட குறிக்கோளில் வெற்றி காணலாம்.

குறிக்கோளை நடைமுறைப்படுத்த வேண்டுமானால், முயற்சி என்பது முழுமனதிலும் நிறைந்திருக்க வேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்", "முயற்சி திருவினையாக்கும்" எனப்படுகின்ற பழமொழியை நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால், சந்தர்ப்பம் சூழ்நிலை சரியானமுறையில்

அமையாதுவிட்டால், எப்படி முயன்றாலும் "சாண் ஏற முழம் சறுக்குவது" போலவே தான் அமையும்.

எனவே சந்தர்ப்பம் சூழ்நிலையைச் சரியானமுறையில் அமைத்துக் கொள்வது அவரவர் கடமையாகும். சூழ்நிலையை மாற்றியமைப்பதுவும் முயற்சியின் ஒரு வடிவமாகவே கருதப்படுகின்றது. சூழ்நிலையைச் சாதகமாக்கி சாதிக்க நினைக்கும் காரியத்தில் முழு ஈடுபாட்டுடன் முன்னேற வேண்டும். மனிதப் பரிணாமக்கோட்பாட்டின் தந்தை சார்ள்ஸ் டார்வின் அவர்கள் தான் வாழ்ந்த சூழலைத் தன் ஆராய்ச்சிக்கு ஏற்ப மாற்றியமைத்தார். புழுவோடும் பூச்சிகளோடும் தன் வாழ்நாளைக் கழித்தார். பரிணாமக் கோட்பாட்டின் தந்தையானார்.

சூழ்நிலையில் பங்கம் வருகின்றபோது விதியை நோகின்றார்கள். அறிவாளிக்கு மதி பெரிது. முட்டாளுக்கு விதி பெரிது. விதி என்று எண்ணுகின்ற முட்டாள் கூடப் பிரார்த்தனை மூலம் "விதியை மதியால் வெல்லலாம்" என்று எண்ணுகின்ற போது பிரார்த்தனை முயற்சிக்குத் துணை செய்கின்றது. தினமும் ஒரு குறிக்கோளை மனதில் வைத்து பிரார்த்தனை செய்கின்ற போது மூளையானது அதனை நிமிடந்தோறும் ஏற்று குறிக்கோளை அடைவதற்கான வழிவகைகளை அடைவதற்கு ஆயத்தங்களைச் செய்யும். எனவே பிரார்த்தனை வெற்றிக்கான வழிகளைக் காட்டிவிடும்.

இத்தனையும் சாதகமாக அமைகின்ற போது உடல்நிலையை ஓரங்கட்டி விட்டால், உடல் ஆரோக்கியம் குன்றி உடலும் உள்ளமும் செயலிழந்து போகும். நமது பழக்கவழக்கங்கள் உடல் ஆரோக்கியத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகின்றபோது ஆரோக்கியமும் குன்றுகின்றது. எடுக்கின்ற முயற்சியில் முழுக்கவனமும் செலுத்த முடியாமல் போகின்றது. எண்ணங்கள் சிதறடிக்கப்படுகின்றன. வெற்றி மூழ்கடிக்கப்படுகின்றது. எனவே நல்ல பழக்கவழக்கங்களை கைக்கொள்ளும்போது எடுத்த இலட்சியத்தில் வெற்றி காணலாம். இதைவிட எம்மை அறியாமலே எமக்கு ஏற்படுகின்ற நோய்கள் கூட வெற்றிப்பாதையில் தடைக்கல்லாக அமைகின்றன. அதற்கு மனம் என்ற அங்குசத்தை ஆளுகின்ற சக்தியை யாம் பெற்றுக்கொள்ள வேண்டும். கணினி உலகில் அப்பிள் நிறுவனத்தை உருவாக்கி குறுகிய காலப்பகுதியில் உலகப்பிரசித்தி பெற்ற ஸ்ரீவ் ஜாப்ஸ் (Steve Jobs) தன் உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாத காரணத்தினால், வெற்றிப்பாதையின் இடையிலேயே வாழ்க்கையை இழந்தார். உலகம் ஒப்பற்ற விஞ்ஞானியை இழந்தது. எனவே

கண்ணுங்கருத்தும் வெற்றியை நோக்கியிருக்கும்போது சுகதேகியாக வாழ வேண்டும் என்ற எண்ணமும் மனதில் மேலோங்கி நிற்கவேண்டும்.

எனவே இலக்கைத் தெரிவு செய்யவேண்டும். அதன் முக்கியத்துவத்தை அறியவேண்டும். அந்த இலக்கை அடைய உறுதியாக இருக்கவேண்டும். அந்த இலக்கை அடைவதற்கான வரைபடத்தை மூளையில் வரைந்து வைத்திருக்க வேண்டும். அதில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். நம்பிக்கையில் சூழ்நிலை, பிரார்த்தனை, உடல்நிலை, முயற்சி போன்றவற்றைத் தெளிவான ஒழுங்கு படுத்தலுக்குள் கொண்டுவந்து முழுமனதையும் நமது இலக்கினுள் ஒருமுகப் படுத்தும்போது வாழ்க்கையில் 100 வீதம் வெற்றியை அடையலாம்.

அடுத்தவன் வாழ்வின் உயர்வு – உன்

அயராத உழைப்புக்கு வழிகாட்டி

கெடுத்து அவன் வாழ்வை

சிதைக்க நினைப்பது உந்தன்

பொறாமைக் குணத்தின் வெளிப்பாடு

## எனது படைப்புக்கள்

எனது எழுதுகோல் செதுக்கிய சிற்பங்கள்
கணினித் துணையுடன் பிரசவித்த குழந்தை
இணையங்கள் அணைத்த வாரிசு
இனிப்புத் தடவாத எலுமிச்சை
மகரந்தம் சிறிதளவே சிந்துகின்ற மலர்
உருண்டு கொண்டிருக்கும் பூமியிலே
சிரித்துக் கொண்டிருக்கும் சின்னக்கரு
என் அனுபவத்தைப் பிறருக்குக்
காட்டுகின்ற புகைப்படம்
பிறர் என்னை நேசிக்கத் துணைப் போகும்
இணைப்போலை
என் மனதில் தொடராய் ஊற்றெடுக்கும்
எண்ண அருவி
பதிக்கின்ற இடமெல்லாம் - என்
பண்பான இதயம் படிந்திருக்கும்
என்னைப் பாதித்தவை பல
என்னுள் பதிந்தவை சில
நீர்க் குமிழி போல் மறைந்தவை இன்னும் சில
யாப்பையுடைத்து வெளிவந்தவை சிற்சில
என் மனச்செடிக்குள் பூத்தாலும்
மாற்றான் பயன் பெறப் பூக்கும் ரோஜா!




சந்திரகௌரி சிவபாலன்
B.A, Dip in Ed


தாய்மை நிரம்பி வழியும் தூய விரிந்த மனமும்
ஆய்ந்தறிந்து தெளிந்த அன்னைத் தமிழின் திறனும்
வரமாய்ப் பெற்று "வலையில்" மலையாய் நிலைத்த கௌரி
அறம் போல் என்றும் உந்தன் எழுத்தும் நிலைக்கும்

**யதார்த்தக்கவி யாதோ ரமணி**
(முன்னணி வலைத்தள எழுத்தாளர்)
yaathoramani.blogspot.com

தமிழ்க் கொடியேற்றும் பணி வாழ்க!
மணிக்கோவைத் தமிழின் அழகிற்கு அணியிடுதலும்
பிணியான சமூகப் பிரச்சனைகளின் சிக்கெடுக்கும்
பணிக்கே தன் பிறவியெனும் சிந்தனையோடும்
துணிவான கருத்துகள் எடுத்தாளுமென் தோழியின்
தணியாத் தாகத் தமிழ் தரணியோங்கட்டும்!
மணியுருவாள் பாகுத் தமிழ்க் கொடியேற்றும்
கணிப்பீடு வெற்றியுற தொகை நூல்களிறைக்கும்
பணிவாழ்க! வளர்க! தொடர் வெற்றிகள் நிறைக!

**கவிதாயினி திருமதி வேதா. இலங்காதிலகம்**
https://kovaikkavi.wordpress.com/
ஓய்வு பெற்ற பாலர் நிலைய ஆசிரியை
டென்மார்க்.
17-12-2015


ISBN: 978-955-43074-0-7

PRINT @ ANDRA PRINTERS +94 21 221 7279